பாலகுமாரன்

என்னையிரும் நீயல்லவோ

என்னுயிரும் நீயல்லவோ

1

ஒரு பெரிய மேகம் சமையலறைக் கதவு வழியாக நுழைந்து, ஹாலுக்குள் திரும்பி, படுக்கையறை ஜன்னல் வழியாக வெளியே போயிற்று.

காட்டுக்குப் போன புருஷன் வேலை முடித்து களைத்து வருவது போல் ரொம்ப நிதானமாய் அவளைத் தாண்டிப் போயிற்று. மேகம் நுழைகிற போது ஒரு ஜில்லிப்பும் நுழையும். மேகம் நகர்ந்து போன மறு வினாடியில் குளிர் குறைந்து வெயில் தாக்கும். மலைப் பிரதேசத்தில் பகல் நேரப் பதினோரு மணி சுவாரஸ்ய மான காலம். சடேரென்று இருளும். சுளீரென்று வெயி லடிக்கும். மேகம் சூழ்ந்தபோது குளிரும். நகர்ந்து வெகு தூரம் போனால் வியர்க்கும். இப்படி உஷ்ணமும் குளிரும் வெளிச்சமும் இருட்டுமாய் இருப்பது பூச்சி களுக்கு சுகமான விஷயம். மனிதனும் ஒரு பூச்சிதான். ஆரம்பத்தில் இந்த சீதோஷ்ணம் கொஞ்சம் சிரமம் ஏற் படுத்தும். எரிச்சல் ஏற்படுத்தும். மலை பழகி விட்டால் தரைக்குப் போக முடியாது. தரையின் வெக்கையைத் தாங்கவே முடியாது. வியர்த்து ஊற்றுவதைப் பொறுத் துக் கொள்ளவே முடியாது.

மலையில் வியர்த்து ஊற்றாது. எவ்வளவு நடந்தாலும் வியர்க்காது. வெடவெடவென்று குளிராது. ஆனால் காற்றிலுள்ள ஈரம் மூக்கு நுனியை, கன்னத்து மேட்டை நக்கிக் கொண்டிருக்கும். நாகர்கோவில் பக்கமிருந்து பதினெட்டு வயதில் போடிநாயக்கனூர் மலைக்கு வந்தாகி விட்டது.

''பகவதி உனக்கு இந்த இடம் பிடிச்சிருக்கா'' என்று நாச்சியப்ப செட்டியார் கேட்டபோது வியப்பில் ஆழ்ந்த மனசு தலையை மட்டும் ஆட்டியது. நாகர்கோவில் கிராமத்திலேயே உறவுகளுக்கு முன்னால் செட்டியார் இருபது பவுன் நகை போட்டார்.

''இதை நீ போட்டுட்டு வந்தாலும் சரி, அவுத்து உங்கம்மாகிட்டே கொடுத்துட்டு வந்தாலும் சரி. உன் இஷ்டம். நீ சந்தோஷமா வந்தா போதும்.''

நாச்சியப்பன் மிருதுவாகப் பேசினார். அவள் நீண்ட நேரம் யோசித்து நகைகளோடு வருவதாகச் சொல்லி விட்டாள்.

நாகர்கோவிலில் அந்த நகையைப் பல பெண்கள் தொட்டுத் தொட்டுப் பார்த்தார்கள். இந்த மலையில் அந்த நகைகளைப் பார்க்க ஆளே இல்லை.

''கழுத்துல ஒரு செயின்கூட இல்லாதிருக்கீங்களே ஏன்?''—பகவதி பக்கத்து வீட்டுக்காரியிடம் கேட்டாள்.

''செயினைப் போட்டு யார்கிட்ட காட்ட? வீட்டு வாசல்ல உட்கார்ந்தா போறவங்க வர்றவங்க இருக்கணும். செயின் போடணும். அடுத்த வீடே ஒரு கிலோ மீட்டர் தூரம் இங்க நகை எதுக்கு. நகை வாங்கற காசுல நிலம் வாங்கலாம். உரம் வாங்கலாம், பூச்சி மருந்தோ, நல்ல நாத்தோ வாங்கலாம். ஆயிரம் அடி பைப்பும், நாற்பது ஐம்பது ஸ்பிரிங்ளரும் வாங்கினா

வாடகைக்கு விட்டே அசலை அடைச்சுடலாம். நாச்சியப்ப செட்டியாரை ஸ்ப்ரிங்ளர் வாங்கச் சொல்லு.''

''ஸ்ப்ரிங்ளர்ன்னா என்னா?''

''அதோ பார் அதுதான்.''

பக்கத்து வீட்டுக்காரி சற்றுத் தள்ளிப் போய் ஒரு மலைச் சரிவில் கை காட்டினாள். அந்த மலைச் சரிவில் இருபது இருபத்தைந்து இடங்களில் நீர் பூப்போல வீசி வீசித் தெளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. இருபதடி வீச்சுக்கு நாலாபுறமும் தண்ணீரை வீசிக் கொண்டிருந்தது. வெற்றிலைச் சாறை விரல் வைத்து வேகமாய் உமிழ்வது போலத் தோன்றியது.

''ஸ்ப்ரிங்ளர் பார்க்கணுமா? வா,''

நாச்சியப்பன் கூட்டிக் கொண்டு போனார். மலையேறி அவளுக்குப் பழக்கமிருந்தது. தழைகளுக்கு நடுவே குனிந்து நடக்கத் தெரிந்தது. ஒரு ஸ்பிரிங்ளர் அவளைத் தாண்டி தண்ணீர் உமிழ்ந்தது. நாச்சியப்பன் சட்டென்று உட்கார்ந்து கொண்டார். அடுத்த வீச்சில் ஸ்பிரிங்ளர் பளிச்சென்று முன்னே நீர் துப்பியது. முட்டி முத்தம் கொடுத்தது போன்ற ஒரு திகைப்பில், ஈரச் சிலிர்ப்பில் பகவதி திளைத்து நின்றாள். நெஞ்சுப் புடைவை முழுவதும் நனைந்து போயிற்று. நாச்சியப்பன் வாய் விட்டுச் சிரித்தார்.

''ஒன்னு எட்டத் துப்பினா ஒன்னு கிட்டத் துப்பும். ரெண்டிலேர்ந்து இருபதடி வரைக்கும் தண்ணி தெளிக்கும். ஒரு ஸ்பிரிங்ளர் இருபதடி ஆழம். மொத்தம் இருபத்தி ஏழு ஸ்பிரிங்ளர். எத்தினி ஏக்கருக்கு நீர் பாயும்?''

''ஐயோ எனக்குத் தெரியாதே.''

"அப்போ விட்டுடு. உனக்கு என்ன தெரியுமோ அதைச் செய்."

"நான் நல்லா சமைச்சுப் போடுவேன்."

"அது மட்டும் வண்ணமா செய்துட்டா இந்த நாச்சியப்பன் உன்னை எங்கோ கொண்டுபோய் உட்கார வச்சுடுவான். எத்தினி சவரன் நகை வேணாலும் போடுவான். உனக்கு என்ன மாதிரி நகை வேணும்?"

"நகை வேணாம்."

"உன் பேர்ல தோட்டம் வாங்கட்டுமா?"

"உங்களுக்கே நிறைய தோட்டம் இருக்கே. எனக்கு எதுக்கு?"

நாச்சியப்பன் புது மனைவியை தொடர்ந்து உற்சாகப் படுத்தினார்.

"என் தம்பி என்ஜினியரிங் படிக்கணுங்கறான். எங்கப்பாவால முடியாது."

"இப்ப என்ன படிக்கறான்?"

"எஸ். எஸ். எல். சி."

"என்ஜினியரிங்தானே, படிக்க வச்சுடுவோம். இன்னிக்கு மத்தியானம் என்ன சமைக்கப் போற..."

அவள் நீர்த் தெளிப்பானை மறந்துவிட்டு, தம்பியை நினைத்துக்கொண்டு வீட்டுக்கு ஓடினாள். இருந்தவைகளை வைத்து அருமையாய் சமைத்து இறக்கினாள்.

அதே சமையலறை. அதே அடுப்பு. இருபது வருடமாகி விட்டது. எதற்கு தம்பியை என்ஜினியராக்கினோம் என்று தெரியவில்லை. என்ஜினியராகி, டெலிபோன் டிபார்ட்மெண்டில் சேர்ந்து கோவாவுக்குப்

போய் விட்டான். திருவனந்தபுரத்துப் பெண்ணை கொல்லத்தில் கல்யாணம் செய்து கொண்டான். வேலைக்குப் போனது பற்றியும் அவன் தெரிவிக்கவில்லை. திருமணம் முடிந்தது பற்றியும் அவன் சொல்லவில்லை.

"படிப்பு முடிஞ்ச பிறகு அவனுக்கு உன்னைப் பிடிக்காமப் போயிடுச்சுடி."

"ஏன் அப்பா?"

"நீ நாச்சியப்பச் செட்டியாருக்கு வைப்பாட்டியாத் தானே இருக்கே, உன்னை எப்படி கல்யாணத்துக்குக் கூப்பிடறதுன்னு கேக்கறான்."

"அவரு காசு மட்டும் வேண்டியிருந்ததோ...?"

"வேற வழியில்லாத ஏத்துக்கிட்டானாம்."

"ஆச்சி அறியத்தானே வாழ்ந்தேன்."

"அதெல்லாம் மரியாதையில்லையாம்."

"அவன் மரியாதை கெடறப்போ மறுபடியும் வருவான். அப்ப நான் பாத்துக்கறேன். இந்தக் கோழியையும், காப்பிக் கொட்டையையும் ஆச்சிக்கிட்டக் கொடுத்துட்டு அப்புறமா ஊருக்குப் போங்க."

இருபது வருடங்களில் ஆச்சியும் அவளும் ஆறுமுறை தான் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் இரண்டு முறைதான் பேசிக் கொண்டார்கள்.

முதல் முறை போகிற போது ஆச்சி கண்கள் பள பளக்க ஒரு வார்த்தை சொன்னாள்:

"சரியோ; தவறோ; மேலேயோ; கீழேயோ எதையும் அழிக்காதிரு. ஆக்கமா இரு. இருபது ஏக்கரை நாப்பது ஏக்கரா மாத்து. நம்ம சுத்தி இருக்கறவங்க சந்தோஷமா இருந்தாதான் நாம சந்தோஷமா இருக்க முடியும். எல்லா

உறவும் சந்தோஷத்துக்குத்தான், சண்டைக்கு இல்லை. சாப்பாட்ல ரொம்ப காரம் போடாதே. அவருக்கு ஆகாது.''

பகவதி அதிர்ந்து போனாள். நாச்சியப்பன் சொல்லித்தான் திருமணம் செய்தாரென்றாலும் ஆச்சி பேசியதைக் கேட்டதும். அனுமதி வாங்கிக் கொண்டு தன்னைத் திருமணம் செய்திருப்பாரோ என்று தோன்றியது.

''நமக்குக் கேரளால இருபது ஏக்கர் ஏலக்காய் தோட்டம் இருக்கு. எப்பவோ எங்க மூதாதையர் வாங்கிப் போட்டது. வாங்கினப்போ ஏலக்காய்க்கு அவ்வளவு மரியாதை இல்லை. இன்னிக்கு ஏலக்காய் தங்கம் மாதிரி. பணப்பயிரு. பார்த்துப் பார்த்து வளர்க்க வேண்டிய பயிரு. ஆறுமாசம் கண்ணு கொத்தி பாம்பா மலைலேயே இருந்து கவனிச்சுக்கிட்டு வந்தா நல்ல லாபம். ஏலக்காய் தவிர அரிசி, வெங்காயமெல்லாம் கீழேர்ந்துதான் வந்தாகணும். மலைல நல்லபடியா வீடு கட்டி, ஆள் போட்டு சமைச்சுப் பார்த்தேன். வந்த ஆளுக்கு மலை ஒத்துக்கல. நானா சமைச்சுப் பார்த்தேன். வயிறு ஒத்துக்கலை. இருபது பவுன் நகை போடறேன். கோயில்ல தாலி கட்டறேன். நீங்க வர்றதா இருந்தாலும் சரி உங்க பொண்ண மட்டும் அனுப்பறதா இருந்தாலும் சரி. எல்லா வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்து ஒழுங்கா குடித்தனம் பண்ணுவேன். அந்தரத்துலே விட்டுடுவேன்னு ஒருபோதும் நினைக்காதீங்க.''

திருமணமானபோது அவளுக்குப் பதினெட்டு. அவருக்கு நாற்பது. வயது நாற்பதானாலும் வாலிபம் மலை போல் உறுதியாய் இருந்தது. மனசு நீர்பட்ட மண் போல் குழைவாய்க் கிடந்தது.

''நம்ம தோட்டத்துக்கும் ஸ்ப்ரிங்ளர் போடணும் அவ்வளவுதானே...''

ஸ்ப்ரிங்ளர் வாங்கின நேரம் மழை பெய்யாமல் போயிற்று. மழை பெய்தால் ஸ்ப்ரிங்ளர் தேவையே இல்லை. அவர்கள் தோட்டத்தில் மட்டும் இடைவிடாது ஸ்ப்ரிங்ளர் அடித்தார்கள். இரவு நேரம் மற்ற தோட்டத்திற்கு வாடகைக்குக் கொடுத்தார்கள். இருபதடி நீள குழாயில் கப்ளிங் போட்டு மலைமீது படரவிட்டு, பள்ளத்திலிருந்து மேட்டுக்கு நீர் ஏற்றினார்கள். விளையாட்டாய் பகவதியைச் சந்தோஷப்படுத்த வாங்கிய ஸ்ப்ரிங்ளர் பெரிய உதவி செய்தது. மற்ற தோட்டத்தில் ஏலக்காய் செடிகள் பட்டுப்போக, இங்கு இடைவிடாது பறித்தார்கள். என்றும் கண்டிராத விலைக்கு விற்றார்கள்.

"நீ இல்லாது போயிருந்தா தோட்டம் பாழாயிருக்கும். நான் உன்னை ஆசைக்கு கட்டிக்கல பகவதி ஒரு அவசியத்துக்குக் கட்டிக்கிட்டேன். ரெண்டாவது பொம்பளதானேன்னு நினைக்காத...எப்பவும் நான் இருக்கணும்னு எதிர்பார்க்காதே. மனுஷாளுக்கு முதல்ல வேண்டியது சாப்பாடு, துணிமணி. அது ஒருபோதும் உனக்குக் குறையாது. அடுத்து வேண்டப்பட்டது மரியாதை. அதிலேயும் நாச்சியப்பன் குறை வைக்க மாட்டான். மதுரைல வண்டியெடுத்தா நாலரைமணி நேரம், நம்ம தோட்ட வாசலுக்கு வந்திர முடியும். ஒரு அவசரம் போதுன்னா நானும் வருவேன். நீயும் வரலாம்."

ஒரு தீபாவளிக்குக் கடும் மழை. மண் சரிந்து மரம் நழுவி பின்கூரையில் விழுந்து பசுமாட்டைக் காயப்படுத்தி விட்டது. காற்று வீசி, வீசி அடித்ததால் இன்னொரு மரமும் கூரைமேல் விழுகின்ற அபாயம் இருந்தது. அப்பாவுக்கு ஜுரம், அம்மாவுக்குத் தைரியமில்லை. அவள் ஏழு கிலோ மீட்டர் இறங்கி நடந்து, ஆறுகளும், ஓடைகளும் தாண்டி, பாதையில்லாப் பாதைகளில் குச்சி ஊன்றி நடந்து, பஸ் பிடித்து மதுரைக்குப் போனாள்.

மதுரையில் நசநசவென்று தூறல் மட்டுமே இருந்தது. சைக்குள் ரிக்ஷாக்காரனுக்கு வீட்டு விலாசம் சொல்லி வாசலில் இறங்கினாள்.

"அம்மா அந்தப் பொம்பள வந்திருக்கு.'

"ஒரு பதினைந்து வயசுப் பையன் உள்ளே ஓடினான். சிவப்பு புடைவையில் தடிமனான முப்பத்தைந்து வயதுப் பெண் பிள்ளை ஹாலுக்கு வந்தாள். அங்கிருந்தபடியே உற்றுப் பார்த்தாள்.

"நீதான் தோட்டத்தப் பார்த்துக்கறவளா?"

அதட்டலாய் குரல் வந்தது.

"ஆமா."

"ஏன் மதுரைய பார்க்க வந்துட்ட."

"வீடு விழுந்துடுச்சு. மாட்டுக்கு அடிபட்டுடுச்சு. அப்பாவுக்கு ஜுரம். எனக்கு என்ன பண்றதுன்னு தெரியலை, இன்னொரு மரம் விழுந்தா தங்கறதுக்கு இடமே இல்லை."

"அவங்க பண்டிகை கொண்டாடிட்டு தூங்கறாங்க. எழுப்பட்டுமா?"

"வேண்டாம். எழுந்த பிறகு சொல்லுங்க."

"பின்பக்கமா வந்து காலை கழுவிட்டு உட்காரு."

காபியும், அவல் உப்புமாவும் தரப்பட்டன.

ஆச்சி பேசிய அளவுகூட நாச்சியப்பன் பேசவில்லை.

"இவன்தான் புள்ளை."

பையனை நெட்டி முன்னே தள்ளினார், அவன் விநோதமாய் அவளைப் பார்த்து விட்டு உள்ளே போய் விட்டான்.

தினந்தந்தி பேப்பரில் பட்டுப் புடைவை சுற்றிக் கொடுக்கும் போதுதான் ஆச்சி சொன்னாள்.

"சரியோ, தவறோ, மேலோ கீழோ எதையும் அழிச்சுடாதே. சந்தோஷமா இருக்கத்தான் உறவு. சண்டை போடறதுக்காக இல்லை."

ஆச்சி ரொம்ப சந்தோஷமானவள் என்று நாச்சியப்பன் பலமுறை சொல்லி கேள்விப் பட்டிருக்கிறாள்

"நம்ம கல்யாணத்தன்னிக்கு ஆச்சி என்ன பண்ணிட்டிருந்தாங்களாம், கேட்டீங்களா? அப்பவும் சந்தோஷமாத்தான் இருந்தாங்களாமா."

"மதுரைலேர்ந்து திருச்செந்தூருக்கு நடைபயணம் போயிட்டிருந்தா. ஒன்பதுநாள் நடை. வழி முழுக்கப் பாட்டு. பூஜை. தினம் இருபது கிலோ மீட்டர் நடப்பா.'

"எதுக்கு?"

"எல்லாரும் நல்லாருக்கணும்னுதான்."

"அப்ப நானும் நடக்கட்டுமா?"

"அடுத்த வருஷம் நீயும் சேர்ந்துக்க. யாரு தடுக்கறது?"

அடுத்த வருடம் நடைபயணத்தோடு ஆச்சி மௌன விரதமும் புரிந்தாள். ஆச்சி பேசவில்லையே தவிர அன்பு கண்களின் வழியே கொட்டியது. அவள் விரல் தொடும் போதெல்லாம் தெரிந்தது. அந்தமுறை எல்லோருக்கும் ஏலக்காய் நன்றாக விளைந்தது. விலை குறைவதற்குப் பதிலாய் இன்னும் ஏறியது.

வட இந்தியாவிலிருந்து வியாபாரிகள் போடிநாயக்கனூர் வந்து, ஏலக்காயை நாலுவகையாய் தரம் பிரித்து, முதல் தர ஏலக்காயை போடியிலேயே ப்ளாஸ்டிக் பேப்

பரில் இறுக்கமாய் பாக்செய்து, கலர் கலரான அட்டைப் பெட்டிகளில் வைத்து, காற்றுப் புகாத தகர டப்பாவில் அடைத்து ஐரோப்பாவிற்கும் அரேபியாவிற்கும் அனுப்பினார்கள்.

இரண்டாவது தரத்தை டெல்லி, பம்பாய்க்கு அனுப்பினார்கள். மூன்றாவது தரத்தை உள்ளூர் வியாபாரிகளிடம் விற்றார்கள். நான்காவது தரத்தை விலை நிர்ணயம் செய்து ''கூலியாக'' காசுக்கு பதிலாய்க் கொடுத்தார்கள். ஒரு லட்ச ரூபாய் முதல் போட்ட பனியா இருபது லட்ச ரூபாய் லாபத்தோடு திரும்பினான். ஏலக்காய் பற்றி அப்போதுதான் வியாபாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் ஒரு விழிப்பு வந்தது.

தோட்டம் வாங்க ஆட்கள் அலைந்தார்கள். ஒரு ஏக்கர் இரண்டாயிரம் ரூபாய் என்று இன்னொரு இருபது ஏக்கர் வாங்கிப்போட நாச்சியப்பனுக்கும் அப்போதுதான் துணிச்சல் வந்தது. இன்றைக்கு ஏக்கர் அறுபத்தைந்தாயிரம் ரூபாய். அந்த முதலுக்கு லாபம் பார்க்க நான்கு வருடமாகும். ஆனாலும் முதல்போட ஆட்கள் அலைந்தார்கள்.

''ஏக்கர் லட்ச ரூபாய்க்கு கேக்கறான். வித்துட்டு மதுரைக்குப் போயிடுவோம். வரியா?''

மலையை விட்டு தரைக்கு வர அவளுக்கு விருப்பமில்லை.

''இந்த இடத்தை விட்டு நான் வர மாட்டேன். நீங்களும் எங்கேயும் போக வேண்டாம்.''

அவள் சொன்ன மூன்றாம் மாதம் நாச்சியப்ப செட்டியார் சிவலோக ப்ராப்தியடைந்தார். பகவதிக்கு மலை பயமாக இருந்தது.

2

இலை இலையாய், அங்குலம் அங்குலமாய் ஒரு செடி வளர்வதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மண் சட்டென்று நெக்கு விட்டுச் சரிய, செடி எங்கோ அதல பாதாளத்தில் தலை குப்புறக் கிடப்பதைப் பார்ப்பதான ஒரு உணர்வை அந்த மரணம் அவளுக்கு ஏற்படுத்தியது. அவ்வளவுதான்...அந்தச் செடியின் வாழ்க்கை அவ்வளவு தான்? ஏன் அங்கே மட்டும் மண் சரிந்தது? ஏன் அந்தச் செடி மட்டும் இறந்தது? என்ற கேள்விக்குப் பதிலே இல்லை.

உலகத்தில் தோன்றியவைகளெல்லாம் அழியும் என்ற நியதி இருந்தாலும் எப்போதும் அழிவையே ஞாபகம் வைத்துக் கொள்ள முடிவதில்லை. ஒரு செடி வேர் பிடித்துத் தளிர் விடும்போது. ஒரு மரம் முதன் முதலாய்க் கனி தரும்போது அந்த உயிர் எப்போது பட்டுப்போகும் என்று யோசிக்கத் தோன்றுவதில்லை. வளர வளர நிரந்தரம்போலும் ஒரு நினைப்பு வந்து விடுகிறது.

பிள்ளைக்குக் கல்யாணமாகி விட்டால் நான் மலை யோடு வந்துவிடுவேன் என்று நாச்சியப்பன் சொல்லுவது வழக்கம்.

அப்படிப் போய் விடட்டுமா என்று பெண்டாட்டி ஆச்சியைக் கேட்டபோது 'நல்லா போய் இருங்க' என்று ஆச்சி சொல்லி விட்டாளாம்.

''எப்படா ஒழிவான்னு காத்துக்கிட்டிருக்கியோ?''

நாச்சியப்ப செட்டியார் கொஞ்சலைக் கோபமாக மாற்றியபோது ஆச்சி லேசாய்ச் சிரித்தாளாம்.

"இல்லை, இல்லை எப்பவும் நான் உங்க பின்னாடி நிழலா இருக்கணும்னு சொல்லுவேன்னு நினைச்சியளோ. அப்படி நடிக்கணும்னா செய்திரலாம். ரொம்ப சுலபம். ஆனா நிஜம் வேற"

"எது நிஜம்?"

"பதினாறு வயசில வாழ்க்கைப்பட்டு நாற்பத்தாறு வயசுக்கு நிக்கேன். ரெண்டு பதினாறு வருஷத்துக்கு மேலே குடித்தனம் பண்ணியாச்சு. கைகால்ல வலு இருக்கச்சேயே கோவில் கோவிலா சுத்தி வர வேண்டாமா? வடக்க ரிஷிகேஷம் வரை சுத்தி வர வேண்டாமா?"

"ஏன் ரிஷிகேஷத்துக்கு நாங்க வர மாட்டமா? எங்களுக்கு ஆகாத இடமா?"

"பொட்டச்சிகளோட சுத்தற ஆளுக்கு ரிஷிகேசம் என்ன. மலைமேல ஆறு மாசம் அனுபவிக்க ஒரு சின்ன பொண்ண வச்சுக்கிட்டு ரிஷிகேஷம். போனா உமக்கு ஆவுமா? நீங்க உங்க ஜோலிய பாருங்க. நாங்க எங்க ஜோலிய பார்க்கறோம்"

தன் வயது ஒத்த நகரத்தார் நண்பர்களை ஒன்று சேர்த்து. இதற்கு முன் யாத்திரை போனவர்களைத் துணையாக்கிக் கொண்டு ஆச்சி வடபுல யாத்திரை கிளம்பிவிட்டாள். கிளம்புகிற நேரம் நாச்சியப்ப செட்டியாருக்கு மிரட்சியாக இருந்தது. தன்னைவிட தன் மனைவி எல்லா வகையிலும் உசத்தியோ என்கிற பயம் வந்தது. விடியற்காலை புருஷனும் மனைவியும் பூஜை அறையில் கண்மூடி உட்கார்ந்திருக்கிறபோது நாச்சியப்ப செட்டியாருக்கு அழுகை வந்தது.

"அட என்ன கூத்து இது. நான் என்ன திரும்பி வராதையா போகப் போறேன். கண்ணைத் துடைங்க முதல்ல."

"எம்மேல கோபிச்சுக்கிட்டுப் போறியோன்னு ஒரு சந்தேகம்."

உங்க மேல எனக்கு எதுக்கு கோபம். ரிஷிகேசம் போகணும்னு ரொம்ப நாள் ஆசையாச்சே."

"அதில்ல...பொட்டச்சி ருசி. உங்களால முடியாது, மலைக்குப் போயிருங்க அப்படீன்னு ஏசின மாதிரிப் பேசிட்ட. அதுதான் ஒரு வலி."

"அட சொல்லு பொறுக்காத சீமானே, இது ஏலக்காய் சீசன் இல்லையா. யாத்திரை போறோம்னு அந்தப் பொண்ணுட்ட சொல்லிட்டு வந்தீரா? அவசியத்துக்குன்னு கட்டிக்கிட்டு வந்தீரு. மலைல குடித்தனம் போட்டீரு. அதை அலங்கோலமா நடத்தினா நல்லாருக்குமா. அந்தப் பொண்ணு மனசு வேதனைப்படாதா. அதும் தவிர, நான் இல்லாத ஒரு நாலைஞ்சு மாதம் இருந்து பாரும். எனக்கு அப்படி இருக்கணும்னு ஒரு ஆசை வந்திருச்சு. பொண்ணு, புள்ளை, புருஷன், மாப்பிள்ளை எந்தக் கூட்டமுமில்லாம, ஒட்டு உறவில்லாத, தமிழ் பேசற ஆட்களா, தேவாரம் பாடற குழுவா, பிரதோஷமும், சிவராத்திரியும் கொண்டாடிட்டு, சமையலைப் பத்தியோ, சம்பாத்தியத்தைப் பத்தியோ கவலைப் படாத செலவு பண்ணிட்டு வரணும்."

ஆச்சியின் சிவத்தொண்டு மதுரை அறிந்த விஷயம். சமையலாள் உட்பட எண்ணிப் பதினான்குபேர் கிளம்பி, அங்கங்கிருந்து அஞ்சலட்டையில் நலம் எழுதி அனுப்பினாள். எழுதி எட்டு நாள் கழித்து மலைக்கு கார்டு வரும்.

பகவதிக்கு என் ஆசீர்வாதம் என்று தபால் கார்டில் ஒரு வரி இருக்கும். சில சமயம் கவரில் விபூதி, குங்குமப் பிரசாதம் வரும்.

ஆச்சியிடமிருந்து கடிதம் வந்த நாளில் நாச்சியப்ப செட்டியார் பகவதியிடம் அதிகம் பேச மாட்டார். வேலையாட்கள் தவறு செய்தால் சுள்ளென்று கோபம் கொள்வார்.

"உங்களுக்கென்ன போச்சு. வாரம் பொறந்தா கூலி. ஏலக்கா வந்தாலும் வராட்டியும் காசு. நாத்து எடுத்து செடி நட்டு, நாள் தவறாம தண்ணியடிச்சு, வள்ளி புடிக்கிற வரைக்கும் நானில்ல கவலையோட உட்கார்ந்துக்கிட்டிருக்க வேண்டியிருக்கு. ஆளை நம்பின தொழிலு ஏலக்காய். என்னைய கவுத்துப் போட்டுட்டு நாசமா போ நீன்னு போயிடலாம். வேற தோட்டத்துக்குப் போய் வேலை பார்த்திடலாம். அப்படிப் போனவன் யாரும் நல்லாருந்ததில்லை. மத்தவங்க நல்லாருக்கணுங்கற எண்ணம் மனுஷாளுக்குவேணும்டே. அப்படி நல்ல மனசு இருக்கறபோதுதான் வாழ்க்கையில நம்பிக்கையும் இருக்கும். நம்பிக்கை இருந்துச்சுன்னா நல்ல குணம் தானா வரும். நம்பிக்கை துரோகம் பண்ற வனுக்கு இன்னிக்கி இல்லாட்டியும் நாளைக்கு நச்சுன்னு விழும்."

வேலையாட்களைக் கடிந்து கொள்கிறபோது தேவைக்கு அதிகமாகவே நாச்சியப்பனுக்கு வார்த்தைகள் தெறிக்கும். ஆனால் அதேசமயம் அதில் உண்மையும் இல்லாமலில்லை. ஏலக்காய் ஆட்களை நம்பிச் செய்கிற பயிர். ஒற்றை ஆளாய் நிர்வகிக்க முடியாத தோட்டம், பயிர் செய்தோம் பறித்தோம் விற்றோம் என்று முடியாது. பறித்ததற்குப் பிறகுதான் முக்கியமான வேலை துவங்குகிறது. பழுத்து ஈரமாய் இருக்கிற ஏலக்காய் உடனே உலரச் செய்ய வேண்டும். உஷ்ணம் காட்டி இறுகச் செய்ய வேண்டும். இல்லையெனில் பழுத்தது அழுகி விடும். உஷ்ணமாக்கி உலர வைக்க தனியான அடுப்பும், தகரப் பாய்களும் வேண்டும்,

உஷ்ணம் அதிகமானால் ஏலக்காய் கருகிவிடும். உஷ்ணம் குறைந்தால் ஏலக்காய் அழுகிவிடும். மேல் தோலில் இருக்கிற பச்சை கெடாமல், உள்ளே இருக்கிற பயறு கெடாமல் காயை இறுக்கி, தரம் பிரித்து, தூசு தேய்த்து பளபளன்னு கொடுப்பதற்கு இரண்டு மூன்று ஆட்கள் வேண்டும். அந்த இரண்டு மூன்று ஆட்களும் இது தன் தோட்டம், தன் காய் என்பது போல் உழைக்க வேண்டும். அப்படி உழைக்காது போனால் நல்ல அறுவடை செய்த பிறகும் நஷ்டம் ஏற்படும்.

ஆனால் உலகத்தில் நம்பிக்கையானவர்கள் உண்டு. தன் தோட்டம், தன் காய் என்பது போல் நினைக்கிறவர்கள் உண்டு. எஜமான் எங்கிருந்தாலும் விசுவாசமாய் உள்ளவர்கள் உண்டு.

''நாச்சியப்பா, ஆளுங்க மேல நம்பிக்கையில்லாத பொட்ட புள்ளைய கல்யாணம் கட்டி கூட்டியாந்துட்டியா. அதுக்கு ஏலக்காம் க்யூரிங்கும் விவசாயமும் கத்துக் கொடுத்துடலாம்னு பார்க்கிறியா. இது ஆம்பளை வேலைடே, பொம்பளப் புள்ளை அடுப்பு உஷ்ணம் தாங்குமா?''

அடுத்த தோட்டத்து ஆள் கேட்டபோது, நாச்சியப்பன் பதில் சொல்லவில்லை.

ஆண்பிள்ளை வேலைதான். ஆனால் பெண் அதிகாரம் செலுத்தத் தெரிந்தால் ஏலக்காய் பழுதில்லாமல் பெட்டிகளில் அடைபட்டுவிடும்.

நம்பிக்கையும், நம்பிக்கையின்மையும் ஏலக்காய் வறுப்பதில் மட்டுமல்ல ஒரு ஆணுக்கு இரண்டாவது பெண்டாட்டியாய் இருந்து குடித்தனம் செய்வதிலும் இருக்கிறது. சந்தேகம் வந்தால் மொத்தமும் பாழாகிப் போய்விடும். அரைமணி நேரம் தாமதித்தால்கூட இரண்டாவதாய் வாழ்க்கைப்பட்டவளிடம் ஆயிரம்

கேள்விகள் கேட்கப்படும். நாச்சியப்பன் இல்லாமல் வெளியூருக்கு பகவதி போவதே இல்லை. ஆச்சி பயணப் பட்ட ஊர்ப் பெயர்களெல்லாம் படித்தவுடன். அவளுக்கும் போக வேண்டுமென்று தோன்றியது. அதே சமயம் அறுத்துக் கொண்டது போல் ஆச்சி போனது பார்த்து ஆச்சர்யமாக இருந்தது.

''அதெப்படித் தோணும் ஒரு பொம்பளைக்கு. தன் ஜனம் இல்லாத தனியா போகணும்னு?''

''அவளைப்பத்தி தப்பா பேசாதே.''

''ஏன் உங்களுக்குப் பிடிக்காதோ?''

''நான் கிடக்கேன் நாய். ஆச்சி ஒரு மாதிரியான பொம்பளை.''

''ஒரு மாதிரியின்னா?''

''நல்லாருன்னு சொன்னா நல்லாருந்துடுவோம், வேற ஏதும் தப்பா சொன்னா தப்பா ஆயிடும்.''

''பில்லி சூனியமா?''

''அடச்சே, கொஞ்சம் சாமி, நேர்மைன்னு நல்லா இருக்கறவங்க. நம்மை மாதிரியில்லை.''

''நாம என்ன நேர்மை கெட்டுப் போயிட்டோம்? நமக்கு எந்த சாமி குறைச்சலாச்சு?''

அவள் கேட்க, நாச்சியப்பனிடமிருந்து பதில் எதுவும் வரவில்லை.

ஆச்சி ரிஷிகேசத்திலிருந்து விபூதியும், சிவானந்தர் படமும், கடவுள் வழிபாடு பற்றி மூன்று புத்தகங்களும் ஒருமாத சஞ்சிகைக்குக் காசும் கட்டி, நாச்சியப்ப செட்டியார் பெயரில் அனுப்பியிருந்தாள்.

அந்த சிவானந்தர் படத்தை பகவதி சட்டம் போட்டு பூஜை அறையில் வைத்தாள். உலகமெல்லாம் சுற்றி, இமயமலையில் ஒடுங்கிய அந்த மகானின் சரித்திரம் படித்தாள். அவர் கொடுத்த குறிப்புகள் பிரகாரம் பூஜை செய்யத் துவங்கினாள்.

''நீங்க உலகமெல்லாம் சுத்தி இமயமலை அமைதியாயிட்டீங்க. நான் இங்கிட்டு அங்கிட்டு நகர முடியாதபடி. வாழ்க்கைப்பட்ட பொம்பளை மாதிரி வெளில தெரியணினாலும், தூக்கிக் கொண்டாந்த பொம்பளை. சொடுக்கினா சரிங்கணும். எத்தினி சொன்னாலும் தாங்கணும். மூத்தவங்க நல்லவங்கங்கறதனால மணக்கறது. அவங்க ஐயாவுக்கு அனுப்பிச்ச போட்டோவ எனக்கு அனுப்பினதா நினைக்கறேன். இந்த புஸ்தகத்துல இருக்கிறதெல்லாம் எனக்குப் புரியணும். செட்டியாருக்கு மூத்தார்கிட்ட ஒரு பயம் கலந்த பிரியம் இருக்கே அது எங்கிட்டேயும் இருக்கணும்.

''பொம்பளைக்கு ஆம்பளை வெறும் பிரியம் காட்டினா போறாது. கொஞ்சம் பயமும் காட்டணும். பொம்பளை கோவிச்சுக்குவாளோன்னு ஆம்பளைக்கு ஒரு அச்சம் வேணும். பயம் கலந்த பிரியம் வேணும். காலும் கையும் கரணை கரணையா இருந்தா பிரியம் வந்திரலாம். பயம் வந்துருமா? ஆச்சி சொன்னா பலிக்கும்னு பயப்படறாரே செட்டியாரு நான் சொன்னா பலிக்காதா?

''என் அப்பா. ஆயிக்கு வக்கில்ல, அண்ணன் தம்பிக்கு பிடிப்பில்லை. அடுத்த வீடுன்னோ, பின்பக்கத் தெருவுன்னோ, லேடீஸ் க்ளப்ன்னோ எதுவுமில்லை. இதெ கத்துக்கன்னு எங்கிட்ட யாரும் எதுவும் சொன்னதில்லை. எலக்காய் தவிர செட்டியார் வேற எதுவும் கத்துத்தரலை.

"ஐயா, ரிஷிகேஷத்து ஐயா, எனக்கும் நல்ல விஷயங்கள் நீங்கள் சொல்லித்தரணும். மனுஷாளாகப்பட்டவங்க எது அவசியம் கத்துக்கணுமோ அத நான் கத்துக்கறதுக்கு நீங்க உதவி செய்யணும்."

ஆச்சி அவளுக்குப் பெரிய கங்கைச் சொம்பும், ஒற்றைக் கல்லில் செதுக்கிய ஆறங்குல சிவலிங்கமும், அன்னபூரணி சிலையும் அனுப்பியிருந்தாள். கடவுள் உருவங்கள் வர வர பூஜை பெருகியது. பூஜை பெருகப் பெருக கடவுள் உருவங்களும் வரத் துவங்கின.

புருஷனோடு வாழும்படியாகவும் தோரிடுகிறது. பல வித பூஜைகளும் செய்து கொண்டிருக்கிறேன். புருஷனோடு வாழுவதால் பூஜை செய்யக் கூடாது என்று உண்டா? ஒரு மடாதிபதிக்கு எழுதிக் கேட்டதும் மறு வாரமே பதில் வந்தது.

உங்கள் கடமையைப் பூரணமாகச் செய்வதே பெரிய பூஜை. இந்துப் பெண்மணிக்கு புருஷனே முழு முதற் தெய்வம் என்று பதில் வந்தது. கூடவே துளசி பூஜை செய்வது எப்படி என்றும் ஒரு புத்தகம் அனுப்பியிருந்தது. நாச்சியப்பனுக்கு நல்ல துணையாக இருப்பதோடு, துளசி பூஜையும் பகவதி செய்யத் துவங்கினாள்.

நாச்சியப்பன் அவளை இறுக்கித் திணறடிக்கும்போது தன்னைச் சுற்றியுள்ள தெய்வ உருவங்களையெல்லாம் பகவதி வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பாள். "நான் செய்யறது தப்புன்னா மன்னிச்சுக்கோங்க" என்று கெஞ்சுவாள். நாச்சியப்பன் அயர்ந்து தூங்குகிற போது கை, கால் அலம்பி முகம் கழுவிப் பொட்டு வைத்துக் கொண்டு நாச்சியப்பனை எழுப்பாத வண்ணம் முணு முணுப்பாய் சுந்தரகாண்டம் படிப்பாள்.

இருபது நாட்களுக்கு முன்பு நாச்சியப்பன் மதுரை போன போது இரண்டு லட்சத்துப் பன்னிரண்டாயிரம்

ராமஜெயம் நோட்டுப் புத்தகத்தைக் காசிக்கு அனுப்பச் சொன்னாள்.

"இந்த மூட்டையெல்லாம் நீயே அனுப்பப்படாதா? நான் ஏத்தி இறக்கி அலையணுமாக்கும்."

நாச்சியப்பன் அலுப்பாகப் பேசி டிக்கியில் தொப்பென்று அந்த மூட்டையைப் போட்டுக் கொண்டான். மூட்டை காசிக்குப் போய்விட்டதா என்று தெரிவதற்குள் நாச்சியப்பன் மரணச் செய்தி வந்து விட்டது. மதுரைக்குப் புறப்படத் தயாரான போது இன்னொரு தந்தி வந்தது.

ஆச்சி கவலைக்கிடம். விரைவாய் வரவும் என்ற செய்தியிருந்தது. பச்சையாய்ப் பறித்த ஏலக்காய் பாதி சுருங்கி இறங்குவது போல பகவதி யோசிப்பு உஷ்ணத்தில் சுருங்கி இறங்கிப் போனாள்.

"ரிஷிகேஷத்து ஐயா, நான் அழக்கூடாது. என் நிலையில் உள்ள பெண் அழுதால் யாருக்கும் பிடிக்காது. நான் சிரித்து விடவும் கூடாது. அதிகம் பேசக்கூடாது. பேசாதிருக்கவும் கூடாது, ரிஷிகேஷத்து ஐயா, இத் தோடு புருஷன் போதுமென்று ஆச்சி ஒரு காலத்தில் நின்றாள். எனக்கும் அந்த நிலைமை வந்து விட்டது, எனக்கும் இத்தோடு புருஷன் போதும். ஆனால் யார் துணையும் இல்லாமல் நான் வாழ முடியுமா? இனி செட்டியார் இல்லை என்று தெரிந்தால் எனக்கு ஏதாவது மதிப்பு இருக்குமா. இந்த நிலம் யாருடையது. என்னுடையதா. செட்டியாருடையதா, இல்லை இன்னும் வேறு யாருடையதாவதா?"

வழி முழுவதும் பகவதி கேட்டுக் கொண்டே போனாள், மதுரையை அடைந்ததும் அவளுக்கு விடை கிடைத்தது.

3

ஆறுமுகம் அவன் தோட்டத்தில் ஏலக்காய் செடியைச் சுற்றி மண் கொத்திக் கொண்டிருக்கிறபோது, நாச்சியப்பச் செட்டியார் இறந்து விட்டார் என்கிற செய்தி வந்தது.

எந்த மரணமும் மரணமடைந்தவர் வாழ்க்கையை நினைவுபடுத்துவதோடு முடிந்து விடுவதில்லை. எல்லா மரணச் செய்தியும் கேட்பவரின் மரணத்தையும் ஞாபகப் படுத்துகிறது. இன்று எவ்விதமாக ஒருவர் மரணத்தைக் கேட்டு அதிர்ந்து போயிருக்கிறேனோ அதேவிதமாய் என் மரணச் செய்தியும் யாராவது கேட்டு அதிர்ந்து போய் நிற்கக்கூடும்.

''ஆறுமுகம் இறந்து விட்டானா'' என்று கேட்டு நான் செய்த நல்லதையும் கெட்டதையும் நினைவுபடுத்திக் கொள்ளக்கூடும். நாச்சியப்பச் செட்டியாரின் மரணம் அப்படித்தான் யோசிக்க வைத்தது. அவர் செய்த நல்ல தையும் கெட்டதையும் ஞாபகப்படுத்தியது.

''நான் இருக்கேன் ஆறுமுகம். பொறந்ததிலேர்ந்து தரையில இருந்துட்டு டக்குன்னு மலைக்கு மாறினா ஒரு கலவரம் இருக்கத்தான் செய்யும். எத்தினி நேரம் மரத்தையும் புதரையும் பார்த்துட்டுருக்கறதுன்னு தோணும். நெரிசல்ல புழங்கிட்டு அடுத்த மனுஷாளைப் பார்க்க ரெண்டு கிலோ மீட்டர் நடக்கணும்னா ரொம்ப அலுப்பா இருக்கும். இதெல்லாம் பத்து மாசத்துல பழகிடும். சின்ன புள்ளைக்கு ரத்தம் ஊர்ற மாதிரி இந்தத் தண்ணி, இந்தக் குளிரு, இந்த வாசனை உடம்பில

ஊறணும். இத நீயாதான் பழகணும். மத்தபடி காசு கஷ்டம்னா நாச்சியப்பன்ட வா.''

''மாசம் பொறந்தா சம்பளம்னு மலைல இருக்கற கவர்மென்ட் ஆளுக்குக் கிடைக்காது. சம்பளம் தரை மேலர்ந்து வரணும். மண் சரிவு, மழை அதிகம் ஏதாவது சாக்கு சொல்லுவாங்க. அஞ்சாறு நாள தள்ளிக் கொடுப் பாங்க. நீ சேவை செய்யணும்னு மலைக்கு வரலை. இங்குள்ள பசங்களுக்கு படிப்புச் சொல்லித் தரணும்னு வந்திருக்கவன். உன்னைய வுட்டுர மாட்டோம்.''

நாச்சியப்பன் தோளில் கைபோட்டுக் கொண்டு பேசியது ஞாபகம் வந்தது. ஆனால் ஆறுமுகம் சேவை மனப்பான்மையோடு மட்டும் வரவில்லை. ஜெயந்தி யைத் திருமணம் செய்துகொள்ள வேண்டுமென்றுதான் மலைக்கு வந்தான்.

ஆறுமுகம் ஹரிஜன் என்றுதான் அரசாங்கத்தில் பல உதவிகை கிடைத்தது. அல்லி நகரத்தில் ஆசிரியராய்ப் பதவி ஏற்ற ஐந்தாவது வருடத்தில் உதவித் தலைமை ஆசிரியராய் அவன் ஜாதி, உயர்வு வாங்கிக் கொடுத்தது. மற்ற ஜாதி ஆசிரியர்களுக்கு அது மிகுந்த பொறாமையை கொடுத்தது. அவன் பதவி உயர்வை எதிர்த்து அவர் களால் வழக்காட முடியாது. அவனை எதிர்த்து இழிவு படுத்துகிறார்கள் என்று ஒரு அஞ்சலட்டையில் எழுதிப் போட்டால் உடனே விசாரணை துவங்குவார்கள். பதவி இறக்கம் அல்லது பதவி நீக்கம் செய்வார்கள். உயர்ஜாதிக் கூட்டம். அவனை வேறுவிதமாய்த் தாக் கியது.

''வாழ்த்துக்கள், ஆறுமுகம். அஞ்சு வருஷத்துல உதவி தலைமையாசிரியராயிட்டீங்க. ஜாதி தவிரவும், உங்களுக்கு தகுதி இருக்கு. எம். ஏ. ஆங்கில இலக்கியம் படிச்சது பெரிய விஷயம். இந்தத் தகுதிதான் உங்களுக்கு

பதவிஉயர்வு கொடுத்தது. இங்கிலீஷ் நல்லா எழுதறீங்க பேசக் கத்துக்கங்க. அதுவும் முக்கியம்'' என்று பாராட்டி விட்டு அவன்கூடவே வேலை செய்த ஜெயந்தியை அவன் நேசித்தபோது, அந்த நேசம் வெளியே தெரிந்தபோது. அதனால் பாதிக்கப்பட்ட போது, கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். பிரச்னையைப் பெரிதாக்கினார்கள்.

''அவ இட்லியை சாம்பார்ல தோச்சு தோச்சு ஊட்ட இவன் அவ மடியில படுத்துட்டு திங்கறான். பள்ளிக் கூடம் முடிஞ்சு பேப்பர் திருத்தறேன்னு ரெண்டு பேரும் உக்காந்துக்கறாங்க. மாத்தி மாத்தி சினிமா பாட்டுப் பாடறாங்க.''

''இதுல பெரிய அசிங்கம் என்னா தெரியுமா... ரெண்டு பசங்கள வாசல்ல காவலுக்கு நிக்க வைக்கிறது தான் நாங்க வுடலையே. கொல்லைப்புற சுவரு ஏறி குதிச்சு, அவங்க பேசினது, பாடினது எல்லாம் ரெக்கார்ட் பண்ணிட்டோம். கேசட் சாட்சியா இருக்குய்யா, முத்தம் குடுக்கற சத்தம்கூட இருக்கு. கவர்மென்ட் தூக்கிவிட்டுது. எங்களைத் தாண்டிப் போய் தலைல உக்காந்துட்ட வுட்டுருவமா...நீ ஹரிஜன். உனக்கு செவப்புத் தோலா உயர்ந்த ஜாதிப் பொண்ணு கேக் குதா உன்னை ஒருவழி பண்ணாத வுட்டுருவமா?'' உயர்ஜாதி கொக்கரித்தது.

ஆறுமுகம் மிரண்டான். யாராவது ஆதரவு தர மாட்டார்களா என்று ஏங்கினான். ஜாதி இல்லை என்று பேசியவர்கள் எல்லாம் அதைச் செயல்படுத்த முற் படும்போது பின்வாங்கினார்கள். ஜெயந்தி என்ன ஜாதி என்று ஆராய்ந்தார்கள். ''ஜெயந்தியோட அம்மா பிராமின். அப்பா நாயர்...மதுரை மண்ணும், மலையா ளத்து மண்ணும் கலந்த பொம்மை. நிகுநிகுன்னு ஒரு உடம்பு. துறுதுறுன்னு ஒரு பார்வை. தெருவுல நடந்து

போச்சுன்னா நிக்கிற அத்தினி பேரும் பாதாதிகேசம் பார்க்காது இருக்க மாட்டான். புடவையை இறுக்கிக் கட்டிக்கிட்டு ஜெயந்தி பூப்பந்து ஆடும் பாருங்க...இத வேடிக்கை பார்க்கறதத் தவிர வேற வேலையே கிடையாதுன்னு நிப்பாங்க. எதிர் சைடு ஆடறதுக்கு போட்டி போடுவாங்க. அப்பதான நல்லா பார்க்கலாம். கூட ஆடறவன் நொந்துருவான். பந்தே வராது. எல்லா பந்தும் ஜெயந்திக்கே போகும். அப்பதானே அவ எகிறி எகிறி அடிக்கிறத வேடிக்கை பார்க்கலாம்.

ஜெயந்தி பாக்கறதுக்கும் பிராமின். படிப்பிலயும் பிராமின். ஆனா சர்டிபிகேட் பிரகாரம் நாயர். படிப்பு முடிச்சவுடன் தடுக்குன்னு வேலை கிடைச்சுது. கவர்மென்ட் சம்பளம். நிரந்தரமான வேலை. நல்ல அழகு. நிறைஞ்ச படிப்பு வீடு வாசல், நகை நட்டு எல்லாம் இருக்கு. ஆனா கல்யாணம் ஆவலை. ஏன்...? அப்பா நாயர். அம்மா பிராமின். அப்பா கேரளா. அம்மா தமிழ்நாடு.

வச்சுக்கறேன்னு சொல்லி ஆளுங்க வந்தார்களே தவிர கல்யாணம் செய்யறதா எவனும் வரலை. ஏகப் பட்ட விளம்பரம் கொடுத்தும் எவனும் சீந்தலை. ஒருத்தன் வந்தான். தஞ்சாவூர் பிராமின்னு தபால் போட்டிருந்தான், ஆத்தாளுக்கும் பொண்ணுக்கும் ஒரே சந்தோஷம். முன்ன பின்ன இருந்தாலும் முடிச்சிரலாம்னு ஒரு எண்ணம். வந்தவன் கம்பு ஊனிட்டு வந்தான். ஆத்தாளும் பொண்ணும் அதிர்ந்து போயிட்டாங்க. வந்தவனுக்கு பதினோரு வயசிலேர்த்து சர்க்கரை வியதியாம். இருபத்தோரு வயசுல கால்ல புண்ணு வந்து முழங்கால் வரைக்கும் வெட்டிப் போட்டுட்டாங்களாம். இந்தக் குறை இருக்கறதாலதான் உங்க குறை பெரிசா தெரியலைன்னான். அடுத்த வாரமே கல்யாணம் வச்சுக்கலாம்னு அவசரப்பட்டான். ஜெயந்தி ஆடிப் போச்சு.

தன்னை யாருமே உண்மையா மதிக்கலையோன்னு பயந்துடுச்சு. இந்த துக்கத்த வெளிய சொல்லக் கூட ஆள் இல்லையேன்னு...

ஆறுமுகம் அவளுக்கு ஒரு லெட்டர் எழுதினான். அது லவ் லெட்டர் இல்லை. ஒரு கட்டுரை. பிரிவினை அற்ற உலகம்'னு அந்தக் கட்டுரைக்குப் பேரு. ஆயிரம் லவ் லெட்டர் செய்யாத விஷயத்தை அந்த ஒத்த கட்டுரை செய்தது. இந்த உலகத்துலயே ஆறுமுகம் ஒருத்தன்தான் ஆம்பளைன்னு ஜெயந்தியை நினைக்க வச்சுது. அப்புறம் என்னா...லவ்வுதான்.

மத்த ஆளுங்களுக்கு இதுல ரெண்டு கஷ்டம். ஜெயந்தி பேட்மிட்டன் ஆட மாட்டாளேன்னு ஒரு கஷ்டம். இத்தினி அழகான ஜெயந்தியை இந்த ஆறுமுகம் கட்டிக்கப் போறானேன்னு ஒரு கஷ்டம்.

அவங்க பள்ளிக்கூடத்துல தனியா பாடினதையும் பேசினதையும் டேப் எடுத்தானே...அந்தாளுக்கு இருபது வருஷ சர்வீஸ். உதவி தலைமை ஆசிரியர் பதவி அவருக்குத்தான் வந்திருக்கணும்.

ஆறுமுகம் அவரிடம் நேரே போனான். கை கூப்பினான். ''நான் நகர்ந்துர்றேங்க. தயவு செஞ்சு கேசட் குடுத்துருங்க. எங்க வாழ்க்கையைக் கலைச்சுராதீங்க.''

'நகர்ந்துக்கறேன்னா என்ன அர்த்தம்?''

''இந்த வேலைய ரிஸைன் பண்ணிடறேன். ஜெயந்தியோட எங்கனா போயிடறேன்.''

அவருக்கு அதிர்ச்சியா இருந்தது.

''அரசாங்க வேலைய விட அந்தப் பொம்பளை அத்தினி முக்கியமா?''

''ஆமாங்க.''

''ஏன்?''

''அதுவும் பாவப்பட்டது. நானும் பாவப்பட்டவன். இந்த உலகம் அவளையும் அசிங்கப்படுத்துது என்னையும் அசிங்கப்படுத்துது. நாங்க கைகோத்துக்கறது எங்களுக்கும் நல்லது. நாட்டுக்கும் நல்லது. கீழ் ஜாதின்னு நீங்க சொல்றவங்களுக்கு உண்மையான மரியாதை கிடைக்கணும்னா இந்த மாதிரி கலப்புத் திருமணம் அவசியம். எங்களுக்கு பொறக்கற குழந்தை எந்த ஜாதியும் இல்லாத இருக்கும்.''

''சரி...எப்ப போற...?''

''ஒரு மாசம் டைம் கொடுங்க.''

அவனும், அவளும் தீவிரமாய் யோசித்தார்கள். பள்ளிகள் இல்லாத இடங்களில் பள்ளிகள் ஆரம்பிக்க அரசு முயன்று கொண்டிருந்தது. தமிழ் நாட்டின் எல்லையில் போடிமெட்டு என்கிற இடத்தில் பள்ளிக் கூடம் கட்டடம் இருந்தும் அங்கு வேலை செய்ய ஆசிரியர் யாரும் முன்வரவில்லை. ஆசிரியர் இல்லாததால் மாணவர்கள் வரவில்லை. மாணவர்களே அங்கு இல்லை என்று பொய்க் காரணம் காட்டப்பட்டது. அந்தப் பள்ளிக்கூடக் கட்டடத்தில் ஒரு டீக்கடையும் சீட்டாடுகிற மடமும் இயங்கி வந்தன.

போடிமெட்டுக்கு வேலைக்கு போவதாய் மனு எழுதிக் கொண்டு ஆறுமுகம் ஜெயந்தியோடு சென்னைக்குப் போனான். மூன்று நாள் காத்திருந்து உயர் அதிகாரியை சந்தித்தான். ஜெயந்தியின் அழகால் கவரப்பட்ட அதிகாரி அவர்களை உட்காரச் சொன்னார். விஷயம் கேட்டு மனம் பதறினார்.

''இந்த மனுவெல்லாம் எடுத்துட்டு மேலிடத்துக்குப் போவாத. இந்தப் பொம்பளையைப் பங்கு போட்டுத்

தின்னுடுவாங்க. நானும் தாழ்ந்த ஜாதிதான். நகர அவஸ்தைப் பட்டுருக்கேன். பதவி உயர்வு குடுத்துட்டு இந்தப் பதவிக்கு நான் லாயக்கில்லைன்னு நம்மளையே எழுத வைப்பான் பதவிக்கு உண்டான யோக்கியதைய வளர்த்துக்கணும். இந்தப் பொண்ணு எவ்வளவு வேகமா இங்கிலீஸ் பேசுது. எம். ஏ. படிச்சிருந்தும் உன்னால முடியலையே...ஏன். பழகலை. பழகறதுக்கு உண்டான சூழ்நிலை இல்லை. பாவம். உன் குடும்பத்துல நீ யார் கிட்ட இங்கிலீஷ் பேசிப் பழகுவ. இவளைக் கல்யாணம் பண்ணிக்க. இவளோட பேசிப் பழகு. பாடிப் பழகு. ஆடிப் பழகு. நீ வீணை வாசிப்பதாக சொன்னியேம்மா. இந்தப் புள்ளைக்கு கத்துக் குடுப்பியா? ஹரிஜன் பையன் வீணை வாசிக்கணும். தன்னா தனனா பாட்டுப் பாடணும். அட்டகாசமா இங்கிலீஷ் பேசணும். கணக்குப் போடணும். காரியம் செய்யணும் ஆத்தா...நீ ஒரு அப்ளிகேஷன் போடிமேட்டுக்கு எழுதிக் குடு. ஆறுமுகம் தலைமை ஆசிரியர். நீ உதவி தலைமையாசிரியர், எப்படின்னா அங்க பள்ளிக்கூடம் நடத்துங்க. எதுனா செய்து ஒரு நூறு மாணவர்கள் புடிச்சுடுங்க. நான் சி. எம்ம கூட்டிட்டு வரேன். சென்ட்ரல் கவர்மென்ட்டுக்கு உங்களைப் பத்தி தனி ரிப்போர்ட் அனுப்பறேன். நான் ரிடையர் ஆவறதுக்கு இன்னும் மூணு வருஷம் இருக்கு. அதுக்குள்ள செய்துர மாட்டீங்க?''

இனம் இனத்தோடு சேர்ந்தது. கொள்கை கொள்கையோடு சேர்ந்தது. போராட கொடி உயர்த்திற்று.

அல்லி நகரத்திலிருந்து அவர்கள் கிளம்பத் தயாரானார்கள் ஜாதி வித்தியாசம் பாராத கம்யூனிஸ்ட் தோழர்கள் தலைமையில் திருமணம் முடித்தார்கள்.

'உலகத் தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்,' இது தான் கம்யூனிஸ்ட்டோட கோஷம். ஒரு கம்யூனிஸ்ட்டுக்கு

ஜாதி கிடையாது. மொழி கிடையாது. தேசம் கிடையாது. எங்கெல்லாம் சிவப்புக் கொடி பறக்கிறதோ அதுவெல்லாம் என் தேசம். அதைத் தூக்கிப் பிடித்தவனெல்லாம் என் சகோதரன்,

போடிமேட்ல மலையாளிகள் ஜாஸ்தி. மலையாளிகள்ல கம்யூனிஸ்ட் ஜாஸ்தி. கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு கம்யூனிஸ்ட்டுகளைப் போல நல்ல நண்பர்கள் வேறு எவரும் கிடையாது. "ஆறுமுகம், போடிமேட்ல பள்ளிக்கூடம் மட்டும் நடத்தாதே. ஒரு பாசறை நடத்த ஏற்பாடு செய்." தோழர்கள் விண்ணப்பம் செய்தார்கள்.

போடிமேட்டுக்கு ஆறுமுகம் குடி பெயர்ந்ததும் அவனை மலையாள கம்யூனிஸ்டுகள் வரவேற்றார்கள்.

"நாயர் மோளே..." என்று ஜெயந்தியை அழைத்தார்கள். மலையாளம் கலந்த கொச்சைத் தமிழ் பேசினார்கள்.

அழகிய தமிழில் நாச்சியப்பச் செட்டியார் அறிமுகம் ஆகிப் பேசிய போது, அவர் பையில் தமிழ் நாவல் இருப்பதைப் பார்த்த போது, ஆறுமுகம் அவர் நட்புக்கு ஏங்கினான்.

ஜெயந்தியோடு அவர் எஸ்டேட்டுக்கு விருந்துக்குப் போனான். ஜெயந்தியின் அழகைப் பார்த்த பிறகுதான் நாச்சியப்பனுக்கு இன்னொரு திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. பகவதியைத் திருமணம் செய்து வந்த போது, மலையில் அவர்களுக்கு விருந்து போட்டது ஜெயந்தி. ஜெயந்தி ஆறுமுகம். ஜெயந்தியும், பகவதியும் நல்ல ஸ்நேகிதிகளாய் மாற ஆறுமுகம், நாச்சியப்பன் நட்பு பலப்பட்டது.

நண்பனின் மனைவி என்கிற விஷயத்தை இருவருமே கம்பீரமாய் காத்தார்கள். ஜெயந்தி, டீச்சரம்மா என்று

தான் நாச்சியப்பனால் அழைக்கப்பட்டாள். பகவதியை ஆறுமுகம் சின்னம்மா என்று அழைத்தான். நடுவே அபிப்பிராயபேதங்கள் வந்தபோதும்கூட இந்த நட்பின் மனைவி என்கிற கம்பீரத்தை அவர்கள் இழக்கவே யில்லை. பகவதி மதுரைக்குப் போயிருப்பதாய்த் தெரிந்ததும் ஆறுமுகம் மோட்டார் சைக்கிளில் ஜெயந்தியோடு மதுரைக்குக் கிளம்பினான்.

4

ஆச்சி ஆடிப்போயிருப்பாள் என்றுதான் ஆறுமுகம் நினைத்தான். ஆண் புறாவை இழந்த பெண் புறா கற்கள் தின்று, வயிறு நிரப்பி, தரையில் பாய்ந்து சாவதைப் போல நாச்சியப்பனை இழந்த ஆச்சி அவரோடு வாழ்ந்த சந்தோஷ நினைவுகளை மென்று நெஞ்சு வெடித்து செத்துப்போயிருப்பாள் என்று நினைத்தான். வேதனையுடன் வீட்டுக்குள் நுழைந்தான்.

வீட்டு வாசல். அது சாவு வீடு என்று காட்டிக் கொடுத்தது படியேற, தாழ்ந்த குரலில் பேச்சுக்கள் கேட்டன. எவரும் வரவேற்காத வெறுமை இருந்தது. ரேழி தாண்டி ஹாலுக்குப் போனான். உட்காந்திருந்த ஆச்சி எழுந்து நின்று வரவேற்றாள்.

"வா...ஆறுமுகம்...செட்டியாரப் பாக்க வந்தியா... படுத்திருக்காக... வா..." கனத்த குரலில் அமைதியாய் வரவேற்றாள்.

தன்னைப் பொறுத்தவரையில் நாச்சியப்பன் சாகவில்லை என்று சொல்லாமல் சொன்னாள். அவள் வரவேற்பே துக்கத்தைக் கொடுத்தது.

இத்தனை அமைதியான உனக்கு, இத்தனை அன்பான உனக்கு இந்த துக்கம் அவசியமா என்ற எண்ணம் எழுந்தது. நெஞ்சு விக்கி கண்ணில் நீர் திரண்டது.

''அவளெங்கடா காணம்...? மணியாச்சு. எடுக்கணுமில்ல...''

''யார் ஆச்சி?''

''மலைல குடித்தனம் பண்ணவ எங்கே?''

''பகவதியா? கிளம்பிட்டாங்களே...அவங்க கிளம்பிட்டது தெரிஞ்சுதான் நான் என் பொண்டாட்டியோட எழுந்தேன்.''

ஆறுமுகம் திரும்பி தன் மனைவி ஜெயந்தியைக் காண்பித்தான்.

''இவதான் உம் பொண்டாட்டியா? செட்டியார் சொல்லுவாக ரொம்ப அழகு...ரொம்ப அழகுன்னு. அழகாத்தான் இருக்கீக'' அவள் கைகளை ஆச்சி பிடித்துக் கொண்டாள்.

அவளுக்கு தூக்கிவாரிப் போட்டது.

''மலையில இருக்கிற போது தரையைப்பத்தி பேசுவாகளா தெரியலை தரைல இருக்கற போது மலையப் பத்தி ரொம்ப பேசுவாக. சாக்லேட் காகிதம் மாதிரி இந்தப் பேச்சுலயே ஒரு சந்தோஷம் சுத்தி இருக்கும். சாக்லேட் பிரிச்சா காகிதம் பரபரன்னு பிரியும் இல்ல... அப்படி படபடப்பு இருக்கும். அப்பா மண்வெட்டி... அம்மா மண்வெட்டி...ஊர் உறவு எல்லாம் மண்வெட்டி. ஆள் துணையே இல்லாத ஒத்தைல இந்த ஆறுமுகம் எம் ஏ பாஸ் பண்ணி வாத்தியார் படிப்பு பாஸ் பண்ணி தன்னைவிட உசந்த ஜாதிப் பெண்ணை தைரியமா கல்யாணம் பண்ணிக்கிட்டான். தரைல குடித்தனம் பண்ண

முடியாதுன்னு மலைக்கு ஓடி வந்துட்டான். நல்லதோ கெட்டதோ ஆறுமுகத்தை நீ லவ் பண்ணியே ஆகணும். நீங்க ரெண்டு பேரும ஒத்தரை ஒருத்தர் புரிஞ்சுகிட்டே ஆவணும். தரைல பொண்டாட்டியோட சண்டை போட்டா கோயிலுக்கு போலாம். மலைல எங்கே போறது? எதிரும் புதிருமா இருந்தேயாகணும். மலைல இருக்கிறவனுக்கு நல்ல பொண்டாட்டி கிடைச்சா அதிர்ஷ்டம். இல்லைன்னா...ரொம்ப துரதிருஷ்டம். ஆறுமுகம் நல்லபடியா செட்டிலாயிட்டான்னு பார்த்தாலே தெரியுது. ராத்திரி சாப்பிட்ட பிறகு மல்லாந்து படுத்துக்கிட்டு உங்களைப்பத்தி பல தடவை பேசியிருக்காக. மதுரைக்கு வரபோது நம்ம வீட்டுக்கு ரெண்டு பேரையும் வரச்சொல்லுங்கன்னு பல தடவை சொல்லியிருக்கேன். செட்டியார் இருக்கும் போது வராதவுக...'' ஆச்சி பேச்சை நிறுத்தினாள்.

தாவித் தன்னைப் பிடித்துக் கொண்ட ஜெயந்தியின் தலையைப் பிரியத்துடன் கோதினாள்.

ஆச்சி பெரிய மனுஷி. தன் துக்கத்தை அலறலாய் அவள் பகிர்ந்து கொள்வதேயில்லை. மரணத்தை—தனக்கு நெருங்கியவரின் மரணத்தை சாதாரணமாக எடுத்துக் கொண்டு பிறரையும் அவ்விதமே உணரச் செய்யும் அருங்குணம் அவளிடம் மிகுந்திருந்தது.

பகவதி வாசலுக்கு வந்து விட்டாள் என்று தெரிந்ததும் ஆச்சி கொல்லைப்புறம் போய் விட்டாள்.

''நாம இருந்தா அந்தப் பொண்ணுக்கு அழ பயமாக இருக்கும் அதுவும் செட்டியாரோட நல்லா வாழ்ந்தது... அழுவட்டும். மனசு கரைய அழுவட்டும்.''

ஆச்சி கொல்லைப்புறம் போக, பகவதி வெடித்துச் சிதறி அழுதாள். ஆறுமுகமும் அவன் மனைவியும் தவிர மற்றவர்கள் எல்லாம் பின்வாங்கினார்கள்.

அந்த ஹாலைவிட்டு மெல்ல வேறு இடம் நகர்ந்து கொண்டார்கள். ஐந்து நிமிடத்தில் துக்கத்தின் முழுமை கரைந்து போக, பகவதி சுதாரித்துக் கொண்டாள். ஆச்சியைத் தேடினாள். ஆச்சியைப் பார்க்க அனுமதி கேட்டாள். ஆறுமுகம்தான் ஆச்சியிடம் போனான்.

''அவங்க பார்க்கணும்கறாங்க.''

''பார்த்து என்னா... ஆச்சி நெட்டுயிர்த்தாள்.

''அவ பாக்க வருவா...அவ பாக்க வருவான்னு இங்க பத்துப்பேர் பேசியாச்சு, வரச்சொல்லு.''

கொல்லைத் திண்ணையில் உட்கார்ந்திருந்த ஆச்சி நகர்ந்து கிணற்றடிக்குப் போய் கிணற்றின் மறுபக்கச் சுவருக்குக் கீழே உட்கார்ந்து கொண்டாள்,

''ஆறுமுகம், நீ இங்கனயே இரு. வேறு யாரையும் வரவேண்டாம்னு சொல்லு.''

ஆறுமுகத்தைத் தாண்டி பகவதி கிணற்றடிக்கு பின்புறம் போக, பெரிய குரலில் அழுகைச் சப்தம் கேட்டது. அந்தக் குரல் ஆச்சியினுடைய குரல் என்று நம்ப சிரமமாய் இருந்தது.

பிள்ளையோ, பொண்ணோ, வேறு உறவுகளோ பாய்ந்து இறுக்கிக் கொண்டபோது,அழாத ஆச்சி பகவதி தொட்டபோது பிளிறலாய் அழுதாள்.

''போயிடுச்சேடி...என்னையும் உன்னையும் உதறிட்டு போயிடுச்சேடி...நீ செத்துப் போனா பகவதி கவனிச்சுக்குவா...நான் செத்துப் போன உன்னை யார் கவனிச்சுக்குவான்னு ஒருநாள் கேட்டது. உன்னைக் கவனிச்சுக்கச் சொல்லி பகவதிக்கிட்ட கேட்கட்டுமா...அப்பமுன்னு உலுக்கிச்சு.

"உங்க பகவதிய யார் கவனிச்சுக்குவா...அப்படீன்னு நான் கேட்டேன்.ரெண்டு நிமிஷம் பேசாத இருந்தது."

"எனக்கு அதுதான் கவலை. உன்னை நீ கவனிச் கக்குவேன்னு எனக்குத் தெரியும். பகவதிய யார் கவனிச் சுக்குவான்னுதான் தெரியலை. அதனாலதான் சுத்தி வளைச்சு உன்னைக் கேட்டேன். நீ பகவதிய கவனிச்சுக் கிறியான்னு கேக்கறதுக்கு பதிலா பகவதிய உன்னைக் கவனிக்கச் சொல்லட்டுமான்னு கேட்டேன், உன்னைப் பத்தி அத்தினி அக்கறை...உன்னைப் பத்தி அந்தினி கவலை.

விளையாட்டா கோச்சுக்கிட்டேன். என்னை யார் காப்பாத்துவாங்கன்னு யோசிக்கலையேன்னு கத்தினேன், எல்லைக் காளின்னு ஒரு கல்லு நட்டுப்பிட்டு அதுக்கு இன்னொரு காளிய காவலா போடுவமா? நான் போன பிறகு பகவதிய கவனிச்சுக்க. விட்டுப் போச்சுன்னு வுட்டுடாத. சொல்லி பதினாறாவது நாள் இதோ... செத்துப் போயாச்சு.அதுக்கு தெரிஞ்சிருக்கும் போல"

"உறவுக்காரங்க ஆறேழு பேர் எஸ்டேட்டு எஸ்டேட் டின்னு அலையறாங்க. நம்ம சொத்த நாமதான் பாத்துக் கணும்னு நியாயம் பேசறானுக. ஆச்சிக்கு ஒண்ணும் தெரியாது, நாம பேசுவோம்னு படையா வருவானுங்க. நான் கொல்லைப்பக்கம் தனியா வந்ததே இது சொல்லத் தான். உம் பேர்ல எதாவது பதிஞ்சு வச்சிருக்கா? காகிதம் வச்சிருக்கியா?"

"ஒண்ணும் தெரியலையே" பகவதி அழுகையினூடே பேசினாள்.

"தெரிஞ்சுக்கோணும். நாப்பது ஏக்கர் எம்பேர்ல இருக்குன்னு செமத்தியா போட்டுரு. நானும் அப்படித் தான்னு சொல்லிடறேன். மறு பஸ்ஸ புடிச்சுப்போய்

ரிஜிஸ்டிரார் ஆபீஸ்ல ரூபா குடுத்து நோண்டி அது யார் சொத்துன்னு பார்ப்பாங்க. உன்னுதா இல்லைன்னா இங்க வந்து கத்துவாங்க. இதுக்குன்னே அலையற பங்காளிக இங்கு உண்டு. யாராவது சத்தம் போட்டா ஸிட்டுக் குடுத்துராதே. ராத்திரி அடையறதுக்கு கோழிக் கூடை இல்லைன்னா நாய்க்கும் நரிக்கும் பல் ஊறும்.

''ஊரைச் சுத்திக் காவல் காக்கற மாதிரி கோழியத் தூக்கி அலையும். செட்டியார விழுந்து கும்பிட்டுட்டு சட்டுன்னு பஸ் பிடிச்சு மலைக்கு போயிரு, அப்புறமா இருபது நாள் கழிச்சு மூத்தபிள்ளை கதிரேசனை அனுப்பறேன் உனக்கும் பந்தமிருக்கு. பதிமூணு நாள் வரைக்கும் சாமி கும்பிடாத. வகையா சோறும் கறியும் சமைச்சு பசுவுக்கு போடு. பசுவுக்கு போடப்போட நல்லது. லகல காசு இருக்கா...ஒரு ரெண்டாயிரம் ரூபா தரச் சொல்லட்டுமா? நான் உன்னை இந்த வீட்ல சேத்துக்க முடியாது சம்பந்தி ஆளுங்களுக்கு ஏகடியம்மா ஆயிடும். ஏதாவது தொந்தரவு இருந்தா தபால் எழுது. அவசரமா இருந்தா தந்தியடி. நாம ஒத்துமையா இருந்தா ஊருக்குப் புடிக்காது. இந்த உறவு விசேஷத்தை யாராலும் புரிஞ்சுக்க முடியாது. ஒரு வருஷம் முடியறதுக்குள்ளே நான் ஏஸ்டேட்டுக்கு வர்றேன். எங்க காணம்னு வாசல்ல அக்கறையா தேடுவாங்க...'' ஆச்சி நிதானமாய் பேசினாள்.

பகவதி, ஆச்சியைக் கட்டித்தழுவி அவள் கையை எடுத்து தலையில் வைத்துக் கொண்டு காலைத் தடவி கண்ணில் ஒற்றிக்கொண்டு விருக்கென்று எழுந்தாள்.

ஹாலுக்குப் போய் நாச்சியப்பச் செட்டியாரை வலம் வந்து நமஸ்கரித்தாள்.

''.ஆறுமுகம் அண்ணே. நீங்க இருந்து பார்த்துட்டு வாங்க. தயவுசெய்து இருந்து பார்த்துவிட்டு வந்து எனக்கு எல்லாம் சொல்லுங்க.''

ஆறுமுகத்தை நோக்கி கைகூப்பினாள்.

கீழே இறங்கி எஸ்டேட் பெண்கள் மூன்று பேரும் ஆண்கள் இரண்டு பேருமாய் உடன்நடக்க, தெரு திரும்பி மறைந்து போனாள்.

பகவதி தலை மறைந்த ஐந்து நிமிடத்தில் எஸ்டேட் பத்தி பேச்சு கிளம்பியது "ஏலக்காய்த் தோட்டத்த யாருக்காவது தாரைவார்த்தா எனக்கு கெட்ட கோவம் வந்துடும் சொல்லிட்டேன். அது எங்க ஐயா வாங்கினது. நாச்சியப்பனுது இல்லை. கண்ட கழுதைங்களுக்குத் தாரை வார்த்து குடுத்துடலாம்னு யாரும் நினைக்க வேண்டாம்."

யாரோ ஒரு பங்காளி உரக்கக் கத்தினார்.

"எந்தெந்த கழுதைக்கு எதெது எழுதிவச்சுருக்கோ அதது கிடைக்கும். காட்டுக் கதத்லா கத்தினா கிடைச் சிராது."

ஆச்சி பதிலுக்கு சீறினாள்

"ஏலக்காய் எஸ்டேட் யார் பேர்ல இருக்கு?"

"எதுக்கு கேட்கறீர்?"

"இன்னி தேதிக்கு ஏக்கர் அறுவத்தைஞ்சு ரூபா. நாப்பது ஏக்கர் என்ன விலையாச்சுன்னு தெரியுமில்ல?"

"மேல தினத்தந்தி பேப்பர் கிடைக்கறதில்லை. அதான் போறதில்லைன்னு சொன்னீரு இப்ப எஸ்டேட் பத்தி விசாரிக்கிறீர்."

"அது செட்டியார் சொத்து...கதிரேசன் அவங்கப்பா சொத்து. வாங்கினது கதிரேசன் தாத்தாவா இருந்தா லும் எஸ்டேட்டை வளர்த்தது கதிரேசன் அவங்கப்பா. அவங்க கைப்பட எழுதி வச்சிருக்காக. தனக்குப் பிறவு யாருக்கு சேரணும்னு...இருபத்தோரு வருஷமா ஒரு

நாந்து நட்டதில்லை. ஒரு களை பறிச்சதில்லை. இன்னிக்கு வந்து பாத்தியதை கொண்டாடினா எப்படி? அடுத்தவன் சொத்துக்கு அலைஞ்சு அலைஞ்சுதான அழிஞ்சு போனீக. இன்னும் ஆட்டம் குறையலையோ.''

ஆச்சி அமிலமாய் வார்த்தை இறைத்தாள்.

''நான் சொல்றது பரியலையாக்கும். செட்டியார் சொத்து செட்டியாரண்டதான் இருக்கணும் கண்ட வளுக்குப் போகப்படாது''

''ஏய்...'' ஆச்சியின் கூக்குரல் அவர் பேச்சை வெட்டி நிறுத்தியது. ''செருப்பு பிஞ்சி போயிரும். நீங்க தூக்க லைன்னா பரவாயில்லை. நானும் எம் புள்ளையும் இழுத்துக் கொண்டு போய் கொள்ளி வைப்போம். செட்டியாரச் சேர்ந்தவங்கள செட்டியார நடத்தறது போல நடத்தணும் யாராயிருந்தாலும் சரி. இன்னிக்கு அவளைச் சொல்லுவீக. நாளைக்கு என்னையும் சொல்லுவீக. கேட்டுக்கிட்டு வெறுமனே நிக்கணுமா? வார்த்தையப் பாவுட்டுட்டு பின்னால யாரும் அவஸ்தைப்பட வேணாம்.''

சட்டென்று அங்கே ஒருகோப இறுக்கம் சூழ்ந்தது.

நாச்சியப்பனை எரியூட்டும்வரை வாய் பேசாதிருப்பது நல்லது என்று அங்குள்ளவர்கள் வேகமாய் இயங்கினார்கள். எரித்துத் திரும்பியபோது இரண்டு பங்காளிகள் நாச்சியப்பன் மகனின் தோளில் கை வைத்தார்கள்.

''கதிரேசா... வீட்டுக்கு பெரியவனாயிட்டியா''— தழுவி கண்ணீர் வடித்து விசாரித்தார்கள்.

அறுபது வயது தகப்பன் இறந்து இருபத்தோருவயது மகன் ஒரு குடும்பத்துக்கு தலைவனாவது மிகவும் வேத

னையானது. விளையாட்டெல்லாம் பொசுங்கிப் போகும் நேரம் அது.

கதிரேசன் தன் தகப்பனை நினைத்தும் தன்னை நினைத்தும் அழுதான்.

5

நிலரை மணி நேரம் லாரி பிரயாணம் செய்த போது மனசில் துக்கமில்லை. வெறுமைதான் இருந்தது. இனி என்ன செய்யப் போகிறோம் என்ற பயம் இருந்தது மதுரை நகர விளிம்பில் பஸ்ஸுக்கு நின்ற போது மலைக்குப் போகிற லாரி இவர்களைப் பார்த்துவிட்டு நின்றது.

லாரி டிரைவர் இறங்கி ஓடி வந்தார்.

"செட்டியார் போயிட்டாருங்களாமே." கை கட்டி விசாரித்தார். அவர் முகத்தில் துக்கம் வழிந்தது. வண்டியிலிருந்த இரண்டு பேரை இறக்கி விட்டு பகவதியையும் கூட்டத்தினரையும் ஏற்றிக் கொண்டார். ஒரு தொலைவு வரை லாரிக்குள் நாச்சியப்பன் கொடுத்ததும், வாழ்த்தியதும், கோபம் கொண்டதும் பேச்சாய்ப் பரவின. மலை ஏறும் போது அந்தப் பேச்சு நின்றது. போடிமெட்டு தாண்டியவுடன் பாதை சரிந்து போயிற்று. பிறகு மறுபடி மேலேறிற்று. கேரளத்திற்குள் பாதை புகுந்து மேலேறுகையில் இரண்டு புறமும் ஏலக்காய்த் தோட்டங்கள் கண்ணில் படத் துவங்கின. இதற்கு மேல் வண்டி போகாது என்ற இடத்தில் இறங்கி சற்று மலை ஏற இடது பக்கம் பெரிய பள்ளத்தாக்காய் நாச்சியப்பன் எஸ்டேட் வந்தது. இங்கிருந்து வீடு அரை பர்லாங் இறங்கி, ஏறி, திரும்பி வளைந்து போக வேண்டும்.

ஏலக்காய்ப் புதர்களால் பாதை மறைக்கப் பட்டிருக்கும். சட்டென்று ஒரு சமதளம் தெரியும். வீடு தெரியும். சமதளம் தாண்டி, படியேறி சாவி போட்டுக் கதவு திறந்து வெராண்டாவில் உட்கார்ந்தவுடன் ஓவென்று அழுகை வந்தது. நாச்சியப்பன் விட்டுப் போன செருப்பைப் பார்த்துக் கதறல் அதிகமாயிற்று. அப்படியே தரையில் சரிந்து விழ. படுக்கையறையும் சாமி படங்களும் தெரிந்தன. நாச்சியப்பன் நின்றதும் நடந்ததும் கிடந்ததும் பல்வேறு கோணங்களில் ஞாபகம் வந்தன.

தோட்டத்துக்குள் நுழைந்து வாசற்படியிலேயே அமர்ந்து வாயைப் பொத்திக் கொண்டிருந்தார்கள். பகவதி எழுந்து உட்கார்ந்தாள்.

''தலைக்கு ஊத்திக்கணும்மா இந்நேரம் அங்க தகனம் ஆயிட்டிருக்கும். நீ தலைக்கு ஊத்திக்கறது மட்டுமில்லாம வீடு முழுக்க கழுவித் தள்ளணும். செட்டியார் படமிருக்கா. விளக்கேத்தி ஊதுபத்தி கொளுத்தி வைக்சுணும். இன்னிக்கு நீ சமைக்கக்கூடாது. இங்க யாருனா சமைச்சுக் கொண்டாந்தா சாப்பிடலாம். யாரைக் கேக்கறது?''

தோட்டத்தில் வேலை செய்யும் கூலிக்காரப் பெண் கவலையோடு பேசினாள். இன்னொருத்தி வீடு சுற்றி வந்து கட்டைகளில் கெரஸின் ஊற்றி தண்ணீர் கொதிக்க வைத்தாள்.

''எல்லாருக்குமா வெந்நீர் போடு. இருட்டற நேரத்துல நீங்க பச்சைத் தண்ணில குளிக்க வேண்டாம். பகவதி தலையை அவிழ்த்துக் கொல்லைப்புறம் உட்கார்ந்து கொண்டாள்.

''ஆச்சிக்கு உடம்பு சரிவில்லைன்னு தந்தி வந்ததுன்னீங்களே...ஆச்சி நல்லாதானே இருக்காங்க'' ஏலக்காய் பறிக்கும் புனிதவதி கேட்க, பகவதிக்குத் திடுக்கிட்டது.

புனிதவதியும் அவள் புருஷனும் ஐந்து வருஷமாய் இந்த எஸ்டேட்டில் இருப்பவர்கள். புனிதவதியின் புருஷன் நாராயணன் மலையாளி. புனிதவதியைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவன். இந்த எஸ்டேட்டின் எல்லா விவகாரங்களும் அந்த மலையாளியால் தான் நடைபெறுகிறது. நாராயணன் நினைத்தால் அந்த எஸ்டேட்டை லாபம் இல்லாமல் செய்துவிடலாம். பறிக்குமுன்போ பறிக்கும் பின்போ ஏலக்காய்களை அழித்து விடலாம் ஆனால் நாராயணன் அப்படியில்லை. நாச்சியப்பன் எஸ்டேட்டைத் தன் எஸ்டேட்டாய் நினைத்துச் செய்பவன். நாராயணனுக்குக் கேரளத்தின் கோடியில் மனைவி குழந்தைகள் உண்டென்றும் நாராயணன் முற்றிலும் அவர்களைத் துறந்துவிட்டு இங்கு வந்து விட்டாளென்றும் இங்கு வந்து பல்வேறு எஸ்டேட்டுகளில் வேலை செய்து முதலாளிகளோடு ஒத்துப் போகாமல் இருந்தான் என்றும் சொல்வார்கள். ஆனால் தரைக்குப் போயிருந்தபோது புனிதவதியை ஒரு மோசமான இடத்தில் சந்தித்தானாம்.

'என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா... மலைக்குப் போய் விடலாம்' என்றானாம். சரி என்று அந்த தமிழச்சி தலையசைக்க, அந்த மலையாளி அவளை மலைக்குக் கூட்டி வந்து விட்டான். தரையிலிருந்து ஆட்கள் கிளம்பி புனிதவதியைத் தேடி வருகையில் அந்த மலையாளி நாச்சியப்பனிடம் சரணடைந்தான்.

நானும் கெட்டுப் போன நாய், இவளும் கெட்டுப் போன நாய். இனிமேயாவது நல்லபடியா இருக்கணும்னு நினைக்கிறோம். விடாத துரத்திட்டு வராங்க, நாச்சியப்பாரு இடம் கொடுத்தா இந்த ரெண்டு நாயும் நன்னியோட இருக்கும்.''

முரடன் என்று பேர் வாங்கின நாராயணனைப் பற்றித் தெரிந்திருந்தும் ஒருகணம் கூட தாமதிக்காமல்

நாச்சியப்பன் அடைக்கலம் கொடுத்தார். புனிதவதியைச் சமையல் கட்டுக்குள் போகச் சொல்லிவிட்டு நாராயணனுக்கு ஒரு நாற்காலி கொடுத்துவிட்டு தானும் ஒரு நாற்காலி போட்டுக்கொண்டு நாராயணனுக்குத் திருவிளையாடற்புராணத்திலிருந்து கதை சொல்ல ஆரம்பித்தார். துரத்தி வந்த கும்பல் இரண்டு நாள் எஸ்டேட் வாசலில் நின்றுவிட்டு மெள்ள ஒரு ஆளைத் தூது அனுப்பியது.

"நம்ம சிநேகிதன் மச்சினிய நாராயணன் கொண்டாந்துட்டாராம். கேட்டா தங்கச்சிங்கறாராம். உங்க இடத்துலதான் இருக்கார் போல. எதுனா அசிங்கம் ஆவறதுக்குள்ள நாராயணனை வெளியே அனுப்பிச்சிரணும்."

நாச்சியப்பன் பதிலே பேசவில்லை. பெரிய வீச்சரிவாளை எடுத்துக் கொண்டு பேசியவனை நோக்கி ஓட, ஏலப் புதரில் பதுங்கியிருந்து பார்த்துக் கொண்டிருந்த கூட்டம் சிதறி ஓடியது, முள்ளம் பன்றியைக் கொல்லுவதற்காக வெடிமருந்தில் எறிகுண்டுகள் செய்து வைத்திருந்த நாராயணன் ஓடுகிற கூட்டம் நடுவில் நாலு வீசினான்.

"ஏய்...செத்துறப் போறானுங்கடா..." நாச்சியப்பன் தடுத்தார்.

ஆனால் நாராயணன் விடவில்லை. பஸ் போகும் பாதை வரை அவர்களைத் துரத்தி விட்டுத்தான் வந்தான்.

மறுவாரம் தரைக்குப்போய் நாச்சியப்பன் விசாரிக்க அவர்கள் வியாபாரமே இல்லாது போலீசாரால் ஒழிக்கப்பட்டு விட்டது. கீழேயிருந்து எஸ்டேட்டுக்குப் போன் செய்து நாராயணனுக்குச் சொல்லி மதுரைக்குப் போய் நாள் பார்த்து மல்லிகைப் பந்தும் தாலிக் கயிறும் கோடி துணியும் நான்கு கிராமில் தங்கப் பொட்டும் வெள்ளிக்

கொலுசும் பட்டுப் பாயும் ரெட்டைத் தலைகாணியும் வாங்கி மலைக்கு வந்தபோது நாராயணன் அதிர்ந்து போனான். கொஞ்சம் கோபப்பட்டான்.

''என்னத்துக்கு இது...தேவையில்லாத செலவு...அவ எனக்குப் பொண்டாட்டி நான் அவளுக்குப் புருஷன். இந்த வார்த்தை தான் முக்கியம். தாலிக்கயிறு இல்லை. நான் அவளை நடத்தறதுதான் முக்கியம். வெள்ளிக் கொலுசு இல்லை.''

''அது உங்க ரெண்டு பேருக்குள்ள...தெருவுல போற வன் உன் பொம்பளையப் பார்த்து நீ யாரு பொண்டாட் டின்னு கேக்கணும். அப்படி கேக்கறதுக்குத்தான் தாலிக் கயிறு...மெட்டி எல்லாம்.

''இது சலங்கைக் கொலுசு. ராத்திரி சத்தம் போடும். பகல் முழுக்க இந்தச் சத்தம் ஞாபகம் இருக்கும். ஒரு மனுஷாளை நாம் பல்வேறு விதமா ஞாபகம் வச்சுக்கு வோம். ரொம்ப நெருக்கமான பொண்டாட்டிய எத் தனையோ விதமா மனசுல வச்சுக்குவோம். புனித வதியை முதமுதல்ல பாத்தது உனக்கு மறக்காது. இப்ப கோடி உடுத்திக்கிட்டு நிப்பா பாரு. அதுவும் மறக்காது. சாகறவரைக்கும் இந்தப் புடவைல இருக்கற புனித வதியை உன்னால மறக்க முடியாது. அப்படி மறக்கக் கூடாதுங்கறதுக்குத்தான் புதுப் புடவை. வாழ்க்கைல சின்னச் சின்னதா ரசனைகள் வேணும். டீ நேந்திரம் பழம், கள்ளுன்னு வாழ்க்கைய முடிச்சுறாதே. மல்லிகை சரத்தை மாலையாக மாற்று அந்த மாலையில் அங்கங்கே செம்பருத்தி பின்னி வைத்து நாச்சியப்பன் வீட்டுக்குள் ளேயே வெங்கடாசலபதி படத்துக்கு முன்பு அவர்கள் மாலை மாற்றிக் கொண்டார்கள். அந்த வீட்டின் இன் னொரு அறையில் குடித்தனம் துவங்கினார்கள்.

நாராயணன் அந்த எஸ்டேட்டில் வேலை செய்யத் துவங்கினான். என்ன சம்பளம் என்று கேட்கவே

யில்லை. சம்பளத்துக்குப் பதில் மரக்கட்டிலும் இரும்பு பீரோவும் கெரஸின் ஸ்டவ்வும் பாத்திரப் பண்டங்களும், ஹீட்டர், மின்விசிறி போன்ற பொருள்களும் வாங்கிவரச் சொல்லுவான். குளிர்காலத்தில் அறைக்குள் வெப்பம் ஏற்ற ஹீட்டர் மிக முக்கியமான தேவையாக இருந்தது. விலைக்காய் விலை போனதும் நாராயணனுக்கு இருபது சதவிகிதம் போகும். நாராயணனால் நாச்சியப்பனுக்குப் பாரம் பெரிதாய்க் குறைந்தது. புனிதவதியின் வருகையால் பகவதியின் தனிமை குறைந்தது.

ஆனால் போனவருடம் நாராயணன் எதிர்ப்பக்க எஸ்டேட்டில் ஆறு ஏக்கர் வாங்கினான். அதே எஸ்டேட்டை பத்து ஏக்கர் குத்தகைக்கு எடுத்தான். நாச்சியப்பன் எஸ்டேட்டையும் தன் எஸ்டேட்டையும் பார்த்துக் கொண்டான். மெல்ல மெல்ல நாராயணன் தனி எஸ்டேட் வாங்கிவிடுவான் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

"நாராயணா, நீ தனியா போறதா இருந்தா எனக்கு ஒரு வருஷம் டைம் குடு. என் காதோடு காதா போற விஷயத்தைச் சொல்லிட்டு வேற ஒரு ஆளை ட்ரெய்ன் பண்ணு. ட்ரெய்ன் பண்ண ஆளுக்கு பொறுப்பை மாத்திக் குடுத்துட்டு உன் எஸ்டேட்டுக்குப் போ. தடுக்குனு குர வளைய அறுத்துட்டுப் போயிடாதே."

நாச்சியப்பன் கடுப்புடன் சொல்ல அதே கடுப்புடன் பதில் வந்தது.

"நான் எஸ்டேட் விட்டுப் போறதா இல்லை. இப்ப குத்தகை எடுக்கிற பத்தும் நானே வாங்கறதா இருக்கேன். உன்னைத்தான் காசு கடன் கேக்கறதா இருக்கேன். என் பதினேழு ஏக்கரையும் உன் நாப்பது ஏக்கரையும் நான் மட்டுமே நின்னு கவனிச்சுக்குவேன். நீ போச்சொன்னா லொழிய இந்த எஸ்டேட்விட்டு நான் போகமாட்டேன்."

"நிசமாவா?"

"சத்தியமா அப்படீன்னு தமிழ்லதான் பேசுவாங்க நான் பேசறதெல்லாம் சத்தியம்தான். நீ சொல்லுவியே சிலதெல்லாம் ஞாபகம் இருக்கும் மறக்கவே மறக்காதுன்னு...எனக்காக நீ அருவா எடுத்துட்டு ஓடினது ஞாபகத்தில் இருக்கு. எனக்காக பட்டுப்பாய் வாங்கிட்டு வந்தது ஞாபகத்தில் இருக்கு நான் நிலம் வாங்கறது உன்னைவிட்டுப் போறதுக்கில்லை. ஒரு வேளை நான் செத்துட்டா புனிதவதி ஒண்ணுமில்லாத நிற்கக்கூடாது. ஒரு சொத்துக்காரியா நிக்கணும். தரைக்குப் போய் நாராயணன் பொண்டாட்டி செருப்படி படக்கூடாது. மலையிலேயே ராணி மாதிரி இருக்கணும்."

"டேய், மடையா நான் இருக்கேன்டா. அப்படி நீ செத்துப் போயிட்டா நான் பாத்துக்க மாட்டேனா புனிதவதிய...கூரு கெட்டத்தனமா பேசிட்டிருக்க"

"நீ நல்லா பாத்துக்குவ. வெறும் கூலிக்காரியா புனிதவதி இருந்தா உன்னையும் அவளையும் முடிச்சுப் போட்டுப் தப்பா பேசுவாங்க. இல்ல...என்கூட கொஞ்ச நாள் இருடின்னு உலகம் புடவை புடிச்சு இழுக்கும். பதினேழு ஏக்கர் சொத்துக்காரியா இருந்தா எஸ்டேட்டு இருக்குங்கிற மரியாதைல ஒழுங்காக நடக்கும். ஊர் மெச்ச தாலி கட்டிக்கிட்ட பொம்பளைகளுக்கு உறவுன்னு ரெண்டு பேராவது இருப்பான். இப்படி நாமா சேத்துக்கிட்ட பொம்பளைங்களுக்கு நாம் சேத்து வைக்கிற சொத்துதான் மரியாதை நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதே, இந்த எஸ்டேட் யாரு பேருல இருக்குன்னு எனக்குத் தெரியாது. அத பகவதி அம்மா பேருக்கு மாத்து. வாசல்ல உரிமையாளர்னு அவங்க பேரை போர்டு எழுதி வை.

"இது மொத்தம் ஆச்சி பேர்ல இருக்கில்லா...ஆச்சி அவங்கப்பா அறுபது வருஷத்துக்கு முன்னாடி வாங்கினதுல்லா. நாச்சியப்பன் முணுமுணுத்தபோதுதான் பகவதிக்

குத் தன் நிலைமை தெரிய வந்தது. நாச்சியப்பன் நிலத்தை அவள் பெயருக்கு மாற்றுவதாகவோ மாற்ற முடியு மென்றோ சொல்லவேயில்லை.

'தண்ணி சுட்டுருச்சும்மா.'' இருள் நேரத்தில் புனித வதி டேக்ஸாவில் தண்ணீர் விளாவினாள். பாவாடையை நெஞ்சில் கட்டிக் கொண்டு உட்கார்ந்த பகவதியின் தலையில் தண்ணீர் ஊற்றினாள். இருள் கவிழும் அந்த நேரத்தில் பகவதி பெருங்குரலெடுத்து அழுவது அந்த எஸ்டேட்டில் எல்லோருக்கும் கேட்டது.

கையிலிருக்கிற மூங்கில் பிரம்பால் நாராயணன் ஆத்திரத்தோடு புதரை அடித்தான்.

'இத்தினி நாள் வுட்டுட்டு இப்ப அழுது என்னடி புண்ணியம். ஒரு பிடி ஏலக்காகூட உனக்குச் சொந்த மில்லையே. வாளி தூக்கிட்டுப் போய் காய் பறிக்கக்கூட உனக்குத் தெரியாதே. செட்டியார் சுகமா போயிட்டான், நீதான் கிடந்து நாறப் போற.''

இரவு எஸ்டேட்டில் முள்ளம்பன்றிகள் நடமாட்டம் அதிகம இருந்தது. ஒரு ஆள் ஓடுகின்ற சத்தமாய் கீச்சுக் குரல் கொடுத்தபடி பத்துப் பதினைந்து முள்ளம்பன்றிகள் அலைந்தன.

விடியற்காலையில் அம்பாஸிடர் கார் வந்தது. ''நாச்சியப்பன் எஸ்டேட் எது?'' விசாரித்துக் கொண்டு நாலு பேர் இறங்கினார்கள்.

அதில் ஒருவன் கூடத்தில் நின்று ஆச்சியோடு சண்டை போட்ட ஆள் என்று சுலபமாய் பகவதி புரிந்து கொண் டாள்.

''நான்தேன் தந்தி கொடுத்தேன். உன்னிய பாக்க ணும்னுதேன் தந்தி கொடுத்தேன். உன்னண்ட நாலு விஷயம் பேசணும்னுதேன் தந்தி கொடுத்தேன். எதிர்

ஊட்டு துக்கம் மாதிரி பட்டுன்னு வந்துட்டுப் போயிட்டியா...எனக்கு ஒண்ணும் புரியலை. இந்த எஸ்டேட்ல எனக்குப் பாத்தியதை இருக்கு. எப்படின்னு சொல்லட்டுமா...''

யாரும் கேட்காமல் வந்தவர் விளக்கினார்.

நாராயணன் முள்ளம் பன்றிக்காக மூங்கில் குழலில் வெடி மருந்து நிரப்பி, வெயிலில் வரிசையாக வைத்துக் கொண்டிருந்தான்.

வந்த நால்வரில் ஒருவருக்கு அது என்ன என்றுபுரிந்து போயிற்று.

6

''நீ மலையாளத்தான்...உங்க வழிமுறை,வாழ்க்கை வேற. நம்ம பக்கத்து வழிமுறை, வாழ்க்கை வேற, நீங்க மருமக்கதாயம்னு சொல்லிட்டு தாய் வழி சம்பிரதாயத்துல வர்றவங்க. நாங்க தேவகோட்டை செட்டியாரு. பிள்ளையார்பட்டிதான் கோயில் எங்களதுல்லாம் தந்தை வழி சம்பிரதாயம். பொம்பளைக்கு பெரியபவர் ஒண்ணும் கிடையாது ஊர் மெச்சக் கல்யாணம் பண்ணிக் கொடுப்போம். நகை, நட்டு, பாத்திரம், பண்டம்னு நிறைய சீர் செனத்தி செய்வோம். எல்லாத்தியும் விட பொண்ணு குடுக்கற போது மாப்பிள்ளை பேருக்கு இத்தனை ரொக்கமோ, இந்த சொத்தோ தரேன்னு ஒப்பந்தம் பண்ணி, கல்யாணத்துக்கு முன்னாடியே சொத்து ரெஜிஸ்தர் பண்ணி. நிச்சயதார்த்தம் அன்னிக்குப் பத்திரத்தைப் பிள்ளை வீட்டார்

கைல குடுத்துருவோம். அதான் பெண்ணுக்கு நாங்க பண்ற மிகப்பெரிய மரியாதை.

''பாத்திர பண்டமும் நகை நட்டும் முக்கியம்தான். ஆனா அந்த செட்டியார் வீட்டில் இல்லாததையா குடுத்துரப் போறம்...''

''அவங்க வீட்டுல ரெண்டு பொண்ணு இருந்துச்சு... இருநூறு பவுன் வெளிய போச்சு. ரெண்டு மருமக வந்தா...இருநூறு பவுன் உள்ளவந்துச்சு...அவ்வளவுதான் கணக்கு. ஆனா மருமகளுக்கு சீரா மாப்பிள்ளை பேர்ல பத்து வேலி நஞ்சை அல்லது பட்டணத்துல ஒரு மூணு கிரவுண்டு நிலத்தோட ஒரு பங்களா அல்லது மலையடிவாரத்துல இருபத்தஞ்சு ஏக்கர் புஞ்சை...இதெல்லாம் இருந்துச்சுன்னா அந்தப் பொண்ணுக்கு பெரிய பாதுகாப்பு.

''நீ பொண்டாட்டி இல்ல, வெளிய போடின்னு எந்த புருஷனும் சொல்ல முடியாது. சொன்னா எழுதிக் கொடுத்த சொத்த திருப்பிக் கொடுக்கணும். நல்ல விளை நிலத்தை, பங்களாவை வாங்கின பிறகு திருப்பித் தர எவனுக்காவது மனசாவுமா? அப்படி நல்ல சொத்தோட வந்த பொண்ணை அசிங்கப்படுத்த முடியுமா? செட்டியாருங்க ஒண்ணும் பணத்தாசை பிடிச்சவங்க இல்லை. அவங்க பெத்த பொண்ணுங்க நல்லா இருக்கணும்னு தான் காசு காசுன்னு ஓடுறாங்க.

''எந்த ஒரு வம்சம்...எந்த ஒரு ஜாதி தன் இனத்துப் பெண்களுக்கு மானம், மரியாதை கெட்டுரப் படாதுன்னு நினைக்குதோ... தன் இனத்துப் பெண்கள் கம்பீரமாவும், செளக்கியமாவும் இருக்கணும்னு நினைக்குதோ அந்த இனம் நல்லா வளரும். செட்டியார்கள் நல்லா இருக்கறதுக்குக் காரணம் ஆச்சிகள்.''

''தன் புருஷன் வியாபாரி... வணிகன்... வெய்யிலோ, மழையோ, காடோ, மேடோ...நாலு இடம் அலைஞ்சு திரிஞ்சுதான் காசு சம்பாதிக்கணும். சோறு கிடைச்ச இடத்துல தின்னு, நிழல் கிடைச்ச இடத்துல தூங்கி, அலுப்பு சலிப்பு பாக்காம காசு சம்பாரிச்சு வரான்னு தெரிஞ்சு ஒரு கருணையோட புருஷனைப் பார்க்கறவ.

''வியாபாரம் பண்ற இடத்துல புருஷனாகப்பட்ட வன் நயத்தும் பயந்தும் நடந்துப்பான்னு தெரிஞ்சவ. வியாபாரிக்கு அரசனாலயும், திருடனாலயும் சங்கட மில்லாத நாளே கிடையாது. அடிச்சுப் போட்ட மாதிரி ஒரு நல்ல வணிகன் தூங்கவே முடியாது. இதுவும் ஆச்சிக்குத் தெரியும்.

''சரீர அலைச்சலும், மனக் கிலேசமும் ஒரு வணிகனுக்கு உண்டான நிர்ப்பந்தம்னு ஒரு ஆச்சி புரிந்து கொண்டு, தன் புருஷனாக இருக்கும் வணிகனுடைய சுகத்துக்கு எது வேணா செய்வா. தன்னோட குலம் நல்லா விளங்கணும்னு ஆச்சி கடுமையான கற்போட இருப்பா...அதே நேரம் நாலு இடம் போற புருஷன் முன்ன பின்ன இருந்தா கேட்டும் கேட்காத மாதிரி போயிடுவா. ஒண்ணுக்கு ரெண்டா விலை வச்சு விக்கிறமே...நல்லவன் கெட்டவன் எல்லார் காசும் நம்ம கைக்கு வருதே... 'ஐயோ செட்டியார் சம்பாதிச்சுட் டானே' அப்படீன்னு பல கண்ணு பட்டுருக்குமே... என்ன செய்யறதுன்னு வணிகர்களுக்கு ஒரு பயம் உண்டு. தருமம் பணணி தன்னைக் காப்பாத்திக்கறதுக்கு அவங்க தயங்கறதே இல்லை.

''எந்த ஆதாரமும் இல்லாத பூமி அந்தரத்துல சுத்துதே...எப்படி? ஒரு தர்மத்துனால. ஒரு தர்மம் காப் பாத்தறதுனால...இல்லையா? அதே போல எந்த ஆதார மும் இல்லாத மனுஷ வாழ்க்கையை சொடுக்கு நேரத்துல

காணாம போயிடற மனுஷ வாழ்க்கையை எது காப்பாத்தும்...தர்மம்தான் காப்பாத்தும் வீட்டுப் பொம்பளை சரின்னு சொல்லாம தர்மம் நடந்துடுமா? இன்னிக்கு செட்டியாருங்க அள்ளிக் கொடுக்கறதுக்குக் காரணம் என்ன தெரியுமா...அவங்க வீட்ல இருக்கிற ஆச்சிதான்.

''வாரி வாரி வழங்கற கையா இருந்தாலும் வண்ணக் குலம் ஒத்தக் காசு ஏமாந்துறாது. அநியாயமா சம்பாதிக்கறதுக்கு வெக்கப்படற கூட்டம் எங்களுது. அநியாயமா செலவழிக்கறதுக்கும் அஞ்சும். அப்படி யாரும் செலவழிச்சா கண்டிக்கும்.''

பூட்டிக் கிடந்த எதிர் எஸ்டேட்டின் வாசலில் கட்டில் போட்டு லட்சுமண செட்டியார் மல்லாந்து படுத்தபடி பேசிக் கொண்டிருக்க, நாராயணன் வாசல்படியில் உட்கார்ந்தவாறு அவர் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான் அவரோடு வந்த மூவரும் ஆளுக்கு ஒரு நாற்காலியை வாசலில் போட்டு அமர்ந்து அரைத் தூக்கத்தில் சரிந்தபடி இருந்தார்கள்

''நாச்சியப்பன் ஷோக்காளி...அவன் பொண்டாட்டிக்கு அத்தினி போறாது, ஆரம்பத்துலயே கண்டிச்சு வெச்சிருக்கணும், ஆச்சிக்கு நல்லது கெட்டது சொல்லித் தர ஆளில்லாம போச்சு எங்கியோ மலைமேல கொண்டாந்து குடித்தனம் வச்சுட்டானா...வந்து பாத்து சத்தம் போட வகையில்லாம போச்சு. சரி போட்டும். இந்த ஊரு க்கு வந்து தோட்டம் போட்டுப் பயிர் பண்றது பெரிய வேலைதான். ஆறுமாசம் அசறாம உழைக்கணும்னு எங்களுக்குப் புரியுது. பசி தாங்கலை. குளிர் தாங்கலை... பொம்பளை வேணுமில்ல...இதுவும் புரியுது... வண்ணமா இங்கலைன்னா இந்த மலை ஏறி இறங்க முடியுமா? ஏதோ நாகர்கோவிலேர்ந்து ஒரு பாதி மலையாளக்காரியக் கூட்டி வந்துட்டான்.

"சாப்பாட்டுக்கு இல்லாத குடும்பமா இருந்துருக்கும். நகை போட்டு, புடைவை போட்டு, பாத்திரம் பண்டம் காமிச்சுத் தூக்கியாந்துட்டான். மண்ணு சட்டில சமைச்ச குடும்பம். பித்தளை தவலைய பாத்ததும் ஆடிப் போயிருக்கும் காதுல பனை ஓலைய சுத்தித் திரியற பொம்பளைங்களுக்கு அரக்கு பாம்படம் போட்டுருப்பான். என்னையும் எடுத்துக்க...எம் பொண்ணையும் எடுத்துக்கன்னு அழைப்பு வந்திருக்கும். தம்பிய பெரிய படிப்பு படிக்க வைக்கறேன்னு வாக்குக் குடுத்து, காசு குடுத்து இத்தினி வருஷம் சௌகரியமா இருந்துட்டாங்க.தம்பி மேல் படிப்பு முடிச்சுட்டான். அந்தப்பொண்ணுகிட்ட நாப்பது சவரன் நகை இருக்கும் போல இருக்கு. குடித்தனம் பண்ண பாங்க்ல ரொக்கம் போட்டிருக்க மாட்டானா... அதையும் அவளே வச்சுக்கட்டும். பாவப்பட்ட பொம்பளை...தாலி கட்டாத குடித்தனம்...கூட எது கேட்டாலும் கொடுத்துர் றோம் இந்த ஏலக்கா எஸ்டேட் என்னுதுன்னு அந்த பகவதி ஆரம்பிச்சா நல்லா இருக்காது.

"இது ஒரு செட்டியார் சொத்து. இன்னொரு செட்டியார் கிட்டதான் போகணும். கூத்தியாளுக்குப் போகப் படாது போகவிட மாட்டோம். சாம, தான, பேத, தண்டம் அத்தினியும் பிரயோகம் பண்ணுவோம். உனக்காச்சு எனக்காச்சுன்னு மல்லு கட்டி நின்னுருவோம்.

"நீ யாரு... இத கேக்கறதுக்குன்னு உனக்குள்ள ஒரு கேள்வி வரும். ஆச்சியோட தாத்தா எனக்கும் தாத்தா. ஆச்சியோட அப்பா எனக்குப் பெரியப்பா.

"இந்த நிலம் வாங்கினது ஒரு பெரிய கதை. ஆச்சியோட தாத்தா, அதாவது எங்க தாத்தா இருபது வயசுல நாள் நட்சத்திரம் பாத்து வியாபாரத்துல இறங்கினாக.

இருபதடிக்கு இருபதடி கடை போட்டு ரெண்டடிக்கு ரெண்டடில தேக்குமரம் கல்லாப்பெட்டி செய்து, தனி பேரேட்டு புக்கு, இரும்புப் பொட்டி எல்லாம் செய்து உக்கார வச்சாங்க. மூணுநாள் சும்மா உட்கார்ந்திருந்த செட்டியாரு, அதாவது எங்க தாத்தா எதாவது வியா பாரம் பண்ணியே ஆகணும்கற துடிப்புல, நாலாவது நாள் ஒரு ஆளுக்கு அஞ்சாயிரம் ரூபா கடன் குடுத்தாக .அப்ப வியாபாரம்கறது வட்டி வியாபாரம்தான்.

"அந்த அஞ்சாயிரம் ரூபா கடன் குடுக்கறதுக்கு முன்னாடி அவுக அப்பாவ ஒரு வார்த்தை கேட்டுருக் கணும். கேக்கலை. தானா முடிவு பண்ணிட்டாக. .அவுக அப்பாருக்குத் தெரிஞ்சதும் தாம் தாம்னு குதிச் சாரு...எத்த நம்பி அவனுக்குக் கடன் குடுத்த. அவனால திருப்பித் தரமுடியாது. போய் கடன் குடுத்த பணத்தைத் திரும்பி வாங்கிட்டு வான்னு சத்தம் போட்டாக. அது [illegible] வியாபாரம். காத்தால பத்து மணிக்குத் திருப்பிக் [illegible]ன்னு கேட்டா நல்லா இருக்காதே...அதனால கடன் [illegible]த்தவன்கிட்ட போய், எங்க அப்பா ஏன் கடன் குடுத் [illegible] வையறாரு. உன்னைத் தேடிப் புடிச்சு காசைத் [illegible] வாங்கிட்டுவான்னு கத்தறாரு. அப்படி செய்ய [illegible] மனசு இடம் கொடுக்கலை. நான் தேடிப் பாத் [illegible]. அவரு இல்லைன்னு அப்பாட்ட சொல்லப் [illegible]றேன். அதுக்கு ஏத்தவிதமா நீ ஊரை விட்டு [illegible] நாள் ஒதுங்கியிருக்கணும். அப்படி போறதுக்கு [illegible] செலவு காசா நான் எதாவது குடுக்கணும்னாலும் [illegible]றேன். இந்த அஞ்சாயிரத்த நல்லபடியா வெளி [illegible] எடுத்துட்டுப் போய் வியாபாரம் பண்ணி, வட்டி [illegible]மா எனக்கு திருப்பிக் குடுத்தரணும்னு கேட்டுக்

கறேன். நான் உங்களுக்கு நல்ல மனசோட குடுத்த காசு. இந்த காசுக்கு எந்த கெடுதியும் வராதுன்னு கை கூப்பிச் சொன்னாராம்.

"இருபது வயசு செட்டிப் பிள்ளை தன் வாக்கைக் காப்பாத்தணுங்கறதுக்காக—தன் முதல் வியாபாரத்தை நல்ல விதமா நடத்தணும்கறதுக்காக என்ன அழகா பேசிருக்கு பாருய்யா. இதை இப்ப நினைச்சாலும் எனக்கு அழுகை வருது.

"ஆனா விதி வலிது. அஞ்சாயிரம் ரூபா கடன் வாங்கி வெளியூருக்கு வியாபாரத்துக்குப் போனவன் போனவன்தான். ஆளே காணம். எங்க தாத்தாவ அவுக அப்பா தன்கிட்ட கேக்காம கடன் குடுத்ததுக்காக தினம் திட்டிக்கிட்டேயிருப்பாராம். சோறு திங்க உக்கார்ற போதெல்லாம் ஏசுவாராம். எங்க தாத்தாவுக்கும் இந்த விஷயம் முள்ளா உறுத்திட்டிருந்திருக்கு. எந்த கோயி லுக்குப் போனாலும் அந்த அஞ்சாயிரம் உருப்படியா திருப்பி வரணும்னு வேண்டிக்குவாராம். அதுக்கு அடுத்து நடந்த வியாபாரம் எல்லாம் ஓஹோன்னு நடந்தாலும் இந்த அஞ்சாயிரம் போனது ரொம்ப வருத்தம்.

"ஆனா விதி திசை மாறுச்சு. பதினோரு வருஷம் கழிச்சு அந்தாள் வந்தான். ரெண்டாவது உலகப் போர் நடந்தபோது இங்கிலாந்துக்கு காப்பிக் கொட்டை, ஏலக்கா தேயிலைத்தூள் கேரளாவுலேர்ந்து வாங்கி மெட்ராஸ் கொண்டு போய்க் குடுத்து, மெட்ராஸ்ல பெரிய தொகை கடன் வாங்கி, மொத்த சரக்கும் கப்பல்ல ஏத்தி, அந்தக் கப்பலும் ஜப்பான்காரன்கிட்ட பிடிபட அத மடக்கி அமெரிக்காக்காரன் மீட்டு வர காப்பிக் கொட்டையும், தேயிலையும் ஏலக்காயும் ஏரோப்ளேன்ல அமெரிக்க போயிடுச்சு. வாங்கினவரு கிறிஸ்தவரு. வாத்தியாரா இருந்து சலிச்சுப்போய் வியாபாரியானவரு.

அமெரிக்கால ஒரு கம்பெனி தொடர்ந்து காப்பிக் கொட்டையும், ஏலக்காயும் சிலோன்லேர்ந்து டீயும் கொண்டாரச் சொல்லிச்சு ஆளு ரெக்கை கட்டிப் பறந்திருக்கான். அஞ்சாயிரம் கடனை சுத்தமா மறந்திட்டான். பெரிய தொகையோட யுத்தம் முடிஞ்சு மதுரைக்கு வந்து போடிநாயக்கனூர்ல நிலம் வாங்கி போடிமெட்டுல ஏலக்கா தோட்டம் வாங்கி, கம்பீரமா செட்டிலாயிட்டான். அமெரிக்கால ஏது பண்ணானோ என்னா பண்ணானோ முதல்ல தேமல் மாதிரி இருந்து அப்புறம் தோல் சுருங்கி குஷ்டம்மாதிரி வத்துருச்சு. கொண்டாடின உறவெல்லாம் தூரப் போயிடுச்சு. கிட்ட போக முடியாத அளவுக்கு உடம்பு மோசமாயிடுச்சு. தேவகோட்டைக்கு அனுப்பினான். எங்க தாத்தா விழுந்தடிச்சுக்கிட்டு ஓடினாரு. 'என் கைல காசு இல்ல. இருக்கற கொஞ்சம் காசும் எனக்கு வைத்தியத்துக்கு வேணும். உன் அஞ்சாயிரத்த நான் திருப்பித் தராதது பெரிய குத்தம். ஒரு கடுகாசி கூட போடாதது பாபம். கேரளாவுல இருக்கற இருபது ஏக்கர் ஏலத் தோட்டமும் நீயே வச்சுக்கன்னு எழுதிக் கையெழுத்துப் போட்டுக் குடுத்தானாம். அந்தப் பத்திரத்தை வாங்கி தன்னோட வயசான அப்பா கைல வச்சு எங்க தாத்தா விம்மி விம்மி அழுதாராம். செட்டிப் புள்ளை நம்பி கொடுத்த காசு திரும்பாம போயிடாதுய்யா. எப்படியும் செட்டிப்புள்ளை கைக்கு பணம் திரும்பியாவணும். எங்க தாத்தாவோட அப்பா எங்க தாத்தா தலையைத் தடவி இந்த நிலத்து மதிப்பு என்னன்னு தெரியாது. ஆனாலும் நீ முதல் முதலா அப்பாகிட்ட சொத்து. பதினோரு வருஷம் கழிச்சு உனக்கு பெரிய லாபம். என்ன காரணம் கொண்டும் இத நீ விக்காத. இத என் கட்டளையா உன் புள்ளைங்களுக்கு சொல்லி வை. அப்படீன்னு சொன்னாராம். இப்பேர்பட்ட சொத்து இது. வுட்டுருவமா? நாகர்கோவில் பகவதிக்குக் குடுத்துருவமா?''

நாராயணன் தடுக்கென்று எழுந்தான். லட்சுமணச் செட்டியார் பயந்து போய் என்ன என்று கத்தினார்.

"முள்ளம்பன்றி" என்று சொல்லிவிட்டு நாராயணன் இருட்டில் ஏலப் புதர்களை நோக்கி ஓடினான்.

7

ஏலம், தாழையின் குடும்பம். பூமியின் விளிம்பிலிருந்து சாண் அகலத் தழை இரண்டு கை நீளத்திற்கு வளரும். எல்லா பக்கமும் கிளம்பி, பச்சையாய் துவங்கி, மெல்ல மெல்ல மஞ்சளாகி பிறகு பழுக்கும். சின்ன நாற்று செடியாகி, புதராகி, செழிப்பாய் வளர்ந்து மூன்று வருடங்களுக்குப் பிறகு, புதரின் மையத்தில் இருந்து ஒரு நரம்பு பருமனுக்கு ஒரு கொடி வெளிவரும். இதற்கு வள்ளி என்று பெயர். இந்த வள்ளி என்ற சொல்லுக்குக் கொடி என்றுதான் அர்த்தம்.

இந்த 'வள்ளி' வந்த செடிதான் பருவம் கொண்ட செடி. இந்த வள்ளியிலிருந்து சிறு மொட்டுகள் போல் ஏலம் காய்க்க ஆரம்பிக்கும். செடியில் உள்ள தழைகளுக்கு ஏற்ப வள்ளியில் நிறைய ஏலக்காய் சிளம்பும். அப்படி உருண்டு விளைந்த ஏலக்காயை சரியான நேரத்தில் பறித்துவிட வேண்டும். டீ கொழுந்து பறிப்பது போல ஏலக்காய் பறிப்பதும் ஒருவித்தை. ஒரு கைப் பக்குவம். கொத்து கொத்தாய் முளைத்திருக்க, ஏலக்காயில் பிஞ்சு நசுக்காது, காய் மட்டும் பறிக்க பழக்கம் வேண்டும்.

புதர் போன்ற ஏலச்செடியின் அமைப்புக்குள் விஷ ஜந்துக்கள் சுருண்டு கிடக்கலாம். கடித்தால் துடி க்க

வைக்கின்ற எறும்புகள் இருக்கலாம். ஆகவே பறிக்கிறவர்கள் பேசிக் கொண்டேதான் நடப்பார்கள். தடங்களைப் பார்த்துக் கொண்டுதான் பேசுவார்கள். நல்ல வெளிச்சத்தில்தான் ஏலக்காய் பறிப்பார்கள். அனேகமாய் பறிக்கிறவர்கள் பெண்களாய்த்தான் இருப்பார்கள். பத்து பிஞ்சுகளுக்கு நடுவே ஒரு முற்றிய பழத்தை எடுக்க பெண்களுக்குத்தான் பொறுமை இருக்கும்.

விஷ ஜந்துக்கள் குரல் கொடுத்தால் ஓடிவிடும். எறும்புகள் தட்டிவிட்டால் நகர்ந்து விடும். இந்தப் பெண்கள் மிகவும் பயப்படுவது. முள்ளம்பன்றிக்குத்தான்.

மலைச் சரிவில் சூரியனை மறைக்கும் மரங்களுக்கு நடுவே பத்தடிக்கு ஒரு புதராய் இருக்கின்ற ஏலச்செடிகளை வளைந்தும், நெளிந்தும், குனிந்தும் தாண்டிப் போகின்றபோது தடேலென்று ஒரு கால்பந்து அளவிற்கு முள்ளம்பன்றி குறுக்கிட, ஏலம் பறிக்கும் பெண்கள் பெரிதாய் அலறுவார்கள். அலறினால் முள்ளம்பன்றி ஓடாது. அசையாது நிற்கும். என்ன என்பது போல உற்றுப் பார்க்கும். முன்னேறினாலோ, கை வீசினாலோ, கல் எடுத்து வீசினாலோ, கொம்பு காட்டினாலோ எந்த சத்தமும் இல்லாமல் தன் முட்களைச் சிலிர்ப்பிக் கொண்டு இருக்கும்.

கருமையும், தேன் கலரும், வெண்மையும் கொண்ட அந்த முட்கள் பூமியைத் தவிர மற்ற எல்லா இடங்களை நோக்கியும் குத்திட்டு நிற்பது ஒரு அழகான காட்சி. முள்ளம்பன்றிக்கு எலிமுகம். பக்கவாட்டுக் கண்கள். முட்களைச் சிலிர்ப்பி எல்லா பக்கத்து அசைவையும் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருக்கிற முள்ளம்பன்றியை நோக்கி விவரம் தெரியாதவர்கள் நகர்ந்து விடுவது உண்டு.

"மொழங்கா ஒசரந்தானே, அருவாளால ஒரு போடு

போட்டால் போச்சு. இல்ல, குண்டாந்தடிய மூஞ்சி பாத்து வீசணமுனா ஒத்த அடியில நசுங்கிடும்'' என்று கணக்குப் போடுவதுண்டு.

அருவாளின் பிடி இருகுகிற நேரம், தரையில் ஊன்றி இருந்த தடி பூமியிலிருந்து ஒரு அடி எழும்பின நேரம் முள்ளம்பன்றி மின்னல் வேகத்தில் செயல்படத் துவங்கி விடும். எதிரியிடம் நேரிடையாக வராது, இரண்டடி வலதோ, இடதோ ஒரு பெருச்சாளி வேகத்தில் ஓடும். எதிரியைக் கடக்கிறபோது தன் தோலை இறுக்கி உதறும்.

மனிதர்கள் ஒரு கோணியை தூசு போக உதறுகின்ற வேகத்தில், முள்ளம்பன்றி தன் தோலை உதறும். விறைத்து நின்ற அதன் முட்கள் சடக்கென்று இரண்டு திசைகளிலும் பாயும். இரண்டடி தூரத்திலிருந்து ஒரு கத்தியை வீசினால், கூர்மையான கத்தி உடம்பிற்குள் பாயாதா? முழங்கால், இடுப்பு, தொடை என்ற நாலு ஐந்து இடத்தில் குறைந்த பட்சம் நான்கு முட்களாவது குத்தி நிற்கும்.

ஒரே நேரம் நாலு கத்திக் குத்து வாங்கியவன் பெரிதாய் ஒன்றும் செய்துவிட முடியாது. குத்திய முள்ளம் பன்றியை புதர் புதராய்த் தேடிவிட முடியாது. அதற்கு பிறகு ஏற்படும் கடுப்பு வலியை சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது.

எனவேதான் ஏலக்காய் பறிக்கிற பெண்கள். ஏன் ஆண்கள் கூட எதிரே நிற்கிற முள்ளம் பன்றிக்கு வழி விட்டு விடுவது வழக்கம். மலைச்சரிவின் மேலோ, கீழோ நகர்ந்துவிட, முள்ளம்பன்றி கண நேரத்தில் காணாமல் போய்விடும். அது பின் தொடர்ந்து தாக்காது. மனிதர்களை மடக்கித் தொந்தரவு செய்யாது. எவரையும், எதன் பொருட்டும் பயமுறுத்தும் எண்ணம் முள்ளம்

பன்றிக்கு இல்லை. இப்படி சிலிர்த்து நிற்பதும், முட்களால் தாக்குவதும் தற்காப்பின் பொருட்டே. ஒரு முறத்தை, அல்லது பிரம்புக் கூடையை மறைப்பாக வைத்துக் கொண்டு பெரிய முள்ளுப் பந்தாய் முள்ளம் பன்றி எதிரே நிற்பதை சிலர் பார்த்திருக்கிறார்கள். எதிரியின் பார்வை தன்மீது இல்லை என்று தெரிந்தால் போதும், முள்ளம் பன்றி சுருக்கிக் கொண்டு ஓடிவிடும்.

வழியில் மடக்கி விசாரிக்கிற செயலுக்காய் ஏல விவசாயிகள் முள்ளம் பன்றியை வெறுக்கவில்லை. முள்ளம் பன்றி 'வள்ளி'யின் மீது வாய் வைத்து விடும். ஒரு ஸ்ட்ரா போட்டு கொக்ககோலா குடிப்பது போல, வள்ளியின் நுனியை மென்றுவிட்டு அந்த செடியின் சத்து முழுவதும் உறிஞ்சிக் குடித்து விடும். மூன்று வருடங்கள் காத்திருந்து வளர்ந்த வள்ளி, நூறு நூத்தியிருபது காய்கள் காய்க்கும் அந்தக் கொடி, இந்த முள்ளம் பன்றியின் வாய் பட்ட நேரத்தில், இந்த எலி இனத்துப் பகைவனால் தாக்கப்பட்ட நேரத்தில், பெருத்த நஷ்டம் உண்டாகும். ஒரு வள்ளியோடு முள்ளம்பன்றி திருப்தியடைவதில்லை. அங்கங்கே வாய் வைத்து உலரச் செய்து விடும். பூச்சி விழுந்து அழிப்பதை விட மோசமான அழிப்பாக இருக்கும்.

மனிதர்கள் தங்கள் லாபத்திற்கு குறுக்கே நிற்கும் எந்த உயிரினத்தையும் வாழ விட மாட்டார்கள். நீயா? நானா? என்பதுபோல் இறங்கி விடுவார்கள்.

முள்ளம்பன்றியை பொறியிலோ, வலையிலோ பிடிக்க முடியாது. அப்படியே அது சிக்கிக் கொண்டாலும் அதைப்போய் யார் எடுப்பது? நடந்துபோகும் போதே நாலு முட்கள் வீசும் முள்ளம்பன்றி, கண்ணியில் சிக்கிக் கொண்டால் எத்தனை முட்கள் வீசும்? எனவே முள்ளம் பன்றியை ஒழிக்கும் மிகச்சிறந்த வழி, வெடி.

நூல் கட்டி இயங்கும் கண்ணிவெடி. முள்ளம் பன்றி போகின்ற பாதைகளை ஒருவாறு அறிந்து கொண்டு தரையிலிருந்து ஆறு அங்குல உயரத்தில் சணல் கட்டி, அந்த இரண்டடி சணல் நூலின் இருபுறமும், மூங்கில் குழாயினை நட்டு வைத்திருப்பார்கள். அந்த மூங்கில் குழாயிற்குள் வெடிமருந்து திணிக்கப்பட்டிருக்கும். கயிறு இழுபடும்போது கந்தகம் தடவிய இருமுனைகளும் வேகமாக இழுபடும். இழு படலில் உராய்வு வர. கந்தகம் பற்றிக் கொள்ளும். கந்தகம் பற்றிக் கொள்ள வெடி மருந்து சூடாகி, புகைந்து திணறி படீரென்று வெடிக்கும். இரண்டடி அகலமுள்ள வழியில் ஒரு அடி அகலமுள்ள முள்ளம்பன்றி வேகமாய்க் கடக்க, கணநேரத்தில் வெடித்து. துண்டு துண்டாய்ச் சிதறும். அல்லது மிகக் கடுமையாய் அடிபட்டு மல்லாக்கக் கிடக்கும்.

இரவு நேரங்களில் வள்ளியை உறிஞ்சப் போகும் முள்ளம் பன்றிக்கு வெடி வைப்பார்கள். இதில் மனிதர்கள் மாட்டிக் கொண்டு அலறுவதுமுண்டு. மலையில் ஏலக்காய் திருடர்கள் உண்டு. ஒரு ரூபாய்க்கு மூன்று அல்லது நான்கு ஏலக்காய் தரையில் விற்பனை ஆகும், அப்படிப்பட்ட காயை ஒரு கையளவு பறித்துப் போனால் சுலபமாய் இருபது முப்பது ரூபாய் தேறிவிடும்.

பகலில் நடமாடினால் தெரிந்து விடுமென்று விடியலில், அரையிருட்டில் ஏலக்காய் திருடுவார்கள். பிஞ்சும் பழமுமாய் உருவிக் கொண்டு போவார்கள். பக்குவமாய் பறிக்க வேண்டியவற்றைத் திருட்டு பயத்தில் விவரமற்று உருவிக் கொள்வார்கள். வள்ளியைச் சேதப்படுத்துவார்கள்.

இப்படிப்பட்டவர்கள் முள்ளம் பன்றிக்காக வைத்த வெடிகுண்டுப் பொறியில் சிக்கிக் கொள்வார்கள். சிக்கி

சாகட்டும் என்றே முள்ளம்பன்றிக்காக வைத்திருப்ப காய்ச் சொல்லி விசேஷமான வெடி இவர்களுக்கும் வைப் பதுண்டு. இரண்டு லட்சுமி வெடியின் பரிமாணத்தில் முள்ளம்பன்றி செத்துவிடும். மனிதர்களுக்கு இன்னும் அதிகமான வெடிமருந்து கட்டுவிப்பார்கள். கால் சிதறிப் போகிற அளவிற்கு மருந்து திணித்திருப் பார்கள்.

இந்த வெடி மருந்து ஏலம் விளையும் இந்த மலை களில் பல உயிர்களை காவு கொண்டிருக்கிறது. நாய், குதிரை, பசு என்று மிருகங்களையும், அம்மாவின் இடுப்பு விட்டு முன்னே ஓடிய குழந்தையையும், எந்தப் பக்கம் குண்டு வெச்சோம் என்று தேடினவனையும், புருஷன் இருக்க, வேறு ஒருவனோடு உறவு வைத்துக் கொண்ட பெண்ணின் கள்ளக் காதலையும், உரம் விற்க வந்த பட் டணத்து ரெப்ரசன்டேட்டிவையும் தாக்கி நாசப் படுத்தி யிருக்கிறது.

மனிதர்களை இப்படி காயப்படுத்தி விடுகிறதேஎன்று இதைக் கை விட்டால் முள்ளம் பன்றிகள் பெருகி விடு கின்றன எனவே வெடிமருந்து விஷயத்தை யாரும் கைவிடுவதாக இல்லை.

நாராயணன் வீட்டை விட்டு ஓடும்போதே கெட்டி மூங்கில் கழியை எடுத்துக் கொண்டு ஓடினான்.

கொல்லை தாண்டியதும் சரிவு. அந்தச்சரிவில் ஆட் கள் அவ்வளவு சுலபமாக இறங்கிவிட முடியாது. கழி ஊன்றிக் கொண்டோ அல்லது புதர்களை கவனமாக பற்றிக் கொண்டோதான் இறங்க வேண்டும். ஆனால் முள்ளம் பன்றிகள் நெட்டு குத்தலின் சரிவில் மிகச் சாதா ரணமாக இறங்கும். ஒரு வேளை கால் நொடித்தால்

முட்களை சிலிர்ப்பி பந்தாக்கி பயமின்றி உறுமிக் கொண்டு போகும் புதர்களில் முட்டி நின்று இறங்கும்.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என்று ஒரு முள்ளம் பன்றியின் குடும்பமே அந்தசரிவில் முட்பந்துகளை இறக்கி ஓடின. நாராயணன் திகைத்தான். சரிவில்உட்கார்ந்து சறுக்கியபடியே இறங்கினான். ஒன்றரை பனை சரிவிற்கு பிறகு ஐந்தடி அகலத்திற்கு ஒரு சமதளம் கிடைத்து நாராயணன் தொப்பென்று அடியோடு குதிக்க, அடுத்த சரிவின் விளிம்பிலிருந்து ஒரு முள்ளம்பன்றி நகர்ந்து வந்தது. நின்றது சிலிம்பியது. அசையாது நாராயண னையே பார்த்துக் கொண்டது.

"வாடி, வா. வதவதன்னு பெத்து போட்டு தோட் டத்த அழிக்கலாம்னு பாக்குறியா? ஒன்று நீ, இல்லநான், வாடி"

கம்பை இறுக்கிக் கொண்டு பின்னடைந்தான். எதிரி முன்னேறுவான் என்று நினைத்த முள்ளம்பன்றி திகைத் தது விறைப்பைச் சற்று தளர்த்தியது. இரண்டடி பின்னே போன நாராயணன் கொம்பை தரையில் ஊன்றி பத்தடி தாண்டி முள்ளம்பன்றி முன்னே குதித்தான். குதித்த உடனே வானத்திற்கு எகிறினான். எகிறும் போது மூங்கில் கழியால் முள்ளம் பன்றியின் முகத்தில் அடித்தான், முள்ளம்பன்றி கீச்சென்று கத்தியது. மல் லாக்கப் புரண்டு துடித்து. சுதாரித்துக் கொண்டு, முழு விறைப்போடு பெரியமுள் பந்தாய் நின்றது. நாராயண னுக்கும் முள்ளம்பன்றிக்கும் இடையே பத்தடி இடை வெளி இருந்தது. இருவரும் பாயத் தயாராக இருந்தார் கள். மேலேயிருந்து 'நாராயணா என்று ஆச்சியின் உறவுக்கார செட்டியார் குரல் கேட்டது.

சரிவின் நுனியில் வருவது ஆபத்தானது. எப்போது வேண்டுமானாலும் மண் இளகி ஆளைச் சறுக்க வைத்து

விடும். நாராயணன் அந்த ஆளைப் பற்றிக் கவலைப் பட்டான். ஆனால் முள்ளம் பன்றி, தலைக்குமேல் ஆபத் திருப்பதை கவனித்து விட்டது. நாராயணனை நோக்கி வேகமாய் நகர்ந்தது.

8

கதிரேசன், வீட்டு ஹாலில் வாரப் பத்திரிகைகள் படித்துக் கொண்டு வருகிற டெலிபோன் அழைப்புகளுக் குப் பதில் சொல்லிக் கொண்டு வாசலுக்கு வந்து துக்கம் கேட்பவர்களுக்குத் தலையசைத்துக் கொண்டு பொழுதை கழித்துக் கொண்டிருந்தான்.

"இன்னும் பதினைஞ்சு நாளைக்கு எங்கயும் போகப் படாது வீட்டோட இருக்கணும். துக்கம் கேட்க மனுஷா வந்து பதில் சொல்ல நீ இல்லைன்னாக்க, உன் அப்பா சாவுல யாருக்கும் வருத்தம் இல்லேன்னு ஆகும்..."

"இன்னும் ஒரு வருஷம் உன் படிப்பு முடியறவரைக் யும் உங்கப்பா இருந்திருக்கலாம். என்னவோ சட்டுன்னு போயிட்டாரு. இந்த வருஷம் பரீட்சை எழுதிட்டீன்னா படிப்பு முடிஞ்சிரும்ல...நேர எஸ்டேட் போயிடு வேலை கத்துக்க. நாச்சியப்பன் ஏலக்கால மட்டும்தான் கவனமா பாத்துக்கான். காப்பி வாங்கவேயில்லை. நீ காப்பி வாங்கு." அம்மாளின் பக்கத்து உறவு ஒன்று உபதேசம் செய்தது.

"நீ ஏன் காப்பி வாங்கணும்கறதுக்குக் காரணம் சொல்றேன் ஏலக்கா என்ன உயரத்துல வளருதோ அதே உயரத்துல காப்பியும் வரும். காப்பிக்கு பாடு கம்மி. ஒரு

மாதிரி விலை ஏறிட்டே போவுதே தவிர இறங்கக் காணம். நான் மெட்ராஸ் போய் காப்பி பயிர் பத்தி உனக்கொரு புஸ்தகம் அனுப்பறேன். அப்பா என்ன செஞ்சாரோ அதைத்தான் நீ செய்யணும்னு இல்ல. ஒரு கெட்டிக்காரப்புள்ளை அப்பன் செஞ்சதுக்கு மேலயும் செய்யணும். தாய் எட்டடின்னா குட்டி பதினாறடின்னு சொல்றது இதத்தான் நின்னு அப்பா சொல்லி கொடுக்க வேண்டிய வயசுல நீ தனியா கத்துக்கும்படி வந்திருச்சு...'

...ஆளுக்கு ஆள்...தலைக்குத் தலை...ஏதேதோ உறவுகள்,என்னென்னவோ உபதேசங்கள் வழங்கின.

உறவினர்கள் நண்பர்கள் வருகை அடங்கினதும் ஒருநாள் பூட்டப்பட்டிருந்த அப்பாவின் அறையைத் திறந்து அப்பாவின் நாற்காலியைக் கும்பிட்டு விட்டு கதிரேசன் அதில் உட்கார்ந்து விட்டான். எஸ்டேட் ஃபைலைத் திறந்து, வாங்கின நாளிலிருந்து அதற்கு உண்டான செலவுகளைப் படிக்கத் துவங்கினான். அப்பாவின் கைக்கு எஸ்டேட் கிடைத்த பிறகு தபதப வென்று காசு எஸ்டேட்டில் கொட்டப்பட்டிருக்கிறது. மின்சாரம் வரவும், கட்டடங்கள் கட்டவும் நீண்ட குழாய்கள் போடவும் பள்ளத்தாக்கில் கிணறு தோண்டவும் மாதாமாதம் காசு இறைக்கப்பட்டிருந்தது. அந்த வருடக் கடைசியில் ரூபாய் பத்து செலவு, ரூபாய் ரெண்டு வரவு என்பதாய்க் கணக்கு முடிக்கப்பட்டிருந்தது. அடுத்த வருஷம் நஷ்டம் குறைக்கப்பட்டிருந்தது. மூன்றாவது வருடம்தான் காசு அள்ளியிருந்தார். இந்திய ஏலக்காய்க்கு அரபு நாடுகளில் மார்க்கெட் கிடைத்த வருடம் அது. எல்லோரும் ஏலக்காய் விளைச்சலில் தளர்ந்து போயிருக்க ஏதோ ஒரு காரணத்தால் அப்பா மட்டும் மும்முரமாய் இறங்கியிருந்தார். அந்த நம்பிக்கை தான் அவரை ஒரு நல்ல நிலைக்கு உயர்த்தியிருந்தது. ஒவ்வொரு வருடக் கணக்காய்ப் பார்த்துக் கொண்டு,

கடைசி வருடக் கணக்கு பார்க்கும்போது அம்மா உள்ளே வந்தாள்.

"என்ன தம்பி...? எஸ்டேட் உள்ள பூந்துரலாம்னு பாக்கறியா...? படிப்பு முடிக்கணும்யா. அது ரொம்ப முக்கியம். மத்தவங்க பேசுறது பார்த்துட்டு எக்கேடு கெட்டா நமக்கு என்னான்னு நினைக்காத. நமக்கு இருக்கிற பல விஷயங்கள்ள எஸ்டேட் ஒண்ணு. தேவ கோட்டை வீட்டைப் போய்ப் பார்த்துட்டு வா. ஏலக்கா உரம்னு ஆரம்பிக்க எல்லா பயிருக்கும் உர டீலர்ஷிப் எடுத்திருக்கார், உக்காந்தபடி அதையும் கவனிக்கலாம், ஏலக்கா பத்தியோ காப்பி பத்தியோ நீ புஸ்தகம் படிக்க வேணாம். பகவதிகிட்ட கேட்டுத் தெரிஞ்சுக்க லாம். நீ என்னவா வருவேன்னு தெளிவா தெரிஞ்சாதான் உனக்குப் பொண்ணு குடுக்கறதுக்குச் சரியான ஆளுங்க வருவாங்க. ஒன்றுக்கு நாலு குடும்பம் போட்டி போட ணும், நாலு குடும்பமும் பெரிய குடும்பமா இருக்கணும். அப்படி பொண்ணு கேட்டு வர்றதுதான் உனக்கும் மரியாதை, உங்கப்பாவுக்கும் மரியாதை.

"செட்டியார் போய் நாளாச்சு. இன்னும் நீ ஆபீஸ் ரூமுக்குள்ள போகலையேன்னு நினைச்சேன். நீயா உள்ள வந்து உக்காந்து கணக்கு பாக்கறது சந்தோஷம் தம்பி. அப்பாவோட லெட்டர் பேட்ல முத லெட்டர் பகவதிக்கு எழுது. வந்து துக்கம் கேட்டுப் போனதுக்கு நன்றி சொல்லி, வந்து போனதுக்கும் அங்க செய்ய வேண்டிய [illegible]களுக்குமா ஆயிரம் ரூபா அனுப்பு. எல்லா சடங் [illegible] முடிஞ்சு அங்க எஸ்டேட் பார்க்க வரேன். எனக்கு எஸ்டேட் பத்தின விவரங்களைச் சொல்லிக் குடுக் [illegible] கேளு. ஒரு தடவைக்கு ரெண்டு தடவையா [illegible] வருஷத்துக் கணக்கை மனப்பாடம் பண்ணிக்க. அப்பாதான் அவங்க விவரம் சொல்றபோது புதுசா [illegible]."

"எஸ்டேட் என்னுதுன்னு ஒருத்தர் கத்தினாரே அவரை இதுவரைக்கும் நான் பார்த்ததேயில்லையே."

"தெரிஞ்சவங்க இந்த வீட்ல கத்துவாங்களா? தெரியாதவங்கதான் கத்துவாங்க. நீ என்னவா வரப் போறேன்னு நம்ம உறவுக்கூட்டம் உன்னிப்பா பாத்துக் கிட்டிருக்கு. வேறு எதுலியாவது நீ ஜெயிச்சு பெரியாளா ஆயிடலாம். ஆனா ஏலக்கா எஸ்டேட் விஷயத்துல தோக்கப்படாது. எஸ்டேட்டை எந்தக் காரணம் கொண்டு வித்துரக்கூடாது. எஸ்டேட்ல லாபம் இல்ல, நஷ்டம்னு பேர் வந்துடக் கூடாது. நான் ஏன் சொல் றேன்னு புரியுதா கதிரேசா?"

அம்மா ஆபீஸ் வாசற்படியோரம் சரிந்து உட்கார்ந் தாள்.

"நாச்சியப்ப செட்டியாரு நாகர் கோயில் பொண்ணு கிட்ட மயங்கிப் போய் நாலு தலைமுறையா வந்த எஸ்டேட்டை அழிச்சுட்டான்ற பேர் வந்துரும். நான் பாத்துக்கறேன்னு போயிருக்கிற நம்ம உறவுக்காரங்க எஸ்டேட் எத்தனை வளமையா இருந்தாலும் எதுனா லும் குறை சொல்லுவாங்க. நானில்ல போய் நிறுத்தி னேன்னு பெருமை பேசுவாங்க. ஒரு கணக்கு நோட்டு கிடையாதுய்யா எஸ்டேட்டுல. எல்லாம் செவுத்துல குறிச்சு வந்துருந்தாக. ஏதாவது குறை சொல்லுவாங்க.

"ஒரு எஸ்டேட் நல்லா நடக்குதுன்னு வெளிய எப்படி தெரியும் கதிரேசா? எஸ்டேட் விரிவாகணும். நாப்பது ஏக்கர் அறுபது ஏக்கர் ஆவணும். நீ நுழைஞ்ச மறு வருஷமே ஆவணும். அப்போதான் உறவு ஜனம் அடங்கும். அந்த எஸ்டேட்டை என்கிட்ட கொடுக்கச் சொல்லுங்கன்னு யாராவது புகார் குடுத்தா, செத்தவன் புள்ளை முன்ன நின்னு கவனிக்கிறான் எஸ்டேட்டை பெரிசா மாத்திருக்கான். இதுல மத்த விஷயங்கள்

[illegible]படி. தேவையில்லாத புகார் குடுக்கா தீங்கன்னு மத்த [illegible]லம் அவங்களை அடக்கிடும்''

பல்வேறு லாப நஷ்ட கணக்குகள் பார்த்த குடும்பத்[illegible]ல் பிறந்த அம்மா...எல்லோராலும் ஆச்சி என்று [illegible]ப்பீரமாக அழைப்படுகிற அம்மா...புருஷன் இறந்த [illegible]கத்தைப் புறந்தள்ளிவிட்டு, குடும்பத்தின் வளமை [illegible]ற்றியும் தன் புருஷனுக்கு அவப்பெயர் வந்துவிடக் [illegible]ாது என்பது பற்றியும் கரிசனம் கொண்டு பேசுவது [illegible]ார்த்து கதிரேசன் வியந்தான்.

''கதிரேசா...உன் தங்கச்சிக்கு ஐயா செய்து [illegible] மாதிரி உனக்கு நகையோ காசோ வைக்கலே. [illegible] முதலுமில்லாம எஸ்டேட் என்னுதுன்னா [illegible]க்கு என்னா மதிப்பிருக்கும்? நான் கல்யாண [illegible]ும் போது ஃபைனான்ஸ் கம்பெனில கொஞ்சம் [illegible] போட்டுக் குடுத்தாங்க. எனக்கு அப்பப்ப வந்த [illegible]யும் நான் ஃபைனான்ஸ் போட்டேன். இப்போ [illegible] பன்னெண்டரை லட்சம் நிக்குது. அந்த பன்னெண் [illegible] லட்சத்தையும் உனக்குக் கடனா தரேன். அத [illegible] வச்சு ஏதாவது செய். உனக்குப் பின்னால பன் [illegible]ரை லட்சம் காசு இருக்குன்னு தைரியமா [illegible]

'[illegible]க்கா எஸ்டேட்டை விரிவுபடுத்துவியோ! [illegible] யாரோ சொன்னாப்புல காப்பி எஸ்டேட் [illegible] அந்த வேலை கத்துக்குவியோ...எதுனா ஈடுபட்டு [illegible] [illegible]ன வயசுல பெரிய பொறுப்பு வந்து உக்காந் [illegible]ரேசா. ஒரு விதத்துல இது நல்லதுக்குதான். [illegible] கஷ்டமா இருந்தாலும் பின்னால சுலபமாயிடும். [illegible] வயசுல எட்ட வேண்டிய மரியாதைய நாப்பது [illegible] எட்டிருவ.''

கதிரேசனுக்கு அப்பா இறந்த அதிர்ச்சியை விட அம்மா தருகிறேன் என்கிற காசும் அது கடன் என்று சொல்லப்பட்டதும் அதைப் பொறுப்பாய் பெரிது பண்ணித் திருப்பி அடைக்க வேண்டிய அத்தியாவசியமும் பெரிய அதிர்ச்சியாய் இருந்தன. அந்த நிமிஷமே பஸ் ஏறி ஏலக்கா எஸ்டேட் போய்விட வேண்டும் என்று தோன்றியது. இதற்கு முன்பு அப்பாவோடு போனபோதெல்லாம் அங்கு சீராட்டப்பட்டது ஞாபகம் வந்தது. கதிரேசன் மறுபடியும் கணக்குகளை ஊன்றிப் படிக்கத் துவங்கினான். அந்தக் கணக்கிலிருந்து பல்வேறு வகையான குறிப்புகளை எடுத்துக் கொண்டான். மறுநாள் காலை ஆள் மூலமாக அவனுக்குக் காப்பி பற்றிப் புத்தகம் ஒன்று வந்தது. போடி நாயக்கனூரிலிருந்த ஒரு உறவினருக்குப் போன் போட்டு காப்பி எஸ்டேட் வாங்கலாமா என்று கேட்டேன்.

"காசு வச்சிட்டு என்ன பண்றதுன்னு தெரியலை அப்படீன்ற ஆளு காப்பி எஸ்டேட் வாங்கலாம். நீ சின்ன பையன் நீ எதுக்குப்பா காட்டுல கிடந்து போராடுற? மார்க்கெட்ல ஒருத்தன் நாலுமாடி கட்டடம் கட்டறான். இருவதுக்கு இருவது ரூம் மூணு லட்ச ரூபா சொல்றான். அப்படி ஒரு ரூம் வாங்கிக்க...சில்லறை வியாபாரிக்குக் கடன் கொடு. பத்து கடன்ல எட்டு திரும்பினாகூட அமோகமான லாபம். காப்பி எஸ்டேட் வேணாம். வச்சிட்டிருக்கிற நிறைய பேரு வித்துரலாம்னு ட்ரை பண்றாங்க"

மனம் குழம்பியது.

"எங்கப்பாரு உங்க எஸ்டேட் போனாரே வந்துட்டாரா?" ஏதோ ஒரு பெண் குரல் கேட்டது.

அப்படிப் போனதே தனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டுப் போனைத் துண்டித்தான்.

அந்த செட்டியார் அங்கு போய் என்ன செய்யப் போகிறார் என்று ஆச்சரியப்பட்டான்.

அவர் விளிம்பில் நின்றார். உயர நின்று எட்டிப் பார்க்கும்போது தலை சுற்றியது. இருபதடி ஆழத்தில் கருமையாய் இருப்பது முள்ளம்பன்றி என்று தெரிய ஒரு நிம்மதி பிடித்தது. நாராயணன் எதிரே தடியோடு நிற்பதும் அந்த சிறிய பிராணி சிலிர்ப்போடு நிற்பதும் மாறி மாறி பார்த்தார். நாராயணன் மேலே இருக்கிற வரை ஒன்றுமே செய்யவில்லை. சிலிர்ப்பிக் கொண்டிருக்கும் முட்பந்தில் முகம் எது என்று கவனமாகத் தேடிக் கொண்டிருந்தான். குச்சியால் தரை தட்டி ஒரே எட்டில் முன்னால் பாய்ந்து முள்ளம்பன்றியின் முகத்தைத் தாக்கினான். முள்ளம்பன்றி சட்டென்று பின் வாங்கியது. பின் வாங்கிய வேகத்திலேயே முன்னோக்கி ஓடத் துவங்கியது. குச்சியைப் படுக்கை வாட்டில் வைத்து நெருங்கி வந்த முள்ளம்பன்றியைக் குத்தி, மேலே வீசினான். முள்ளம்பன்றி குச்சியால் தூக்கப்பட்டு மேலே போய் விளிம்பில் நின்றவருக்குப் பின்னே விழுந்தது. அவர் ஹா என்று பயத்தோடு திரும்பினார். திரும்பின வேகத்தில் மண் சரிய, சரசரவென்று மரத்தின் வேர்களைப் பிடித்துக்கொண்டு தரைக்கு வந்தார். உருண்டார். முள்ளம்பன்றி இருபதடி உயரத்திலுள்ள சமதளத்தில் ஓடிற்று. செடிகளுக்கு நடுவே புகுந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு கடடி வைத்த வெடிமருந்து கயிற்றை அறுத்துக்கொண்டு ஓட படபடவென்று வெடிமருந்து வெடிக்க, முகம் சிதிந்து உருண்டு விழுந்தது.

சத்தம் கேட்டு எஸ்டேட்டிலிருந்து எல்லோரும் ஓடி வந்தார்கள்.

"எம்மேல ஏண்டா முள்ளம்பன்னி தூக்கிப் போட்ட?" விழுந்தவர் உடம்பெல்லாம் ஆட கேட்டார்,

நாராயணன் பதில் பேசாது அவரைத் தூக்கி நிறுத்தினான்.

"நீர் இந்த இடத்துக்கு வருவீரு. இங்க உட்காருவீருன்னு எனக்குத் தெரியுமா. என் வேலையா நான் ஓடி வந்தேன். எம் பின்னாடி உம்ம யார் ஓடி வரச் சொன்னா?"

"நான் உக்காந்திருக்கறது தெரிஞ்சுதான்டா முள்ளம் பன்னிய எம்மேல தூக்கிப் போட்ட?"

"எனக்கு அந்தப் பிராணிய சாகடிக்கணும். ஒரு முள்ளம்பன்றி இருபது செடிகளைப் பாழாக்கிடும். இப்ப என்னா நடந்து போச்சு. மொள்ள கை பிடிச்சுட்டு மேல வா."

அவர் முழங்கை, நெஞ்சு எல்லாம் சிராய்த்திருந்தது. சறுக்கி விழுந்த சிராய்ப்பை விட முள்ளம்பன்றி கொடுத்த பயமே அவரை நடுங்க வைத்திருந்தது

அவரைத் தூக்கி நிற்க வைத்துவிட்டு நாராயணன் வெடி வெடித்த இடத்துக்குப் போனான்.

"இந்த இடத்தை நான் வாங்கறேன்டா. இந்த மொத்த எஸ்டேட்டையும் என் கைக்குள்ள கொண்டா றேன். எப்ப என் கைக்கு எஸ்டேட் வந்துதோ அப்ப இங்க உனக்கு வேலை இல்லை."

"அது ஒண்ணும் சுலபம் இல்லை. இது தமிழ்நாடு இல்ல. கேரளா இங்க தொட்டதுக்கெல்லாம் யூனியன். நம்ம யூனியன் நினைச்சா உங்க எஸ்டேட்டை உங்க கண் முன்னாலேயே அழிச்சிரும். எங்க யூனியன் ஆளுங்கள ஒரு தடவை பார்த்தா போறும். முள்ளம்பன்றி சாதாரணமாயிடும்."

சட்டைக் கிழிசலுடன் சரிவில் கால் பதிந்து மேலே றியவருக்கு வெடி மருந்து அப்பிய மூங்கில் குழல்கள் ஞாபகம் வந்தது. 'ஊருக்குக் கிளம்பிடணும். கிளம் பறத்துக்கு முன்னாடி அந்த வெடி மருந்துக்கு நெருப்பு வச்சிட்டுப் போயிடணும். ஒரு மெழுகுவர்த்திய குழலுக் ஞப் பக்கத்துல கொளுத்தி வுட்டுட்டுப் போயிடணும். அரைமணிக்கப்புறம் ஒரு குழல் வெடிச்சு நெருப்பு சிதறி ய.ள்ள வச்சிருக்கிற அறுபது குழலும் சேர்ந்து வெடிக்கும். ஊரை, சுவரு எல்லாம் பிச்சுக்கும். கீழ இறங்கிப்போய், மலைல தீவிரவாதிங்க இருக்காங்கன்னு கலெக்டருக்கு லெட்டர் எழுதிப் போட்டுரணும். எம் மேலயா முள்ளம் பன்னி போடற. நான் உன்னை வாழ விடமாட்டேன்... இந்த எஸ்டேட்டை நாசம் பண்ணாத உக்கார மாட் டேன்...''

அவர் மனசுக்குள் கறுவி ஊர் வந்த நேரம் அம்மா லிடமிருந்து பன்னிரண்டரை லட்சத்துக்கான காசோலை யைக் கதிரேசன் வாங்கிக் கொண்டான். அது கடன், ஒரு வட்டி கடன். பெற்ற தாயானாலும் அதை அவன் அடைத்தேயாக வேண்டும்.

9

தென்னிந்தியாவின் குடிபெயர்ப்புகளுக்கு அநேக மாய் முஸ்லிம் மன்னர்களின் படையெடுப்புகள்தான் காரணமாயிருந்திருக்கின்றன. காலம் காலமாய் வாழ்ந்து வந்த ஒரு இடத்திலிருந்து ரத்தமும் சதையுமாய் பிய்த்துக் கொண்டு, பெருங்கூட்டமாய் இடம் பெயர்ந்து பத்திர மான இடம் நோக்கி பயந்து பயந்து நகர்ந்திருக்கிறார் கள்.

உயிருக்கு பயந்து, மானத்துக்கு அஞ்சி குடிபெயர்தல் போல ஒரு வேதனை எதுவுமே இல்லை. மைசூருக்கு அருகே இருந்த சில கிராமங்கள், முஸ்லீம் அரசர்களின் கொடுமை தாங்காமல் தெற்கு நோக்கி நடந்து, அடர்ந்த காடுகள் உள்ள மலையில் போய் ஒளிந்து கொண்டன.

அந்த மலையின் செழிப்பைக் கண்டு அங்கேயே தங்கி விட்டன, அது குடி பெயர்கிறபோது தமிழ் பேசுகிற இடமாக இருந்த மலை பிறகு மலையாளிகளின் சொத்தாக மாறியது. யார் என்ன பேசினாலும் மைசூருக்கு அருகே இருந்து வந்த அந்த கன்னடியர்கள் கன்னடம் பேசினார்கள். எவரோடும் கலக்காமல் இருந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் தமிழின் தாக்கம் அதிகமாக இருந்ததால் அவர்கள் கன்னடத்தில் தமிழ் மெருகு ஏறியது. ஆனாலும் வாழ்க்கை கன்னடிகா வாழ்க்கையாக இருந்தது.

அந்த மலைப் பகுதியில் ஏலப் பயிர் வர அரசாங்க அதிகாரிகள் வந்தார்கள். அரசாங்க அதிகாரிகள் வர சாலைகள் வந்தன. நல்ல சாலைகள் வர வியாபாரிகள் வந்தார்கள். வியாபாரிகள் வர வரி வசூலிப்புக்கும் இன்ன பிற விஷயங்களுக்கும் அரசாங்க அதிகாரிகள் வந்தார்கள்

அரசாங்கம் வர கணக்குக் காட்டலும் மனு எழுதலும் வந்தது. தமிழர்கள் தமிழில் மனு எழுதினார்கள். கன்னடியர்கள் கன்னடத்தில் எழுதினார்கள். அதிகாரிகள் மலையாளத்தில் பேசினார்கள். மனுக்கள் மீது மலையாள மொழியில் தாக்கீது அனுப்பினார்கள். அந்த மலைகளில் ஏலக்காயும் காப்பியும் நன்கு விளைந்து, நிறைய வியாபாரம் ஆகிற போது, மொழி முக்கியத்துவம் பெறாமல் காசு மட்டுமே முக்கியத்துவம் பெற்றது. அறுநூறு வருடங்களுக்கு முன்பு வந்து குடியேறியதால் கன்னடியர்களுக்கு அங்கு பாத்தியதை இருந்தது, சில

ளருடங்களுக்கு முன்புவரை இந்தப் பகுதி தமிழ்நாட்டைச் சேர்ந்திருந்ததால் தமிழர்களுக்கும் பாத்தியதை இருந்தது. இப்போது கேரளத்தைச் சார்ந்த பகுதி என்பதால் மலையாள மொழி கொடிகட்டிப் பறக்கிறது.

ஆனால், மலையாளிகளுக்கு மொழி வெறி இல்லை. மலையாளி மலையாளியைத்தான் நேசித்தானேயொழிய மலையாளம் பேசுபவரை நேசிப்பதில்லை. தனக்கு இணக்கமாக நடக்கிறவர்கள் எல்லோரையும் மலையாளிக்குப் பிடிக்கும். தன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தனக்குப் பின்னே நாலுபேர் வரவேண்டும் என்கிற ஆசை மலையாளிக்கு உண்டு. வர மறுக்கிறவரை எதிரியாக நினைப்பதுண்டு. கன்னடியர்கள் யாரையும் தனக்குப் பின்னே வரச்சொல்ல மாட்டார்கள். அவர்களும் போக மாட்டார்கள். எப்போதுமே பிரகாசத்துக்கு வராத அடக்கமான ஒரு குழுவாய் அந்த மலைப் பகுதிகளில் அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஒரு கணக்கு எடுத்தால் கன்னடியர்களே எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர். ஆனால் ஆளுமைச்சண்டை தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் மட்டுமே இருந்தது. தமிழர்கள் பிரச்னைகளுக்கேற்றவாறு தங்களை மாற்றிக் கொண்டே இருந்தனர். பிரச்னை முற்றி விட்டால் அதை மலையாளிகள் தீர்க்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்கள். அப்படி தீர்ப்பதில் லாபம் வரும் என்றால் அது மொத்தமும் தங்களையே சேர வேண்டும் என்று நினைத்தார்கள். ஆனால் வரி வாய்ப்போ வழக்குப் போடுதலோ...தமிழர்களின் தந்திரம் மலையாளிகளைத் திணறடித்தது.

மூன்று விதமான மொழிகாரர்களும் மூன்று விதமான கலாசார விஷயங்களும் அங்கு ஒரு விநோதமான கலவையாய்த் திகழ்ந்தது. இன ஒற்றுமை, மொழி ஒற்றுமை, கலாசார ஒற்றுமை இல்லாத ஓர் இடத்தில் 'உலகத் தொழிலாளர்களே ஒன்று படுங்கள்' என்று குரல் கொடுத்து

செங்கொடி உயர்த்தி இன்குலாப் ஜிந்தாபாத் என்று கூவ வைத்துப் பன்னிரெண்டு ரூபாய் கூலியைப் பதினாறு ரூபாயாக உயர்த்த மிகப் பெரிய பாடுபட வேண்டியிருந்தது.

பிரச்னை என்று வந்தால் பின்வாங்கும் கன்னடத் தொழிலாளர்கள், நிலச்சுவான்தாரர்களாக இருக்கும் தமிழர்கள், பேச்சுக்குக் கட்டுப்படாத மலையாள அதிகாரிகள் என்கிற மூன்று கடுமையான விஷயங்களை ஒரு யூனியன் லீடர் தாங்க வேண்டியிருந்தது. இந்த மூவரோடுமே உட்கார்ந்து பேச மொழி அவசியமாக இருந்தது. இந்த மூன்று மொழியும் மிகச் சரளமாய் பேசத் தெரிந்து கொண்டதால் மூன்றிலுமே பற்றோ பாண்டித்தியமோ இல்லாது போயிற்று.

''மாஷே...தலைவரே...சாரே...,' என்று மூன்று விதமாகவும் அழைக்கப்பட, எல்லா விளிப்புக்கும் தன்னைத் தான் அழைக்கிறார்களோ என்று திரும்ப வேண்டியிருந்தது.

'யூனியனா செங்கொடியா...மலையாளத்தான் தன் புத்தி காமிச்சிட்டான். ஒரு நாளைக்கு பழம் பறிக்கிறமோ பறிக்கலையோ பன்னிரொண்டு ரூபா கூலி. சனிக்கிழமை அன்னிக்கு சம்பளம். ஞாயித்துக்கிழமை லீவு. இந்த மலைல உனக்கு எண்பதுரூபா சொச்சம் எவண்டா தருவான். இந்த எம்பது ரூபா இல்லைன்னா நீ கோமணத்துக்கு பதிலா இலைய சுத்திக்கிட்டுத்தானே அலையணும், கிழங்கு பறிச்சு தின்னிட்டிருந்தீங்க. உங்களுக்கு வேலையும் கொடுத்து கூலியும் கொடுத்தோம் பாரு... அதுக்கு நன்னி செங்கொடியா? போராடுவோம் போராடுவோம்னு கத்தறியே...நாளைலேர்ந்து வேலைக்குவராதே. போய் போராடு. நீ எத்தோட போராடுவேன்னு பார்த்துடறேன். நான் வேலைக்கு வச்சிருக்கறதால

கான எங்கிட்ட வந்து போராடுவோம் போராடுவோம் கிற இந்த நிமிஷத்திலேர்ந்து வேலைலேர்ந்து நின்னுடு. போராடு.''

தமிழ் நிலச்சுவான்தார்கள் போராடினார்கள். எதிர்த்து அட்டகாசம் செய்தார்கள். 'சம்பளம் இல்ல போய்யா'' என்று துரத்தினார்கள். போலீசுக்கு மனு எழுதி லஞ்சம் கொடுத்துக் கூட்டி வந்தார்கள். ஒவ்வொரு அடிக்கும் ஒரு ரூபா. பரட்டைத் தலையா ஒரு யூனியன் லீடர் இருக்கானே. அவனை நீ அடிப்பியாம்... நான் பாரப்பேனாம். ஒவ்வொரு அடிக்கும் ஒரு ரூபா.'' பதினோரு வருடங்களுக்கு முன்பு ஆறு போலீஸ்காரர்கள் ஒரே ஆள்மீது பாய்ந்தார்கள் கை ஓயும்வரை அடித்தார்கள் தொலைவிலிருந்து தமிழர் கூட்டம் மலை முகடு அதிரச் சிரித்தது.

ஆனால் அந்த போலீஸ்காரர்கள் யோக்கியமானவர்கள். எல்லா மலையாளிகளுக்கும் சங்க உணர்வு அதிகம் உண்டு. யூனியன் வேண்டும் என்கிற எண்ணம் போலீஸ்காரனுக்கும் இருந்தது, ''உன்னை அடிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அடிக்கப் போகிறோம். லத்தியை மாற்றி விடப்போகிறேன், லத்திக்குப் பதிலாய் சோளத்தட்டை எடுத்துக் கொள்ளப் போகிறேன். உன்னைத் தனியே தள்ளிக் கொண்டு போய் சோளத் தட்டையால் அடிக்கப் போகிறேன். சோளத் தட்டையால் அடித்தாலும் வலிக்கும். இருப்பினும் பெரிய காயம் ஏற்படாது. காயம் ஏற்பட்டாலும் கட்டு போட்டுக் கொள். அது உனக்கும் நல்லது எனக்கும் நல்லது.'' ஒரு அடிக்கு ஒரு ரூபாய் என்று லஞ்சம் வாங்கிக் கொண்டு யூனியனுக்கும் ஆதரவாய் பேசிவிட்டுப் போனார்கள்.

பிரச்னை இந்தக் கன்னடியர்களிடம்தான் இருக்கிறது.

"பசவப்பா...சௌக்கியமா" என்றால் போதும். 'ஏன் கேட்கிறாய்' என்றுதான் பசவப்பா கேட்பான்.

ஒருங்கிணைந்து போராட வேண்டும் என்று சொன்னால் சாப்பாட்டுக்கு என்ன சேய்வது என்று கேள்வி கேட்பான். கப்பங்கிழங்கு வேகவைத்துத் தின்னாவது உயிர்வாழ்வோம் என்றால் கப்பங்கிழங்குக்கு தொட்டுக் கொள்ள எது நன்றாக இருக்கும் என்று யோசிப்பான்.

கன்னடிகா சுகவாசி. ஒருவேளை சாப்பாடு சரியில்லாவிட்டாலும் புலம்பித் தீர்த்து விடுகிறவன். நன்றாகச் சாப்பட்டால்தான் நன்றாக வேலை செய்ய முடியும் என்று நினைக்கிறவன்.

வேலை நிறுத்தம் என்றால் சம்பளமில்லை, சம்பளமில்லையெனில் சாப்பாடு இல்லை. சாப்பாடு இல்லையென்றால் கன்னடிகா இல்லை. "என்ன குருவாயூர்... உள்ளே பொம்மை அழகாக இருக்கிறது. கோவிலென்றால் கர்ப்பக்கிரகம் மட்டும்தானா...சாப்பாட்டுக் கூடம் வேண்டாமா?' மஞ்சுநாத ஸ்வாமி என்று கேள்விப்பட்டிருக்கிறாயா—அந்தக் கோவிலில் அன்னதானம் செய்வதைப் பார்த்திருக்கிறாயா? தர்மத்தில் சிறந்தது பிறருக்கு உணவிடுவது. அதனாலேயே மஞ்சுநாதர் கோவிலுக்கு தர்மஸ்தலம் என்று பெயர்

"ஆயிரம்பேர் சாப்பிடுகிற சந்தோஷத்தைப் பார்த்திருக்கிறாயா? ஆயிரம் ஆயிரம் பேருக்குச் சாப்பாடு போடுகிற சந்தோஷத்தை அனுபவித்திருக்கிறாயா? யார் யாரோ சாப்பிடுவார்கள், நல்லவன் கெட்டவன்... நண்பன்...துரோகி...யார் யாரோ சாப்பிடுவார்கள். ஏதோ ஒரு வயிறு நிரம்பி உண்மையாய் சந்தோஷமாய், "அன்ன தாதா...ஸுகிபவ" என்று சொல்லும். அப்போது நிஜமாகவே சுகப்படுவோம். அந்த வாக்கு பலிக்கும்.

"உண்பதும் உணவு போடுவதும் உயர்வான குணங்கள். இதை உபத்திரப்படுத்துவது போல் எதற்கு யூனியன்?"

இந்த கன்னடியர்களை ஒருங்கிணைத்து ஒரு வழிக்குக் கொண்டு வருவது போல் சிரமமான காரியம் எதுவுமில்லை. தொழிலாளர்களில் தமிழர்களும் இருந்தார்கள். டீவியில் நல்ல படம் இருந்தால் யூனியனுக்கு வரமாட்டார்கள் குடித்துவிட்டால் அமைதியாக இருக்க மாட்டார்கள். 'ஒரு லட்சிய வெறி வேண்டாம்?' என்று கேட்டால் 'உங்ககிட்ட லட்சியம் இருக்கு... எங்கிட்ட வெறி இருக்கு...ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்துட்டா லட்சிய வெறி வத்துரும்.' என்று கேலி பேசுவார்கள். எதுவுமே முக்கியப்படாத வாழ்க்கை தமிழர்களுடையது.

ஆனால் இங்கேயும் யூனியன் லீடராய் தொழிற்சங்கத்துக்கு மரியாதை கொடுத்தால்தான் மலையில் பிழைப்பு நடக்கும் என்கிற தன்மை ஏற்பட்டு விட்டது. அதைக் காப்பாற்ற இடைவிடாது முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. நாச்சியப்பன் செட்டியார் என்கிற தமிழ் பேசும் எஸ்டேட் முதலாளி இறந்துவிட்டதால் அங்கே மலையாளிதான் கட்டிக் காக்கிற மேஸ்திரியாக இருக்கிறான். நாற்பது தொழிலாளிகளில் இருபத்திநாலு பேர் கன்னடியர்கள். மீதியுள்ளோர் தமிழர்கள். மருந்துக்குக்கூட மலையாளி இல்லாத எஸ்டேட் அது. ஆனால் அந்த எஸ்டேட் வாசலில் யூனியன் கொடி இருக்கிறது. கிழிந்து சாயம் போய் கொம்பு நுனியில் சுருண்டு போய்க் கிடக்கிறது. வேறு கொடி மாற்ற வேண்டும். ஒரு தமிழன் சொத்து தடுமாறுகிறது. வாங்க ஆளிருக்கிறதா என்று மலையாளிகளிடம் விசாரிக்க வேண்டும். முதலாளி மலையாளியாக இருந்தால் தொழிலாளியும் மலையாளியாக மாறுவான். அங்கேயும் யூனியன் இருக்கும் என்றாலும் பயன்படுவது ஒரு மலையாளியாக இருக்கும். ஒரு

மலையாளிக்காக ஒரு மலையாளி உழைப்பது சந்தோஷமான விஷயம்.

''உலக மலையாளிகளே ஒன்று சேருங்கள்'' இப்படி கோஷம் போடுவதில்லை. ஆயினும் உள்ளுக்குள்ளே இப்படி ஒரு கோஷம் இருக்கத்தான் செய்கிறது.

''குரூப்பு...எந்தா விசேஷம். சகாவு எவ்விடயானு போகுன்னு. ராத்திரி பார்ட்டி உண்டு குரூப்பு. பட்ஷே, நீங்க வரணும்.''

குரூப் என்கிற மலையாளியை இன்னொரு மலையாளி மடக்கி அழைத்தபோது மிகவும் சந்தோஷமாய் இருந்தது.

10

அப்பாவின் ஆபீஸ் அறை வாசலிலிருந்து நேரே பத்தடியில் நாற்காலி-மேஜை இருந்தது. அந்தச் சுழல் நாற்காலியிலிருந்து வலப்பக்கம் பத்தடியில் சுவர். வலப் பக்க மூலையிலிருந்து நேரெதிரே போனால் அங்கு ஒரு கோத்ரெஜ் பீரோ. பீரோவைத் திறந்து வெளியே கிடந்த ஃபைல்களை உள்ளே வைத்துவிட்டு அந்த கோத்ரெஜ் கண்ணாடி மேஜையில் சொருகியிருக்கும் படங்களை எடுத்துவிடலாம் என்று சுழல் நாற்காலிக்கு வந்தபோது சுழல் நாற்காலியிலிருந்து கோத்ரெஜ் பீரோ கதவு திறந்திருப்பது தெரிந்தது. அந்த கோத்ரெஜ் பீரோவின் வலப்பக்கக் கதவில் ஒரு கண்ணாடி இருந்தது. கதவு ஒருக்களித்து திறந்திருந்ததால் சுழல் நாற்காலியில் உட்கார்ந்திருப்பது கண்ணாடியில் தெரிந்தது.

சுழல் நாற்காலியைச் சற்றுப் பின்னுக்கு நகர்த்தி கண்ணாடியின் நடுவே தன்னை நிறுத்தி கதிரேசன் தன்னை இரண்டு மூன்று கோணங்களில் ,கை மாற்றி கால் மாற்றி அழகு பார்த்துக் கொண்டான்.

''ஹலோ'' என்று அவனைப் பார்த்தே கையசைத் தான்.

''என்ன?'' என்று தன்னைப் பார்த்தே கேட்டுக் கொண்டான்.

''தேங்க்யூ'' சம்பந்தமில்லாமல் சிரித்தான்.

''ஐயாம் கதிரேசு. கார்டமம் கதிரேசு...எனக்குப் பெரிய எஸ்டேட் இருக்கு. நீங்க என்ன பண்றீங்க'' என்று தன்னைப் பார்த்தே கேட்டான்

நேரம் போவதே தெரியாமல் சுழல் நாற்காலியில் இருந்தபடியே ஒருக்களித்த கண்ணாடியில் தன்னைப் பல்வேறு கோணங்களில் பார்த்து ரசித்துக் கொண்டிருந் தான்.

மனிதர்கள் கண்ணாடியிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். கண்ணாடி கண் வழியே செல்லும் ஒரு போதை விஷயம் ரத்தத்தில் கலக்காமல் நேரே புத்திக்குப் போய்விடும் சுகமான மயக்கம். கண்ணாடியை அலட்சியப்படுத்த தெரியவில்லையெனில் வாழ்நாளில் குறிப்பிடத்தக்க நேரம் வீணாகும். கண்ணாடி அகம் பாவம் வளர்க்கும். தோல் ஆழமே அழகு என்பது புரியாமல் போகும்.

பன்னிரண்டரை லட்சம் காசும் அந்த ஆபீஸ் அறையின் தனிமையும் அந்த சுழல் நாற்காலியும் எதிரே உள்ள கண்ணாடியும் நாற்காலியில் தெரிந்த அவன் சுருள் முடியும் கனத்த மீசையும் அவனுக்கு ஒரு கிறக்கத்தைக் கொடுத்தன. அப்பாவின் காரில் எஸ்டேட்டுக்கு

கிளம்புகிறவரை அவன் இடைவிடாது கண்ணாடியில் தன் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். வெகுநேரம் கண்ணாடியில் பல்வேறு கோணங்களில் தன்னைப் பார்த்துப் பார்த்துப் பதிய வைத்துக் கொண்டதால் கண்ணாடி இல்லாத போதும் தான் நிற்பதும் நடப்பதும் சிரிப்பதும் எப்படி இருக்கும் என்பதை அவனால் கற்பனை செய்ய முடிந்தது.

தன்னுடைய உருவத்தை எதிர்பார்வையாய் கற்பனை செய்தபடியே கதிரேசன் கார் ஓட்டினான். பாதி தூரம் போகையில் பலத்த மழை பிடித்துக்கொண்டது. மிகவும் கனத்து அடர்த்தியாய் எதிர்ப்பக்கம் ஆள் வருவதே தெரியாதபடி பெய்யத் துவங்கியது. வண்டியைப் பாதையிலிருந்து விலக்கி ஓரம் நிற்க வைத்துவிட்டு கண்ணாடிகள் ஏற்றி உட்கார்ந்துகொண்டான். காருக்குள் இருக்கும் கண்ணாடியில் கண்கள் மட்டுமே தெரிந்தன. மேகம் இருட்டிக் கொண்டு வர அந்தக் கண்ணும் தெரியாமல் இருட்டில் மூழ்கியது.

சோர்ணலட்சுமி பஸ் ஏறுகிறபோது மதுரையில் சுள்ளென்று வெயிலடித்தது. எஸ்டேட்டுக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு, முன் பக்கத்தில் டிரைவருக்கு இணையாய் உள்ள இடப்பக்க ஒற்றைச் சீட்டில் உட்கார்ந்து கொண்டாள். ஒரு மலைப் பிரதேசத்துக்குப் போகையில் அந்த மாதிரி ஒரு இடத்தில் உட்காருவது வசதியானது. மலைப் பிரதேசத்தின் இடதும் வலதும் ரசித்துக் கொண்டு போகலாம். நெட்டுக்குத்தாய் மேலேறிப் போகின்ற அல்லது சரிகின்ற ஒரு சந்தோஷத்தை வேறு எந்த சீட்டிலிருந்தும் அனுபவிக்க முடியாது. ஆனால் அந்த சீட்டின் முதுகில் கண்டக்டர் என்று போட்டிருந்தது. அந்த சீட்டில் உட்கார வேண்டும் என்று ஆசைப்பட்ட ஆள் அதைச் சுட்டிக் காட்டினான்.

"கண்டக்டர் வந்தா நான் சொல்லிக்கறேன்" சொர்ணலட்சுமி அவனை அலட்சியப்படுத்தினாள்.

"யார் என்ன சொன்னாலும் இந்த சீட்ல உட்கார வுட மாட்டாங்க" அந்த ஆள் பயமுறுத்தினான்.

சொர்ணலட்சுமி அவனுக்குப் பதில் சொல்லாது அலட்சியப்படுத்தினாள்.

'வர வர பொண்ணுங்களுக்கு உடம்பு வளர்ற அளவுக்கு மூளை வளரலை. மலை ஏறுகிற போது இஞ்சின் சூடாகும். இஞ்சின் சூடானால் சீட் சூடாகும். சீட் சூடானால் உடம்பு சூடாவும்னு தெரியலை' என்று மனத்தில் நினைத்துக் கொண்டான். ஒரு ஆற்றாமையில் அவளையே உற்றுப் பார்த்தான். எந்தக் கோணத்தில் பார்த்தாலும் ஒரு தெறித்து விழுகிற அழகு அவளிடமிருந்து வெளிவந்தது. பஸ் கிளம்பி மதுரையின் எல்லையைத் தாண்டியது. அல்லிநகரம். போடி நாயக்கனூர் என்று பறந்தது. அதுவரை ஏறி இறங்கும் ஜனங்கள் அதிகமாக இருந்தார்கள். போடிநாயக்கனூர் தாண்டி மலைகள் நோக்கி பஸ் போக, கண்டக்டர் முன்பக்கம் வந்தார்.

"அம்மா...அது என் சீட்டு"

"நான் அப்பமே சொன்னேன். அது கண்டக்டர் சீட்டு, உட்காராதீங்கன்னு. நான் சொல்லிக்கறேன் கண்டக்டர்கிட்டன்னு திரும்பிக்கிட்டாங்க."

பின்னால் உட்கார்ந்திருந்த அந்த நடுத்தர வயது ஆள் உரத்த குரலில் புகார் சொன்னான். புகாரில் ஆற்றாமை தெரிந்தது.

மருண்ட விழிகளோடு சொர்ணலட்சுமி கண்டக்டரை நோக்கினாள்.

"அவங்க பாட்டுக்கு இருக்கட்டும். ஏன் தொந்தரவு பண்றே..." டிரைவர் சொர்ணலட்சுமிக்குப் பரிந்து வந்தார்.

இந்த மாதிரி ஒரு அழகான பயணியை இவ்வளவு அருகே வைத்துக் கொண்டு ஓட்டுவது எப்போதேனும் ஒரு முறைதான் நடக்கும். அதை இழக்க அந்த டிரைவர் விரும்பவில்லை.

"இந்த சீட் ரொம்ப சூடுண்ணே. மலை ஏறப்ப இஞ்சின் சூடாகும். இஞ்சின் சூடாறப்ப இந்தப் பக்கம் தான் வெக்கையடிக்கும்."

"நான் அதையும் சொன்னேன். கேட்கலை" அந்த நடுத்தர வயது ஆள் உற்சாகமாய் தன் அபிப்பிராயம் தெரிவித்தான்.

சொர்ணலட்சுமியை எப்படியாவது அப்புறப்படுத்தும் ஆத்திரம் அதில் தெரிந்தது.

"யோவ் நீ எந்திரி...மொதல்ல நீ எந்திரி சொல்றேன்" அந்த டிரைவர் அவன் இடையூறு பொறுக்காமல் கூச்சல் போட்டார்.

"ஏன்...நான் ஏன் எந்திரிக்கோணும்?"

"கன்னியப்பா...இந்த சொறித்தலையன் தூங்கிக் கிட்டேவரான். அவனை எடுத்துப் பின்னாடி போடு" கோபமாய் கட்டளையிட்டார்.

"நான் எங்க தூங்கினேன்..." அந்த ஆள் சிணுங்க.

கன்னியப்பன் டிரைவரை 'என்ன' என்பது போல் பார்த்தான்.

"அந்தக் குட்டி டக்கர்...அவனை எழுப்பிட்டு நீ உட்காரு" யாரும் அறியாதவாறு டிரைவர் கண்டக்டருக்கு

கண்ணால், கை விரல்களால், அர்த்தம் பொதித்த புன்ன கையால் விளக்கினான்.

கண்டக்டர் அந்த நடுத்தர வயது ஆளின் முதுகைத் தட்டி எழுந்து நிற்க வைத்து, பின்பக்கம் கைகாட்டி அவ னிருந்த சீட்டில் கம்பீரமாய் உட்கார்ந்து கொண்டான். டிக்கட் நம்பரை சிறு பேடில் எழுதியபடியே ஓரக்கண் ணால் சொர்ணலட்சுமியைப் பார்த்தான்.

''சட்டை புதுசாண்ணே...இத்தினி நேரம் பார்க்காத மாதிரி ஆட்டேன். முன்னியே சொல்லிருக்கக் கூடாதா...'' ஆனந்தமான சங்கேத மொழியில் குதூகலித்தான்,

''பழசா இருந்தா என்ன...புதுசா இருந்தா என்ன... பார்க்க நல்லா இருக்கா...அதான் முக்கியம்.''

சொர்ணலட்சுமிக்கு அவர்கள் பேசிக் கொள்வது புரி யவில்லை. அந்த ஆளுக்குப் புரிந்தது அந்த ஆளுக்கு அந்த டிரைவரைப் பிடிக்காது போயிற்று. அந்த கண்டக் டரைப் பிடிக்காது போயிற்று ஒரு மாதிரி உட்கார்ந் திருக்கும் சொர்ணலட்சுமியைப் பிடிக்காது போயிற்று.

''எங்க ஆத்தா போறீங்க...போடி மெட்டுக்கா?'' டிரைவர் சொர்ணலட்சுமியைப் பார்த்துப் பொய்யான கனிவுடன் கேட்டான்

அவள் ஆமென்று தலையசைத்தாள்.

''போடிமெட்டுல எங்கெங்கே போறீங்க?'' கண்டக் டர் முன் பக்கம் எட்டிப் பார்த்து விசாரித்தான்.

அவள் எஸ்டேட் பெயர் சொன்னாள்.

''அட...நம்ம நாச்சியப்பன் செட்டியார் எஸ்டேட்டு. அல்லிநகரத்துலதான் நம்மளைத் தாண்டி செட்டியார் போனாரு.''

"அவரு இருக்காதுங்க" சொர்ணலட்சுமி பதில் சொன்னாள்.

"நான் வண்டி நம்பர் பார்த்தேன். கலர் பார்த்தேன் அவரு இல்லேன்றீங்களே."

"நாச்சியப்பன் செத்துட்டாருங்க."

"என்னா..." அந்த பஸ் ஒருமுறை இடதும் வலதும் ஆடி நேராயிற்று.

நாச்சியப்பன் செத்துட்டாரா...கண்டக்டரும் எழுந்தான்.

எப்போ...எப்படி...என்று அவளிடம் விவரம் கேட்டுகொண்டிருந்தார்கள், அவர்களுக்கு நாச்சியப்பன் இறந்து போனது வியப்பும் வேதனையுமான தகவலாக இருந்தது. ஆனால் அதையும் மீறி சொர்ணலட்சுமியின் அழகு அவர்களைச் சந்தோஷப்பட வைத்தது.

"அப்ப வண்டி போச்சுதே...யார் வண்டி அது...?"

யாராணா டிரைவர் ஓட்டிட்டு போறானோ...

"நீ என்ன வேணும் செட்டியாருக்கு?"

"பகவதிக்கு உறவு..."

"யாரு பகவதி...செட்டியார் வச்சிருந்தாரே அந்தம் மாவா..."

"டக்குன்னு அப்படி பேசாத கன்னியப்பா...அது ரொம்ப மரியாதைப்பட்ட அம்மா. செட்டியாரு ரொம்ப மரியாதையா வச்சிருந்தாரு. அத்தினி பெரிய எஸ்டேட்டை அந்தம்மா தனியா நின்னு பார்த்துக்குது. பாவம் அந்தம்மா..."

"நீ துக்கம் கேக்கப் போறியாக்கும்."

''இல்ல... அவங்களுக்கு துணையா இருக்கப் போறேன்.''

''கணக்கு வழக்குல உதவியா இருப்பியாக்கும்.''

''இல்ல...அக்கா சமைக்கக் கூடாதுல்ல...நான் சமைச்சுப் போடலாம்னு போறேன்.''

பின்னால் நின்று கொண்டிருந்தவனுக்கு அந்தப் பேச்சு கேட்கவில்லை. அவர்கள் சளைக்காமல் பேசிக் கொண்டிருப்பது கேட்டது.

அவன் பஸ்ஸின் மறுமுனைக்குப் போய் உட்கார்ந்து கொண்டான். அங்கிருந்தபடியே சொர்ணலட்சுமியை வெறுப்புடன் பார்த்தான்.

டிரைவருக்கும் கண்டக்டருக்கும் பிடித்த பெண்ணை அவனுக்கு ஏனோ பிடிக்காமல் போயிற்று. உலகம் விசித்திரமானது. நமக்குப் பிடித்தது மற்றவருக்கும் பிடித்தால் நமக்குப் பிடிக்காமல் போய் விடுகிறது.

ஒரு உச்சிக்கு மலை ஏறி இறங்க, மழை மேகம் சில்லென்று பஸ்ஸுக்குள் புகுந்தது.

''யப்பா...குளிருது...'' சொர்ணலட்சுமி தலைப்பை உதறி தோள்பட்டையைப் போர்த்திக் கொண்டாள்.

''கெட்டுது போ...ஒரு மேகம் வந்து எல்லாத்தையும் கெடுத்துருச்சு...'' டிரைவர் வேகமாய் அலுத்துக் கொண்டார்.

''என்ன ஆச்சு?'' சொர்ணலட்சுமி மிகக்கவலையோடு அவர்களிடம் கேட்டாள்.

''மேகம் இருட்டிட்டு வந்து பாதைய மறைச்சிடுச்சு. அதத்ச் சொல்றோம்.''

"நான் எஸ்டேட் போறதும் கஷ்டமாயிடுமா?" சொர்ணலட்சுமி கவலைப்பட்டாள.

அவர்கள் பதில் சொல்லவில்லை. ஆனால் மழை இருட்டிக் கொண்டு வந்தது. வேகமாய் பெய்ய ஆரம் பித்தது. அவ்வளவு கனமான மழையை அதற்கு முன் சொர்ணலட்சுமி பார்த்ததேயில்லை.

கதிரேசன் நிதானமாய் மலைப்பாதையில் வண்டி ஓட்டிக் கொண்டிருந்தான். இது நிற்கிற மழையாய்த் தெரியவில்லை. இருட்டத் துவங்கினால் இந்தப் பாதையும் தெரியாது போய்விடும். பின்னால் பஸ் சத்தம் கேட்டது. ஒதுங்கிக்கொண்டான்.பஸ் அவனைக் கடந்து போயிற்று. சற்று தூரம் போய் நின்றது.

"ஓடிப்போய் அந்தக் காருல ஏறிக்க..." அந்த டிரைவர் சொர்ணலட்சுமியிடம் சொன்னான்.

"அது நாச்சியப்பன் செட்டியாரோட காரு."

"அவரு காருல நான் எப்படி ஏர்றது..."

"எஸ்டேட் போவேணாமா. போய் ஏறிக்க."

"நான் நடந்து போயிடுவேன்."

"நடந்தா... இந்த மழையிலயா...காணாத போயி டுவ...போய் ஏறு."

சொர்ணலட்சுமி எழுந்தாள். தயங்கினாள். பின் பக்கம் போய் கண்ணாடி வழியாக அந்தக் காரைப் பார்த்தாள்.

காரில் உள்ள கதிரேசனுக்கு ஏன் பஸ் வழி மறித்து நிற்கிறது என்று தெரியவில்லை.

சொர்ணலட்சுமி இறங்கி ஓடிப்போய் அந்தக் காரின்

முல்லப்பக்கக் கதவைத் திறந்து உள்ளே உட்கார்ந்து கொண்டாள்.

கதிரேசன் திகைத்தான்.

''யார்?'' என்றான்.

''டிரைவர் அண்ணா அந்தக் குட்டி மழையில நனையிறத நீ பார்க்காத போயிட்டியே...தங்கத்துல அடிச்ச சிலை மாதிரி கண்ணு கொள்ளலை போ.''

பஸ் நகர்ந்தது. தூங்கிக் கொண்டிருந்த ஆள் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான்.

உலகத்தில் ஆண்களுக்கு எளிதான விஷயம் பெண்ணைப் பரிகசித்தல். கடினமான விஷயம் பெண்ணை மதித்தல். மதிக்கவும் செய்யாது, பரிகசிக்கவும் செய்யாது ஒரு கூட்டம் ஆண் வர்க்கத்தில் உண்டு. கதிரேசன் அந்தக் கூட்டத்தில் ஒருவன்.

11

''யாரு...யார் நீங்க?'' கதவு திறந்து உட்கார்ந்த பெண்ணைப் பார்த்ததும் கதிரேசன் பதறினான்.

அந்தப்பெண்,எட்டு தப்படி நடப்பதற்குள் நனைந்து போன முக்கால்வாசி உடம்பை காரின் முதுகில் தேய்த்துக் கொண்டிருந்தது.

''மேடம் ஈரமாக்கறீங்க...யார் நீங்க?'' மறுபடி கத்தினான்.

''நாச்சியப்ப ஐயா காரு தானே?''

"ஆமா."

"எஸ்டேட்டுக்குத்தானே போவுது?"

"ஆமா."

"அதனாலதான் ஏறினேன்."

"எஸ்டேட்டுக்குப் போறவங்கள்ளாம் கார்லதான் போகணும்னு கட்டளையா என்ன? இறங்கி நடந்து போங்க."

சொர்ணலட்சுமி ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள். இறங்கி மழையில் நடந்து போங்க என்று ஒருவன் மற்றவரைச் சொல்ல முடியுமானால் அவன் எப்படி மனிதனாக இருக்க முடியும் என்பது போல் பார்த்தாள்.

அந்த வார்த்தைகளைச் சொன்ன நேரம் கதிரேசனுக்கு உவப்பாக இருந்தாலும் சொல்லி முடித்தபிறகு கஷ்டமாகத்தான் இருந்தது.

ஏன் சொன்னோம் என்று தோன்றியது. ஆனால் எல்லோரையும் ஏற்றிக்கொண்டு போகவா கார் இருக்கிறது என்கிற எண்ணமும் வந்தது.

"நீங்க நாச்சியப்ப செட்டியார் கார் டிரைவர் தானா...? எஸ்டேட்ல இருக்கறவங்க எனக்கு நல்லா தெரிஞ்சவங்க. என்னைக் கூட்டிட்டுப் போறதால உங்களை ஒண்ணும் சொல்லிட மாட்டாங்க. அப்படியே ஏதாவது சொன்னாலும் நான்தான் கம்ப்பல் பண்ணி ஏறினேன்னு சொல்லிடுவேன்."

"என்னா பண்ணி ஏறினீங்க?"

"கம்ப்பல் பண்ணி..."

"யாரை கம்ப்பல் பண்ணி."

"உங்களை கம்ப்பல் பண்ணி."

"நல்லாருக்கு கதை. சேத்துல வுழுந்து எழுந்த வாத்து மாதிரி சொட்ட சொட்ட நனைஞ்சிட்டு தடம் தடமா ஈரம் பண்ணிட்டு ஏன் ஏதுன்னு கேக்கறதுக்கு முன்னாடியே உள்ள உக்காந்துட்டு...ஏதோ நீங்களும் நானும் மாத்தி மாத்தி பேசினா மாதிரியும் எங்கிட்ட எல்லா விவரமும் சொல்லி ஏறி உக்காந்த மாதிரியும் சொல்றீங்களே... பொம்பளையாச்சேன்னு தொடாத போறேன். இதே ஒரு ஆம்பளையா இருந்தா நெட்டுக் குத்தலா தள்ளிவுட்ருப்பேன்."

"நரிக்கு நாட்டாமை குடுத்தா இடைக்கு ரெண்டு ஆடு கேட்கும். சொந்தக் கார் வைச்சிருக்கறவன் நெட்டித் தள்ள மாட்டான். அஞ்சு, பைசா சம்பளம் வாங்கி காலந் தள்றான் பாரு...அவனுக்குதான் மனசு இறங் காது. இந்த மழைல எப்படிப் போறது?'

கதிரேசனுக்குப் பதில் பேசத் தெரியவில்லை. பேச்சுக்கு எதிர்ப்பேச்சு பேசுவது ஒரு கலை. சட்டென்று வீசப்படும் வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொண்டு அதன் கனம் தெரிந்து கொண்டு எதிர்த் தாக்குதல் செய்ய எல்லோராலும் முடியாது, தேவை யில்லாது ஒரு பெண்ணோடு நெடுநேரம் பேசிக்கொண் டிருக்கிறோம் என்று ஓர் அலுப்பை கதிரேசன் உணர்ந் தான். நிறைய பெண்கள் அசட்டு கர்விகள். நிதான மில்லாதவர்கள் இந்தப் பெண் அறிவுக்களையே இல்லாது மாடு மாதிரி இருக்கிறது நடு மூக்கில் மேடு இருக்கிறது. கண்கள் இறங்கிப் போயிருக்கின்றன. இரண்டு நிமிடத் திற்குள் கையைத் தூக்கி முன் தலையைப் பத்து தடவை சரி செய்து விட்டது. கழுத்து, ஃதாள்பட்டை. பூஜம், மார்பு இடுப்பு எல்லாவற்றிலும் ஒரு சதைத் திமிர் இருக் கிறது. மூன்று வேளை சாப்பிட்டு, இரண்டு வேளை தூங்கி, நடையில் அதிகமான குழைவு காண்பித்து பயந் தது போல நடித்து பயமே இல்லாதது போல் கத்தி,எந்தத்

தெளிவும் இல்லாத பெண்கள் கூட்டத்தில் இவளும் ஒன்று.

'இப்படி ஒரு புண்ணாக்கு நம்ம எஸ்டேட்டு எதற்கு வருகிறது...யாரைப் பார்க்க வருகிறது.ரெண்டு ஹேண்ட் பேக் இருக்கிறதே...ஏலக்காய் பறிக்கிறளா...ரொம்ப பாமரத்தனமாகவும் தெரியவில்லையே... சமையல் வேலைக்கு வருகிறதா?'

''எஸ்டேட்ல யாரைப் பார்க்கப் போறீங்க''

''எங்க அக்காவ.'' சொர்ணலட்சுமி தலை சிலுப்பிப் பேசினாள்.

''யார் உங்க அக்கா?''

''எஸ்டேட் ஓனர். நாப்பது ஏக்கரும் அவங்களது தான். சிங்கிள் லேடியா கவனிச்சிக்கிறாங்க.''

''எஸ்டேட் நாச்சியப்ப செட்டியாருது தெரியுமில்ல.''

''அவரு பரலோகம் போயிட்டாரு. அறுபது வயசு வரைக்கும் ஆடாத ஆட்டமெல்லாம் ஆடி தடுக்குன்னு போயிட்டாரு.''

கதிரேசன் மறுபடியும் திகைத்து நின்றான்.

'இதென்ன கண்றாவி...இவள் போல இரண்டுங்கெட்டானிடம் என் தகப்பன் இழிவுபட வேண்டிய அவசியமென்ன? பகவதியின் தங்கையா இவள்? யாரோ ஒரு தம்பி. எங்கோ ஒரு வேலையில்...நல்ல விதமாக இருக்கிறான் என்றல்லவா கேள்விப்பட்டிருக்கிறோம். இப்படி ஒரு எருமைத் தங்கை இருப்பதாய் பகவதி சொன்னதில்லையே...'

''அக்கான்னா யார் அக்கா? என்ன பேரு?''

''பகவதிய நான் அக்கான்னுதான் கூப்புடுவேன். நாங்கள்ளாம் ஒண்ணாதான் வளர்ந்தோம். சின்ன வயசிலேயே அக்கா கல்யாணம் கட்டிட்டுப் போயிருச்சு.''

''என்ன வகையில் அக்கா?''

''அவங்க தம்பி மனைவியோட அக்கா மக நானு. நாங்கள்ளாம் ஒரே ஊரு...ஒரே பள்ளிக்கூடம் சொந்த மாவதுக்கு முன்னாடியே ஒருத்தரையொருத்தர் நல்லா தெரியும். பகவதி அக்காதான் எங்களுக்கெல்லாம் லீடர். லீடர்ன்னு கூப்புடறதுக்கு பதிலா அக்கான்னு கூப்பட லாம். கூடை முடையறது. கோலம் போடறது...கறிக் குழம்பு ஆக்கறது...கத்தரிக்கா வதக்கறதுன்னு நிறைய சொல்லித் தருவாங்க. எங்க செட்டுல இருக்கற எந்த பொண்ணும் வேலை தெரியாத விவரங்கெட்டத் தனமா இருக்கக் கூடாதுன்னு பாத்துப் பாத்து கத்துக் குடுப் பாங்க. அக்கா குழம்பு வைக்கச் சொல்லிக் குடுத்த பொண்ணுங்கள்ளாம் பல்வேறு இடங்கள்ள கல்யாண மாகி ரொம்ப சௌகர்யமா இருக்காங்க. அந்த குரூப்ல அப்போ தாவணி போடாதவ நான்தான். நான் தாவணி போட்ட மறுமாசம் அக்கா கல்யணமாகிப் போச்சு. அக்காவுக்கு நான் லெட்டர் எழுதிருந்தேன். துக்கம் விசாரிச்சு. அக்கா மறு தபால்லயே வேறு ஒண்ணும் வேலையில்லேன்னா என்கூட வந்து ரெண்டு மாசம் இருடின்னு பதில் போட்டாங்க தனக்கு எத்தினி துக்கம் இருந்தாலும் பிறத்தியாருக்கு உதவி செய்யறதுல அக்கா மாதிரி யாரும் இருக்கமாட்டாங்க, போடி மெட் டுழகு வந்து யாரைக் கேட்டாலும் நம்ம எஸ்டேட்டுக்கு வழி சொல்வாங்க. கையோட கூட்டிட்டு வந்து வுடு வாங்கன்'னு அக்கா சொன்னாங்க. 'பஸ்ல இருக்கறவங்க களும் நாச்சியப்ப செட்டியார் கார் போவுது, மழைல மாட்டாதன்னு இறக்கி வுட்டாங்க. நீ என்னாடான்னா மனுஷத் தன்மையே இல்லாத இறங்குன்ற...''

''போறும். கூட்டிட்டுப் போறேன்.'' கதிரேசன் விளக்குகளைப் போட்டுப் பார்த்துக் கொண்டான். கார் இன்ஜினை விரைவுபடுத்திக் குறைத்துக் கொண்டான். மெல்ல கியர் மாற்றி வண்டியை மலைப் பாதையில் நிதானமாய்ச் செலுத்தினான்.

''உங்க பேரு என்னன்?'' அந்தப் பெண்மணி கேட்டாள்.

''கதிரேசன்.''

''எத்தினி நாளா எஸ்டேட்ல வேலை செய்றீங்க.''

''வேலையா?'' கதிரேன் யோசித்தான். ஏலக்காய் பற்றிய ஞானம் ஓரளவு முழுமையடைந்தது போன வருடம்தான். எனவே சொல்வதாயிருந்தால் ஒரு வருட சர்வீஸ் என்று சொல்ல வேண்டும்'' ஒரு வருஷமா வேலை செய்யறேன்.''

'சம்பளத்துக்கு ஓட்டறீங்களா, இல்ல வெறும் சாப்பாடு மட்டுமா?''

என்ன கேட்கிறது இந்த சனியன். காசு தராமல் இரண்டு வேலை சோற்றுக்கு மட்டும் வேலை செய்யுமளவு இந்திய தொழிலாளியின் நிலை தாழ்ந்துவிட்டதா? இல்லை எதுவுமே தெரியாத முட்டாளாய் இது இருக்கிறதா?''

''எதுக்கு கேட்டேன்னா எங்க ஊர்ல வண்டி ஓட்டறவங்களுக்குச் சாப்பாடு போட்டு வச்சுக்கவாங்க. மாட்டுக்கும் பருத்திக் கொட்டைப் புண்ணாக்கு குடுத்து ருவாங்க...இங்கன ஏலக்கா பறிக்கறவங்களுக்கும் வீடு கொடுத்து, சாப்பாடு போடறதா கேள்விப்பட்டேன். உனக்கும் அப்படித்தானான்னு கேட்டேன்.''

''உனக்கு எந்த ஊரு?'' கதிரேசன் அடிக்குரலில் கேட்டான்.

"நாகர்கோயில் பக்கம் குமாரகோயில் "

"நாட்டுப்புறமா?"

"டவுன்லேர்ந்து கிட்டக்கத்தான்."

"நீ இப்படி சோத்துக்குத்தான் வேலை செஞ்சுக்ஷட் டிருந்தியா?"

"நான் ஏன் சோத்துக்கு வேலை செய்யணும். எங்க ஊட்ல நாலுபேர் சோத்துக்கு வேலை கெய்யறாங்க. அங்க எங்களுக்கு நிலமும் இருக்கு. மலையும் இருக்கு."

"மலையா?"

"ஆமா மலைல கொய்யா போட்ருக்கோம். நாரத்த போட்ருக்கம். நாகப்பழம் போட்ருக்கம் நாங்க ஒண் ணும் சோத்துக்கு வேலை செய்யறவங்க இல்ல. கொஞ் சம் காரோட்ட தெரிஞ்சா பெரிய ஜட்ஜுன்னு நினைப் பாக்கும். ஆள் பாத்துப் பேசத் தெரிஞ்சுக்கங்க."

கதிரேசனுக்கு என்ன பேசுவதென்று தெரியவில்லை தடால் புடால் என்று ஒரு பெண் பேசுகிறபோது அவ ளுக்கு ஏற்ப அவள் பேசுகிற குரலிலேயே எதிர்த்துப் பேசுவது அனாவசியம் என்று தோன்றியது இந்தப் பசு மாட்டைக் கொஞ்சம் விட்டுப் பிடிக்க வேண்டும். ஏன் இவளைப் பசுமாடு என்று யோசித்தோம்... கதிரேசன் தனக்குள் ஆராய்ந்தான். உடம்பு மாடு உடம்பு. ஒரு புண்ணாக்கு வாசனை. கிட்டே போனால் மணி குலுங்க ஒரு கோபத்தில் தலையாட்டுமே. அந்த மாதிரிதான் இவள் கோபமும் பேச்சும் இருக்கிறது.

"யம்மா...நீங்க யாருன்னு தெரியாத பேசிட்டேன். நம்மளைப் போட்டுக் குடுத்திராதீங்கம்மா..." கதிரேசன் பொய்ப் பணிவுடன் பேசினான்.

''ச்சே...ச்சே... அதெல்லாம் போட்டுக் கொடுக்க மாட்டேன், ஆனாலும் டக்குன்னு ஒரு லேடிய மழைல இறங்கிப் போகச் சொன்னீங்க பாருங்க... அதான் புடிக்கலை.''

'நீ லேடியா? பசுமாடு...எஸ்டேட்டுக்கு வா உன்னைக் கவனிச்சுக்கறேன்' கதிரேசன் நெஞ்சுக்குள் ஒரு குதூகலம் வழிந்தது.

''ம்மமேமே...'' கதிரேசன் திடீரென்று மாடு மாதிரி கத்தினான்.

''என்ன பண்றீங்க?''

''ரொம்ப சந்தோஷமானா இப்படி கத்துவேன்.''

''இப்ப என்ன கேடு புடிச்சுக்கிச்சு உன் சந்தோஷத்துக்கு?'' அவள் சிடுசிடுத்தாள்.

''நீ சமைச்சுப் போடறதுக்குப் போற... நான் டைவரு...உன் கூட சமாதானமா போயிட்டா நல்லா சோறு வடிச்சுப் போடுவ...கூட பதார்த்தம் வைப்ப... எனக்கு சம்பளம்தான். இருந்தாலும் எஸ்டேட்ல அப்பப்ப சாப்பிட்டுக்குவேன். நம்மளைக் கவனிச்சுக் கம்மா'' கதிரேசன் கண் சிமிட்டினான்

சொர்ணலட்சுமி அவனை முறைத்துவிட்டு, பின்னலை சீட்டுக்குப் பின்னே தள்ளி கையை பக்கவாட்டில் போட்டு பாதி முதுகை கார் கதவின் மீதும் பாதி முதுகு கார் பின் சீட்டின் மீதும் அழுந்த உட்கார்ந்து கொண்டாள். அவள் அமர்ந்த விதம் பல கார்களுக்குச் சொந்தமானவள் என்பதுபோல் இருந்தது.''இந்த கார் ஏஸியா?'' ''அவள் டேஷ் போர்டில் இருக்கிற சில பட்டன்களைத் தொட்டாள்.

''மலைல ஓடற காரை பைத்தியக்காரன்தான் ஏஸி பண்ணுவான்.''

''அடேயப்பா...இவரு புத்திக் கொழுந்து. டிரைவரா ஆகுறும் போதே இத்தினி ஆங்காரப்படறீங்களே...தடுக்கலை மாதிரி எங்கினயாச்சும் துட்டு கிடைச்சு எஸ்டேட் கிஸ்டேட் வாங்கிட்டீங்க. உங்களைக் கைல புடிக்க முடியாது.''

''இப்படியே காலம் போயிடுமா...நாங்க எஸ்டேட்டும் வாங்குவோம். கிஸ்டேட்டும் வாங்குவோம்.''

அவன் அழுத்தம் கொடுத்துப் பேசியது அவளுக்குப் புரியவில்லை. வெறும் கர்வம் என்பதாய்த்தான் அவள் எடுத்துக் கொண்டாள்.

வெகுளியாய் இருக்கும் பெண்ணைக் கண்டால் நல்ல ஆண்மகனுக்கு இரக்கம் வந்து விடும். கதிரேசன் நல்லவன். சட்டென்று ஒரு பெண்ணை மறைமுகமான பேச்சால் கீழ்த்தரமாய் நடத்தியது கண்டு. வெட்கப்பட்டான். அவளுக்கு அது புரியவில்லை என்றதும் சந்தோஷப் பட்டான். அவளை வேறுவிதமாய்க் கேலி செய்ய, கலவரமூட்ட விரும்பினான்.

தார் சாலையிலிருந்து மண்சாலைக்கு மாறிய வண்டி அதிகம் குலுங்கியது. வண்டி வேகமாய் ஒருமுறை குலுங்கும் போது பளிச்சென்று ஸ்டியரிங்கை வலப்பக்கம் வளைக்க, அவள் தன் மீது வந்து விழுவாள் என்று எதிர் பார்த்தான். அவள் வலது சரிந்து அவன் மீது படாதவாறு கை ஊன்றி எதிர்த்து இடது பக்கம் போனாள். அவள் முதுகு கதவின் மீது மோத கதவு திறந்து கொண்டது. அவள் அப்படியே சேற்றில் விழுந்தாள். உருண்டு சரிவில் இறங்கினாள். பயத்தில்.'ஐயோ' என்று அலறினாள்.

மழை கனமாய்ப் பெய்தது. கதிரேசன் வண்டியை நிறுத்திவிட்டு அவள் விழுந்த இடத்துக்கு ஓடினான். உட்கார்ந்து கையும் காலும் அழுந்த ஊன்றி, சரசர

வென்று சரிவில் சறுக்கினான். ஒரு அடி உயர்ந்த புல்லில் அவள் எங்கு கிடக்கிறாள் என்று தேடினான். நாற்பது அடிக்குக் கீழே ஓர் ஏலக்காய் புதரில் அவள் கால்வைத்துப் படுத்திருந்தாள்.

''மாட்டு வண்டிக்காரன் தானே நீ...'' அவள் ஒருக் களித்து அவனைப் பார்த்துக் கத்தினான். அத்தனை நெருக்கமாய் ஒரு கட்டழகு கதிரேசனைத் தாக்கி பதில் பேச ஒட்டாமல் செய்தது.

இப்போது காருக்குப் போக வேண்டுமெனில் ஒரு வரையொருவர் பிடித்துக் கொண்டுதான் போக முடியும். இந்தப் பசுமாடு கத்துகிறது. இதை முதலில் சமாதானம் செய்ய வேண்டும். பெண்களைச் சமாதானம் செய்ய முதலில் தாழ்ந்து போக வேண்டும்.

''என்னை மன்னிச்சுருங்கம்மா'' கதிரேசன் கைகூப்பி னான். ஏனோ அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவள் அவன் சிரிப்பைப் பொறுக்கித்தனம் என்று எடுத்துக் கொண்டாள்.

12

பெண் வேண்டாம் என்று அறவே மறுக்க மிகப் பெரிய வைராக்கியம் வேண்டும். அது தொடர்ந்த போராட்டம். நியமங்களும் நிஷ்டைகளும் துணை செய் தால் பார்க்கின்ற பெண்களை தெய்வ ரூபமாய்ப் பார்க்க இயலும். இப்படிப் பெண்ணை விலக்கிய மனிதர் லட் சத்தில் ஒருவராகத்தான் இருக்க முடியும். பெண்ணை விலக்க வேறொரு சுலபமான வழி உண்டு. பசியை அடக்க உணவு உண்பதுபோல பெண்ணை விலக்கப்

பெண்ணை அனுபவித்து விடுவது ஒரு வழி. பெண்மையின் அண்மை இருந்து அனுபவங்கள் மெருகேற கொஞ்சம் கெட்டிக்காரனுக்கு, போதுமென்ற திருப்தி ஏற்பட்டு விடும். 'ச்சீ...ச்சீ இந்தப் பழம் புளிக்கும்' என்று இழிவு படுத்துவதைவிட திகட்டும்படி தின்றுவிடுவது நல்லது. ''திராட்சைப்பழம் சாப்பிடு...அது உடம்புக்கு நல்லது. நான் வேண்டுமென்ற திராட்சைப்பழம் சாப்பிட்டிருக்கிறேன்...'' என்று திராட்சைப்பழம் சாப்பிடாமல் பேச முடியும்.

ஆனால் பெண் வேண்டாமென்று பிரம்மச்சாரியாய் இருப்பதைவிட மிகப்பெரிய போராட்டம் பெண்ணோடு வாழ்வது, பெண் பேறுவகைப் பிராணி அல்ல. ஆணைப் போல சமமான அறிவும் உணர்வும் உள்ள ஜீவன். இதனால் அவளைப் புரிந்து வாழ்க்கை நடத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தப் புரிந்து கொள்ளுதலுக்கு மிகப் பெரிய பொறுமை தேவையாக இருக்கிறது. பொறுமையின் முதல் விஷயம் விட்டுக் கொடுத்தல். விட்டுக் கொடுத்தலின் வெளிப்பாடு, பெண் சீறினாலும் மௌனமாக ஏற்றுக் கொள்ளுதல்.

நாற்பது ஏக்கர் நன்கு முதிர்ந்த ஏலக்காய் எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரரான கதிரேசனை, நாச்சியப்பச் செட்டியாரின் மூத்த மகனை, பன்னிரண்டரை லட்ச ரூபாய் பாங்க் பேலன்ஸ் உள்ள கதிரேசனை, படித்தவனை. ஆங்கிலம் பேசுகிறவனை. கம்யூட்டர் தெரிந்தவனை, கவிதைகள் எழுத முயற்சிக்கிறவனை, சாதாரண டிரைவர் என்று நினைத்துக் கொண்டு சொர்ணலட்சுமி சீறினாள்.

''டிரைவராடா நீ...மாட்டு வண்டி ஓட்டிட்டிருந்தவனெல்லாம் டிரைவர்னு வந்துட்டீங்களா? பைத்தியக்காரனா நீ...ஏன் ஒடிச்சு ஒடிச்சு ஓட்டினே?' விழுந்த அவமானத்தைக் கடுங்கோபமாக மாற்றினாள்.

ஆணும் அவமானம் தாங்காதவன்தான். அதிலும் பெண் அவமானப்படுத்தி விட்டால் நொந்து நொறுங்கிப் போகிற ஜாதிதான். அதேசமயம் அவமானப்படுத்தி பெண்ணை எதிரியாகக் கருதாது ஆச்சரியமான விஷயமாய்ப் பார்த்து விட்டால், அவனுக்கு அவமானம் உறைப்பதேயில்லை. ஆணுக்குப் பெண்ணின் எது ஆச்சரியம்? பெண்ணின் அழகுதான் ஆணை அதிரடிக்கிற விஷயம். பத்தாவது படிக்கிறபோது சினிமா போஸ்டரில் உள்ள நடிகையின் உருவத்தைப் பார்த்துத் திகைத்துப் போன அதே விதமாய் கதிரேசன் இப்போதும் திகைத்துப் போனான். அவன் கண்கள் அளவெடுக்க ஆரம்பித்தன. அதிசயிக்கத் துவங்கின. அந்த மழையைத் தாண்டி ஏதோ ஒருவாசனை அந்தப்பெண் மீது வீசியது. அது புல் வாசனையா...பெண் வாசனையா என்கிற கேள்வி வந்தது.

அவன் பார்ப்பதை அவள் பார்த்தாள். 'அடச்சீ' என்று மனசுக்குள் திட்டினாள். ''சரியான பன்னாடை'' என்று வாய்விட்டுத் திட்டினாள். ஒரு சாய்வு நாற்காலியின் முதுகுப்பக்கம் போல சரிவாய் இருந்த மலை மீது கையும் காலும் ஊன்றி ஏறத் துவங்கினாள்.

கடல் போல மலையும் ரகசியமானது எல்லோராலும் மலைமீது வசிக்க முடியாது. மலைமீது வசிக்கச் சுத்தமான நுரையீரல் வேண்டும். மூச்சுப் பிடித்துப் பழக்கம் இருக்க வேண்டும். தொடையிலும் ஆடுதசையிலும் அதிகமான வலு இருக்க வேண்டும் நடந்து தடந்து வலித்தாலும் லட்சியம் செய்யாத புத்தி இருக்கவேண்டும். நாகர் கோவில் கடற்கரைப் பக்கம் சொர்ணலட்சுமி உப்புக்காற்று சுவாசித்த பெண். முறைத்துப் பார்க்கும் ஆளிடமிருந்து நகர்ந்துவிட வேண்டுமென்று கையூன்றி மலையேறினாள். சொட்டச் சொட்ட நனைந்தபடி

கொட்டும் மழையில் அப்படி ஏறுவது அவளுக்கே ஆபாச மாகத்தான் இருந்தது. ஆயினும் நாற்பதடி சரிவை ஒரு பதினைந்து இருபது தப்படியில் கடந்து விடலாம் என்று தோன்றியது. ஆனால் மலை ரகசியமானது நாலாவது தப்படியில் மலையின் புற்கள் அவள் காலடியில் வாரிவிட் டது. அவள் கைகளால் புற்களைப் பற்றி வயிறு ஒட்டி குப்புறக் கிடந்தாள். மேலேறுவதற்காக இரண்டு முறை காலை நகர்த்த பிடிமானமாய் இருந்த புற்கள் வேரோடு வந்தன. புற்கள் கைவிட சொர்ணலட்சுமி சறுக்கினாள். ஏறியதைவிட மிகவேகமாய்க் கீழே நழுவினாள். உடம்பு ஈரப்புல் தரையில் நழுவும்போது புடைவை சுருட்டிக் கொண்டு தூக்கிற்று. கொலுசு போட்ட கணுக்கால். வெள்ளை வெளேரென்ற ஆடுதசை என்று நகர்ந்தது.

'கடவுளே' என்று அவள் மல்லாக்கப் புரண்டாள்.

எழுந்து நின்று புடைவையைத் தழைத்துக் கொள்ள முயன்றாள். முக்கால்வாசி எழுந்து நின்றபோது குப்புற விழாமல் இருப்பதற்காக சொத்தென்று உட்கார்ந்தாள். உட்கார்ந்த வேகத்தில் மறுபடியும் சறுக்கினாள். கதிரே சனை முட்டிக் கொண்டு நின்றாள், இப்படி ஒரு மோச மான கோணத்தில்தான் இருக்க நேர்ந்த அவமானம் அவளைத் தாக்கிற்று. அவசரமாக நகர, அவன் கால் களை அழுத்தி அவளை நகர ஒட்டாமல் செய்தான்.

"பைத்தியம்...முரட்டுத்தனம் பண்ணாத பைத்தியம் ...வுட்டா இன்னும் கீழ போயிடுவ. அப்புறம் ரெண்டு நாள் பொறுத்துத்தான் மேல வரமுடியும். அந்தப் பக்கம் ஆடு மாடுகூட போக முடியாத இடம் உன்னைக் கயிறு போட்டுத்தான் தூக்க முடியும். உன்னை ஒண்ணும் செய்துர மாட்டாங்க...கொஞ்ச நேரம் அப்படியே இரு."

"எப்படி இப்படியே இருக்கிறது?" அவள் ஆங்கார மாய்க் கத்தினாள்.

"அப்ப போ..." அவன் புரண்டு விலகிக் கொண்டான்.

அவள் இன்னும் நாலடி சறுக்கினாள்.

அருகம்புல் போல் காட்சியளித்த ஆனைப்புல்லில் மழை பட்டுப் பட்டு ஒரு வழவழப்பு ஏற்றியிருந்தது. மண். கோதுமை அல்வாவாய் ஒரு நெகிழ்வில் இருந்தது. சொர்ணலட்சுமி நாலடி சறுக்கி, அவன் வலதுகால் பேண்ட்டை இறுக்கப் பிடித்து மல்லாக்கக் கிடந்தாள். கதிரேசன் இடக்கையால் புல்லைக் கொத்தாகப் பிடித்தபடி குப்புறக் கிடந்தான். குப்புறப்படுத்தபடியே காலின் கீழ் மல்லாக்க இருக்கும் சொர்ணலட்சுமியை வியப்புடன் பார்த்தான். அது ஓர் அதிரடி ஆங்கிளாக இருந்தது. பயத்தில் அவள் வேகமாக மூச்சு விட்டுக் கொண்டிருப்பதை அசைவுகள்மூலம் உணர முடிந்தது. இன்னொரு மேகம் தரையிறங்க இன்னொரு மேகம் மலையிறங்க இன்னும் இருட்டாகி அடர்த்தியாய் மழை பெய்யத் துவங்கியது. முதுகு முழுவதும் சுள்ளென்று வலிக்க மழை பெய்தது. இரண்டு பேரும் மூன்று நிமிடங்கள் அப்படியே இருந்தார்கள்.

"நான் சொல்றதைக் கொஞ்சம் கேக்கறியா?" கதிரேசன் பேசத் துவங்கினான்.

அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"கையை வுட்டுட்டேன்னா இன்னும் அறுபதடி கீழ போயிடுவ. அப்படியே புரண்டு அப்படியே ஏறி எனக்குச் சமமாவா. நின்னு நிமிர்ந்து மலையேற முடியாது ஓணான், பல்லி மாதிரி வயிறு ஒட்டிதம் புடிச்சு ஏறணும் எங்கயாவது குச்சி உடைச்சி, மண்ணுலகுத்தி, அதைப் புடிமானமா வச்சுக்கிட்டு நகரணும். உனக்கு மலைபத்தித் தெரியலை. முரட்டுத்தனம் காட்டாத, மேலே போறதுக்கு வழி பாரு. சொல்றது புரியுதா?"

அவள் அப்படியே மல்லாக்கக் கிடந்தாள்.

''நாங்கல்லாம் நல்ல குடும்பத்து லேடீஸ்'' என்றாள்.

''யார் இல்லைன்னது?''

''இந்த மாதிரியெல்லாம் ஆம்பளை பக்கத்துல இருக்க மாட்டோம்.''

''இப்படி இருன்னு நானா சொன்னேன்? கார் கதவுல போய் டமால்னு முட்டினே. கதவு புட்டுக்கிட்டு விழுந்தே. விழுந்த உன்னைக் கூட்டிட்டுப் போறதுக்காக நான் இறங்கினேன். என்னையும் ஏறவுடாத நீயும்ஏறாத ...இப்படி பேண்ட்டைப் புடிச்சுக்கிட்டு தொங்கிக் கிட்டிருந்தா என்ன அர்த்தம்? அதனாலதான் சொல்றேன், புரண்டு எனக்குச் சமமா ஏறிவா. கையும் காலும் ஊனி என் பக்கத்துல குப்புறப் படுத்துக்கோ. நாற்பத்தஞ்சடி அம்பதடி மேல ஏறணும். நிதானமா ஏறணும். வெக்கப்படாதே. நான் உன்னை ஒண்ணும் செய்துர மாட்டேன் புரியுதா? பயந்து போய் ரொம்ப இழுத்தேன்னா நானும் பிடியவுட்டுச் சரியவேண்டியதுதான். பெரிய கொத்தா புல்லைப் புடிச்சிருக்கேன். ஒரு அளவுக்கு மேல வெயிட் தாங்காது. அதனாலதான் சொல்றேன். பதட்டப்படாதவா...''

''என் தலையெழுத்து...கண்ட ஆம்பளைக்கு முன்னால இப்படி நிக்கணும்னு...'

''எனக்கு ஒண்ணும் தேவையே இல்லை...நீ மேலே போ...இல்லை கீழே போ...பேண்ட்டை வுடு.''

''இடிச்சுக் கீழே தள்ளிட்டு ஈவு இரக்கமில்லாம பேசறாம் பாரு.'' அவள் அவனுடைய பேண்ட்டை இன்னும் இறுக்கமாகப் பிடித்துக் கொண்டாள்.

"ஒரு உதை விட்டேன்னா எங்கேயோ போய் விழுவ நீ. சாவறதுக்குன்னே ஏலக்கா எஸ்டேட் வந்திருக்க."

"நாங்க நல்ல குடும்பத்து லேடீஸ்."

"அப்ப நாங்கல்லாம் யாரு? எங்களுக்கெல்லாம் குடும்பம் கிடையாதுன்னு நினைச்சுக்கிட்டிருக்கியா? எப்படியோ போ"

அவன் இரண்டு எட்டு ஏற, அவள் அவன் பேண்ட்டை இன்னும் இறுகப்பற்றிக் கொண்டான். அவன் தன்னைவிட்டுப் போய்விடுவான் என்று குப்புறப் படுத்தாள். கை ஊன்றி, கால் ஊன்றி மலை ஏறுகிற மாடுபோல் அவனுக்கருகே வந்தாள். மெல்ல மெல்ல இப்படி வந்துவிடலாம் என்று எண்ணிச் சற்று வேகமாய் மேலேறத் துவங்கினாள். நாலுமுறை புல்லை மிதித்த முன்கால் பாதம் வழவழப்பாகி ஐந்தாவது மிதிக்குச் சறுக்கிவிட்டது. மீண்டும் சறுக்கிக் கொண்டு வந்தாள். அவன் புரண்டு கையூன்றி உட்கார்ந்து கொண்டான். அவளின் இரண்டு கால்களுக்கு நடுவே அவன் தடுப்பானான்.

"கருமகாண்டம்." கத்தினாள்.

"யாரைச் சொல்றே?"

"இங்க வந்து மாட்டிக்கிட்டேனே...என்னைச் சொல்றேன்."

"நகர்ந்து போயிரட்டுமா...நீயா மேல ஏறிக்கிறியா?"

"கொஞ்சம் இரு. போயிராத..." கத்தினாள். காலை அவன் முதுகின் மீதுவைத்து உந்தி ஏறினாள்.

"இப்ப காலை மடக்கு..." அவன் கத்தினான். அவள் காலை மடக்க, அவன்பின் பக்கமாய் நகர்ந்தான்.

அவளுக்கு அவனைப் போல உட்கார்ந்தபடியே புல் பிறாக்கி மேலேறிவிடலாம் என்று தோன்றியது.

அவள் புரண்டு உட்கார்ந்தாள். புல் நசுங்கிச் சாறு பெகிழ்த்தியது. ஈரப்படுடைவையில் சாறு வழவழக்க அவள் சட்டென்று இறங்கி அவன் முதுகோடு ஒட்டிக் கொண்டாள்.

''கருமகாண்டம்...சொல்லியே...ஏதாவது சொல்லு. ...சொல்லித் தொலைச்சிடு. நீயா ஏதாவது பண்ணிட்டு நீயா ஏதாவது சொல்லிக்க. உன்னைக் கார்ல ஏத்துன காலத்துக்கு நான் இதையும் அனுபவிக்கணும். இதுக்கு மேலேயும் அனுபவிக்கணும். இப்ப என்ன பண்ணப் போறே? இப்படியே ஒட்டிட்டு இருக்கப் போறியா இல்ல உருப்படியா மேல போகப் போறியா?''

''ஏன் இப்படிச் சறுக்குதுன்னே தெரியலை. அவள் குனிந்து புற்களைப் பார்த்தாள்.

''இந்த இடம் முழுக்க விளக்கெண்ணெய் தடவி வச்சிருக்கு நீ சறுக்கணும்னு.''

''இப்ப என்ன பண்றது?''

''நீ படிச்ச பொம்பளை தானே''

''ஆமா...''

''அதான் பிரச்னை. படிக்காத பொம்பளையா இருந்தா இந்நேரம் சொல்பேச்சு கேட்டு மேல போயி இருக்கும்''

''நான் என்ன செய்ய?''

''நீயா எதுவும் செய்யவேணாம். என் முதுகுல கால் வச்சு விலகிப்போய்க் குப்புறப் படுத்துக்க. நான் உன் பக்கமா வரேன். என் இடுப்பையோ தோளையோ

இறுக்கப் புடிச்சுக்க. நான் புல்லைப் பக்குவமாப்புடிச்சு மேல போயிருவேன். நான் கால்தூக்கி உந்துறபோது நீயும் கால்தூக்கி உந்தணும். என்னை கிரிப்பாப் புடிச் சிக்கிட்டு, கால் உந்தி மேல வரணும்.''

''ஆபத்து நேரத்துலதான் ஜெண்ட்ஸ் அட்வான்டேஜ் எடுக்கறாங்க.''

''என்னா எடுக்கறாங்க?''

''அட்வாண்டேஜ்...அத்துமீறல்.''

''குரங்கு, சனி, பீடை, தரித்திரம். இது பெரிய ரம்பை...நாங்க அத்துமீறி ஆடறோம். எப்படியாவது போய் ஒழி''

அவன் விலகிச் சறுக்கி புற்களைப் பிடித்து நின்று, அவளைக் கடந்து போனான்.

அவளும் குப்புறப் படுத்து முதுகுச் சட்டையைப் பற்றிக் கொண்டாள். அது கிழிய அவள் அவன் இடுப் பைப் பிடித்துக் கொண்டாள். நகர்வது சிரமமாக இருந் தது. அவன் திணறினான். எம்பி அவளாகவே அவன் தோள் பிடித்துக் கொண்டாள், அவள் பாதி உடம்பு அவன் முதுகில் கிடந்தது. அவன் மலை விளிம்பில் வேர் பிடித்து நின்றான். அவளைத் தன் தலைமீது கால்வைத் துப் போகச் சொன்னான்.

அவள் ஏறி கார் நிற்கும் சமதளத்துக்குப் போனதும அவன் ஏறி மேலே வந்தான். தள்ளாடி ஒரு மரத்தடியில் உட்கார்ந்து கொண்டான்.

'என்னா...ரொம்ப கஷ்டமாயிடுச்சா...?'' அவள் குனிந்து விசாரித்தாள்.

அவன் சட்டை பட்டனைக் கழற்றிக் காட்டினான். மார்பு முழுவதும் செதில் செதிலாய் சிராய்த்திருந்தது.

மண்ணைத் தட்டிவிட ரத்தம் வந்தது. அவள் அவனை மாத்தில் சாய்த்துத் தன் முந்தானையால் அவன் நெஞ்சு மண்ணைத் துடைத்தாள். ஓர் ஆணை அவள் இப்படித் தொட்டது இதுதான் முதல் தடவை.

13

'முள்ளு வாழைல பட்டாலும் வாழை முள்ளுல பட்டாலும் சேதம் வாழைக்குத்தான். நான் ஒண்ணும் புதுசா சொல்லலை. எல்லாருக்கும் தெரிஞ்சதுதான். தெரிஞ்சிருந்தும் நாம தப்பு பண்றோம். அதனாலதான் திருப்பித் திருப்பிச் சொல்றேன். அந்தாளை மலையிலே ருந்து உருட்டி விட்டுட்டீங்களாமே? தூக்கி விடாம, முள்ளம்பன்றிய பிடிக்கப் போயிட்டீங்களாமே? மதுரைல இருக்கிற அத்தினி உறவக்காரங்ககிட்ட போய் உன்னைப் பத்தி தப்பாத்தான் சொல்றான். வெடிமருந்து வச்சிருக் கியாம். ரௌடிப்பட்டாளம் வச்சிருக்கியாம். நாப்பது ஏக்கரையும் முழுங்கிட்டு, செட்டியார் குடும்பத்துக்கு நாமம் போடத் தயாராயிட்டியாம். ஏகப்பட்ட பேச்சு.''

''சொல்றதுக்கு வெக்கமாத்தான் இருக்குது. நீ மாடு மாதிரி இருக்கறதா நாலஞ்சு தடவை சொல்லிட்டாரு. நான் இருக்கறது தெரியாத, இஷ்டத்துக்கு பேசறார். உன்கிட்டேருந்து எஸ்டேட்டை மீட்காம போக மாட் டேன்னு மேஜைல அடிச்சுப் பேசறார். வருஷத்துக்கு ஆறு லட்ச ரூபா லாபம்னு கணக்கு போட்டுக் காட்ட றார். அந்தாள சமாதானப்படுத்த முடியாதுன்னு எனக்குத் தெரியும். ஆனா சரியானபடி சாப்பாடு போட்டு அனுப்பியிருக்கலாம். என்னைவிட முள்ளம் பன்றியாடா

முக்கியம்னு கத்தறார். கதிரேசன் எங்க...கதிரேசன் எங்கன்னு அவங்க வீட்டுக்கு மூணு, நாலு தடவை போன் பண்ணிட்டாரு. ஆச்சி தெரியாதுன்னு சொல்லிட்டாப் போல இருக்கு. அதுக்கு வேற கூச்சல், நான் கெட்ட வார்த்தையெல்லாம் விட்டுட்டு சொல்றேன்.'

தகவல் தந்தவன் சொல்லச் சொல்ல, பகவதி பதில் சொல்லாது நீலநிற கோஸை சிறிய துணுக்காய் வெட்டிக் கொண்டிருந்தாள்.

வெளியே மழை பூமியைத் தாக்கிக் கொண்டிருந்தது. கதிரேசு தரையில் இருக்கிறானா மலைப்பாதையில் பாதியில் இருக்கிறானா தெரியவில்லை.

''சின்னம்மா...நீலகோஸ் சூப்வையுங்க''என்றுபோன் செய்து காலையிலேயே சொல்லிவிட்டான். தனியே காரில் இந்த மலைச்சரிவில் வருவதில் அபாயம் உண்டு. ஜீப் போல, கார் பிடிப்போடு ஏறாது. நின்னு நின்னு வர வேண்டியிருக்கும். கதிரேசு எங்கிருக்கிறது என்று தெரிய வில்லை.

இந்த முறை கதிரேசு வந்தால் சாவியைக் கையில் கொடுத்து வாசலில் அதன் பெயரை எழுதச் சொல்லி யூனியன் ஆட்களுக்கும் வேலையாட்களுக்கும் மொத்த வியாபாரிகளுக்கும் அறிமுகப்படுத்திவிட்டு பெட்டியோடு வெளியே கிளம்பி விடவேண்டும். சொர்ணலட்சுமியை அனுப்புவதாக ஒரு கடிதம் நேற்று வந்தது, எப்போது, யாரோடு என்று எழுதப்படவில்லை, சொர்ணலட்சுமி சின்ன வயசிலேயே லட்சணமாக இருப்பாள். கதிரேசு வரும் நேரத்தில் சொர்ணலட்சுமியை உதவிக்கு வைத்துக் கொள்வது சரியாக வருமா...இல்லை இன்னும் கெட்ட பெயர் வருமா...

''அதான் பார்த்தேன். நாகர்கோயில்காரி மதர்த்தலா

ஒரு பொண்ணை சமையலுக்குக் கொண்டாந்து வச்சிருக்காளாமே...கதிரேசு...சாப்பாடு நல்லா இருக்கா...கறி கூடுதலா இருக்காம்ல, சாப்பாட்டுல...''

மதுரையில் கேலி வரும். சொர்ணலட்சுமி வந்தால் வைத்துக் கொள்வதா...திருப்பி அனுபபுவதா?

இதுவரை வாழ்க்கை சௌகர்யமாய் இருந்தது. மறவான முறையில் ஒரு மாற்று குறைவாக இருந்தாலும் மயர்வான மனிதர்களுக்கு உண்மையாக இருந்ததில் வாழ்க்கை அர்த்தமுள்ளதாக இருந்தது. இன்னும் பத்து வருடம் செட்டியார் உயிருடன் இருந்திருக்கலாம். தனக்கு கிழத்தனம் வரும் வரையில் தனக்கு புருஷனாய் இருந்திருக்கலாம். இந்த இளமை ஒரு வேதனை. என்னிடம் என் இளமை வாலாட்டவில்லை. வேறு எவர் கண்ணையோ குத்தி வம்புக்கு இழுக்கிறது. எகத்தாளமாய்ப் பேச வைக்கிறது இப்படி பேச்சு கேட்கிறபோதுதான் நெஞ்சில் பள்ளம் விழுந்ததுபோல் ஒரு வேதனையும், 'ஐயோ புருஷன் இல்லையே' என்கிற ஏக்கமும் ஏற்படுகின்றன. இந்த ஏக்கத்தை யாரிடமும் சொல்ல முடியாது இத்தனை வேதனையிலும் ஒரே ஒரு சமாதானம். ஆச்சியின் அன்பும் கதிரேசனின் பாசமும்தான்.

மழை நிற்குமா? வானம் தெளியுமா? மழைக்குமீறி தொலைவே கார் வரும் ஓசை கேட்டது.

''அட...நம்ம செட்டியார் காரு...'' மதுரை பற்றி தகவல் சொன்னவன் துள்ளி எழ, ''குடை...குடை... இந்தா குடை'' அவனுக்கு மேல் பரபரத்து பகவதி குடையை நீட்டினாள்.

அவன் விரித்த குடையோடு மழையில் இறங்கினான். எஸ்டேட் கட்டடத்திற்கு வருவதற்குள் அந்தக்கார் ஒரு

செங்குத்தான பாதையைக் கடந்தாக வேண்டும். மழை நாட்களில் அந்த செங்குத்தான பாதை சேற்றுக் குழம் பாகி விடக்கூடாது என்பதற்காக உருளை உருளையான பாறைக் கற்களைப் போட்டு, கெட்டிப் படுத்தப்பட்டி ருந்தது மழையில் மண் கரைந்து வேறுபுறம் போக, இப்போது உருளைப் பாறையில் கார் வர வேண்டிய தாயிற்று. குலுங்கிக் குலுங்கி கார் மேலேற, அவன் குடை யோடு பாறை நோக்கிப் போனான்.

இன்னும் முப்பது கஜ தூரத்தில் கார் வீட்டை அடைந்து விடும்.கதிரேசன் ஆக்ஸிலேட்டரிலிருந்து கால் எடுக்காமல் மூன்றாவது கியரில் மிகுந்த வலியோடு என்ஜின் ஓட, வண்டியைக் கவனமாய் ஓட்டிக் கொண்டி ருந்தான் அந்த முப்பது கஜ தூர சரிவுககு முன்னால் வண்டியை நிறுத்த முடியாது. வேகம் குறைக்க முடி யாது. ஆனால் எதிரே ஒரு மடையன் குடையோடு வரு கிறான். யாரது என்று தெரியவில்லையே. கதிரேசன் ஹார்ன் அடித்தான்.உள்ளிருந்தபடியே 'முட்டாள்'என்று கத்தினான்.

சொர்ணலட்சுமி கார் கண்ணாடிக் கதவை இறக்கி கையை வெளியே நீட்டி ஓரம் போ என்று கத்தினாள். அருகே வரும்போது தெரிந்து விட்டது. அது விநாயகம்.

ஏலம் க்யூரிங் செய்கிற விநாயகம். மதுரைக்கும் எஸ்டேட்டுக்கும் வாரத்துக்கு மூணு முறையாவது போவது அவன் வழக்கம். தரையிலிருப்பவர்கள் மலைக்கு வருவது இல்லை. மலையிலிருக்கிறவர்கள் தரைக்குப் போக மாட்டார்கள். விநாயகம் இரண்டு பக்கமும் நேசமில்லாமல் இருந்தான், எப்போதும் பயணப்படுவதிலேயே ஆர்வம் காட்டிக் கொண்டிருந் தான்.

"மகனே... உன்னை இடிச்சு சாவடிச்சுடப் போறேன்" வண்டி வேகத்தை கதிரேசன் குறைக்கவே

யில்லை. வண்டி வெகு அருகே வந்து விநாயகம் துள்ளி விலகியபோது வண்டிக்குள் சொர்ணலட்சுமி உட்கார்ந்திருப்பதைப் பார்த்தான்.

"அறிவிருக்கா உனக்கு...வண்டி வர்றது தெரியலை..." அவன் செத்துப்போய் விடுவானோ என்கிற பதட்டத்தில் தப்பித்து விட்டான் என்கிற நிம்மதியில் தனக்கு வந்த கோபத்தை வசை மொழியாக மாற்றினாள். விநாயகம் திகைப்புற்றவனாக வண்டியையே பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண் பஸ்ஸில் வந்தவள் என்பது ஞாபகம் வந்தது. செட்டியார் வண்டியில் சட்டமாய் உட்கார்ந்து இருபத்தேழு வருஷம் வேலை செய்த தன்னை அவள் கைவீசிப் பேசியது பிடிக்கவில்லை. எஸ்டேட்டில் கால் பதிக்கும் முன் சொர்ணலட்சுமி ஒரு விரோதத்தை சம்பாதித்துக் கொண்டாள்.

விநாயகம் குடையோடு கதிரேசனை நோக்கி ஓடினான். பெண்ணால் பள்ளத்தில் சறுக்கிவிடப்பட்டபோது வராத கோபம் ஒரு வயசாளி, படிப்பில்லாதவன் மேலேறும் காரை விவரமில்லாமல் மடக்கியபோது அதீதமாய் வந்தது. முதல் முதலாய் எஸ்டேட் பொறுப்பை ஏற்கலாம் என்று வருகிறபோது இடறுவதுபோல் ஒரு பைத்தியக்காரன் வந்து விட்டான். நல்லவேளை இடறவில்லை. இடறியிருந்தால் அச்சானியமாய் இருந்திருக்கும். சொர்ணலட்சுமி விரட்டிவிட்டாள். கதிரேசனுக்கு சொர்ண லட்சுமியிடம் சிறிதான நன்றியும் விநாயகத்தின்மீது பெரிதான கோபமும் ஏற்பட்டன.

ஐயா...குடை... ஐயா... குடை" முற்றிலும் நனைந்து போய் சேறாய் இருந்த கதிரேசனுக்கு விநாயகம் குடை நீட்டினான்.

அந்தக் குடையை கதிரேசன் பிடுங்கினான் வீசி சரிவில் எறிந்தான்.

"சொர்ணலட்சுமி வா."

அவளோடு எஸ்டேட் கட்டடத்திற்குள் நுழைந்தான்.

இரண்டு பெரிய டர்க்கி டவல்களோடு பகவதி வராண்டாவுக்கு வந்தாள். அவர்களிட்ம் நீட்டினாள். வா...வா...என்று இரண்டு பேரையும் கூப்பிட்டாள், ஏலக்காய் போட்டு வைக்கும் கோணகளைத் தரையில் பரப்பி கதிரேசனை அறைக்குள் அனுப்பினாள். நாச்சியப்பச் செட்டியாரின் வேட்டியும், மடித்த மேல் அங்க வஸ்திரத்தையும் கட்டிலில் வைத்து அறைக் கதவை சாத்தினாள். சொர்ணலட்சுமியிடம் ஓடிவந்தாள்.

"இத்தினி மழையா இருக்கே எங்க மாட்டினியோ...எப்படி வருவியோன்னு கவலைப்பட்டுக் கிட்டே இருந்தேன்டி. கதிரேசு வண்டிலயே நல்லபடியா வந்துட்ட."

சொர்ணலட்சுமிக்கு இளமையும் பூரிப்புமாய் இருந்த இருபது வயசு பகவதி ஞாபகத்துக்கு வந்தாள்.

ஆனால் இப்போது இந்த முகத்தில் அந்த சுவடே இல்லை. வாழ்க்கை துக்கத்தில் அடிபட்டு கன்றி கறுத்துப் போன முகம்தான் இருந்தது.

"பகவதி அக்கா..."ஏக்கத்தோடு சொர்ணலட்சுமி கை நீட்டினாள். அவர்கள் அணைத்துக் கொண்டார்கள். பகவதியிள் கழுத்தை. தோளை, :முதுகை, இடுப்பை சொர்ணலட்சுமி வருடிக் கொடுத்தாள். இத்தனையும் வீணா என்கிற துக்கம் அதில் இருந்தது. பகவதி முகம் திருப்பிக் கொண்டாள், வீணா போனா போட்டும் போடி, என்கிற அலுப்பு அந்த முகம் திருப்பலில் இருந்

தது. பகவதியின் கையை எடுத்து தன் மடியில் சொர்ண லட்சுமி வைத்துக் கொண்டாள், இடது கையை அவள் உடம்பில் சுற்றிப் போட்டு கன்னத்தில் முத்தமிட்டாள்,

பேசாது தங்களைப் பெண்கள் பரிமாறிக் கொள்கை யில் வேட்டியும் வெறும் மாருமாய் கதிரேசன் வந்து நின்றான்.

"எனக்கு பசிக்குதும்மா" என்று சொன்னபடியே தலை துவட்டினான்.

"மறந்தே போனோம் பார்' பகவதி சொர்ண லட்சுமியை உதறிவிட்டு ஓடினாள். சற்று முன் பகவதி யிடம் காட்டிய ஆதரவை மறந்து விட்டு. கதிரேசன் என்கிற ஆணின் ரோமம் அடர்ந்த மார்பை சொர்ண லட்சுமி பார்க்கத் துவங்கினாள்.

"அம்மா—சொர்ணலட்சுமிக்கும் அப்படியே சாப் பாடு வைங்க. அதுவும் வழியெல்லாம் பசி பசின்னு சொல் லிட்டு வந்துச்சு ஏன் தரைல உக்கார்ந்துட்டு...இங்க உக்காரு."

சொர்ணலட்சுமிக்கு நாற்காலியைக் காட்டினான், குடையோடு வாசலில் நின்ற விநாயகத்துக்கு இந்த உபசரிப்பு பிடிக்கவில்லை.

"அடுத்தவாட்டி மதுரை போனா சொல்லிடணும் அந்த நாகர் கோயில்காரி ஒரு சொந்தக்காரக்குட்டிய இட்டாந்துட்டா தனக்கு துணையா வேணும்னு கதிரே சனுக்கு இணையாக ஒரு பார்ட்டி கொண்ணாந்துட்டா. இனி எஸ்டேட் விட்டு யார் சொன்னாலும் கதிரேசு அசையமாட்டான். கதிரேசு பேரைச் சொல்லி அவளுங்க வெண்ணமா துன்னுவாளுங்க. செட்டியார் சொத்து அந்தக் குடும்பத்துக்குத்தான்...பரம்பரை பரம்பரையா நம்ம வளமுறை இப்படித்தான். நீங்க மதுரைல உக்காந்து

கத்திக்கிட்டு கிடங்க என்று கோள்மூட்டி விட வேண்டும்.'

'இத்தோடு இன்னொன்றும் சொல்லவேண்டும் இந்த வாட்டி பிற்பகல் நல்ல மழை. முற்பகல் நல்ல வெயில், ஒரு வள்ளிக்கோடில நாப்பது பழம் நிக்கும். ஒரு செடில உள்ளங்கை காய் எடுக்க முடியும். நம்ம எஸ்டேட்ல ஒரு வாரத்துக்கு நானூறு கிலோ சுலபமா அறுக்கலாம். ஏலக்கா முன்ன மாதிரி இல்லீங்க. பட்டணத்துல ஒரு ரூபாய்க்கு நாலு ஏலக்கா தரான். தங்கப் புதையல மலைல விட்டுப்போட்டு மதுரைல கள்ளழகர் ஊர்வலம் பாத்துக்கிட்டிருக்கீங்க. நல்லவா இருக்கு...தூண்டி விட வேண்டும்.

விநாயகம் பொருமினான்.

இது ஒரு புத்தி. எப்போதும் எதையும் கடித்துக் குதறிக் கொண்டிருக்கிற புத்தி. இடைஉறாது கடித்துக் குதற. வாய் ஊறல் போல ஒரு மன ஊறல் இவர்களுக்கு இருக்கும். இப்படிப்பட்டவர்களை சந்தித்துத் தான் ஆக வேண்டும்

14

வானம் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு மேகங்களை வேறு திசைக்குத் திருப்பி வெளிச்சமான போது. சொர்ணலட்சுமியும் கதிரேசனும் மீண்டும் ஒரு முறை பார்த்துக் கொண்டார்கள். பிரச்னைகள் இல்லாத முகத்தோடு, சுத்தமான முகத்தோடு எதிரும் புதிருமாய் நாற்காலியில் அமர்ந்து கொண்டார்கள்.

"என்னைச் மன்னிச்சிடணும்."

"எதுக்கு?"

"நான் பாட்டுக்கு டிரைவர்னு நினைச்சிட்டு ஏதேதோ பேசிட்டேன். அக்கா துண்டு நீட்டினப்பதான் தெரிஞ்சிச்சு. அடடா...தப்பு பண்ணிட்டோம்னு அப்ப வாவது சும்மா இருந்திருக்கலாம். இவ்வளவு நல்ல துண்டை எதுக்கு டிரைவர்க்கு குடுக்றே'ன்னு அக்கா கிட்ட கேட்டேன். அக்கா 'யாருடி டிரைவர்'னு கத்திட் டாங்க. உருண்டு பொறண்டதெல்லாம் சொல்லலை தயவு செஞ்சு நீங்களும் சொல்ல வேண்டாம்."

கதிரேசன் மெல்ல சிரித்தான்.

உருண்டு புரண்டதைச் சொல்ல வேண்டாம் என்று கெஞ்சுகிற போதே அதைக் கதை போலச் சின்னம்மா விடம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது.

"ஏன் சின்னம்மா...நீ பெரிய கேங் லீடராம். உனக் குக் கீழே பத்து இருபது பொண்ணுங்க இருக்குமாம். எல்லாருக்கும் கறி குழம்பு வைக்கிறது சொல்லி தருவி யாம். உங்கிட்ட தயாரான பொண்ணுங்க எங்க போனாலும் கொடி கட்டிப் பறக்குமாம்"—கேட்க ஆசை வந்தது. கேலி செய்ய முனைப்பு வந்தது. ஆனால் பக வதி மெல்ல முகம் பொத்திக் கேவ ஆரம்பித்ததும் சட் டென்று விழித்துக் கொண்டான்.

"துக்கம் கேக்க வேணாமா? சரசரன்னு வந்து சர சரன்னு ஓடிப் போயிட்டாங்க. இவங்களும் அப்பா வோட வாழ்ந்தவங்கதானே. பேசிச் சிரிச்சு, படுத்து வாழ்ந்து...அம்மாவோட துக்கம் அப்படியே இருக்கு மில்ல. நான் போய் இந்தப் பொண்ணோட சிரிச்சுட்டு உட்காந்திருக்கேனே...

சட்டென்று எழுந்து கொண்டான். கதவுக்குப் பின்னே பகவதி சுவரில் சாய்ந்து கொண்டிருக்க அவன் நிலைப்படியைப் பிடித்து நின்றான்.

''சின்னம்மா...',என்று தழுதழுத்த குரலில் அழைத்தான்.

''இந்த ஜென்மத்துக்கு இது போதும்டா சாமி...நீ வாய்த் திறந்து சின்னம்மான்னு கூப்பிட்டா போறும். இன்னும் பல ஜென்மத்துக்கு உங்க குடும்பத்துக்கு உழைச்சுப் போடுவேன.''

''அட...என்னது...என்னென்னவோ பேசிக்கிட்டு... எங்க அம்மா உங்கபேர்ல எவ்வளவு பிரியமா இருக்காங்க. உங்களை யாரும் ஒரு வார்த்தைகூட சொல்லிடக் கூடாதுங்கறதுல எத்தனை கவனமா இருக்காங்க. இப்பவும் கூட ஒரு வார்த்தை சொல்லி அனுப்பிச்சாங்க. அழுத கண்ணும் சிந்தின மூக்குமா இருக்க வேணாம். உடம்பைப் பார்த்துக்கச் சொல்லு. எப்ப காசு வேணும்னாலும் கேக்கச் சொல்லு. வெளிய எங்கயும் கடன் வாங்க வேண்டாம்னு சொல்லச் சொன்னாங்க. இது தவிர தனியா உங்களாண்டை பேசறதுக்கு விஷயம் இருக்கு.''

அவன் திரும்பி சொர்ணலட்சுமியைப் பார்த்தான்.

''உன் கையால அப்பா படத்துக்குக் கற்பூரத் தட்டைக் காமிச்சுட்டு சாப்பிட உட்கார். பேசறதை நாளைக்குப் பேசிக்கலாம்.''

இரண்டடிக்கு ஒரு அடியில் அப்பாவின் முழங்கால் வரையிலான போட்டோ சட்டமிடப்பட்டிருந்தது. அந்த போட்டோவில் பகவதியை அணைத்தபடி அவர் நின்றிருக்க வேண்டும். பகவதியை எடுத்துவிட்டு அங்கே ஒரு உயரமான ஸ்டூலை வரைந்திருந்தார்கள். ஸ்டூல்கள் மீது புத்தகங்கள் அடுக்கி வைத்தது போல் வரையப்பட்டிருந்தது. பகவதியின் தோள்மீது கை வைத்துக் கொண்டிருந்த சந்தோஷம் முகத்தில் தெரிந்தது.

அருமையான சிரிப்பு. கால் அகட்டிய அட்டகாச மான போஸ் அது,

கதிரேசன் கற்பூரம் காட்டினான். வாழைப்பழம், வெற்றிலையைச் சுற்றித் தண்ணீரைத் தெளித்து அப்பா வுக்கு நைவேத்தியம் செய்தான்.

பகவதி விழுந்து கும்பிட்டாள். சொர்ணலட்சுமி யையும் விழுந்து கும்பிடச் சொன்னாள். "சொர்ண லட்சுமி ரெண்டுங்கெட்டான் நான் நிறைய பொண் ணுங்களுக்கு நிறைய விஷயங்கள் சொல்லிக் கொடுத்திருக் கிறது வாஸ்தவம்தான். இதுல ஒண்ணும் கத்துக்காத வெறுமன ஒட்டிட்டுத் திரிஞ்சவ சொர்ணலட்சுமி அப்பவே வலுவான பொண்ணு, இப்ப வளர்ந்து இன் னும் வலுவாயிட்டா. அவ பேசினது பெரிசு பண்ண வேணாம்."

"அடட தப்பாவே ஒண்ணும் பேசலியே...மாடு மேய்ட்டறவனா நீ?"ன்னு கேட்டா. பள்ளத்துல உருண்டு விழுந்தவங்க எல்லாரும் கேக்கறதுதானே"

"பள்ளமா? எந்த பள்ளம்?'

"ஆனைப்புல்லு மண்டிக் கிடக்கே...அங்கதான் சறுக் கிட்டம்."

"ஐயோ எப்படி?"

"கார் கதவுல முட்டினாங்க, கதவு பிளந்துக்குச்சு. நேரே நாப்பதடி போயிட்டாங்க."

"ஐயோ அப்புறம்?"

'பழக்கமில்லாதவங்க மேல வரமுடியுமா? நானும் இறங்கினேன். மொள்ள மொள்ள மேல வந்தோம்."

"இவளையும் தூக்கிட்டா மேல வந்தே?"

"தூக்கறதெல்லாம் இல்லை. மாட்டுக்குப் பின்னால உருளை கட்டி ரோடு போட இழுப்பாங்களே அந்த மாதிரி இழுத்தாந்தேன்."

"என்னா கூத்துடி இது? படாத இடத்துல பட்டிருந்தா என்ன ஆயிருக்கும்?"

சொர்ணலட்சுமி மிரண்டாள்.

சொல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட மூன்றாவது நிமிடம் சகலமும் சொல்லி விட்டானே என்று புழுங்கினாள்.

"இவரு உலுக்கி உலுக்கி வண்டி ஓட்டினாரு. நான் கதவுல போய் இடிச்சுக்கிட்டேன். கதவு டபக்குன்னு திறந்துக்கிச்சு. கீழ விழுந்ததுதான் தெரியும். நைலக்ஸ் புடைவையா...ரொம்ப தூரம் போய்தான் நின்னேன்."

பகவதி அவளைக் கவனிக்கவேயில்லை. "எங்கனா அடிபட்டுதா கதிரேசா?".

அவன் பக்கம் திரும்பினாள். தலையை அழுத்தி முதுகு தடவினாள்.

"எனக்கு ஒண்ணுமில்ல சின்னம்மா. சொர்ணலட்சுமிதான் தடுமாறி வுழுந்துருச்சு. நான் எப்படி கேக்கறதுன்னு தயங்கி. பேசாத விட்டுட்டேன். எங்கனா அடிபட்டிருக்கா கேளு."

"என்னடி?" பகவதி திரும்ப.

"இடுப்பில் லேசாய் வலி இருக்கிறது" என்று சொர்ணலட்சுமி சொன்னாள்?

"ராத்திரி தைலம் தேய்ச்சு விடறேன். கதவு தொறக்கும் படியாவா கார்ல இடிப்பாங்க. மலைப் பாதைல

எறும்போது வண்டி அலைபாயும்தான். உறுதியா உக்கார மாட்டாமா? உன் உடுப்பெல்லாம் எங்க?''

''வண்டிலயே இருக்கு.''

''போ. போய் எடுத்தா.''

''என் பொட்டி கூட இருக்கு'' கதிரேசன் எழுந்தான்.

''இரு. இரு. நீ எதுக்குப் போற? விநாயகம் ஐயா பொட்டிய எடுத்தா. அதத் தவிர உள்ள ரெண்டு பேக் இருக்கு' அதையும் எடுத்தா.''

குடையோடு வீட்டின் வலப்பக்க வராந்தாவில் உட்கார்ந்திருந்தவன் சரட்டென்று எழுந்து நின்றான். உள்ளே சென்று கார் சாவி வாங்கிக் கொண்டான்.

''வேறென்னவோ முக்கியமா சொல்லணும்னியே.'' பாகவதி கதிரேசனை விசாரிப்பதைக் குறித்துக் கொண்டான்.

வாங்க... அந்தப் பக்கம் போயிடுவோம்.'' கதிரேசன் வீட்டின் வேறு பக்கத்துக்கு நகர்வதைக் குறித்துக் கொண்டான்.

டிக்கியைத் திறந்து பெட்டியை எடுத்தான். எடுக்கும் போது திறக்க முடியுமா என்று பார்த்தான்.

பெட்டியைத் திறக்க முடியவில்லை. பெட்டியைத் தலையில் வைத்துக் கொண்டு வீடு நோக்கி நடந்தான். பாகவதியைத் தேடினான். வேறு அறையில் அவர்கள் கூடி தாண்டி உள்ளே அறையிலே இறக்கி வைத்தான். பாட்டுக் குரல் கேட்பது கேட்டு அறை வாசலில் போய் நின்றான்.

"நல்லா சொல்லித் தரேன். ஒவ்வொரு சூட்சுமமும் சொல்லித் தரேன் ஆனா இங்க இருக்கறவங்க கிட்ட எஸ்டேட் வேலை கத்துக்க வந்திருக்கேன்னு மறந்து போயும் சொல்லிடாதே. எல்லாம் தெரியும்கற மாதிரியே இரு. யார் அங்க?"

"நான் தாம்மா."

"என்ன வேணும்?"

"ஐயா பொட்டி வச்சிட்டேன். வேறெதோ ரெண்டு பை சொன்னீங்களே."

"ரெண்டு பை வண்டி பின் சீட்ல இருக்கு... சொர்ண லட்சுமியிது" கதிரேசன் கட்டளையிட, விநாயகம் மெல்ல நகர்ந்தான்.

கதவு திறந்து, ஜிப் வைக்கப்பட்ட பையைத் திறந்து பார்த்தான். துணிமணிகள் தெரிந்தன. முகர்ந்து பார்த்தான். சோப்பு வாசனை அடித்தது. விநாயகத்திற்கு அந்தப் பையிலிருந்து ஏதாவது திருட வேண்டுமென்று தோன்றவில்லை. ஆனால் திறந்து அதில் இருக்கிறது என்ன என்று பார்க்க வேண்டும் என்று தோன்றியது. மறுபடி மூடினான். பையைத் தூக்கியபடி அறைவாசலில் நின்றான்.

"எதுக்கு பன்னிரண்டரை லட்சம்? பன்னிரண்டரை லட்சம் கொடுக்கும்படியா அவ்வளவு பெரிய வியாபாரம் இங்க என்ன இருக்கு? செட்டியார் புள்ளை தனிச்சு வியாபாரம் பண்ணனும். அது நல்ல விஷயம்தான். ஆனா நீயும் ஏன் ஏலக்காய்ல இறங்கற? நாப்பது ஏக்கர் ஏலக்கா இருக்கு. அப்பா சொத்து. நீ வேறு எதுனா செய்."

"வேறென்ன செய்றது. நமக்குத் தெரிஞ்ச தொழில் ஏலக்காயில்ல... '

இறங்கினதும் தானா தெரிஞ்சி போயிடும். இதே பயிரத்துக்கு இன்னொரு பொருள் வரும். காப்பி இந்தப் பக்கம் ரொம்ப நல்லா வருது. பாடு கம்மி. பாடு கம்மின்றதுனாலேயே அக்கறையில்லாம வளர்க்கறாங்க. அதுன்னு காப்பில இறங்கிட வேணாம். முதல்ல பயிர் பற்றி விசாரிப்போம், என்ன ரகம் என்ன விலைக்குப் போகுதுன்னு பார்ப்போம். அதற்குப் பிறகு எஸ்டேட் யாருதான்னு கேப்போம். காப்பி வாங்கறமாதிரி யாருக்கும் சொல்லாத...யாரது?'' மறுபடி வாசல் பார்த்து வினவினாள். விநாயகம் என்று தெரிந்ததும் முகம் சுளித்தாள்.

''வந்து நின்னா குரல் குடு. திருடன் மாதிரி சத்தமில்லாம நிக்காத...''

''சரிம்மா...இது யாருது. ஐயாவுதா? உங்க தங்கச்சியுதா...'' எதுவுமே தெரியாதவன் போல் வினவினான்.

''சொர்ணலட்சுமி உங்க தங்கச்சியா?'' கதிரேசன் இடையில் புகுந்தான்.

''பொதுவா அக்கான்னு கூப்புடுது. அவ என் தம்பி பொண்டாட்டிக்குச் சொந்தம்.''

''ஒண்ணு விட்ட தங்கச்சின்னு பஸ்ஸுல சொல்லுச்சே?'' விநாயகம் மிகுந்த ஆச்சரியத்தோடு பேசுவது போல் நடித்தான்.

''உங்கிட்டயா சொல்லுச்சு?''

''என்கிட்ட சொல்லலை, முன் சீட்ல உக்காந்து டிரைவர், கண்டக்டர்கிட்ட பேசிட்டு வந்துச்சு. அப்ப கேட்டேன்,''

''டிரைவர் கண்டக்டர் கிட்டயா? முன்சீட்ல உக்காந்துக்கிட்டா...?'' கதிரேசன் வருகைக்குச் சந்தோஷப்பட

பகவதி, சொர்ணலட்சுமி நுழைந்தவுடனே பிரச்னைகள் வருவதைப் பற்றிக் கவலைப்பட்டாள். "போ...போய் உன் வேலையைக் கவனி" விநாயகத்திடம் சீறினாள்.

"இந்தாள் மடையனாச்சே சின்னம்மா."

"இல்லியே... வேலைல ரொம்ப கெட்டிக்காரன். ஏலக்கா சூடு பண்ணி சுருக்கணும். நேரம் தெரிஞ்சு ஆற போடணும். பாதி சூட்ல கம்பி வலைல தேய்க்கணும். தூசு எடுக்கணும். கூட ஒரு ஆளை வச்சுக்கினு மட மடன்னு முடிப்பான்."

"இவன் ரொம்ப அவசியமா நமக்கு?"

"அப்பனே...என்ன கேக்கற...?"

"இவனைக் கண்டால் எனக்குப் புடிக்கலை. ஒரு திருட்டு முழி."

"மலைலயே பொறந்து மலைலயே வளர்ந்தவன். நாகரீகம் தெரியாது. மலங்க மலங்க முழிப்பான். மக்கு மாதிரி பேசுவான். மத்தபடி கெட்ட புத்தி கிடையாது. உங்கப்பா மதுரைக்குப் போயிட்டா மாசக்கணக்கா இவன்தான் எனக்குக் காவல் தெரியுமா?"

சொர்ணலட்சுமியை பகவதி உரக்க அழைத்து, தட்டு வைத்தாள். சொர்ணலட்சுமிக்கும், கதிரேசனுக்கும் சுடச்சுட சோறு பரிமாறினாள். "அஞ்சு அஞ்சரைக்கு இருட்டிடும்- கொஞ்ச நேரம் உக்காந்து ரேடியோ கேட் டுட்டுப் படுத்து தூங்குங்க, காலைல நாலு மணிக்கு எழுப்பறேன்."

திணறத் திணறச் சாப்பிட்டுவிட்டு டிரான்சிஸ்டர் ரேடியோவை வாசற்படியில் வைத்து சினிமா பாட்டு கேட்டபடியே உட்கார்ந்து கொண்டிருக்க, இருட்டு மெல்ல கவிந்தது. தரையில் ஈரத்தைக் காற்று உதற

மெல்ல குளிர் கௌவத் துவங்கியது. நூறுவாட்ஸ் பல்புகள், இருபத்தைந்து வாட்ஸ் பல்புகள் போல சிணுங்கி, சாம்பலாய் எரிந்தன.

''மலைல அப்பப்ப வோல்டேஜ் ட்ராப் வந்துரும். பாத்திரி பன்னிரண்டு மணிக்கு மேலதான் பளிச்சுன்னு பரியும்.''

பூச்சிகள் ரீங்காரம் அதிகரித்தது. இரண்டு மூன்று பூச்சிகள் முகத்தைத் தாக்கின. எங்கேயோ தமுக்கு ஓசை கேட்டது.

கண்ணாடி கதவுகளைச் சார்த்தி விட்டு அறைக்குள் அடைந்து கொண்டார்கள். மணி ஏழுபத்து. மதுரை இப்போதுதான் உச்ச வேகத்துக்குத் தன்னைத் தயார்ப் படுத்திக் கொள்ளும் நேரம். இங்கு எல்லாம் முடிந்து தூங்கப் போயாகி விட்டது. எதாவது படிக்கலாமா... வாரப் பத்திரிகை பிரித்துப் படிக்க, பத்து வரிகளுக்கு மேல் மனம் போகவில்லை. நடு இரவில் பசித்தால்என்ன செய்வது? சின்னம்மாவிடம் பிஸ்கட் பழம் இருக்கிறதா என்று கேட்க அறையை விட்டு வெளியே வந்தான். சமையற்கட்டில் எட்டிப் பார்த்தான். சொர்ணலட்சுமி அவனுக்கு முதுகு காட்டி நின்று கொண்டிருந்தாள். அந்த முதுகில் மூன்று இலைகள் ஒட்டப்பட்டிருந்தன. நான்காவது இலைக்கு எண்ணெய் தடவி சின்னம்மா வாட்டிக் கொண்டிருந்தாள். கதிரேசன் பின்னடைந்தான். தலைகுனிந்து கொண்டான்.

கதிரேசன் பாம்புமாதிரி அறைக்குள் போனான். பாம்பு மாதிரி மூச்சு விட்டான். டிரான்சிஸ்டர் ரேடியோ 'கட்டித் தங்கம் வெட்டி எடுத்து' என்று கத்தி பாடிக்கொண்டிருந்தது. 'காதலென்னும் சாறு பிழிந்து' என்று தொடர்ந்து பாடியது. அந்தப் பாட்டிலிருந்தது காதலா காமமா என்று கதிரேசனுக்குத் தெரியவில்லை.

"வருவாயா வேல்முருகா என் மாளிகை வாசலுக்கே அடுத்த பாட்டு தொடர்ந்தது.

'எவ்வளவு பெரிய மாளிகை...' சொர்ணலட்சுமியை நினைத்துக் கொண்டு கதிரேசன் தனக்குத்தானே பேசினான்.

15

'நாச்சியப்பச் செட்டியார் எஸ்டேட்ல காப்பித் தோட்டம் வாங்கப் போறார். உனக்கெதுனா காப்பித் தோட்டம் தெரிஞ்சா எங்கிட்டச் சொல்லு. விலை படிஞ்சா பார்ட்டி துட்டு கீழ வெச்சுரும். விக்கினம்னு அலையறவன்கிட்ட என்ன கூட்டினுபோ. வாங்கினம்னு அலையறவன் கிட்ட நா கூட்டிட்டு போறேன். நடுவுல எதுனா கெடச்சா நாமளும் சாப்பிடலாம்.''

''ஏலத் தோட்டத்தில் வேலை செய்யும் விநாயகம் காப்பித் தோட்டத்தில் வேலை செய்பவனிடம் சொன்னான்.''

''அப்ப அவங்க ஏலத் தோட்டம் விக்கற மாதிரி இல்லையா?''

''ஏன் விக்கணும்?''

''அது இல்ல நாச்சியப்பன் போனவுடனே எஸ்டேட் போய்டும்னு நினைச்சேன்.''

''அதுக்கு வேற எடம் பார். அந்த பொம்பள பகவதி இருக்கிற வரைக்கும் ஒரு ஏலப்பழம் கூட எஸ்டேட் விட்டுபோகாது. நாச்சியப்பச் செட்டியாரா எஸ்டேட் நடத்துனாரு? அந்த நாகர்கோயில் பொம்

பளயில்ல நடத்துனா கொஞ்ச நஞ்ச சாமர்த்தியமா அந்தம்மா கிழிச்சக் கோட்ட செட்டியார் என்னிக்கா வது தாண்டியிருக்காரா? செட்டியாரோட மட்டும் நின் னுச்சா அந்த பொம்பள. செட்டியார் பொண்டாட்டி மேலல்ல பிடிமானம் வெச்சுது. நேத்து சாயந்தரம் புள்ள லந்துட்டான். செட்டியாரோட சொந்த புள்ள. மூத்த மகன். ஏலக்கா பத்தி சொல்லிக் குடுங்க சின்னம்மானு கேக்கறான். அந்தப் பொம்பள முதல் பாடம் ஆரம்பிச் சுது பாருங்க, அசந்துட்டேன். 'ஏலக்காவப் பத்தி எல் லாம் சொல்லித் தர்றேன். ஆனா எங்கிட்ட பாடம் கேக் கிறதையும் உனக்கு ஒண்ணும் தெரியாதுன்றதையும் யார் கிட்டயும் சொல்லாத. தெரிஞ்சா மாதிரியே நடந்துக்க. அது உனக்கு ரொம்ப நல்லது. 'எப்படியிருக்கு முதல் பாடம்? இப்படிக் சொல்லித் தர உங்களுக்குத் தெரியுமா? ஏலக்காவ என்ன பண்றதுன்னு தெரியாம இருந்தது. அந்தக் காலம். இன்னிக்கு அரபு தேசத்துல மூல போட்டு ஏலக்கா சாப்பிட ஆரம்பிச்சானோ அன்னிக்கு இந்த மலைக்கு மவுசு வந்திருச்சு. இப்ப அமெரிக்காலயும், ஏலக்கா எதெதுலயோ போட ஆரம்பிக்கறாங்க. பேக்கரி ஜாய்ட்டத்துல ஏலக்காய் போட்டு ஜனங்களுக்கு புடிச்சுப் போச்சு, அப்புறம் ஏலக்கா தங்கம் விலதான்.''

போடிமெட்டு தாண்டி, கேரளம் என்று தெளிவாக அறிவிக்கப்பட்ட பகுதியில் அந்த மார்க்கெட் பகுதி இருந் தது. நாற்பது கடைகளும், அகலமான நடைபாதையும் உள்ள பகுதி அது. நாலுபக்கமும் மலைகள் சூழ்ந்திருக் கும். சிறிய பள்ளத்தாக்கு அது. ஏலக்காய் உற்பத்தி செய்வோர் சங்கம், ஏலக்காய் தரகு வியாபாரிகள் சங்கம், ஏலத்தோட்ட கூலித்தொழிலாளர்கள் சங்கம், லாரி கிளீனர்கள் சங்கம் என்று பல்வேறு பலகைகளும், கொடி களும், அந்தப் பகுதிக்கு ஒரு புதிய விழிப்புணர்வைக் கொடுத்துக் கொண்டிருந்தன. கடந்த ஐந்தாண்டு

களாகத்தான், ஏலக்காய்களுக்கும், இந்த சங்கங்களுக்கும் ஒரு மரியாதை இருந்தது.

காப்பியின் மரியாதை ஏலக்காயால் கெட்டுப் போக வில்லை. பிரேசில் என்ற தேசத்தால் கெட்டது. பிரேசி லில் காப்பித் தோட்டத்தை ஒரு கலாசாரம் போல் பாது காத்து வந்தார்கள். ஒரு மொழியைப் போல் மரியாதை கொடுத்தார்கள். காப்பிப் பயிரில் பல முன்னேற்றங்கள் செய்து காப்பி குடிப்பதை தன் தரத்தினாலேயே உலக மெங்கும் பிரேசில் பரப்பியது. போடிமெட்டு காப்பிப் பயிரில் தரம் பிரேசில் காப்பிக்கொட்டையின் அருகாமை யில் கூட இல்லை.

விளைச்சலும் கம்மி. தரமும் மட்டமென்பதால் கேரளத்துக் காப்பிக் கொட்டைகள் உள்ளூரிலேயே முட்டிக் கொண்டிருந்தன. காப்பித் தோட்டத்திற்கு மிகப்பெரிய சாகுபடிச் செலவு இல்லை. போட்ட உடனே பலன் கொடுக்கும் பயிர் என்றும் சொல்ல முடி யாது. பூச்சிகள் தொந்தரவு அதிகமிருந்தது. சிரமப் பட்டு விளைச்சலை அதிகமாக்கினால் விலை போன வரு டத்தை விடபத்து சதவீதமாவது குறைவாயிற்று. கையை கடிக்கிற பயிராகவே, நட்டுட்டோம், வெட்ட வேணாம்' என்கிற பயிராகவே காப்பி இருந்தது.

'காப்பி எஸ்டேட் வாங்குற அளவுக்கு நாச்சியப்பச் செட்டியார் எஸ்டேட்ல லாபமா? இருக்கும். ரெண்டு மூணு வருஷமா நல்ல மழை. நேரத்துக்கு மருந்தடிச்சு, நேரத்துக்கு உரம் போட்டு, செடிய கொழுக்க வெச்சுருப் பாரு. அடுத்ததடவ, தொழிலாளிப் பிரச்னை ஏதாவது வந்தா சமாதானம் பண்ண பெரிய காசு வாங்கிடணும்.' யூனியனில் மாஷே என்றழைக்கப்படும் மாஸ்டருன் கணக்கு ஓடியது.

'காப்பித் தோட்டம் வாங்குறதாயிருந்தா, காப்பித் தோட்டத்தில் வேலை செய்யுற தொழிலாளியோட வாங்கணும். தொழிலாளி இல்லாத தோட்டம் விலைக்கு வராது. அந்தத் தொழிலாளிக்கு ஏலக்கா தோட்டத்துச் சம்பளம் தரணும். நீ வாங்குற எடத்து மொதலாளி, சம்பளப்பாக்கி வெச்சுருந்தா, அதையும் நீதான் தரணும். இந்த மாஷேக்குத் தெரியாம, இந்த மலைல ஒரு கல்லு கூடப்புரளாது. ஒரு காய் கூட நகராது.'

விலை பேசிவிட்டுத் திரும்பும்போது சொல்லி விட வேண்டும்.

''காப்பித் தோட்டமா? விலைக்குக் கேக்கறாங்களா? செய்யேன். ஒருரூபாய்க்கு ஒருபைசா கமிஷன் தர்றேம்பா. எப்படியாவது பார்ட்டிய எடுத்துட்டு வாயேன். மூணு ரூம் வச்ச கல்லு வீடு இருக்கு. இதுக்கு துட்டு தர வேணாம். எஸ்டேட் வாங்குறபோது இத சும்மா எடுத்துக்கட்டும். எப்படியாவது பார்ட்டியக் கொண்டாப்பா. இந்தக் காப்பித் தோட்டம் வாங்கினதுக்கு பத்து, நூறு கழுதை வாங்கியிருந்தாக்கூட உபயோகமா இருந்துருக்கும்.''

''காப்பித் தோட்டத்தை கருமமென்று நினைத்தவன் விநாயகத்திடம் கதறினான்.

''முள்ளுமில்ல. பல்லுமில்ல. முள்ளம்பன்னி, முள்ளம்பன்னினு சொல்லி, உங்களவெளியக் கொணாந்து நீங்க வந்ததும், உங்களக் குப்புறத் தள்ளிவிட்டு கொன்னுட ஏற்பாடு பண்ணாங்க.கடவுள் கிருபையால அப்படி ஒண்ணும் நடக்கல. உங்கமேல வெடி எறிஞ்சாக. எறிஞ்சது எனக்குத் தெரியும். முதல்நாள் பெஞ்ச மழைல, பூமி சேறா இருந்ததுல, பொத்துனு சேத்துல விழுந்து, வெடி செத்துப் போச்சு. வெடிச்சிருந்தது, நீங்க செத்துப் போயிருப்பீங்க,இப்பவும், எதுக்கு மதுரைக்கு வந்தன்னா

அவங்த ஏலத்தோட்டத்தை அடமானம் வெச்சி. காப்பித் தோட்டம் வாங்கப் போறாக, மலைல இடுகாடும் ஒண்ணுதான். காப்பித் தோட்டமும் ஒண்ணுதான். அந்தப் பொம்பள, சின்னப் பையன் ஏமாத்துது. ஒரு ஏக்கர் தோட்டத்த தொண்ணூத்தொம்பது வருஷக் குத்தகைக்கு ரூவா பத்தாயிரத்துக்கே ஏன் வாங்கணும்? ஏழை சொல்லு அம்பலம் ஏறாது. காப்பித் தோட்டம் வாணாம்னு கதிரேசனுக்குப் புத்தி சொல்லுங்க. விலை கூடுதலா இருந்தாலும் ஏலத்தோட்டம் ஒண்ணு வாங்கிப் போடச் சொல்லுங்க. நீங்க ஆள வேண்டிய ஏலத்தோட்டம் அந்தப் பொம்பள ஆண்டுக்கிட்டு இருக்கு.''

''முட்டாப்பொம்பள மகனே. வெறுமன பேசி என் வயித்தெரிச்சலக் கொட்டிக்காத. தோட்டத்தை எப்படி அவகிட்டருந்து புடுங்கலாம்னு சொல்லு.''

அந்தச் செட்டியார் விநாயகத்தின் கூக்குரலுக்குக் கோபமாய் பேசினார்

''வழக்கமா மத்தவங்க பண்றதத்தான், நீங்களும் பண்ணனும்.''

''அது என்ன வழக்கம்?''

யூனியன் மாஷேக்குப் பத்தாயிரம் ரூபா குடுத்தா வம்புச் சண்டை ஆரம்பிச்சிடலாம்.''

''யார் அவன்? ரௌடியா?''

''இல்ல யூனியன் லீடர். அவனா ஒரு தகராற ஆரம் பிச்சு, அவனா தோட்டத் தொழிலாளிகள கிளறிவிட்டு, அவனா அடிதடிகளக் கொணடாந்து, ஸ்ட்ரைக பண்ணி, அப்புறம் சமாதானம் பேசி, பேசறபோதே பெரிசா தகராறு பண்ணி, கத்திக்கபடால்லாம் காணிச்சு,ஏன்டா எஸ்டேட் வாங்குனம்னு நோகடிச்சிடுவான். அந்த

நேரம் பாத்து, நீங்க விலை கேளுங்க. கொட்டிக்கவ்வுன தேள உதற்றாமாதிரி. உங்கிட்ட எஸ்டேட்டைக் கொடுத்துடுவான்.''

விநாயகம் சொல்லிவிட்டு, கழுதைப் புலிபோல் சிரித்தான். செட்டியாரும் சேர்ந்து கொண்டார். கண்மூடி யோசித்துவிட்டு, ''செய்துருவோம்'' என்றார்.

''காப்பித் தோட்டம் வாங்கப் போறாங்களா? பைத்தியமா புடிச்சிருக்கு பகவதி அம்மாளுக்கு? கண்ணுல வெச்சித் தோட்டத்தப் பார்த்துட்டு வர்றேன். ஒரு வள்ளிக்கூட அழுகக்கூடாதுன்னு சுத்தி, சுத்தி வர்றேன். பாம்பு கொத்தினாலும், அட்ட கடிச்சாலும், முள்ளம் பன்னி சிலும்புனாலும், பயப்படாம சுத்திக்கிட்டு இருக்கேன் என்ன ஒருவார்த்த கேக்க வேணாமா? வேலைக்கார நாய் தானேன்னு ஒரு அலட்சியமா? அந்த விநாயகத்தக் கூப்பிட்டு வெச்சு சொன்னாங்களாம். எங்கிட்ட சொல்லப்படாதா? ச்சே நன்னி கெட்ட ஒலகம்.'' நாராயணன் அலுத்துக் கொண்டான்.

''இங்கேருந்து ஆரம்பிக்கறது நம்ம எஸ்டேட்' நல்லா கவனிச்சுக்க. இடது, வலது பெண்டும் நம்மளது தான். ஒரு மலைஏறி மூணு மலைசரிஞ்சு, நடுவுல ஒரு பள்ளத்தாக்கு நம்ம எஸ்டேட். அந்த நாலாவது மலைச் சரிவு இருக்கே. அது நம்முளுது இல்ல. அது ஒரு மலையாளிது. ஆனா அந்தச் சரிவுல நல்லவிதமா ஏலக்கா பயிர் பண்றதுல்ல.''

பகவதி தோளைச்சுற்றிப் போர்த்திய போர்வையும் கையில் மூங்கில் கழியுமாய் வர, கதிரேசன் முன்னே போகும் சொர்ணலட்சுமியைப் பார்த்துக்கொண்டே மலை ஏறினான்.

''என்ன ப்ராப்ளம் சின்னம்மா?''

''தொழிலாளர் போராட்டம்.''

"இங்கக் கம்யூனிஸ்ட்ங்க ஜாஸ்தியா?"

"ஆமாம். ஜாஸ்திதான். ஆனா இந்த எஸ்டேட் மூடுனதுக்குக் காரணம் கம்யூனிஸ்ட் இல்ல.

"வேற?"

"பொம்பள சமாச்சாரம்?"

"ஐய்யோ அப்டில்லாம் விஷயம் இருக்கா?"

"இதோட நின்னுடாது கதிரேசு. மேல் ஜாதிக்காரனும். கீழ்சாதிக்காரனும் காசு இருந்தா ஒண்ணா சேர்ந்துடலாம். காசு இல்லாத ஏழையும், எஸ்டேட் வெச்சுருக்குற ஒனரும் ஒண்ணா சேரமுடியாது. சேர விடமாட்டாங்க. எஸ்டேட்ல வேல செய்யுற பொண்ண, முதலாளி கற்பழிச்சுட்டானு சொல்லி, அவன அழவெச்சி அவன ஆமான்னு சொல்லி வெச்சி, பெரிசாப் பஞ்சாயத்த நடத்தி, பேசும் போதே அவன செருப்பால அடிச்சு, அவன் எஸ்டேட் வேணாம்னு ஓடிட்டான். அந்தத் தோட்டத்துல இருக்குற ஏலச்செடிக்கு, உரம் போடாது. மருந்து போடாத ரெண்டு. மூணு பேரும் அனுபவிச்சிட்டு இருக்காங்க. யூனியன் லீடருக்கும் அதுல பங்கு போகுது."

"ஜாக்கிரதையா இருக்கணும்னு சொல்றீங்களா சின்னம்மா?"

"ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும், ரொம்பக் குறைவாப் பேசணும். சில சமயம் மனுஷத்தன்மையே இல்லாம நடக்கணும்."

"ஏன் சின்னம்மா அப்படி? மனுஷாளுக்கு மனுஷாள் நல்லவிதமாப் போகக் கூடாதா?"

பகவதி சிரித்தாள் மூச்சு வாங்க மலையேறினாள்.

"தொழிலாளிய மனுஷன்னு முதலாளி நினைக்கிறதில்ல. எலியும், பூனையுமாவே எப்பவும் இருக்காங்க.

எல்லா இடத்துலயுமே அப்படித்தான் இருக்காங்க. இது நாம மட்டும் தீக்கக் கூடிய பிரச்னை இல்லை. பேசாத இரு.''

அவர்கள் மலை உச்சியிலிருந்து மூன்று மலைச்சரிவையும், பள்ளத்தாக்கையும் பார்த்தார்கள், பசுமை குறைந்த நாலாவது சரிவையும் பார்த்தார்கள்.

''அந்த எஸ்டேட்டையும் வாங்கிட்டா என்னா?'' ஆவலோடு, கதிரேசன் கேட்டான்.

'வாங்கணும். அந்த எஸ்டேட்ட வாங்கணும்னு, உங்க அப்பாவுக்கு ரொம்பநாள் ஆசை. அதப்பத்திப் பேசினாக்கூடப் போதும் பிரச்னை வந்துடறது எவன் சொத்தையோ, எவனோ இனாமா அனுபவிக்கிறான் இல்லையா? அதனால தொந்தரவு வந்துடறது. எஸ்டேட் வாங்குறதுக்கு முன்னால யூனியன் லீடரை வாங்கணும்.''

''யார் யூனியன் லீடர்!''

''ஏன்? வாங்கப் போறியா?'' பகவதி சிரித்தாள்.

''ஏன் சின்னம்மா? ரொம்பக் கஷ்டமா?'

''காசைத் தூக்கிப் போட்டா உலகத்துல எல்லாம் வாங்கலாம். நாம ஏலக்கா வாங்கப் போறமா? காப்பித் தோட்டம் வாங்கப் போறமா? அத முதல்ல டிசைட் பண்ணிக்கணும்.''

கதிரேசன் எதுவும் புரியாது, பூமியை வெறித்தான். தீவிரமாய் யோசித்தான். 'அப்பா வாங்க ஆசைப்பட்ட அப்பாவால் வாங்க முடியாத, எஸ்டேட் நோக்கி நடந்தான். வேலி அருகே நின்று அந்த நிலத்தை வெறித்துப் பார்த்தான். திரும்பினான்

''இத எப்படியும் வாங்கியாகணும் சின்னம்மா'' உறுதியாய்ச் சொன்னான்.

"பன்னெண்டு லட்சம் ஆகும். தம்பி இந்தப் பகுதி மட்டும் துண்டாத் தரமாட்டாங்க. இங்க ஆரம்பிச்சு, அடுத்த பக்கம் வரைக்கும் எஸ்டேட் போகுது. கிட்டத்தட்ட அதுவும் நாப்பது ஏக்கர். வாங்குறதோட முடியாது, மேற்கொண்டு செலவு பண்ணனும் அத்தனப் பாழாயிருக்கு. இதுக்குப் பதுலா காப்பித் தோட்டம் வாங்கலாம் இன்னித் தேதிக்கு ரொம்ப சல்லிசாக் கிடைக்கும் "

"காப்பி எஸ்டேட்டும் வாங்கணும். இந்த எஸ்டேட்டும் வாங்கணும். எத்தினி செலவானாலும், எவ்வளவு கஷ்டம் வந்தாலும் வாங்கியே தீரணும்."

"அப்ப மலைல இருக்கறதா தீர்மானம் பண்ணிட்டியா?"

"ஆமாம்."

"வாழ்க்கை முழுக்க மலைதானா?"

கதிரேசன் தயங்கினான். ஆனால், சட்டென்று சமாளித்துக் கொண்டு, "ஆமாம்" என்றான்.

"இந்த உறுதி மட்டும் உங்கிட்ட இருந்தாப் போதும் கதிரேசு உன்னப் பெரிய எஸ்டேட் ஓனரா நான்மாத்திக் காட்டறேன்." பகவதி அவன் தலையில் கை வைத்தாள்.

கதிரேசன் தன்னையும் அறியாமல் சின்னம்மாவைக் கும்பிட்டான்.

சொர்ணலட்சுமிக்கு சகலமும் வியப்பாக இருந்தது.

16

சொர்ணலட்சுமியின் வீடு நாகர்கோவிலில் ஒரு மூலையில் இருந்தது. வாடகை வீடு. வெறும் ஓட்டு வீடு. மழை பெய்தால் ஒழுகும். வெயில் காலத்தில் வீட்டிற்குள் தகிக்கும். தண்ணீருக்கு வெகுதூரம் போகவேண்டும்.

பள்ளிக்கூடத்தில் படிக்கும்வரை அந்தவீட்டின் குறைபாடுகள் எதுவும் அவள் மனத்தில் தைக்கவில்லை. பிளஸ் டூ எழுதி, 'சம்பாதிப்பது பற்றிப் பேச்சு வந்தபோது, பிறர் வருமானம் ஒப்பிட்டுப் பார்த்தபோது வாழ்க்கையின் வசதிகள் தெரிந்தன. கூடப்படித்த தோழியின் வீட்டிற்குப் போனபோது, அவளுக்கென ஒரு தனி யறையும் அதில் கட்டிலும் மெத்தையும் பூப்போட்ட படுக்கை விரிப்பும் அதையெல்லாம் விட ஒரு சின்ன ஜன்னல்கூடக் காட்டாத ஏர்கண்டிஷன் மிஷினும் ஆச்சர்யமாய் இருந்தன. வெளியே வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தபோது, அறைக்குள்ளே குளிர், முகத்தைத் தாக்கியது.

சொர்ணலட்சுமி ஒரு திகைப்போடு குமைந்து போனாள். இரவு தூக்கமே வரவில்லை. உள்ளும் புறமும் வெக்கை அதிகமாய் இருந்தது. தன் வீட்டின் வறுமை ஒவ்வொன்றாய் புலப்பட ஆரம்பித்தது.

'உலகத்தில் நல்ல விஷயங்கள் தனக்கேன் மறுக்கப்பட்டன...?' என்கிற கேள்வி எழுந்தது. தன்னைவிட வறுமையானவர்கள்மீது பார்வை போகாமல் எப்போதும் பணக்காரர்களையே பார்க்கும் பார்வை மாறிற்று. பணம் இருப்பவர்களிடம் நடையில், பேச்சில், சிரிப்பில் ஒரு மாற்றம் ஏற்படுவதை அவள் கவனிக்கத்

தொடங்கினாள். மிகமிக அதிகமான பணம் இருப்பவர்களிடம், அடக்கம் போலும் ஒரு அலட்டல் இருப்பதைக் கவனித்தாள். அதிகமான பணமும் அடக்கமான அலட்டலும் தனக்கும் வரவேண்டுமென விரும்பினாள்.

ஒரு வருடத்திற்கு முன்பு விதையூன்றப்பட்ட அந்த ஆசை, சிறிய கன்றாய் அவளுள் வளர்ந்திருந்தது. இந்த ஏலக்காய் எஸ்டேட்டும் குளுகுளுவென்ற மலைச்சாரலும் வெள்ளை வெளேர் என்றிருந்த பங்களாவும் ஏலக்காயை சுருக்குவதற்குண்டான சிறிய தொழிற்சாலையும் மிக அழகான சமையலறையும் பள்ளத்தாக்கைப் பார்த்த சிமிண்டு பெஞ்சும் பகவதியின் பீரோவிலிருந்த புடவை அடுக்குகளும் அவளைக் கிறங்கடித்தன.

'இந்த எஸ்டேட் எனக்குச் சொந்தமாயிட்டா...' ஒரு குழந்தைத்தனமான ஆசை உள்ளுக்குள் ஓடியது.

'பகவதி அக்காவுக்கு இந்த எஸ்டேட் சொந்தம்னா... எனக்கும் சொந்தமதான்.'

'ஆனா...இது எங்க எஸ்டேட்னு யார்கிட்ட சொல்றது...? பகவதி அக்காகிட்டயே சொல்ல முடியுமா...? வேற யார்ட்டயாவதுதான் சொல்லணும்.'

''எங்களுக்கு நாப்பது ஏக்கர் ஏலக்கா எஸ்டேட் இருக்கு.'' பெரிய ஓடைக்கருகே இருந்த குத்துக்கல்லிடம் சொன்னாள். தனக்குள் முகமில்லாத சிலரை நிறுத்தி, வைத்து, அவர்களிடம் அலட்டிக் கொண்டாள்.

சட்டென்று ஒரு இரவுத் தூக்கத்தில் புரண்டு படுக்கும்போது, ஒரு கேள்வி எழுந்தது.

''இந்த எஸ்டேட்டு பகவதி அக்காதா...? சுதிரேசனுதா...?''

''பக்கத்துல இருக்குற ஏலக்கா எஸ்டேட் வாங்கணும்னு சுதிரேசன் சொல்லிச்சு. அதவிடக் காப்பி

எஸ்டேட் வாங்கலாம்னு பகவதி அக்கா சொன்னாங்க. இரண்டையுமே வாங்கணும்னு கதிரேசன் பேசுச்சு. அப்ப மலையிலேயே இருந்துடறியானு அக்கா கேட்டாங்க. என்ன அர்த்தம் இதுக்கு...? இந்தப் பேச்சுலர்ந்து இது யார் சொத்துனு தெரியலியே?'

'இரண்டு பேர்க்கும் சமபங்கு இருக்குமோ?'

'அக்காவுதா இருந்தா நல்லது அக்கா செத்த பிறகு இந்த எஸ்டேட் எனக்குத்தான் வரும். அக்காக்குதான் வாரிசு முந்த இல்லியே.'

'ச்சே...அக்கா சாவறதப்பத்தி யோசிக்கறேன் பாரு... மடச்சி...'

'மனுஷாள்ளா சாவு வரத்தானே செய்யும்?'

'இது கதிரேசனுதா இருந்தா...'

'அப்ப சொத்து யாருக்குப் போகும்?'

'அவம் பசங்களுக்கு.'

சொர்ணலட்சுமியின் புத்தி திடுமென்று மௌனமாயிற்று. அக்கா செத்து, சொத்து வருவதைவிட, கதிரேசனுக்கு உறவானால் சொத்து இன்னும் சட்டமாய் வருமல்லவா...?

'என்ன உறவு?'

'குழந்தை பெற்றுத் தருகிற உறவு. அதாவது மனைவி.' மனசுக்குள் கதிரேசனுக்கு மனைவியானாள் அந்தக் கனவுகளோடு தூங்கிப் போனாள்.

மலையில் கதிரேசனைப் பார்த்த போதெல்லாம் இரவில் யோசித்த விதங்கள் நினைவுக்கு வந்தன.

சிரிப்பைக் கொடுத்தன. அதே நேரம். கதிரேசன் பின்னால் மிகவும் அலைவதாய்க் காட்டிக் கொள்ளக்கூடாது என்பதிலும் கவனம் காட்டினாள். அவன் அறைக்குள் நுழைந்து பழைய துணிகள் தேடிக் கொல்லையில் கொண்டுவந்து போட்டாள். ஒவ்வொரு வேலையிலும் தன்னை யார் கவனிக்கிறார்கள் என்பதைப் பார்த்துக் கொண்டாள்.

துணிகளை வாரிப் போகும்போது, கதிரேசன் விழித்துக் கொண்டான்.

"நீ எதுக்கு என் துணிலாம் வாரிட்டுப் போற...?"

"பகவதி அக்கா சொல்லிச்சு."

"என்ன சொல்லிச்சு?"

"போய் துணி எடுத்துட்டு வா. தோச்சுப்போட்டுரலாம்னு."

"வாணாம். நானே தோச்சுக்கறேன்."

"நாப்பது ஏக்கர் ஏலக்கா எஸ்டேட் ஓனர். தன் துணியத் தானே தோச்சா நல்லாருக்காது."

அவள் வாரிக் கொண்டு கொல்லைப்புறம் போனாள்.

அவன் தடுப்பதா, வேண்டாமா என்று குழம்பினான். ஆனால் இதையெல்லாம் வேறு யாராவது கவனித்துக் கொண்டால் நல்லது என்றுதான் தோன்றியது. காப்பியும் யிஸ்கட்டும் சாப்பிட்டுவிட்டு, எதிர்ப் பக்கம் உள்ள கட்டடத்துக்குள் நுழைந்தான். பறித்த ஏலத்தை முடித்துக் கொண்டு, இருபது பெண்கள் கையில் தகரத் தூக்குடன் எடை மிஷினுக்கு அருகே நின்றிருந்தார்கள். அவரவர் பறித்த காய்கள் எடை போட்டு பிரித்துக் கொள்ளப்பட்டன. பளபளப்பாய், தடிமனரிய்,

உள்ளே நீர் சதையோடு இருந்த காய்கள், சுருக்கப்பட வேண்டும். உள்ளே வெள்ளையாய் இருக்கிற விதைகள் கறுப்பாகும்.

அவன் வேட்டியை மடித்துக்கொண்டு கட்டடத்துள் நுழைந்தான். உலைக்களன் போலப் பெரிய அடுப்பு. கட்டடத்தின் ஓரம் எரிந்து கொண்டிருக்க. அங்கிருந்து முரடி அகல அலுமினியக் குழாய் அறை நெடுக ஓடிற்று. இடதும் வலதுமாய் ஒரு ஆள் படுத்துத் தூங்குமளவுக்கு அறை முழுக்க மரசெல்லைப் ஓடியது. நெருப்பின் வெம்மை அலுமினியக் குழாய் வழியாகப் போய். அறை முழுவதும் நல்ல சூடு இருந்தது. தட்டுத்தட்டாய் ஏலக்காய்கள் பரப்பி விடப்பட்டிருந்தன. இருபது மணி நேரமாய் உள்ளே இருந்த ஏலக்காய் முற்றிலும் சுருங்கி இருந்தது. பன்னிரண்டு மணி நேரமாய் வெப்ப அறைக்குள்ளிருந்த ஏலக்காய் பாதி சுருங்கியிருந்தது. அன்று காலையில் பறித்து வந்த ஏலக்காயையும் பரப்பி, உள்ளே டிரேயில் கொண்டு வந்து வைத்தார்கள், இருபது மணி நேரக் காயை அப்படியே எடுத்து வந்து, மெல்லிய கம்பி வலையில் போட்டுத் தேய்த்தார்கள்.

காயிலிருந்த தூசெல்லாம் போய், ஏலக்காய் பளிச் சென்றிருந்தது. அந்த ஏலக்காய்களைச் சல்லடை மூலமாய்த் தரம் பிரித்தார்கள். பொடிசு, சிறுசு, நடுத்தரம், உயர்தரம் என்று பாலிதீன் பையில் போட்டார்கள். தூசியும் காற்றும் புகாத தேக்குமரப்பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டார்கள்.

விநாயகம்தான் நாலு பக்கமும் ஓடிக் கொண்டிருந்தான். கட்டடத்திற்கு வெளியே ஓடிப்போய், அடுப்புக்கு கரி போட உடைத்துப் போட்டான். தணல் எழுந்ததும், அறைக்குள் நுழைந்து காய்களை பரப்பத் தொடங்கினான். முற்றிலும் சுருங்கிய காய்களை வெளியே கொண்டு வந்து தேய்க்கத் துவங்கினான்.

மிகச் சரியாய்ப் பார்த்து காயை எடுத்து விட வேண்டும். கூட அரை மணி நேரம் வெப்ப அறைக்குள் கிடந்தால் காய் கருகிப் போய்விடும். முன்னதாகவே எடுத்துவிட்டால் பச்சைத் தன்மை குறையாது போகும். கம்பி வலையில் தேய்க்கிறபோதும், ஒரு பக்குவம் வேண்டும்.

மிகவும் அழுத்தினால் காய் தோலுரிந்து, வாசனை யான விதைகள் தரையில் விழுந்துவிடும், காய் சுருங்கும் போது மஞ்சளாகி விடக்கூடாது. ரொம்பவும் பச்சை நிறமும் கூடாது. காய் அடிபட்டிருக்கக்கூடாது. ஏலக் காய் ஒரு மாதிரியான காய். பழுப்பு நிறத்தில் விதைகள். ஒரு காயைப் பிதுக்கினால் மூன்று பக்கத்து விதைகள் தென்பட வேண்டும். ஒரு பக்கத்துக்கு ஏழு எட்டு விதை கள் இருப்பது நலம். இதுவே முதல் தரம். இவை போக வேண்டியது ஐரோப்பா அல்லது அரபு தேசம். இந்த முறை முதல்தரக் காய்கள் அதிகம் இருக்குமென்று பகவதி சொன்னாள்.

விநாயகம் டிரேயைத் தலையில் வைத்துக் கொண்டு ஓடினான்.

''வாங்க'' என்று வரவேற்றான்.

''கதவ மூடிடுங்க. குளிர்காத்து உள்ள வந்தா சூடு கொறஞ்சிடும்,''

கத்வு மூடிய மூன்றாவது நிமிடம் உள்ளே வியர்த்து ஊற்றியது. மூச்சு திணறும்படி ஏலக்காய் நெடி அடித் தது. மிக நுண்ணிய தூசுகள் வெளிச்சத்தினூடே பறந்து கொண்டிருந்தன. கதிரேசனுக்கு அதிக நேரம் அங்கு இருக்க முடியாது என்று தோன்றியது. ஆனால் தடக்கென்று வெளியே ஓடி வந்துவிட்டால் கேலியாகும்.

"மொதலாளி அடுப்புக்கிட்டயே வர மாட்டேங்கறாங்க..." என்ற கேலி வரும். அதேநேரம் அறையின் சூடு திக்குமுக்காட வைத்தது.

விநாயகம் வேகமாய்க் காய்களைக் கம்பி வலையில் தேய்த்து சுத்தப்படுத்தினான். தூசு கிளப்பினான். சுதிரேசன் ஆறேழு முறை தும்முவதைப் பார்த்துச் சிரித்தான். புதிய காய்களைத் தட்டில் பரப்பினான்.

"இங்கையே இருங்க. நான் அடுப்பு கௌறிட்டு வந்துர்றேன்."

கதவு திறந்து, வெளியே போய் கதவு சாத்தினான். அந்தக் கதவு திறந்து கொள்ளாமல் இருப்பதற்காக வெளிப்பக்கம் தாழிட்டான்.

"படவா...வேணும்னே பண்றாம் பார். வெளியப் போய் நெருப்புக் கிளறப் போறான். உள்ள அனல் கக்கப் போவுது. கதவத் தெற கதவத் தெறனு நான் கத்தணும்னு எதிர்பார்க்கறான்."

மரத்துண்டுகள் வெட்டுகிற சத்தம் கேட்டது. இரும்புக் கழியால் அடுபபைக் கிளறுகிற ஓசை கேட்டது. உச்சந்தலையிலிருந்து பாதம் வரை, உடம்பு முழுதும் வேர்வை பொங்கி வழிந்தது. நாக்கு வறண்டது. தூசை சுவாசித்து மூச்சுத்திணறல் ஏற்பட்டது. கண்கள் இருண்டன. காதோரம் சிவந்து ரோமம் கருகியது. அறைக்குள் வெப்பத்தைத் தக்க வைப்பதற்காக காற்று போக வழியே இல்லாமல் இருந்தது.

சுதிரேசன் கவலைப்பட்டான். வேறு வழியில்லை. உஷ்ணம் தாங்க முடியவில்லை. வாய் விட்டுக் கூப்பிட்டு விடலாமா? யோசித்தான் தயங்கினான்.

"உங்களுக்கு ஏன் தம்பி கியூரிங்கு? உங்களுக்கு எதுக்கு அடுக்களை வேலை? நான் பாத்துக்க மாட்டேனா...?" ஒருமாதிரி பேச்சு வரும். நாளை மறுபடி இந்தக் கட்டடத்திற்குள் நுழைந்தால், "மொதல்ல வெளியப் போங்க" என்று செல்லமாய் அதட்டல் வரும். அவன் சொந்த இடமே அவனுக்கு அந்நியமாகும்.

நீ இல்லாது போனாலும் நான் வேறு ஆள் வைத்து நின்று கியூரிங் வேலை செய்வேன் என்று காட்ட வேண்டும். அப்படிக் காட்டுவதற்கு இந்த வெப்ப அனலைப் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் இந்த வெப்பத்தை இன்னும் அரை நிமிடம்தான் தாங்க லாம்.

அவன் கதவுக்கருகே போன நேரம். தடாலென்று தாழ்ப்பாள் விலகிக் கதவு திறந்தது. சொர்ணலட்சுமி கதவு திறந்தாள். கதிரேசன் வெளியே ஓடிவந்து, குளிர்க் காற்று வாங்கினான். வெப்பத்திலிருந்து குளிருக்கு உடனே மாறியது வேதனையாய் இருந்தது. கடுமையான இருமலும் லேசான மயக்கமும் ஏற்பட்டன.

"ஏன் உங்கள உள்ள வச்சு தாழ்ப்பாள் போட்டு ருக்கு?"

"நாந்தான் போடச் சொன்னேன்."

"எதுக்கு...?"

"என்னால உள்ள இருக்க முடியுமான்னு பாக்கற துக்கு."

"முடியலை போலருக்கே."

"ஆமாம். முடியல. ஆனா வெளிய சொல்லாதே."

"ஏன்?"

"எனக்கு முடியலைன்னு விநாயகத்துக்குத் தெரிஞ்சா எளக்காரமாப் போயிடும். முதலாளிய ஏமாத்தலாம்னு தோணும்."

"நீங்கதான் எஸ்டேட்டுக்கு மொதலாளியா? அக்கா இல்லியா?"

"இது என்னுது. என் நிலம். இந்த நாப்பத எண்பதா மாத்தத்தான் இங்க வந்துருக்கேன்" நன்றாய் இழுத்துக் குளிர்காற்றை சுவாசித்தான்.

"எட்டிப் பாரு. விநாயகம் வர்றானா?"

"ஆமாம்."

"நான் உள்ள போறேன். கதவத் தாழ்ப்பாள் போட்டுரு. நான் உள்ளருக்குறது தெரியாத மாதிரி, யார்னா உள்ளருக்கீங்களானு கூப்பிடு. என்னைத் தேடி வந்ததா சொல்லு."

அவன் தடக்கென்று உள்ளே நுழைந்து கொண்டான். அவள் சப்தம் வராமல் தாழிட்டாள்.

"விநாயகம்...மொதலாளியப் பாத்தியா?" என்று வெகுளியாய்க் கேட்டான்.

அவள் உதவிய விதம், உள்ளேயிருந்த கதிரேசனுக்கு மிகவும் பிடித்தது.

17

சோர்ணலக்ஷ்மிக்கு கதிரேசனை மயக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தபோதே கொஞ்சம் வெட்கமாகவும் சங்கடமாகவும் இருந்தது. இது சரியோ என்ற கேள்வி

யும் எழுந்தது. ஒரு பெண் நல்ல புருஷனுக்கு ஆசைப் படறது தப்பா என்கிற சமாதானமும் ஏற்பட்டது. 'கதிரேசன் நல்லா பழகறாரு. கண்ணியமா நடந்துக் கிறாரு. அவரைப் பார்த்ததும் அய்யோ இப்படி ஒரு புருஷன் நமக்குக் கிடைச்சா நல்லா இருக்குமேன்னுதான் தோணுது. இது தப்பா?'' என்கிற எண்ணம் வந்தது.

''ஏய் ஆளு அன்பா இருக்காருன்னா நீ லவ்பண்ணுற? நாப்பது ஏக்கர் ஏலக்காய் எஸ்டேட் பார்த்த உடனே பரபரன்னு ஆயி போயிடுச்சி உனக்கு. அதை சுருட்டிக் கிணும்னுதான் அன்பு காதல்னு டபாய்க்கிற. இந்த கதிரேசன் இன்னும் கருப்பா பல் எடுப்பா இருந்திருந் தாலும் உனக்கு காதல் வந்திருக்கும். தொந்தியும் தொப் பையுமா இருந்தாலும் பிரியம் பொங்கியிருக்கும். கணக்கு பண்றேன்னு தெளிவா சொல்லிட்டுப் போயிடுங்க. காதல் கீதல்னு கஷ்டப்படாதீங்க.' மனசில் ஒரு பக்கம் வசை பாடிற்று.

'உன் கணக்கு என்னன்னு நான் சொல்லட்டுமா. நீங்க ஆகா, ஓகோன்ற பகவதியக்கா இருபத்தி மூணு வயசுல சுமாராத்தான் இருந்தாங்க. அப்படி ஒண்ணும் எடுப்பா மிடுக்கா இருந்திடலை அவங்களைத் தேடிக் கினு வந்து செட்டியார் கல்யாணம் பண்ணி இவ்வளவு பெரிய எஸ்டேட்டும் அதுக்கு உண்டான கொத்துச் சாவியும் கொடுத்திருக்காருன்னா ஒரு சாமர்த்தியம் தானே பொம்பளை சாமர்த்தியம்தானே. பேச வேண் டிய நேரத்தில் பேசி கொஞ்ச வேண்டிய நேரத்தில் கொஞ்சி எல்லாமும் செஞ்சி ஆம்பளை இஷ்டப்பட்டபடி இருந்து ஒண்ணும் ஒண்ணும் இரண்டுன்ற கணக்குத் தானே. இதுல அசிங்கம் என்ன...'

'கடவுளே, கடவுளே நீ ஏன் இப்படி கெட்டுப் போனே?, மனது இன்னொரு பக்கம் முடியைப் பிடித்து உலுக்கிற்று, 'நீ இப்ப நினைச்சியே. அதுக்கு என்ன

பேரு தெரியுமா? ரொம்ப அசிங்கமான பேரு. என் வாயால சொல்லக் கூடாது.'

'எத்தினி நாள்டி ஒரு ஆளை மயக்குவ, அப்படி ஒரு ஆளை மயக்கி அந்த ஆள் மயக்கத்திலேருந்து எழுந் துட்டா அந்த ஆள் மயங்கினது தெரியாது. நீ மயக்கினது தான் தெரியும், மயக்குற பொம்பளைக்கு மதிப்பு கம்மி. மயக்க வெட்கப்படுகிற பொம்பளைக்கு மதிப்பு அதிகம்.

'இன்னா சொல்ற நீ. பகவதி அக்கா மயக்காத பொம் பளைன்றியா...கோடானு கோடி பொம்பளைங்க குடித் தனம் பண்ணி குழந்தை பெத்து இருக்காங்களே, யாருமே பவுடர் பூசி, பூ வெச்சதில்லைன்றியா... ஆம்படை யானைப் பார்த்து நமட்டுச் சிரிப்பு சிரிச்சதில்லைன் றியா...இது அத்தினியும் மயக்குற விதம்தானே, குடித் தனக்காரங்க பண்றதுதானே...இது அசிங்கம்னா உலகமே அசிங்கம்தான்.' பதிலுக்கு ஆசை மனம் கடுகடுத்தது.

'முளைச்சி மூணு இலை' விடல...அதுக்குள்ள புருஷ னைப்பத்தி பேசறியா? எல்லாப் பொம்பளையும் கெட் டுப் போனவன்ற மாதிரில்ல பேசற...அது தப்பு புத்தி போடு. புருஷன்கூட சல்லாபம் பண்றதுதான் குடித் தனம். ஆனா அது மட்டுமே இல்லை. அதுவும் ஒண்ணு. அது சல்லிவேர். ஆணிவேர் என்னா தெரியுமா? பொறுப்பு. ஆம்படையான் செய்யுற வேலைல பாதி பங்கு வகிக்கிறது. புருஷன் பானை பண்ணா களிமண் மிதிக்கிறது. புருஷன் பயிர் பண்ணா நாத்து நடறது புரு ஷனுக்கு எஸ்டேட் இருந்தா அதுல வேலை செய்யுறவங் களுக்காக வேலை செய்யுறது. ஏலக்கா பறிக்க இருபது பேர் போனா, இருபத்தஞ்சி டீ பின்னால அனுப்பறது. ஆபீஸ் போற புருஷனுக்கு அறியாத பொம்பளை எப்படி உதவி செய்யறதுன்னு கேட்கறியா, உன்னை மாதிரி

நோனாவட்டைங்க கேட்கும். அந்த ஆள் களைச்சு வரச் சொல்ல காபி தண்ணி குடுத்துட்டு கால் மணி நேரம் பேசாம இருக்கிறது. நல்லதா நாலு விஷயம் பேச ஆரம் பிக்கிறது. ஆம்படையானும் வேலைக்குப் போறான். பொண்டாட்டியும் வேலைக்குப் போறா. அப்ப என்னா பண்றதுன்னு உன் குறுக்கு புத்தி கேட்கும். ஏன்னா உனக்கெல்லாம் பதிலைவிட கேள்வியே முக்கியம். ஏதா வது கேட்டுக்கிட்டே இருக்கணும். புரிஞ்சிக்கிறதுக்குப் பொறுமை வேணும். பொறுமையிருந்தா தானா புரியும். கேள்வியே இல்லாம போகும். புருஷன் பொண்டாட்டி இரண்டு பேரும் வேலைக்குப் போய்ட்டு வந்தா உள்ள நுழைஞ்ச அரை மணி நேரம் பேசாம இருந்து அவங்க அவங்க வேலையைக் கவனிக்கணும்: களைப்பு, எரிச்சலை பேச்சில காட்டாத இருக்கணும், வேலையில பங்கு இருக் கிறது மட்டுமல்ல. பெத்த புள்ளைங்களை நிமித்தி வைக் கிறதுல பொம்பளை பங்கு அதிகம். புள்ளைங்கள பொம் பள பாத்துக்கிறானா ஆம்பளைக்கு ரொம்ப சந்தோஷம்.

"நான் பேசறது எல்லாம் நல்ல ஆம்பளைங்களைப் பத்தி. தறுதலைங்கள நான் ஆம்பளைங்களாவே நினைக்கல. அந்த தறுதலைங்கள மயக்கவும் முடியாது. அவனுங்க தின்னுட்டு துப்புறவங்க நான் என்ன சொல்ல வரேன்னா படுக்கையில மயக்கறதுக்கு யோசனை பண்ற துக்கு பதிலா, புருஷனோட வேலையிலகூட நின்னு, புள் ளைங்கள கைதூக்கிவிட்டு, அவங்களைப் பெத்தவங் களுக்கு மரியாதை பண்ணி, அவன் துக்கத்துல வலியில ஆறுதல் சொல்லி, முன்னேற்றத்துக்கு யோசனை சொல்லி இடதா, வலதான்னு யோசிக்கறப்ப. நீ யோசனை பண்ணி...இதுக்கு நடுவுல சரச சல்லாபம் பண்ணா, மகளே ரொம்ப மரியாதை உனக்கு. அந்த பொண்டாட் டிய எதுனாலயும், யாராலயும் அசைக்க முடியாது.

'உங்கக்கா பகவதி, செட்டியாருக்கு இரண்டாவது பொம்பளை. ஆனா அவளுக்கு எவ்வளவு மதிப்பு, மரியாதி செல்வாக்கு, இத்தனை கவுரவத்தை அவ மயக்கியா தக்க வச்சுருப்பா? ஆம்பளை இல்லாத போது இந்த எஸ்டேட்டை நாய் மாதிரி காவல் காத்திருப்பா அந்த மனுஷ ஏன் சரிஞ்சது...இந்தக் கிளை ஏன் வளைஞ்சது... ஆயிரம் கேள்வி கேட்டிருப்பா. அத்தனைக்கும் பதில் சொல்லிருப்பா...கணக்கு, வழக்கு காட்டியிருப்பா.

'அடடா, இந்தக் காரியம் செய்யாத மதுரைக்கு போய்ட்டேன். ஏகப்பட்ட நஷ்டம் வரும்னு நினைச்சேன். நீ மறக்காம செஞ்சு ஆயிரம் ரூபாய் லாபம் காட்டிட்ட. வெரிகுட். நீ இருக்கிற வரைக்கும் ஏலக்கா எஸ்டேட் பத்திக் கவலை இல்லை.' சந்தோஷமாய் செட்டியார் சாப்பிட உட்கார்ந்திருப்பார்.

'நாற்பத்தேழு வயசாயிடுச்சு. வியாதின்னு இல்லாட்டாலும் ஆடுகால் தசை இழுத்தா மாதிரி வலிக்குது பகவதி. திருகித் திருகி பிடித்துவிட, தைலம் போட்டு தேய்த்துவிட, தசை வலியைக் காட்டிலும் பிடித்துவிட்ட வலியில் செட்டியார் சுகமாய் தூங்கியிருக்கக் கூடும் புருஷனும் மனைவியும் ஏலக்காய் எஸ்டேட் சுத்தி வருகிற போது, வேலையில் தெளிவு பெற பகவதி கேள்வி கேட்டிருக்கக்கூடும். நாப்பது ஏக்கர் நடந்த களைப்பில் வெந்நீர் போட்டுக் குளித்துவிட்டு, விளக்குப் போட்டு கணக்கு எழுதிவிட்டு. சப்பாத்தியும் பாலும் சாப்பிட்டுவிட்டு, முன்னிரில் வானம் பார்த்து உட்கார்ந்துவிட்டு, தூக்கம் கண்ணை இழுக்கும் போது உள்ளே போய் மெத்தை கட்டிலில் சாய்ந்து கம்பளியைப் போர்த்திக் கொண்டு, 'உரமக்கு வாங்கிட்டு வந்த புடைவை புடிச்சிருக்கா?' பகலறியைத் தடவியபடி செட்டியார் கேட்கிற போது சரசம் சல்லாபம், மயக்குதல், மயங்குதல் எல்லாம் நடக்கும்.

''நான் தூங்கட்டுமா' காலைல மதுரை போகணும்...''

''எத்தனை மணிக்கு எழுப்பணும்னு சொன்னா நல்லா இருக்கும்.''

''ஏழு மணிக்கு எழுப்பேன், எட்டரை, ஒன்பதுக்கா கிளம்புறேன்.''

ஏழு மணிக்குச் செட்டியார் கண் விழிக்கிற போது தித்திப்பு வாசனை மூக்கைத் தாக்கும்.

''என்னா பகவதி பண்ற?''

''கேரட் அல்வா,''

''யார் தொண்டையில் இறங்கும் இது?''

''உங்களுக்குப் புடிக்காது தெரியும், குழந்தைங்க சாப்பிடும்; அதுலயும் கதிரேசனுக்குப் புடிக்கும்.';

''எங்கப்பரானை... யாரும் தொடப் போறதில்ல மூணு நாள் குளிர் பொட்டியில் இருந்துட்டு வீடு பெருக் கறவளுக்கு போகப் போவுது.''

''தொலைச்சிடுவேன்னு சொல்லுங்கோ. கண்ட மேனிக்குத் திட்டுவேன்னு சொல்லுங்கோ. லீவு நாள்ல மலைக்கு வந்தா சோறு கிடைக்காது. அவிச்ச கிழங்கு தான் தருவேன்னு சொல்லுவேன்.''

கேரட் அல்வா, மலை வாழை, தேன் பாட்டில் ரோஜா செடி, காப்பிக் கொட்டை, தேயிலை பாக்கெட், ஏலக்காய்ச் சரம், கீரை முள்ளங்கி' நீலக்கலர் கோஸ், அரை அடி நீள சந்தனக் கட்டை, ஆள்வள்ளிக் கிழங்கு எல்லாமும் காரில் ஏற்றப் பட்டிருக்கும்.

''என்னாத்துக்குடி இதெல்லாம். வண்டி ஓடுற

வரைக்கும் இதெல்லாம் பிரச்னை இல்லை, எங்கினா நின்னுடுச்சு...அத்தனையும் எரிச்சலாயிடும்.''

மதுரைக்கு செட்டியார் போய் சாமான்களும் இறங்கின பிறகு பார்க்கும் இடங்களில் எல்லாம் பகவதி நிறைந்திருப்பாள். கேரட் அல்வாவை வீடு போட்டி போட்டு விழுங்கும். தேனை பகிர்ந்து அளிக்கும், செடியை கொல்லையில் நடும். கோஸ் உணவில் கலக்கும். கிழங்கை சகலருக்கும் வழங்கும். அந்த நேரமெல்லாம் பகவதியோடு பேசியது ஞாபகம் வரும். கூடியது ஞாபகம் வரும்.

''அப்பா சின்னம்மா ஏதோ கேட்டதாச் சொன்னீங்களே வாங்கிட்டு வந்துடட்டுமா?'' கதிரேசன் நினைவு படுத்துவான்.

''எனக்கு அல்வா கிளற எல்லாம் முடியாது. தெருக்கோடி அய்யரு வீட்டம்மாக்கிட்ட வத்தல் ரெண்டுகிலோ ஊறுகாய் மூணு பாட்டில் சொல்லியிருக்கேன். நமக்குன்னு எண்ணெய் கம்மியா, காரம் கம்மியா போடறாங்க அடுத்த தடவை போறப்ப அவகிட்ட கொடுங்க'' ஆச்சி நினைவு படுத்துவாள்.

ரப்பர் வளையம், கலர் ஹேர்ப்பின், கண்ணாடி வளையல், கண்மை பென்சில், ஒட்டும் பொட்டு என்று பலதும் பார்க்கும் போது செட்டியாருக்குப் பகவதி ஞாபகம் வரும். அப்படி ஞாபகம் வைத்திருப்பதற்குப் பெயர் தான் மயக்கம். அந்த நிலைக்குப் புருஷனைத் தள்ளியிருப்பதற்குப் பெயர்தான் மயக்குதல்.

சோர்ணலக்ஷ்மி புடைவையை எடுத்துச் செருகிக் கொண்டு, கதிரேசனுடைய துணிகளைப் படு சுத்தமாய் துவைத்தாள். உலர்ந்ததும் மின்சார இஸ்திரி பெட்டியால் தேய்த்து மடித்தாள். அவன் அறையைப் பெருக்

கினாள். படுக்கையைத் தட்டிப் போட்டாள். ஈரத்துணி போட்டுத் துடைத்தாள். வீட்டு வாசலுக்கு மஞ்சள் குங்குமம் எழுதினாள். வெந்நீர் அடுப்புக்கு கட்டை பிளக்கத் துவங்கினாள். மழை மறுபடியும் பயமுறுத்திய போது பாலில்லாத காப்பியில் சிறிது சர்க்கரை போட்டு அவனை தேடிக் கொண்டு போனாள். வீட்டிலிருந்து நூற்றைம்பது அடி தூரத்தில் அவன் வாங்க ஆசைப்பட்ட எஸ்டேட் விளிம்பில் கதிரேசன் நின்று பார்த்துக் கொண் டிருந்தான். அவன் கண்களில் அதிகமாகக் கவலை இருந் தது. அவள் காப்பியுடன் வருவதை உடனே உணர வில்லை. உணர்ந்த பிறகும் அவன் வருகையை மதிக்க வில்லை. வெப்ப அறைக்குள் சிக்கித் தவித்தது அவனை இம்சித்துக் கொண்டிருந்தது.

18

"அடடே? நீ உள்ள இருக்கிறதே மறந்து போச்சு? மடையன், நான் பாட்டுக்கு உன்னை உள்ள வைச்சு சாத் திட்டுப் போயிருக்கேன் பாரேன்."

வினாயகம் கதவைத் திறந்துவிட்டு, திகைத்தவன் போல் பேசினான். ஏலக்காயை மீறி அவன் பேச்சில் பொய்நெடி அடித்தது.

"இந்தக் கதவு ஒருமாதிரி நொடிப்புக் கதவு. கீல் சரி யில்லையா, நிலைப்படி சரியில்லையா, தரை சரியில் லையா தெரியலை. கதவு மூடினா தானா திறந்துக்கும். அப்புறம் சூடு மொத்தமும் வெளியே போய், குளிரு மொத்தமும் உள்ளே புகுந்து காய் பழுத்து விதை செவந்து ஏடாகூடமாயிடும். அதான், கையோட தாழ் போட்டுட்டு போயிடறேன். நீ இருக்கிறது மறந்தே

[illegible]? டமடமன்னு கதவ இடிச்சிருக்கக் கூடாது...ஓடி [illegible] இருப்பேனே'' குரலில் போலித்தனம் தொற்றிற்று.

''எதுக்கு இடிக்கறது...?'' ஒன்றுமே நடக்காதது [illegible] கதிரேசன் பேசினான். ''நான் க்யூரிங் ரூமிற்கு [illegible]தவனா, க்யூரிங் பத்தி தெரியாதவனா...ஏலக்காய்க்கு [illegible]தை வர்றதே இங்கதானே. உங்க மாதிரி மேஸ்திரி [illegible]டைய உழைப்பால்தானே? நீ கட்ட கூட போட் [illegible] கருகிடும். கதவைத் திறந்து விட்டுட்டா அழு [illegible]. செய்த பிறகு ஏன் இப்படி செய்தேன்னு கேக்கவா [illegible]?'' கதிரேசன் மிக லேசாய்ப் பேச்சில் குத்தி [illegible].

''ஒரு நாள் தப்பு செஞ்சதில்லை தம்பி. இன்னி [illegible]க்கு ஏலக்காய் தங்கம். பட்டணத்தில் நாலு காய் [illegible] ரூபாய். பாம்பேல இரண்டு காய் ஒரு ரூபா. க்யூரிங் [illegible]றவன் ஒருகைப்பிடி காய் எடுத்து உள் டிராயரில் [illegible] டுக்கிட்டான்னா யாருக்கும் தெரியாது. ஒரு கைப் [illegible] அறுபது காய் நிக்குது. பதினைந்து ரூபாய். [illegible] பக்கம் பாக்கெட்டில் ஒருகை வலது பக்கம் பாக்கட் [illegible] கை. முப்பது ரூபாய் ஒருநாளைக்கு தேத்திட [illegible]து...? ஆனால் இந்த வினாயகம் செய்ய மாட் [illegible]. இதுவரைக்கும் செய்ததில்லே. காரணம் நன்றி [illegible]சம். உங்கப்பா இந்த வினாயகத்தை வேலைக் [illegible]னாமேவ நடத்தலை, வீட்டுல ஒரு ஆளா மதிச்சாரு. [illegible] கூலிக்காரன் இல்லை. வேலை தெரிஞ்ச வேலைக் [illegible]? அந்த மரியாதை உங்கிட்டயும் எதிர்பார்க்கறேன் [illegible]. வயசுல பெரியவன் என்பதற்காக இல்லை...இந்த [illegible] எனக்கு வாழ்க்கை. இந்த எஸ்டேட்தான் [illegible] வீடு. பலபேர் என்வேலை தெரிஞ்சு, பல விதமா [illegible]னாங்க. நான் செட்டியாரே கதின்னு இருந் [illegible] தவிர, வேறபக்கம் தலைவைச்சுக் கூடப் படுக் [illegible]லை. அப்படி ஆசைப்பட்டுப் போயிருந்தா, இந்நேரம்

நாலு ஏக்கர் நிலமாவது வாங்கியிருக்கலாம். எனக்கு விசுவாசம்தான் முக்கியம்.''

அர்த்தமில்லாத பேச்சுக்கள் அலட்டலாய் வந்து விழுந்து கொண்டிருந்தன. எத்தனை சம்பாதித்தாலும் எத்தனை புகழ் கிடைத்தாலும் சில பேருக்கு வாழ்க்கையில் நெல் முனையளவும் திருப்தி இல்லாமல் போகிறது. இப்படிப் பட்டவர்கள் பாராட்டினால் திருப்தி அடைந்து விடமாட்டார்கள். பாராட்டினால் எனக்கு என்ன தெரியும் என்று போலியாய்ப் பணிவார்கள். பாராட்டாவிட்டால் 'என்னத்த கொடுத்துட்ட' என்று இகழ்வார்கள். யாரையேனும், ஏதேனும் சொல்லிக் கொண்டே இருக்க வேணும்.

''நீங்க எனக்கு குரு மாதிரி''

கதிரேசன் சட்டென்று வினாயகத்தின் கால் தொட்டான். வினாயகம் இவ்வளவு விரைவான அன்பை எதிர் பார்க்கவில்லை.

''நான் தோட்டம் பெரிசு பண்ணப் போறேன் வினாயகம். ஏலக்காய் எஸ்டேட்டை விரிவு படுத்தப் போறேன். உங்கிட்ட கொஞ்சம் காசு வாங்கி மிச்சத்தை நான்போட்டு உங்களையும் ஒரு பார்ட்னரா சேர்த்துக் கப் போறேன். மாசாமாசம் காசு புடிக்கப் போறேன். டக்குனு காசுபுடிச்சா தாங்குவிங்களா...இப்ப இருக்கிற வாரக் கூலியை மாச சம்பளமாக்கி. மேற்கொண்டு ஐந் நூறு ரூபாய் கூலி உயர்த்தப் போறேன். அந்த ஐந்நூறை மாதாந்திர சேமிப்பா வைச்சு வட்டி போட்டு, மூல தனமா மாத்தப் போறேன். மேஸ்திரிக்கு இத்தனை சம் பளமா என்று கேள்வி வரும். மானேஜர் என்று போட் டுட்டா?''

வினாயகம் திகைத்துப் போனான்.

''எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும். பக்கத்து எஸ்டேட் வாங்கறதுக்கு, விவரம் சொல்லணும். ஒன

[illegible] பார்த்துட்டு வந்து யூனியன் ஆளுங்களோட [illegible] வந்திடுங்க. ரெஜிஸ்டர் ஆபீஸ் ஆளுங்களை [illegible] அடையாளம் காட்டணும். நிலம் கை மாறணும். [illegible] ஒரு கமிஷன் தரேன் அதையும் மூலதனமா [illegible]டுக்கலாம். யார்து அந்த எஸ்டேட், எங்கே இருக் [illegible] அந்த ஓனர். விசாரிச்சு சொல்றீங்களா?''

[illegible]னாயகம் மெல்ல சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்து [illegible]த்தான். ''ரெண்டு நாள் டைம் கொடுங்க தம்பி'' பின் [illegible]ங்கினான்.

''வெப்பம் ரொம்ப தாக்கியிருக்கும். மோர் குடிங்க [illegible]ளி, பார்லி கஞ்சி குடிங்க.''

''கதவு நொடிக்குதுன்னு சொன்னிங்கல்ல? அதுக்கு [illegible] ஒரு வழி பண்றேன் பாருங்க.''

[illegible]ணாய் கதவு மூடும் ஹைட்ராலிக் கருவி பொருத்த [illegible]டும் என்று திட்டமிட்டான்.

சொர்ணலக்ஷ்மி எதேச்சையாக வந்து கதவு திறக்கா [illegible] ால் மூச்சு திணறியிருக்கும். வெளியே வந்து காற்று [illegible]ங்கி மறுபடி கதவை மூடிக்கொண்டது கம்பீரமாய்ப் [illegible]விட்டது. அப்படி கதவை மூடியதை சொர்ண [illegible]மி ரகசியமாய் வைத்துக் கொண்டதும் அமைப்பாய் [illegible]விட்டது. சொர்ணலக்ஷ்மி ஒரு தேவதை போல் [illegible] காப்பாற்றினான். வினாயகத்தை பேச்சால் [illegible] செய்த தந்திரம்தான் அவனுக்கே ஆச்சரியமாய் [illegible]. சரமாரியாய் எப்படித் தன்னால் பொய் [illegible] முடிந்தது என்ற வியப்பு வந்தது. நீயும் பங்கு [illegible] உடனே பையன் அதிர்ந்து போய்ட்டான். [illegible] தரேன்ன உடனே முதலாளின்னுட்டான்.

[illegible]டுக்கணும்னு அவசியமா? சொன்னதெல்லாம் [illegible] வாக்கா? எத்தினி ஏமாத்தி இருப்பான் இந்த

விநாயகம், இடது கை ஒரு பிடி, வலது கை ஒருபிடின்னு மத்தவங்கள்ளாம் ஏலக்காய் திருடுவாங்களாம். இவரு சத்திய சந்தனாம். அந்த எஸ்டேட் வாங்கின பிறகு வைக்கிறேன். தூக்கி அடிக்கிறேன். இந்த மாதிரி ஆளுங்களை திருட வைச்சு மாட்டணும். மனம் கருவிற்று. புத்தி வேகமாய்ச் செயல்பட்டது. அடுத்த எஸ்டேட்டை வேலி ஓரம் நின்று பார்த்தபோது சொர்ணலட்சுமி காபியோடு வருவது தெரிந்தது.

இப்போதைக்கு மதுரைக்குப் போக முடியாது. காலேஜ் நண்பர்கள் கூட்டமோ காபி கிளப் நண்பர்களோ, மீனாட்சி அம்மன் கோவிலோ, திருவிழாவோ சினிமாவோ நாடகமோ போக முடியாது.

மலையில் வேலைதான் பொழுது போக்கு. அப்படி வேலை இல்லையெனில் பொழுது போவது மிகவும் கடினம் பெண்டாட்டி பிள்ளைகள் இருந்துவிட்டால் ஒரு மாதிரி பொழுது போய்விடும். பேசினால் சின்னம்மாவோடுதான் பேச வேண்டும். சின்னம்மா சொந்தக் கதை தான் பேசுவார்கள்.சொந்தக் கதையின் எல்லாப்பகுதியும் கேட்க முடியாது இப்போதைக்கு ஏதாவது பேச வேண்டும் என்றால் இந்தப் பெண்தான் யப்பா...சரிவில் இறங்கி வரும்போதே எத்தனை குலுக்கல்...கன்னம், மூக்கு, முக வாயில் கூட ஒரு செழுமையுள்ளது. கதவு திறந்ததுக்கு நன்றி சொல்ல வேண்டும். வார்த்தையாய் இப்போது சொல்லலாம். பிறகு கீழே தரைக்குப் போகும்போது ஏதேனும் வாங்கியும் வரலாம். என்ன வாங்கி வரலாம்? அதிக விலை இருக்கக் கூடாது. அல்பமாகவும் இருக்கக் கூடாது. ஒரு ஆயிரம் ரூபாய்க்குச் செய்யலாமா? வேண்டாம். ஐந்நூறுக்குச் செய்யலாம். ஒரு பட்டை வெள்ளிக் கொலுசு வாங்கிப் போடலாம். யோசிக்கும் போதே சிரிப்பு வந்தது. ஆனால் கதிரேசன் சிரிக்கவில்லை. வாழ்க்கையைத் தந்திரமாய் உணர்ந்தவர்கள் வெள்ளையாய்ச் சிரிக்க மாட்டார்கள்.

"காபி."

சொர்ணலக்ஷ்மி தம்ளரை நீட்டினாள். கதிரேசன் நிடுக்கிட்டவன் போல் நடித்து அதை வாங்கிக் கொண்டான். அவள், இருப்பை முக்கியமாக்காமல் காபியை உறிஞ்சிக் குடித்தான். சொர்ணலக்ஷ்மி அவன் பேசுவான் என்று எதிர்பார்த்தாள். பேசாமல் காபி குடிக்கவும் பொறுமை இழந்தாள்.

"ரொம்ப யோசனைல இருக்கீங்களா?"

"ஆமாம்."

"என்னா யோசனை?"

"அந்த எஸ்டேட் வாங்கணும்"

"அந்தப் பக்கம் செடியெல்லாம் வாடினாப் போல இருக்கு."

"ஏன்?"

"அக்கறையில்லை."

"எஸ்டேட் வாங்கிப் போட்டுட்டு ஏன் அக்கறை இல்லாம இருக்காங்க."

"காசு கொழுப்பு. மிதமிஞ்சின பணம். சும்மா ஒரு கர்பீரத்துக்கு வாங்கிப் போட்டுட்டு எங்கியோ உட்கார்ந்திருக்கான்."

"நம்ம எஸ்டேட் இவ்வளவு நல்லா இருக்கே...யார் காரணம்?"

"சின்னம்மா. சின்னம்மா இல்லைன்னா இந்த எஸ்டேட் சீரழிஞ்சுருக்கும்."

"நான் அவங்களுக்குத்தான் இந்த எஸ்டேட்னு நினைச்சேன். அப்புறமாத்தான் சொன்னாங்க அது அவங்களுதுன்னு."

"அம்மா, வேற புள்ளை வேறயா? சொத்து என்னு துன்னா லாபம் அவங்களது."

"ரெண்டாந் தாரமாயிருந்தும் உங்க வீட்டோட ஒட்டுனது ரொம்ப ஆச்சரியம்."

"சின்னம்மா குணத்துககு யாரும் பிரியமாத்தான் இருப்பாங்க."

"உங்கம்மாவும் நல்லவங்களாத்தான் இருக்கணும். அவங்க மனசு வைக்காத, பகவதியக்கா இருந்திருக்க முடியாது."

"எங்கம்மாவும் நல்லவங்கதான்."

"உங்களைப் பார்த்தாலே தெரியுது."

"எப்படித் தெரியுது?"

"மிருதுவா பேசறீங்க, எப்பவும் யோசிச்சிட்டு இருக்கிங்க. பக்கத்துல ஆளு இருந்தாலும் எங்கயோ பார்த்துப் பேசறீங்க. ஒரு அசப்புல பார்க்க, உசரமா, நடிகர் சரத் பாபு போல இருக்கீங்க."

அவள் வேண்டுமென்றே திக்கித் திணறிப் பேசினாள். கெட்டிக்காரப் பெண்களின் முதல் அம்பு கொஞ்சம் மழலை கலந்து திக்கித் திணறிப் பேசுவது. தன் உருவம் பற்றி அலட்டல் உள்ள ஆளிடம் அதைப் பற்றிய பாராட்டு சீக்கிரமே செல்லுபடியாகிவிடும்.

நடிகரோடு தன்னை ஒப்பிட்டுப் பேசியது கதிரேசனுக்குப் பிடித்திருந்தது. சொர்ணலக்ஷ்மிக்குப் பட்டைக் கொலுசு வாங்கி வரவேண்டும் என்ற எண்ணம் வந்தது, அப்போதே கொலுசு வாங்கி, அப்போதே போட்டுவிட வேண்டும் என்று பரபரத்தது.

தன்னைப் பாராட்டிய பெண்ணைக் கதிரேசன்

கூர்ந்து கவனித்தான். கூர்ந்து கவனிக்கின்ற ஆளைக் கண்டு சொர்ணலக்ஷ்மி வெட்கப்பட்டாள்.

"நீயும்தான் அழகாயிருக்கே."

அவள் கையைப் பின்னி உடம்பைக் குறுக்கிக் கொண்டாள். அந்தச் செய்கையில் நெஞ்சு விம்மிற்று.

வெட்கப்பட்டு டம்ளருக்குக் கை நீட்டினாள். அவன் வேண்டுமென்றே தொட்டுக் கொடுத்தான். அவள் வாங்கிக்கொண்டு இடுப்பு குழைய நடந்து போனாள். க்யூரிங் அறையைவிட அதிகமான வெப்பம் அவன் உடம்புக்குள் ஏற்பட்டது.

19

ஜூர்து ஆபத்சகாயம் உள்ளங் கைகளை மடித்து நெற்றியில் குட்டிக் கொண்டார். அந்த அரசமரத்தடி பிள்ளையாரை ஆவலுடன் பார்த்தார்.

"அது என்னா சாங்கியம் பண்ணணுமோ பண்ணிட லாம். எல்லாம் நல்ல விலைக்குப் போகணும். நிலம் சொத்துன்னுதான் எங்களுக்குத் தெரியும். நிலம் தேவதைன்னு நீங்க சொல்லித்தான் கேள்விப்படறோம். எனக்குப் பேர்தான் ஜூர்து ஆபத்சகாயம். ஆனா நான் இந்துதான். நாடார் சமுகம். கல்யாணமெல்லாம் இந்து முறைப்படிதான் செய்வோம். பேர் ஒண்டி கிறிஸ்துவப் பேரா இருக்கும். இப்ப பாருங்க நம்ம பிள்ளை பேரு ராபர்ட் குணசேகரன். பொண்ணு பேரு எஸ்தர் மனோகரி. ஒரு தமிழ்ப்பேரை கிறிஸ்துவப் பேரோட அணைச்சாப்பல வைச்சுக்குவோம். துன்னூறு ஆங்ஆமம் வெச்சுக்குவோம். தீபாவளி, பொங்கல் ஆயுத பூஜையெல்லாம் சந்தோஷமா கொண்டாடுவோம். ஏண்டா கொண்டாடறீங்கன்னு கேட்டா தெரியாது. இன்னா காரணம்...இதும் கதை. சொல்லுனு கேட்டா தெரியாது. இப்பக்கூட தலைல குட்டிக்க ஜூர்துன்னீங்க குட்டிக்கினேன்...ஏன் குட்டிக்கினேன்?கேட்டா தெரியாது

"நாலு தலைமுறையா இந்தப் புள்ளையாரு இந்த மரத்தடியில இப்படித்தான் கொஞ்சம் கோணலா உட்கார்ந்திணு இருப்பாரு. நாங்க கோணப் புள்ளையாருன்னுதான் கூப்பிடுவோம். சிலையே கோணால இருக்குன்னுதான் நினைச்சோம். நீங்க சொல்லித்தான் தெரிஞ்சது. மண்ணு சரிஞ்சு, புள்ளையாரு சாய்ஞ்சிருக்கின்னு நீங்க பதற்றத பாத்து எங்களுக்கும் பயம் வந்துடுச்சு. ஐந்நூறு ரூபாய் செலவு பண்ணி சாமியை நிமித்திக் கூரை போட்டுட்டோம். ஐந்நூறு ரூபாய் செலவு பெரிசில்ல. மனசு முக்கியம். மாசத்துக்கு ஆயிரம் ரூபாய்கூட வருமானமில்லாத எஸ்டேட்ல ஐந்நூறு ரூபாய் புள்ளையாருக்கு யாராவது செலவழிப்பாங்களா...இந்த எஸ்டேட் நல்லபடியா விக்கணும்னுதான். புள்ளையாருக்குச் செய்தேன். ஒரு வேண்டுதல் மாதிரி செய்தேன். பிரேசிலுக்கு முன்னாடி கென்யாவுக்கு முன்னாடி காப்பிக் கொட்டைல இது ஒண்ணுமே இல்லை. இதுல பாடு இல்லைன்னாலும் லாபமும் இல்லை. அதுவும் தவிர நம்ம பசங்க ரெண்டும் ஆஸ்திரேலியா போய் செட்டிலாயிடுச்சிங்க.

"இங்கனயே, இந்த மலையிலேயே நீங்க தங்கிக்கலாம். குடும்பத்தை வேணா கூட்டி வைச்சுக்கலாம். சமைக்கறதுக்கு சாமானும், அரிசி, பருப்பு கொடுத்து ஆயிரத்தைந்நூறு ரூபாய் சம்பளம் தரேன். உள்ள வந்து யாரும் பார்க்கணும்னா சுத்திக் காட்டுங்க. மொத்தம் பதினாறு ஏக்கர்னு சொல்லுங்க. ஏலக்காய் போட்டு பார்த்தோம். எடுக்கலைன்னு சொல்லுங்க. காப்பியும் மிளகும்தான் வருதுன்னு சொல்லுங்க. நூத்திப் பதிமூணு சில்வர் ஓக்குனு சொல்லுங்க. நாற்பத்தி ரெண்டு தேக்கு இருக்குன்னு சொல்லுங்க. எனக்கு பிராமிஸ்ன்னா ஒரு பிரியம், ஒரு மரியாதை. அவங்க பயந்தவங்க, நேர்மையானவங்கன்னு ஒரு நம்பிக்கை. ஆமா புள்ளையாருக்கு ஏன் தலைல குட்டிக்கிறோம்?"

கிருஷ்ணமூர்த்தி ஐயர் தோளில் உள்ள துண்டை மாற்றிக் கொண்டார். விநாயகரையும், லூர்து ஆபத் சகாயத்தையும் மாறி மாறிப் பார்த்தார். அவர் வாழ்க்கையைப் பற்றி அவருக்குச் சிரிப்பு வந்தது.

''நம்ம உடம்புல நூற்றுக்கணக்கான நாடிகள் ஓடறது. ஒவ்வொரு நாடிக்கும், ஒவ்வொரு குணமிருக்கு. நெற்றிப் பொட்டுக்கருகே உள்ள நாடிக்குப் பெயர் அமிர்த நாடி. லேசா இரண்டு பக்கமும் சம அளவில் தட்ட அந்த நாடியிலிருக்கிற அமிர்தம் உடம்பு முழுக்கப் பரவறது. தென் யு பிகம் பிரிஸ்க் அண்ட் பிரைட். கடவுள் நம்பிக்கைங்கிற பேர்ல ஒரு சின்ன அக்குபஞ்சர். பிரஷர் ட்ரீட்மெண்ட்.''

லூர்து ஆவலோடு அந்த ஆங்கிலப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

வருமானமே இல்லாத அந்த காபி எஸ்டேட்டை விற்றுவிடுவது என்று லூர்து தீர்மானித்து இரண்டு வருடங்களாகின்றன. ஆனால் விலை கேட்கக் கூட யாரும் வரவில்லை. அப்படி வந்தவர்களை வரவேற்று விவரம் சொல்ல காப்பி எஸ்டேட்டில் சரியான ஆள் இல்லை. லூர்துக்கு போடியில் நெல் வயல் இருக்கிறது தென்னந்தோப்பு இருக்கிறது. கோழிப்பண்ணை இருக்கிறது. துணிக்கடை இருக்கிறது.

இது தவிர பையனும், பெண்ணும் ஆஸ்திரேலியா போய் தாவர ஆராய்ச்சி செய்து கை நிறைய சம்பாதிக்கிறார்கள். அதனால் லாபம் இல்லாத அந்த எஸ்டேட்டை விற்றுவிட லூர்துக்கு எண்ணம் வந்தது. ஆறு தலை முறையாய் வந்த எஸ்டேட் அது. ஐரோப்பிய பாதிரிகள் தமிழ் தேசத்தின் வெயில் தாங்காமல் சற்று குளுமையான இந்த மலையை வாங்கி தங்களுக்கு வீடு கட்டிக் கொண்டார்கள். அவர்களுக்கு கூட இருந்து ஒத்தாசை

செய்ய லூர்துவின் தாத்தாவுக்கு தாத்தா வந்து சேர்ந்தார். படிப்பறிவே இல்லாத அவர் ஐரோப்பிய பாதிரியிடம் மிக உண்மையாய் நடந்து கொண்டார். திரு—வோ, பொய் சொல்லவோ அவருக்கு வராது. கற்றுக் கொடுத்தாலும் அப்படிச் செய்ய முடியாது அந்த தாத்தாவின் பேரனுக்கு ஐரோப்பிய பாதிரிகள் ஆங்கிலம் கற்றுக் கொடுத்தார்கள்.

வெள்ளையர்கள் இந்தியாவுக்கு சுதந்திரம் கொடுத்து விட்டுப் போனாலும் அவர்கள் இங்கிலாந்துக்குப் போகாமல், அவர்கள் அந்த மலையிலேயே அடக்கமானார்கள். ஐரோப்பியருக்குப் பிறகு ஆங்கிலோ இந்தியப் பாதிரியும், அவருக்குப் பிறகு தமிழ்ப் பாதிரியும் தலைமையேற்றுக் கொண்டார்கள்.

ஐரோப்பிய பாதிரி இறந்த போது, மலையின் ஒரு பகுதியைத் தம்மிடம் வேலை செய்பவர்களுக்கு அன்பளிப்பாய்க் கொடுத்தார். அவர் அவர்கள் பங்கு போட்ட போது கிடைத்ததுதான் இந்த எஸ்டேட். காடாய் இருந்த இடத்தைக் காப்பித் தோட்டமாய் மாற்றியது ஆங்கிலோ இந்தியப் பாதிரி. அந்தக் கத்தோலிக்கப் பாதிரிகள், இங்கே யாரையும் மதம் மாறச் சொல்லவில்லை. எப்போதாவது காணிக்கை மட்டும் கேட்டார்கள்.

எவருக்கேனும் குழந்தை பிறந்தால் வீட்டிற்கு வந்து காற்றில் சிலுவைக் குறியிட்டு புனித நீர் தெளித்து பாட்டுப் பாடி பைபிள் படித்து, நாமகரணம் சூட்டுவார்கள். அந்த கத்தோலிக்கப் பாதிரிகளை மதிக்கும் வகையில் பெயர் மட்டும் கிறிஸ்துவப் பெயராக இருக்கும். வாழ்க்கை இந்துவாக இருக்கும்.

இந்த லூர்துவின் குழந்தைகள் இரண்டும் ஆஸ்திரேலியா போக அந்தப் பாதிரிகள்தான் காரணம். மலையில்

உள்ள காடு மெல்ல மெல்ல அழிந்து, காப்பி தோட்டமாய் மாறியது. தாத்தா நட்ட சில்வர் ஓக் மரங்கள் உயர்ந்து நிற்கின்றன. விற்க மனசில்லை. நவீன அரிசி ஆலை கொண்டு வந்து விட்டால் சுலபமாய் பெரிய மனிதனாய் ஆகிவிடலாம். கொஞ்சம் காசு செலவழித்து அரசியல் செல்வாக்குத் தேடலாம்.

ஆனால் எஸ்டேட்டை விற்பதற்குச் சரியான தகவல் சொல்ல எஸ்டேட்டிலேயே ஒரு ஆள் தேவைப்படுகிறது.

''ப்ளீஸ் ஒரு டென் ரூப்பீஸ் தரேளா'' என்று பிச்சை கேட்ட ஐயரை கையோடு கூட்டி வந்துவிட்டார்.ஐயருக்கு பெரிய கம்பெனியில் கேஷியர் உத்தியோகம். நல்ல சம்பளம். ரேஸ் பழக்கம் தொற்றிக் கொள்ள கம்பெனி காசில் கை வைத்திருக்கிறார். கண்டித்து வெளியே துரத்தி விட்டார்கள். குடும்பம் ஆத்திரமுற்று இழிவு செய்ய அவர் கோபித்துக் கொண்டு வெளியே வந்திருக்கிறார். பிச்சை எடுத்து இருக்கிறார். லூர்து மடக்கிக் காரணம் கேட்க, எல்லா உண்மையும் வெட்கமின்றிச் சொன்னார்.

''ஐயரா பொறந்துட்டு திருடலாமா? வழிகாட்டி தப்பு பண்ணலாமா? ஏதோ கெட்ட நேரம் விடுங்க. எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும், மரி மன்னிப்பார். அன்னை மரிக்கு ஸ்தோத்திரம்.'' எஸ்டேட்டில் வேலை தருகிறேன் என்று சொல்ல, கிருஷ்ணமூர்த்தி ஐயர் சரி என்றார்.

சென்னையில் ஒண்டுக் குடித்தனத்தில் இருந்தவருக்கு, இந்த பெரும் பரப்பு அதிசயமாய் இருந்தது. ஒரு நிம்மதி யைக் கொடுத்தது. கிருஷ்ணமூர்த்தி ஐயரின் மனைவி மிக அழகானவள். கெட்டிக்காரி. வயதுக்கு வந்த இரண்டு பெண் குழந்தைகள் வேறு உண்டு.

"குழந்தைகள் சித்திரம் எழுதினாப் போல பளிச்சினு இருக்கு. ரெண்டும் நன்னா படிக்கிறது. பாடறது. ஆனா, அது மட்டும் போதுமா, காசு வேண்டாமா, காசில்லமா கல்யாணம் நடக்குமா... இன்னிக்கு வேட்டைக்கு இறங்கினாத்தானே அதுங்க இருவது வயசில் ஏதாவது நிக்கும்." மனைவி இரவில் கட்டிக்கொண்டு மந்திரம் ஓதினாள்.

அவர் காசு வேட்டைக்காகத்தான் குதிரை ரேசுக்குப் போனார். எடுத்தவுடன் கிடைத்த வெற்றியால் இடை விடாது இறங்கினார். சூது வேதனை தந்தது. வீட்டை விட்டு விலக்கிற்று.

ஒரு ரோஷத்தில் வீட்டை விட்டு வந்து விட்டாரே தவிர, கிருஷ்ணமூர்த்தி ஐயர் என்கிற குடும்பியின் மனது குழந்தைகளிடமும் கொஞ்சிப் பேசுகின்ற மனைவியிடமும் இருந்தது.

"இன்னிக்கு குதிரை ரேசுக்குப் போவேன். நாளைக்கு என்னையும் குழந்தைகளையும் வாடகைக்கு விட்டு சம்பாதிப்பேள். யாரையாவது கொன்னா அஞ்சு லட்சம் காசு தரேன்னா அதுவும் செய்வேள். இப்படிப்பட்ட புருஷன் எனக்கு வேணாம் சாமி..." அவள் கத்த வெளியே வந்து விட்டார். ஆனால் மனம் அவளுக்காக ஏங்கியது. அவளும் ஏங்குவாள் என்று வருத்தப்பட்டது.

காப்பி ஒரு செடி. அதிலிருந்து சிவந்த சிறிய பழங்கள் வருகின்றன. பழத்தில் இரண்டின் கீழ் மூன்று பாகம் விதையாகவே உள்ளது. அந்த விதையில் காஃபின் என்கிற மிக மெல்லிய போதைப் பொருள் உள்ளது. இந்த காஃபின் முதலில் ஒரு உற்சாகத்தைக் கொடுத்தாலும், பழகப் பழகப் பிற்பாடு சோர்வைக் கொடுக்கக் கூடியது. பலவீனத்தைத் தருகிறது. ஐயர் காப்பியைப் படிக்க ஆரம்பித்தார்.

அவருக்கு என்று ஒதுக்கப்பட்ட வீட்டில் இரண்டு படுக்கை அறைகளும், பெரிய ஹாலும் விசாலமான சமையல் அறையும், முன்பக்கம் ஆபீஸ் ரூமும் வராந்தா வீடு சுற்றி ஏகப்பட்ட பூச்செடிகளும் இருந்தன. பழைய ஃபைல்களை பார்த்து பராமரிப்பு பற்றி தெரிந்துகொண்டார். ரெண்டாயிரம் பேர் வேலை செய்யும் கம்பெனியில் முக்கியமான பொறுப்பைக் கவனித்தவருக்கு இந்த வேலை அல்வாத் துண்டு.

எஸ்டேட்டின் எல்லையோரம் நடந்து போக அதன் விஸ்தீரணம் புரிந்தது. இதை ஏன் லூர்து விக்கிறான். யார் வாங்குவார் என்று கேள்வி எழுந்தது. எஸ்டேட் வாசலில் சாய்ந்து கிடந்த பிள்ளையாரை உடனே நிமிர்த்தி வைக்கவேண்டும் என்று லூர்துவிடம் கட்டளையிட்டார்.

''அப்பனே இந்த எஸ்டேட்டை காவல் காக்க எனக்குத் தெரியாது.உனக்கும் இந்த நிலத்தில் உள்ள தேவதைகளுக்கும் என் நமஸ்காரம். சரிஞ்சு போன என் வாழ்க்கையை நிமிர்த்தி வை. நான் சாகறதுக்குள்ள வேறொரு இடத்தில உனக்கு கோவில் கட்டறேன்.'' மனசு கை கூப்பி வேண்டியது. எஸ்டேட்டைச் சுற்றி வந்தபோது யாரோ வாசலில் உட்கார்ந்து இருந்தார்கள்.

''யாரு?''

''இந்த எஸ்டேட் விலைக்கு வருதுங்களா?''

''ஆமாம்''

''என்ன விலை?''

''யாரு வாங்கப் போறா?''

''நாங்கதான்.''

"தனியா குத்துக்கால் போட்டு உட்கார்ந்துனு நாங்க தான்னா இன்னா அர்த்தம்?"

"எங்க பின்னாடி ஒரு படை.யே இருக்குன்னு அர்த்தம்."

"போய் படையோட வாங்க பேசுவோம்"

"ஏன் எங்களோட பேச மாட்டீங்களா?"

"யார் கூடயும் பேசலாம்.பேச்சு நேரா இருக்கணும்"

"இன்னா மறைச்சிட்டோம்?" வினாயகம் எழுந்து நின்றான்.

"இந்த காப்பி எஸ்டேட், கடலை மிட்டாயி இல்ல. விலை பேசறவங்க யார்னு தெரியாம விவரம் சொல்ல மாட்டோம்."

"ஒரு நாளைக்குப் பதினைஞ்சு பேர் வர்றாங்க. அத்தினி பேர்கிட்டயும் விலை சொல்லினு இருந்தா மத்த வேலை கவனிக்கிறது எப்படி?" ஐயர் காப்பியிலேயே ஊறியது போல் கம்பீரமாய்ப் பேசினார்.

வினாயகம் யோசித்து விட்டுப் பணிவானான். ஒரு செட்டிப் புள்ளைங்க. மலைக்கு அந்தண்ட நாப்பது ஏக்கர் ஏலக்காய் எஸ்டேட் வைச்சிருக்குது. தகப்பனார் சமீபமா செத்துரவே சொத்துப் பிரிச்சாங்க, எஸ்டேட் தவிர கையில் ரொக்கமா துட்டு வேற வைச்சுருக்குது. ஏலக்காய்ல இருந்துக்கிட்டே காப்பியும் வாங்கணும்னு ஆசை. நான்தான் அந்தப் புள்ளைக்கு எல்லாம். நம்மை கேட்டுக்கிட்டுதான் நாலு பேரோட பேசும். நான் சொன்னாத்தான் விஷயத்திலேயே இறங்கும்."

"என்ன பேரு, என்ன வயசு?"

"பேரு கதிரேசன்ங்க. வயசு இருபத்தி நாலு இருபத்தி அஞ்சு இருக்கும்."

''பார்ட்டிய கூட்டிட்டு வாங்க பேசுவோம்.''

''நமக்கு எவ்வளவு தருவீங்க?''

''இன்னா?''

''எனக்கு எவ்வளவு கமிஷன்?''

''இப்படி ஒரு விஷயம் உண்டோ? விற்பதற்கும் வாங்குவதற்கும் கமிஷன் வேற உண்டோ? ஐயர் மூளை பரபரப்பாயிற்று. கூட்டிண்டு வாங்கோ பார்ப்போம்.'

''கமிஷன் சொன்னாத்தானே கூட்டிட்டு வரமுடியும்.''

''நீங்க கூட்டிட்டு வரவேண்டாம்'' ஐயர் பளிச் சென்று அறுத்தார்.

''அப்போ விக்கிறதா இல்லீங்களா?'' விநாயகம் ஆச்சர்யப்பட்டான்.

''விக்கப் போறோம். உங்களை மாதிரி ஏஜண்ட்களை உள்ள சேக்க மாட்டோம். வாங்கறவங்களோட நேரா பேசுவோம்.''

''இது இன்னாங்க புதுசா இருக்கு.''

''ஆமாம் புதுசுதான். ஏஜண்டோட பேசறதில்லை. ஏஜண்ட்களை உள்ள விடறதில்லை. நீங்க போலாம்.''

வினாயகத்தை வெளியே அனுப்பி விட்டு கிருஷ்ண மூர்த்தி ஐயர் தானே ஏஜண்டாக வேண்டும் என்று ஆசைப்பட்டார். தன் குடும்பத்திற்குக் காசு சம்பாதிக்க வேண்டும் என்ற வெறி மறுபடியும் தொற்றிக் கொண்டது.

20

பெண்ணை நேசிக்கத் தொடங்கி விட்ட பிறகு, அந்த நேசிப்புக்கு, மிக மெல்லியதாய் அவள் அங்கீகாரம் தந்துவிட்ட பிறகு, ஆணுக்கு ஏற்படும் பரபரப்பு அசாத்தியமானது. மனம் நீர்ப்பறவையிடம் சிக்கிய மீனாய் துடிக்கத் தொடங்கி விடுகிறது. நிலைக் கண்ணாடி அவனைக் கவ்விக் கொள்கிறது,

அவள் பார்வையில்தான் எப்படி இருப்போம் என்பதை ஒரு ஆணுக்குக் கவிதை சொல்லுமா? கதை வடிவம் காட்டுமா? ஓவியம் உதவுமா? கண்ணாடிதான் காட்டும். அவனைப் பற்றி அவனுக்கே நிலைக் கண்ணாடிதான் கவிதை சொல்லும். அவன் உடம்பு கருப்பொருள். அவன் உடைகள் வரி வடிவம். ஒருவன் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வதை விட மிகச்சிறந்த கவிதை ஏதும் உண்டா? அதைவிடப் பொழுது போக்கான அம்சம் உலகில் இல்லை? அதைவிடப் பலன் உள்ள ஒரு செயல் மனிதன் செய்ததே இல்லை. தன்னை நேசிக்கத் தொடங்குவதின் முதல்படி, ஆண் தன்னைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்வது. தன்னைக் கண்ணாடியில் பார்க்கப் பார்க்க ஆண், பெண் தன்மை கொள்கிறான். பார்க்க விருப்பமில்லாதவர்கள் மூர்க்கர்களாக இருப்பர்.

தான் நேசம் கொள்ளத் தகுந்தவன் என்றும் தன்னை யாரோ நேசிக்கின்றார்கள் என்றும் நினைக்க, ஆண் மலர்ச்சி அடைகிறான். பெண்ணால் மாற்றப்படும் ஆண்தான் பின்னால் கனிய முடியும்.

கதிரேசன் ஜீன்ஸ் பேண்ட்டும், ஜெர்க்கினும் போட்ட நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டான். கால்ல அணிந்திருந்த பவர் ஷூக்கள் தெரிய வேண்டு மென்று ஒரு ஸ்டூலில் ஏறி அழகு பார்த்தான். பல சினிமாக் களில் மலைத் தொடர்களில் பாடல் காட்சிகள் வருகின் றன அந்தப் பாடல் காட்சிகளில், கதாநாயகர்கள் ஜெர்க்கின் போட்டுத்தான் வருகிறார்கள், ஜீன்ஸ்போட்டு கால்ல நடக்கிறார்கள். கதிரேசன் ஒரே இடத்தில் நின்று, நி ந்து பார்த்தான். தலையைக் கோதிக் கொண்டான் வெளியே வந்தான்.

கடலைப் பருப்பை வெயிலில் பரப்பிக் கொண்டிருந்த சொர்ணலக்ஷ்மி அவனைப் பார்த்ததும் வியப்போடு எழுந்தாள்.

''ஐயோ அப்படியே சரத்குமார் மாதிரி இருக்கீங்க?'' பெரிய குரலில் வியந்தாள்.

கதிரேசனுக்கு சந்தோஷமாக இருந்தது.

''வெளிய வர்றியா போலாம்?'' சட்டென்று அவளை கூப்பிட்டான்.

''எங்க கூப்பிடறீங்க?''

''காபி எஸ்டேட் ஓனர்ஸ் யூனியன் இருக்காம். அடி வாரம் போகணுமாம்?''

''அடிவாரம்? திரும்பிவர பஸ் கிடைக்குமா?''

''கிடைக்காது. எட்டு மணிக்குத்தான் கடைசி பஸ்''

''அய்யோ நான் மாட்டேன்?''

''நாம்ப பஸ்ல போகலை, கார்ல போலாம்?''

''அய்ப திரும்பிடலாமா?''

"திரும்பியே ஆவணும்?"

"ஏன்?"

"வெளிச்சம் வந்த பிறகு நானும் எல்லோரோடயும் ஏலக்காய் பறிக்கப் போறேன்?"

"வேலை கத்துக்கப் போறிங்களா?"

"வேலை எப்படிச் செய்வாங்கன்னு பார்க்கப் போறேன்."

"நான் உங்ககூட வந்தா, பகவதியக்கா ஏதாவது சொல்லாதா?"

"சொல்றதுக்கு இன்னாருக்கு?"

"அப்ப நீங்க கேளுங்களேன்?"

"சின்னம்மா நான் அடிவாரம் போறேன். நீங்க வறீங்களா?"

"இன்னா அடிவாரத்தில?" பகவதி உள்ளிருந்த படியே கேட்டாள்.

'காபி எஸ்டேட் ஓனர்ஸ் அசோசியேஷன்னு ஒன்னு இருக்கு. அங்கபோய் உட்கார்ந்து நாலு பேரோட பேசி ஏதாவது தெரிஞ்சிட்டு வரலாம்னு பார்க்கிறேன்."

"டக்குன்னு வாய் உட்டுடக் கூடாது கதிரேசா? இன்னா விலைன்னு கேட்டுடக் கூடாது? ரொம்ப நல்லா இருக்கே எஸ்டேட்டுனு பாராட்டக் கூடாது?' என்கிட்ட மிதமிஞ்சி காசு இருக்கு. அந்த காசை குப்பைல போடறதுக்கு பதிலா காபி எஸ்டேட்ல போடறேன்' அப்படின்னு மாதிரி பேசணும். எந்த வாக்கும் கொடுத்துடக் கூடாது"

"கொடுக்க மாட்டேன் சின்னம்மா."

''யார் ஒனரோ அவங்க கிட்டதான் பேசணும். [illegible] ஒனரான்னு தெரிஞ்சுக்கிட்டுதான் பேசணும். [illegible] பழகு. அது நல்லது. ஆனா ஆர்வம் காட்டாத.''

''நீங்களும் வாங்களேன் ''

''நானா. அது நல்லாருக்காது.''

''ஏன் சின்னம்மா?''

''எனக்கு நிறையப் பேரைத் தெரியும். எல்லோரும் [illegible]க்கம் விசாரிப்பாங்க. பிறகு எஸ்டேட்டை வச்சிருக் [illegible], விக்கிறியானுவாங்க...பையனுக்கு விவரம் தெரியு [illegible]லுவாங்க. ஒரே பதிலை நூறு தடவை சொல்லி [illegible] உலர்ந்திடும். புருஷன் இல்லாத பொம்பளைன்னா [illegible]றைய பேருக்கு இரக்கம் பொத்துக்கும். உன்னை [illegible]துக்கு அனுப்பறேன் தெரியுமா? எஸ்டேட்டைக் கவனிச் [illegible] எம் புள்ளை வந்துட்டான்னு மலையிலிருக்கிற [illegible]ல்லாருக்கும் தெரியணும். செட்டியார் வீடு எனக்கு [illegible]றுந்து போயிடலைன்னு வர்றவன் போறவன் எல்லாம் [illegible]தெரிஞ்சுக்கணும்.''

''அப்போ என்னை மட்டும் தனியா போகச் சொல் [illegible]றியா?''

''வினாயகத்தை கூட்டிட்டு போயேன்...ம்...வாணாம். அவன் வாணாம்...''

[illegible]வதி தீவிரமாக யோசித்தாள். அவனை அடக்காத [illegible]ட்களை அவனோடு அனுப்ப வேண்டும் என்று நினைத் [illegible]ன், அதே நேரம் அவன் அடிவாரத்தில் என்ன பேசி [illegible] என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டாள். தானே [illegible]கலாமா? இப்படிப் போவது தவறாகுமா? யாரை [illegible]?

"சொர்ணலக்ஷ்மியை கூட்டிட்டுப் போயேன்." யோசிப்பு எடை போடுமுன் வார்த்தைகள் விழுந்து விட்டன.

"சொர்ணலக்ஷ்மி, வா போலாம்."

அவன் சட்டென்று திரும்பி கார் நோக்கி நடந்தான். அந்த கம்பீர நடையை பகவதி பாசத்துடன் பார்த்தாள். 'கடவுளே, இந்த நடை மலை முழுக்கப் பரவணுமே' என்று வேண்டினாள். சட்டென்று திரும்பி சொர்ண லக்ஷ்மி துள்ளிக் குதித்து ஓடுவதைப் பார்த்தாள்.

பெண்ணால் சந்தோஷத்தை அடக்க முடியாது. சொர்ணலக்ஷ்மியால் அடக்க முடியாதது அவள் நடையில் தெரிந்தது.

மீண்டும் பகவதி அவளைக் கூர்ந்து பார்த்தாள். சொர்ணலக்ஷ்மி காருக்குள் ஏறுவதில் ஒரு கர்வம் தெரிந் தது. கதவை அடித்து மூடியதில் ஒரு ஆத்திரம் தெரிந் தது. சாய்ந்து உட்கார்ந்ததில் ஒரு அலட்டல் தெரிந்தது.

"ரொம்ப கெட்டிக்காரர்ப்பா, நீங்க. எம் பேரை நீங்க சொல்லாது. அக்காவை சொல்ல வைச்சுட்டீங் களே" சொர்ணலக்ஷ்மி உரிமையோடு கதிரேசன் முதுகில் தட்டினாள்.

அந்த தட்டுதலை பகவதி பார்த்தாள். துணுக்குற் றாள். தப்பு செய்துட்டமோ என்று கலங்கினாள்.

முதன் முதலில் காபி எஸ்டேட்பற்றி விவரம் கேட்கப் போகும் ஒரு இளைஞனை, கைத்தட்டி திருப்பி அழைக்க அவளுக்கு மனம் வரவில்லை. அது அபசகுனம் என்று நினைத்தாள். எதிரே கூடையில் ஏலக்காய் நாற்றுகள் அடுக்கி வைத்துக் கொண்டு பத்து பன்னிரண்டு பெண்கள்

உள்ளே நுழைந்தார்கள். நாற்றங்கால் எதிரே படுவது சகுனம் அல்லவா. இது வளர்ச்சி அல்லவா.

கதிரேசன் வளரட்டும். என் வயிற்றில் பிறக்காத இந்த மகன் பெரும் மரமாய் தரை ஊன்றி நிற்கட்டும். பலருக்கு நிழல் தருகின்ற பயனை வழங்கட்டும். அவளை யாரும் அறியாமல் அவள் குலவையிட்டாள். நாற்று தூக்கி வந்த பெண்கள் அவள் குலவையைக் காதில் வாங்கி அவர் களும் குலவையிட்டார்கள்.

"என்ன குலவை போடறாங்க?' ஓடுகின்ற வண்டியி லிருந்து சொர்ணலக்ஷ்மி ஆவலுடன் திரும்பிப் பார்த் தாள்.

"நாம போற காரியம் நல்லபடியா முடியணும்னு குலவை போடறாங்க" கதிரேசன் வண்டியை வளைத்து, சரிவில் ஓட்டினான்.

"நாம இப்பப் போயி காப்பி எஸ்டேட் வாங்கப் போறமா?" அவள் ஆவலோடு கேட்டாள்.

"ஏதோ ஒண்ணு வாங்கப்போறோம், ஏதோ ஒண்ணு விக்கப் போறோம்."

அவன் அலட்சியத்தோடு பதில் சொன்னான்.

அவன் தன்னை விற்று அவளை வாங்கப் போகிறான் என்று இருவருமே அறிந்திருக்கவில்லை.

கிருஷ்ணமூர்த்தி அய்யருக்கு வலது கண் துடித்தது. வலது புஜத்தின் பின் பக்கம் ஒரு அதிர்வு ஏற்பட்டு அந்தக் கையின் மோதிர விரலில் முடிந்தது.

கடவுளே இது நல்ல சகுனம். யாரோ நல்லவர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். அவர் நிமிர்ந்து பிள்ளை யாரைப் பார்த்தார்.

"நான் பட்டது போதும்னு தோணலியா? என் பொண்டாட்டியும், குழந்தைகளும் துடிச்சிட்டுருக்கிறது தெரியலியா? இப்படி ஒரு வனாந்திரத்தில் உட்டுட்டியேப்பா. என்னை ஜெயிலுக்கு அனுப்பறதுக்கு பதிலா காபி எஸ்டேட்டுக்கு அனுப்பிச்சுட்டியா? ஒரு நாளைக்கு நானூறு பேர் குட்மார்னிங் சொல்ற வேலையிலிருந்து புடுங்கி இங்கப் போட்டுட்டியே, இது போறாதா? யார் குடியைக் கெடுத்தேன்? எந்த ஜோடியைப் பிரித்தேன்? எனக்கேன் இப்படி ஒரு ரேஸ் ஆடற புத்தி? காசு திருடற குணம். தப்பு பகவானே, தப்பு. இனி மனசாலயும் நான் யாருக்கும் துரோகம் பண்ண மாட்டேன். எனக்கு என் குழந்தைகளைப் பாக்கணும் என் பொண்டாட்டி மடியில படுத்துண்டு அழணும். கேழ்வரகுக் களியானாலும் உழைச்சு சம்பாதிச்சு உட்கார்ந்து சாப்பிடணும்.

"இன்னும் முப்பது நாள்ல என்னை என் வீட்டில் சேர்த்துடு. வெறும் கையனா, மொட்டைத் தலையனா நிக்க வைக்காத. ஏதோ வீட்டுக்கு எடுத்துட்டுப் போற ஆளா, அப்பா சம்பாதிச்சுண்டு வந்தார்னு சந்தோஷப் படற விதமா அனுப்பு.

"பிள்ளையாரே, நீ கல்லு இல்லை. என் மனசு. என்னைக் காப்பாத்து. என்னை என் வீட்டில் கொண்டு போய்ச் சேரும். வீடுதான் சொர்க்கம். வீடுதான் விடுதலை.

பஞ்சமும் நோயும் நின் மெய்யடியார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினியார்க்கோ?
தஞ்சம் அடைந்த பின் கைவிடலாமோ?
தாயும் தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?"

கிருஷ்ணமூர்த்தி அய்யர் வாய்விட்டுப் பாடினார்.

மனம்விட்டு அழுதார். தனிமை கொடுத்த தைரியத்தில் குழந்தைபோல் தேம்பினார்.

உண்மையான அழுகை என்பது ஒருமுகப்பட்ட பிரார்த்தனை. உண்மையில் கரைந்து உருகியவர்களுக்கு ஒருமுகப்படுவது எளிதாய் வரும். மனசு ஒருமுகப்பட தன்னிலும் மேலானது தெரியும், தன்னிலும் மேலானது தெரிய, தான் என்ற கர்வம் அழியும். தான் என்கிற கர்வம் அழிய, சுகம், சந்தோஷம், சௌகர்யம்.

தேம்பிய மனசு தெளிவான போது வாசல் பக்கம் கதவு அசைவது கேட்டது. ஜெர்க்கின் அணிந்த ஒரு இளைஞன் கதவு திறக்க முயற்சி செய்து கொண்டிருந்தான்.

"என்ன வேணும்?"

கிருஷ்ணமூர்த்தி சகலமும் மறந்துலிட்டு கம்பீரமாகக் கேட்டார்.

"வண்டி சூடாயிடுச்சுங்க, ஒரு வாளி தண்ணி கொடுக்கிறீங்களா?"

"வண்டியை உள்ள கொண்டாந்துருங்க" கிருஷ்ண மூர்த்தி கதவு கொக்கியை நீக்கி திறந்து விட்டார். வண்டிக்குள் இருந்த பெண் பிள்ளை அவரைப் பார்த்துத் தெளிவாய்ச் சிரித்தாள்.

அட, அம்பி பொண்டாட்டியோட வந்திருக்கானோ

"வாப்பா, தண்ணி என்ன...ஏ கிளாஸ் காப்பி போட்டுத் தரேன், சாப்பிடு."

அவருக்கு யாரிடமாவது அன்போடு பேச வேண்டும். உபசரிக்க வேண்டும் என்கிற ஆவல் எழுந்தது. அந்தக் கார் உஷ்ணத்தோடு உள்ளே நுழைந்தது.

21

ஆணுக்கு நல்ல மனைவி பேரானந்தம். மிகப் பெரிய பலம். உடல், மன ஆரோக்கியம், விவரிக்க முடியாத ஒரு சந்துஷ்டி. அன்பு செய்வதாலும், அன்பு பெறுவதாலும் மனம் ததும்பி நிற்கும் உவகை. உடல் தளர்ந்து, காமம் அடங்குகிற போது மனம் சந்நியாசத்தில் முழுமையாய் நிற்கும். அது வீட்டைவிட்டு ஓடும் துறவு அல்ல. வீட்டில் இருந்தபடியே வீட்டைத் துறக்கும் துறவு. மனைவி இருந்தபோதிலும் காமத்தைத் துறக்கும் துறவு. பிள்ளைகள் பேரன்கள் என்று இருந்தபோதிலும் அவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் ஒதுங்கிக்கொள்ளும் துறவு. ஊரில் உள்ள வாலிபர்களையெல்லாம் பிள்ளைகளாகவும், யுவதிகளை எல்லாம் தன் பெண்களாகவும், குழந்தைகளையெல்லாம் பேரன் பேத்திகளாகவும் பார்க்கும் துறவு.

சொர்ணலக்ஷ்மி கார் கதவைத் திறந்து குதித்து இறங்கியதும் ஹா...என்ற வியப்பு நெஞ்சைத் தாக்கியது. அந்தப் பெண்ணின் வயசும் அழகும் அப்படிப் பார்க்க வைத்தன. கிருஷ்ணமூர்த்தி அய்யருக்கு இருபத்தி மூன்று வயதில் திருமணம். அவர் மனைவிக்கு அப்போது பதினெட்டு வயது. கிருஷ்ணமூர்த்தியின் அக்கா ஓடிவந்து கிருஷ்ணமூர்த்தியின் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

"இப்பத்தான் உன் பொண்டாட்டிக்கு நாத்தனார் புடைவை கட்டிட்டு வரேன். உன் பொண்டாட்டி கடலைப் புண்ணாக்கு. ஜாதி நாட்டுப்புறம். புடைவை கட்டக்கூட தெரியலை. ஆனா பாவாடையும் பிளவுசுமா நின்னா பாரு, தாராசுரம் மோகினி சிலை மாதிரியிருக்கா. பைத்தியமா மாறி, அவ காலடியில கிடக்கப்

போற. ஆனா அதட்டி உருட்டாம நிதானமா நடந்துக்க. நிரு அம்மாகிட்டயும் சொல்லிட்டு வரேன்.''

போகிற போக்கில் சொல்லப்பட்ட அறிவுரையை கிருஷ்ணமூர்த்தி கவனமாய் வாங்கிக் கொண்டார். நிறைய பேசி நிதானமாய் நடந்து கொண்டார்.

''எல்லாரும் சொன்னா, நீ ரொம்ப அழகுன்னு. இப்பத்தான் தெரியுது. எல்லாம் பொய்யுன்னு.''

''ஏன் நான் அழகில்லையா?''

''பேரழகு, இவ்வளவு அழகான பொண்டாட்டிக்கு நான் கொஞ்சம் கூட தகுதியே இல்ல. ரதிக்கு பக்கத்தில ராட்சசன் நிக்கிற மாதிரி இருக்கு.''

அவர் மனைவி, அவர் வாயைப் பொத்தினாள்.

''நீங்களும் அழகாத்தான் இருக்கேள். ஆம்பளைக்கு அழகுங்கிறது, நடத்தை, நிதானம், திறமை. நீங்க திறமையானவான்னா ஊர்ல சொன்னா. நல்ல நடத்தைன்னு ஜாதகம் சொல்லித்து. நிதானமானவர்னு பேசறச்சே தெரியறது.''

''அப்படியா?''

''ஆமாம். உள்ள நுழைஞ்ச உடனே உன் புருஷன் பாய்ஞ்சு புடுங்கலாம். ஆ...ஊன்னு கத்தாம அடங்கிப் போ, அப்படின்னு பயமுறுத்தினா. நீங்க எதிரே உட்கார்ந்துனு பேரழகுனு சொல்றேள். இது நிதானமில்லையா?''

''ஏண்டா இப்படி நிதானமா இருக்கன்னு சொல்றியா?''

''சேச்சே. இந்த நிதானம்தான் அழகு. நான் கலைஞ்சு குப்பையா வருவேன்னு என் பிரண்ட் ஒருத்தி பெட் கட்டியிருக்கா. நான் காத்தால எழுந்து மடிப்பு கலையாம

அவ எதிர்க்க நடக்கணும். எங்க அம்மா உட்பட ஹான்னு...வாயப் பொளக்கணும். என்னடி நடந்தது, என்னடி நடந்ததுன்னு அத்தனை பேரும் கேட்கணும். ஒன்றும் நடக்கலை சும்மா பேசிண்டிருந்தோம்னு நான் சொல்லணும். அப்படியா, அப்படியான்னு அதுகள் அதிசயப் படணும். அடுத்த வருஷமே புள்ளை பெத்தும் காட்டிடணும்.''

''நீ சொல்ற மாதிரியே பண்ணிடுவோம். பேசாத படுத்துக்கோ.'

''உங்களுக்கு வருத்தமில்லையே.''

''நீ வருத்தப்பட்டாதான் எனக்கு வருத்தம். மத்தபடி எனக்குன்னு தனியா எதுவுமில்லை. உன் புருஷன் மிருக மில்லைன்னு உனக்கு சொல்லணும். இது நியாயமான ஆசைதானே.இதுக்கு நான் அனுசரணையா இருக்கணும் தானே.''

''ராமா...இது போறும். நான் எப்பேர்ப்பட்ட பொண்டாட்டியா இருந்து காமிக்கிறேன் பாருங்கோ. நீங்க நெல்லுன்னா போதும், நான் அரிசியா, சாதமா நிக்கறேன் பாருங்க. நாலு பேருக்கு நடுவிலே கம்பீரமா இருக்கறதுக்குப் பேருதான் குடித்தனம். குடித்தனக்காரி புருஷனால அவமானப்பட்டா அது நரகம்.''

''நீ சாதமா இருக்கறதை பின்னால பாத்துக்கலாம். இப்போ ஒரு ஹெல்ப் பண்ணணுமே.''

''என்ன?'' அவள் ஆவலாகக் கேட்டாள்.

''எங்கம்மா பத்து வருஷம் வரைக்கும் என்னை நெஞ்சுல தட்டி தூங்கப் பண்ணுவா. ஒரு வருஷம் டிபியில அவஸ்தைப்பட்டு என்னோட பதினோராவது வயசில செத்துப் போயிட்டா. அவளை மாதிரியே கொஞ்சம் நெஞ்சில தட்டி தூங்கப் பண்றயா?''

"அடி என் செல்லமே...இத்தனை வேதனையா உனக்கு?" அவள் பாய்ந்து அவர் கன்னத்தில் முத்தமிட்டாள். மல்லாந்து படுத்தவர் நெஞ்சில் தட்டத் துவங்கினாள். அம்மா இல்லாத புள்ளை முரடா இருக்கப் போறான்னு சொன்னா. இது குழந்தையால்ல இருக்கு. முகமெல்லாம் வருடி விட்டாள். உங்களை அசந்து தூங்கப் பண்ணுவது என் வேலை. இன்னிக்கு ஒரு நாள் என் பெட்டில நான் ஜெயிக்கறதுக்கு ஹெல்ப் பண்ணுங்கோ. வாழ்க்கை பூரா உங்ககிட்ட தோக்க தயாராயிருக்கேன். ஆனால் அவள்தான் ஜெயித்தாள். ஆளுமை செய்தாள்.

ஆனால் அவள்தான் ஆளுமை செய்கிறாள் என்பது யாருக்கும் தெரியாது. அவள் அப்பா, அம்மாவுக்குக்கூட தெரியாது.

"பத்து கத்திரிக்காயில எட்டு கத்தரிக்காய் சொத்தை. என் புருஷன் என்னை செருப்பை எடுத்துணு அடிக்க வரான். ஏதோ உன்னால உண்டான புண்ணியம் நான் திட்டு வாங்கினேன் இன்னிக்காவது நல்ல காயா கொடு" மிகப் பெரிய சோக நாடகம் அரங்கேற்றுவாள். வீட்டில் வேற்று மனிதர்கள் இருக்கும் போது விலகியும் பயந்தும் தான் பேசுவாள். ஆனால் எல்லா முடிவுகளும் அவளே தன்னிச்சையாய் எடுப்பாள்.

துள்ளிக் குதித்து சொர்ணலக்ஷ்மி வந்த போது கிருஷ்ணமூர்த்திக்கு அவர் இளமைக் காலமும், சிறுவயதில் தான் பார்த்த மனைவியின் ஞாபகமும் வந்தன. இவர் இருவரும் வாழ்க்கையை நன்றாக அனுபவிக்க வேண்டும் என்று அவர் மனதார விரும்பினார். அவர்கள் கணவன் மனைவி என்பதாகவே தீர்மானித்து விட்டார்.

இறங்கி சற்று நேரத்துக்குப் பிறகுதான் அது காப்பித் தோட்டம் என்பதை கதிரேசன் கவனித்தான். 'அடடே'

என்று மனசு துள்ளியது. யார் ஓனர் என்ற கேள்வி வந்தது.

வெள்ளை வெளேர் என்று கதர் வேஷ்டியும் சட்டையும் மழுங்கச் சிரைத்த முகமும், படிய வாரிய தலையும் மேல் துண்டுமாய் இருந்த பெரியவரைப் பார்த்ததும் மரியாதை வந்தது. இவர் ஓனராக இருக்குமோ?

''காப்பித் தோட்டங்களா?''

''ஆமாங்க.'

''எத்தினி ஏக்கர்?''

''நாப்பத்தி ரெண்டரைங்க.''

''சிங்கிள் ஓனர்ங்களா?''

''ஆமாங்க.''

''நீங்கதான் ஓனர்ங்களா?''

''நம்ம தோட்டந்தான் தம்பி, வாங்கப் போறீங்களா?''

''இப்ப யாருங்க காப்பித் தோட்டம், வாங்குறா. ஏலக்காய்க்குத்தான் அலை மோதுறாங்க. முன்ன வருஷா வருஷம் விலை கூடிட்டு இருந்தது. இப்ப ஏலக்காய் தோட்டம் மாசா மாசம் விலை கூடுதுங்க. முத்துன செடியா இருந்தா அறுபத்தி அஞ்சி, இல்ல எழுபத்தி அஞ்சி, ஒரு லட்சம் வந்துடுங்க.''

''தம்பி ஏலக்காய் வைச்சிருக்கீங்களா?''

''ஆமாங்க, நாப்பது ஏக்கர், மேற்குப் பாத்திருக்கு.'

''இப்ப வாங்கினதுங்களா?''

"இல்லை தாத்தா காலத்தது. கடன் கொடுக்க முடியாம, ஆனா நிலத்தைக் குடுத்துட்டுப் போயிட்டான். அடி மாட்டு ரேட்டுக்கு வாங்கி அப்படியே புதராக்கி ந்தது. அப்பா காலத்துல சீர் பண்ணி நல்லா கொண்ட ாந்தாங்க."

"காருக்கு என்ன ஆச்சுங்க?"

"ரேடியேட்டர் மூடி கழண்டு போச்சு. இப்பத்தான் பார்த்தேன். தண்ணி வெளியே சிந்தி இஞ்ஜின் ஹீட்டாயிடுச்சு."

"அடடே, அப்ப மறுபடியும் தண்ணி ஊத்தினாலும் பொங்கிடுமே."

"ஆமாம், எதுனா போட்டு அடைக்கணும்."

"முதல்ல சூடு ஆறட்டும்"

கட்டிடத்தில் நுழைந்த கதிரேசனுக்கும், சொர்ணலக்ஷ்மிக்கும் கிருஷ்ணமூர்த்தி அய்யர் காபி போட்டுக் கொடுத்தார். அவர் காப்பி தயாரித்துக் கொண்டிருந்த போது நாற்காலியில் உட்கார்ந்தபடி மேஜைமேல் இருந்த காகிதங்களை, கதிரேசன் ஆராய்ந்தான். அரிசி, பருப்பு செலவு கணக்கும், கெரசின், சோப்பு, சலவைத் துணிகள் கணக்கும், உரம், பூச்சி மருந்துகள் என்று சில கணக்குகளும் இருந்தன.

சொர்ணலக்ஷ்மி தானும் ஏதாவது ஆராய்ச்சி செய்ய ஆசை கொண்டாள். மேஜை டிராயரை இழுத்தாள். வெளிநாட்டு இண்லேன்ட் கடிதம் ஒன்று பிரிக்கப்பட்டிருந்தது. அதைப் புரட்டிப் படித்தாள்.

"அந்த காப்பி தோட்டத்தை விற்று விட்டு ஆஸ்திரேலியா வந்து விடுங்கள். நல்ல ஜாயிண்டில் சிறிய ஷாப்பிங் சென்டர் ஆரம்பிக்கலாம். சீல் செய்யப்பட்ட டின் உணவுகளையும், தானியங்களையும் விற்கலாம்.

ஆஸ்திரேலியர்களுக்குத் தாழ்ந்து, பணிந்து பேசினால் மிகவும் பிடிக்கும். புகழ்ந்து பேசினால் வாயெல்லாம் பல்லாகும். அரை கிலோ ஆட்டுக் கறி விற்று விட்டு, "உங்கள் மகளை எங்கே காணோம்? அவள் நலமாக இருக்கிறாளா?" என்று கேட்டால் போதும். அந்த கஸ்டமர் உங்களை விட்டுப் போகவே மாட்டார். நிறைய இந்திய வியாபாரிகள் குசலம் விசாரித்தே பெரும் பணக்காரர்களாக ஆகிவிட்டார்கள். இந்த வயதில் இன்னும் சிரமப்படாதே. அம்மாவுக்கு என் முத்தங்கள்," கீழே ஒரு கிறிஸ்துவப்பெயர் எழுதியிருந்தது.

"அப்படியானால் இது அய்யருடைய தோட்டமில்லை. அப்படியானால் அய்யர் யார்? நம்ம நிலந் தாங்க என்றாரே அதற்கு என்ன அர்த்தம்? கடிதத்தைச் சட்டென்று உருவி ஜாக்கெட்டுக்குள் சொருகிக் கொண்டாள்.

"என்னா சொர்ணலக்ஷ்மி"—கதிரேசன் வியந்தான்.

"நான் அப்புறமா ஒரு லெட்டர் தரேன். அதை எங்கனா போய் முழுக்க படிச்சிட்டு வந்துடுங்க."

"ஏன்?"

"உங்களுக்கு உபயோகமாவும்னு தோணுது.'

அவர்கள் இருவரும் அந்த இடத்தைச் சுற்றி பார்ப்பதுபோல் நகர சட்டென்று கடிதம் கைமாறியது. காருக்குள் போய் உட்கார்ந்து எதையோ நோண்டுபவன் போல் நடித்து, அந்தக் கடிதம் முழுவதையும் கதிரேசன் படித்தான். இதுவும் போன தலைமுறைச் சொத்து. பேரப் பிள்ளைகள் வெளிதேசம் போனதால் மதிப்பிழந்து விட்டது. அப்பனுக்கு வேறு வருமானம் இருக்கிறது. விற்கிறேன் என்று சொன்னால் குப்பை விலை கேட்பார்கள் என்பதால், வந்து கேட்கிறபோது வியாபாரம் பண்ணலாம் என்பதாய் மகளுக்கு எழுதியிருந்தார். அதை மகள்

றிப்பிட்டு சீக்கிரம் விற்கச் சொல்லி எழுதியிருந்தாள்.

ஆக இந்த காப்பி தோட்டம் விலைக்கு வருகிறது. அப்படி விலைக்கு வந்தது ரகசியமாய் வைக்கப்பட்டிருத்தது. அய்யர் வெறும் ஏஜெண்ட், காவல், புரோக்கர். அய்யரை மெல்லத் தன் பக்கம் வரவழைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த குண்டுப்பெண் சொர்ணலக்ஷ்மி கெட்டிக்காரி. ஏகென்று ஒரு நல்ல கடிதத்தை திருடிக் கொடுத்து விட்டது. இது உபயோகப்படும் என்று கணநேரத்தில் முடிவு செய்து, அழகாய் உதவி செய்து விட்டது. கொலு வென்ன இந்த காப்பி தோட்டம் முடிந்தால் நாலைஞ்சு லட்சரனில் ஒரு நகையே செய்து போட்டு விடலாம். உள்ளே ஒரு பாராட்டுதல் தோன்றியது. பாராட்டை ஒட்டி ஒரு பிரியம் தோன்றியது. அந்தப் பிரியத்தோடு ஒரு நெருக்கமான உணர்வும் வந்தது. அந்த நெருக்கமான உணர்வுக்குப் பெயர் காமமா, காதலா என்பது மட்டும் புரியவில்லை.

"இந்த எஸ்டேட் ஒரு கிறிஸ்துவங்களது இல்லையா? கதிரேசன் மெல்ல ஆரம்பித்தான். கிருஷ்ணமூர்த்தியைப் பேச்சால் நெருக்கினான். ஐந்து சதம் கமிஷன் தருவதாய்ச் சொன்னான்.

கிருஷ்ணமூர்த்தி கட்சி மாறினார். ஏக்கர் முப்பத்தைஞ்சுலிருந்து நபப்பது கேட்பதாகச் சொன்னார்.

கதிரேசன் நாப்பது ஏக்கரையும் மூன்று நான்கு முறை சுற்றிச் சுற்றி வந்தான். சொர்ணலக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி பேரோடு கட்டடத்திலேயே உட்கார்ந்து கொண்டாள். கதிரேசனை அவள் புருஷனாக நினைத்து கிருஷ்ண

மூர்த்தி பேசும்போது எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்து விட்டாள்.

ஒரு ஏக்கர், நாப்பதாயிரம். நாப்பத்திரெண்டு ஏக்கர் பதினாறு லட்சத்து என்பதாயிரம். கட்டிடம் ஒரு இருபத்தைஞ்சாயிரம். மோட்டார் பம்பு தோட்டக் கருவிகள் என்று ஒரு பத்தாயிரம். கிருஷ்ணமூர்த்தியின் கமிஷன் ஒரு எண்பத்தைஞ்சாயிரம். பதினெட்டு லட்ச ரூபாய்.

பன்னிரெண்டு லட்சம் கொடுத்து பத்திரம் வாங்கி வங்கியில் நிலம் அடகு வைத்து ஒரு பத்து லட்ச ரூபாய் வாங்கி ஆறு லட்ச ரூபாய் கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுத்துவிட்டு மீதி நாலு லட்சத்தை இந்த காபி பயிரில் போட்டால், புதிதாய் ஒரு வியாபாரம் முளைக்கும். தனக்கு ஒரு முகம் கிடைக்கும். தனது முன்னோர் துணிந்து இறங்கியதுபோல தானும் இறங்கியதற்கு நற்பெயர் கிடைக்கும்.

கடவுளே நான் இந்த வியாபாரத்தில் இறங்கட்டுமா, எனக்கு கூடத் துணை இருந்து காப்பாற்றுகிறாயா? எஸ்டேட் பிள்ளையாரை நோக்கித் திரும்பினான். மானசீகமாய் கை கூப்பினான். மலர் விழுந்தது. சந்தோஷமானான் சுட்டிடம் நோக்கித் திரும்பினான்.

"இன்னொரு காப்பி சாப்பிடறீங்களா?"

"சாப்பிடறேங்க" அந்த நேரம் கதிரேசனுக்கு காப்பி தேவைப்பட்டது. கிருஷ்ணமூர்த்தி உள்ளே போக சொர்ணலக்ஷ்மி விருட்டென்று அருகே வந்தாள்.

"அவரு நம்ம ரெண்டு பேரையும் ஆம்படையான் பொண்டாட்டின்னு நினைச்சுட்டிருக்காரு."

"அய்யோ."

"கல்யாணமாகாதவங்கள மதிக்க மாட்டேன்றாரு."

''புரியுது.'' கதிரேசன் யோசித்தான்.

''நான் ஒன்றும் தடுக்கலை, அவரு பேச்சு பிரகாரமே எட்டுட்டேன். இந்த எஸ்டேட் வாங்கிடலாமா?''

''வாங்கிடணும்.''

''எனக்கும் ரொம்பப் புடிச்சிருக்கு இந்த இடம். இந்த இடம் உங்களுக்குப் பிடிச்சுதுன்னா, தினம் நூத்தி எட்டு நமஸ்காரம் பண்றதா, நூறு நாளைக்குப் பண்றதா இந்தப் பிள்ளையாரு கிட்ட வேண்டிக்கிட்டு இருக்கேன்.''

''ஏய், பைத்தியமா உனக்கு?''

''எப்படியாவது நீங்க ஜெயிக்கணும்னு ஆசை. எதுனா செய்து பெரியாளாகணுமேன்னு ஆசை. நீங்க ஜெயிச்சா நான் ஜெயிச்ச மாதிரி.''

''எனக்கு என்னா சொல்றதுன்னே தெரியலை சொர்ணலக்ஷ்மி.'' கதிரேசன் அவள் கைகளை மெல்லப் பற்றிக் கொண்டான்.

''நாங்க ஆம்படையான் பொண்டாட்டி இல்லைன்னு கிருஷ்ணமூர்த்தி அய்யர் கிட்ட சொல்லிடலாமா?'' அவள் ரகசியமான குரலில் கேட்டாள்.

''கதிரேசன் யோசித்தான். ''வாணாம்'' அதே மாதிரி ரகசியமான குரலில் அவன் பதில் சொன்னான்.

அந்த ரகசியம் சொர்ணலக்ஷ்மிக்குப் பிடித்திருந்தது. பிரமாண்ட மேகங்கள் திருட்டுத்தனமாய்த் திரண்டன. அந்த மலைகளை நோக்கி முன்னேறின. திடுமென்று கடுமையாய்த் தாக்கின. பத்து நிமிடத்தில் மழை குளிர்ந்து குளிர்காற்று அதிகரித்தது.

22

"கதிரேசன், நீங்க வீட்டுக்குப் போற எண்ணத்தை இப்போதைக்கு உட்டுறுங்க. இப்ப பெய்திருக்கிற மழைக்கே பாதை புரண்டுபோய் இருக்கும். உங்களுக்கு இந்த எஸ்டேட் புடிச்சிருக்கோ, இல்லையோ...இந்த எஸ்டேட்டுக்கு உங்களைப் புடிச்சுப் போச்சு. எஸ்டேட் புள்ளையாருக்கு உங்களைப் புடிச்சுப் போச்சு. வேண்டாம் வேண்டாம்னாலும் சிலருக்கு சில சௌபாக்கியங்கள் மடியில வந்து ஒட்டத்தான் செய்யும்.

"பிரட் சாண்ட்விட்ச் பண்ணித் தரேன். காத்தால குழம்பு இருக்கு. புதுசா சாதம் வடிச்சு குழம்பு சூடு பண்ணித் தரேன். சாப்பிட்டுட்டு இங்கேயே படுங்க" கிருஷ்ணமூர்த்தி அய்யர் உத்தரவு சொன்னார்.

சரி, சரி, சரிசரி என்று இடி இடித்தது. கூடவே பசித்தது. உண்டு முடித்ததும் களைப்பு ஏற்பட்டது. மழையைப் பார்த்துக் கொண்டிருந்ததில் கிறக்கம் வந்தது.

"இங்க படுத்திருங்க."

கிருஷ்ணமூர்த்தி அய்யர் தமது அறையைக் காட்டினார். கதவைச் சாத்திவிட்டு ஹாலில் பாய் விரித்துப் படுத்துக் கொண்டார்.

இருட்டும் மழையும் இவையால் ஏற்பட்ட ஒரு குளிரும் அருகே இளமை கொண்ட பெண்ணும் இருக்க, மனம் கரையாமல் போவதற்கு மிகுந்த பயிற்சி வேண்டும்.

"இந்த எஸ்டேட் முடிச்சுடலாமா?" சொர்ண லக்ஷ்மி எதிரே உட்கார்ந்து கேட்டாள்.

"தெரியலை. இது கிருஷ்ணமூர்த்தி அய்யரைப் [illegible]றுத்திருக்கு. நாப்பதாயிரத்த விட பெரிய ஆசை [illegible]லும் வந்துடாது. அதும் தவிர எஸ்டேட்ல சரி [illegible]ணை வேண்டியது நிறைய இருக்கு."

"ஏன் காப்பி வாங்குற மாதிரி முடிவு பண்ணிட் [illegible]ங்க? பக்கத்து எஸ்டேட் இல்ல வாங்கணும்னு பேசிட் [illegible]ரும் தீங்க?"

"இதுக்கே காசு பத்தாது. பக்கத்து எஸ்டேட்டுக்கு [illegible]ாம விலை விசாரிச்சா போதும். ரொம்ப உயரமா [illegible]லை சொல்லுவான். கவனிக்காத எஸ்டேட்டா இருந் [illegible]க்கூட ஏலக்காய்க்கு நிறைய பேர் வர்றாங்கன்னு [illegible]ரிஞ்சு, ஏத்துவான், காப்பி எஸ்டேட் அனாதைக் [illegible]ழந்தை மாதிரி விட்டுட்டு வேற தொழில் செய்ய எல் [illegible]ாரும் தயாராயிட்டாங்க. காப்பிக்கொட்டை விக்கவே [illegible]ில்லை வாங்கறவன் சொல்றதுதான் விலையா [illegible]ருக்கு."

"அப்படின்னா நீங்க ஏன் வாங்கறீங்க..."

"எங்கப்பா செய்ததையே நானும் செய்தா என்ன [illegible]திப்பு? ஏலக்காயில நான் எவ்வளவு கொடி கட்டிப் [illegible]றந்தாலும், எங்கப்பா லட்டு மாதிரி எஸ்டேட் கொடுத் [illegible]ட்டுப் போனாருன்னுதான் வரும்."

"பகவதியக்காகிட்ட கேக்க மாட்டீங்களா"

"எது, எது கேக்கறது..."

"வாங்கலாமா, கூடாதான்னு."

"அவங்களுக்கு காப்பி எஸ்டேட் பத்தி ஒண்ணும் [illegible]தெரியாது."

"அப்ப என்ன தைரியத்துல வாங்கறீங்க..."

"உள்ளே ஏதோ வாங்கணும்னு ஒரு குரல் கேட்குது."

"தப்பாயிடுச்சுன்னா..."

"அம்மாவுக்கு வட்டியும் முதலுமா பனிரெண்டரை லட்ச ரூபாய் கடன் கொடுக்கணும். கல்யாணத்துக்கு வர்ற பொண்ணுகிட்ட நகையா பாத்திரமா காசா வாங்கி அம்மாகிட்ட கொடுத்துட்டு, ஜீரோவிலிருந்து ஆரம்பிக்கணும்."

சொர்ணலக்ஷ்மி முகம் வாடினாள். எத்தனை அன்பாய். உரிமையாய் பேசினாலும்தான் அவன் சாதிப் பெண் இல்லை. தன்னை மதித்து இவன் திருமணம் செய்ய மாட்டான் என்று நினைத்து வருந்தினாள்.

கதிரேசன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். பனிரெண்டரைலட்சத்தை அம்மா கேட்கப்போவதில்லை. குதிரைமீது கட்டுவது போல சூதாடுவது போல இந்தக் காப்பிதோட்டத்தில் காசு போடலாம்.புதியதொழில் என்பதால் ஆர்வமாய் பலதும் கற்கலாம். புதிய தொழிலாளர்களை நியமிக்கலாம். புதிதாய் சம்பளம் பேசலாம். எல்லாம் எனக்குத் தெரியும் என்று அலட்டிக்கொள்கிற தொழிலாளியிடமிருந்து அன்னியமாய் இருக்கலாம்.

அப்பா போன தடத்திலேயே மகன் போவதில் மிகப் பெரிய இடைஞ்சல் இருக்கிறது. அப்படிப்போகும் மகனை அப்பா வளர்த்த நாய்கூட மதிக்காது. குரைக்கும் 'சின்ன முதலாளி. உங்களுக்கு ஒன்னும் தெரியாது. சும்மா இருங்க'என்று வசனம் பேசும்.

எல்லாவற்றையும்விட கதிரேசன் பகவதியைப் பற்றி அச்சப்பட்டான். வீட்டோடு எத்தனை ஒட்டினாலும் அம்மாமீது எவ்வளவு மரியாதை வைத்தாலும், தன் மீது

எத்தனை பாசம் பொழிந்தாலும், அந்த எஸ்டேட்டில் மலையதி சின்னம்மாவே நம்பர் ஒன். ஒரு வார்த்தை அவளை அனுமதி கேட்டே ஆகவேண்டும். ஒவ்வொன்றுக்கும் கேட்டே ஆகவேண்டும்.

அப்பா என்கிற மிகப் பெரிய தூண்விழுந்து, தலைக்கு மேல் உள்ள கூரை சரிந்து வெட்ட வெளியாகி விட்டது. எனவே, 'நீயே உன் கூரையைக் கட்டிக் கொள் கதிரேசா' என்று சொல்லி விட்டது. இதற்குப் பிறகு எவரோடும் எதற்கும் ஒட்டுவதில் அர்த்தம் இல்லை. 'நீயே வளர்ந்து வா' என்று விதி, சொன்ன பிறகு வேறு யார் முன்னும் கை கட்டுவதில் லாபம் இல்லை.

சரியோ, தவறோ, லாபமோ, நஷ்டமோ தொழில் சுயமாக இருக்க வேண்டும். நட்டமெனில் அது பாடம். லாபமெனில் அது மகத்தான வெற்றி. இவை இரண்டுமே என்னைக் கவிழ்த்து விடாது. என்னை அடையாளமின்றி ஆக்கி விடாது. இந்த இரண்டு அனுபவங்களுமே என்னை பலமுள்ளவனாக்கும். என்னைப் பார்த்து நானே பதறாமல் இருக்கத்தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

கட்டிலில் சாய்ந்து கால்களை நீட்டி கண்களை மூடிக் கொண்டு யோசித்தான்.

யோசிக்கிற அந்த ஆண் மகனை சொர்ணலட்சுமி ஆவலோடும் ஆசையோடும் பார்த்தாள். அவள் வீட்டு ஆண்கள் யாரும் அப்படி யோசிப்பதில்லை. அப்படி யோசிக்கிறவனை அவளுக்குப் பிடித்திருந்தது. எப்படியாவது இவனை மடக்கிப் போட்டு இவனுடைய விஷயங்கள் எல்லாவற்றிலும் பங்குபெற வேண்டும் என்று தோன்றியது. இன்னும் சற்று நெருங்கி உட்கார்ந்தாள்.

சொர்ணலட்சுமி கதிரேசனுடைய உடம்பின் கம்பீரத்

தால் கவரப்பட்டாலும் முன்னேற வேண்டும் என்றும் அப்படி முன்னேற வேண்டுமெனில் தான் தனியாகச் செயல்பட வேண்டும் என்பதும் துணிச்சலாய் சோதனைகள் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவதையும் உற்றுக் கவனித்துக் கொண்டாள்.

"அய்யோ...எங்க, வீட்டில் திட்டுவாங்க" என்று துணிச்சல் இல்லாத ஆண் பிள்ளையாக இவன் இல்லை. பகவதியிடம் இவனுக்கு ஒரு மரியாதை இருக்கிறது. சின்னம்மாவின் நேசிப்பில், உபசரிப்பில், அப்பாவைப் பற்றி அவள் நினைவுகூர்ந்து அழுவதில் இவன் நெகிழ்ந்து போகிறான். இந்த நெகழ்வு அவனை மழுங்கடிக்கும், கொஞ்சம் தடுமாற வைக்கும். ஆண் பிள்ளை மிகக் குறைவாகத்தான் நெகிழ வேண்டும். மனைவி, மகன், மகள் என்றுதான் பிரியம் காட்ட வேண்டும். சின்னம்மா. பெரியம்மா, தாத்தா, பாட்டி என்று போனால் அன்பில் ஊறவைத்துத் தின்று விடுவார்கள். ஆண் சற்று முரடாக இருப்பதும் தெளிவாக இருப்பதும் நல்லது.

கதிரேசன் முரடாக இருக்க வேண்டும் என்றால் அவனைப் பகவதி அக்காவிடமிருந்து பிரிக்க வேண்டும். அவனைப் பகவதி அக்காவிடமிருந்து பிரிக்க வேண்டும் என்றால், தன் பக்கம் இழுக்க வேண்டும். இந்த எஸ்டேட்டை வாங்கும்படி செய்ய வேண்டும்.

இவனைத் தன் பக்கம் இழுக்க வேண்டும் என்றால்... சொர்ணலட்சுமி கூர்மையாக யோசித்தாள். பின், துள்ளி எழுந்தாள். பூமி குலுங்கியது.

"நான் மழை வேடிக்கை பார்க்கப் போறேன்"

ஜன்னலோரம் போனாள். எம்பி, கண்ணாடிக் கதவுகளைக் கை தூக்கித் திறந்தாள் விஷத்தில் தோய்ந்த அம்பு போல குளிரில் தோய்க்கப்பட்ட சாரல் முகத்தில் தாக்கியது. கோட்டையைச் சுற்றிக் கொண்ட குதிரைப் படை போல ஊதக்காற்று ஆளைச் சுற்றிக் கொண்டது.

மலை வீடுகளில் அறையோரம் புகை போக்கியோடு கணப்பு இருக்கும். காய்ந்த விறகுக் கட்டைகள் அருகே இருக்கும். அரை பாட்டில் கெரசினும் நெருப்புப் பெட்டியும் அறைக்குள் எங்காவது வைக்கப்பட்டிருக்கும்.

சகலமும் தேடி. கதிரேசன் கணப்பு பற்ற வைத்தான். கணப்பு கொழுந்து விட்ட நேரம் பெரிய இடி இடித்தது. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. மழை இன்னும் வலுத்துப் பெய்தது.

'கடவுளே...இருட்டுல மழை எவ்வளவு நல்லாருக்கு.''

நெருப்பு வெளிச்சத்தில் சொர்ணலட்சுமியின் வனப்பு மிளந்து தகதகத்தது, கதிரேசன் அவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

'உனக்குன்னு ஒரு செட்டியார் பொண்ணு எங்காவது இரு நூறு சவரனோட பொறந்திருப்பா, கதிரேசா' அவகிட்டயும் இந்த அழகெல்லாம் இருக்கும். இவகிட்ட மாட்டாதே, ஜாக்கிரதையா இரு. இது முக்கியமில்லை கதிரேசா. பொம்பளையை விட பொழப்பு முக்கியம். பொம்பளையால பொழப்பு கெட்டமாதிரி ஆயிடக் கூடாது.''

மனத்தின் ஒரு கோடி கடுமையாக எச்சரித்தது. கதிரேசன் அந்த எச்சரிக்கையை கவனமாகக் கேட்டுக் கொண்டான்.

ஒழுக்கமா இருந்துட்டா உயர்வா ம்ாறிடலாமா? உயரத்துல இருக்கிறவன் எல்லாம் ஒழுக்கமாத்தான் இருக்கானா?வாய்ப்பு கிடைக்கறப்ப வுட்டுட்டு,வாய்ப்பே இல்லாத போது ஏங்கி சாவாதே. இந்த எஸ்டேட் நீ வாங்கப் போற. இதுக்கு இந்த பொம்பளை இடைஞ்சலா? கதிரேசா எதையும் நீயா யோசிக்கக் கத்துக்க. உன்கிட்டயிருந்து ஆரம்பி. மத்தவங்க சொன்னாங்க, பெரியவங்க கட்டளை—இப்படித்தான் உன்னால

யோசிக்க முடியும்னா இந்த காப்பி எஸ்டேட் உன்னால் வாங்க முடியாது. நீ வாங்க வேண்டிய அவசியம் கிடையாது. பகவதி சின்னம்மா என்ன சொல்றாங்களோ அதைக் கேட்டுகிட்டு, மதுரைக்கும் மலைக்கும் அலைஞ்சுட்டு கிட. தாலி கட்டின செட்டியார் பொண்ணு திட்டினா வாங்கிக்க. கொண்டாடினா, நான் இல்லை, கடவுள்ளு சொல்லு.

கதிரேசா, சரியோ, தவறோ. நல்லதோ கெட்டதோ, இன்னொருத்தர் மேல பாரம் போடாதே. நீயா செய். வந்ததை அனுபவி.'

மனசு உரக்கக் கத்தியது.

'ஹலோ...என்னா பயமுறுத்திறீங்க? இவளைத் தொட்டுட்டா நாங்க எல்லாத்தையும் இழந்திடுவோமா? மிஞ்சி மிஞ்சிப் போனா இன்னா நடக்கும்? என்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னுவா முடியாதுன்னு சொல்லிப் பாப்போம். அழுது பிடிவாதம் புடிச்சா வாங்கற எஸ்டேட்டுல குடித்தனம் வைச்சுக்கிடுவோம்.'

'அப்ப செட்டிப் பொண்ணு?'

'அதுவும் நடக்கும்'

'அதெல்லாம் அந்தக் காலம். உங்கம்மாவுடைய காலம். இப்பெல்லாம் இந்த விளையாட்டுக்கு எந்தப் பொண்ணும் ஒத்துக்க மாட்டா.'

'சரி, அப்ப செட்டியார் பொண்ணு வேணாம். இவ போறும்.'

கதிரேசன் எழுந்து போய் அவளை ஆவலோடு பார்த்தான்

அவள் வெளியே காட்டிக் கொள்ளாமல் உள்ளுக்குள்

பரபரத்தாள், தவித்தாள், இன்னும் நெருங்கட்டும் என்று தயாரானாள்.

''என்னா...

அவள் குரலில் அவளை மீறிய நடுக்கம் இருந்தது.

''ஒன்றுமில்லை.''

''ஏன் அப்படி பார்க்கிறீங்க?''

''ஏன் பார்க்கக் கூடாதா''

''பயமாயிருக்கு.''

''என்ன பயம்?''

''ஏதாவது பண்ணிடுவீங்களோன்னு பயம்.''

''இதுக்கு பயப்படுவானேன்.'

''அடுத்த ரூம்ல அய்யர் இருக்காரில்லை?''

''பொண்டாட்டின்னு சொல்லி வைச்சிருக்கியே''

''நான் சொல்லலை. அவர் நினைச்சிக்கிட்டார்.''

''அது இன்னும் உத்தமம்''

''ஆனா நாம்ப புருஷன், பொண்டாட்டி இல்லியே''

''அதனால என்னா''

''தப்பாயிரும்''

''எப்படி தப்பாகும்''

''வாணாங்க''

''ஏன்?''

''எனக்கு பயமாயிருக்கு''

"விட்டுட்டு, மதுரைக்கு ஓடிப் போய்டுவேன்னு நினைக்கிறியா..."

அவள் மௌனமாக இருந்தாள். அந்த மவுனத்தில் 'ஆமாம்' என்கிற சொல் ஒளிந்திருந்தது.

"அப்படி ஓடிட்டா நீ சும்மா உட்ருவியா, இல்ல சின்னம்மாதான் சும்மா இருப்பாங்களா. ஊரு நாறி, உறவு நாறி மறுபடியும் உன் கூட வாழ்ந்துதான் ஆகணும்னு எல்லாரும் கட்டளை போட்டு, அப்படி வாழற போது கஷ்டமாயிடாதா? உன்னைப் புடிச்சிருக்கு சொர்ணலட்சுமி. உனக்கு என்னைப் புடிச்சிருக்கா?"

அவள், என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் தடுமாறுவது போல் நடித்தாள்.

"உன்னைப் புடிக்கலை, உன்னை விட பெட்டரா ஒரு ஆம்பளையத்தான் நான் புருஷனா எதிர்பார்க்கிறேன்னு நீ சொன்னா நான் விலகிடறேன்."

அவள் சட்டென்று அவன் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

அக்னியிலிருந்து உண்டானது அக்னியை வளர்க்கும். காமத்திலிருந்து உண்டானது காமத்தை வளர்க்கும். ஆனால் காதலற்ற காமம் தவறு. காதலற்று எது செய்தாலும் தவறு. அவர்கள் காமத்தைக் காதலென்று நினைத்துக் கொண்டார்கள்.

23

சுதிரேசன் சொர்ணலக்ஷ்மியையே ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

தகர மேஜையில் காது வைத்துக்கொண்டு தன் கையாலேயே தகரத்தை ஓங்கி அறைந்தால் காது அதிரும் சப்தம் கேட்பது போல் இடி தரையில் இறங்கியது. தொடர்ந்து இன்னொரு மின்னல் வெட்டியது.

சொர்ணலக்ஷ்மி பயத்தில் துள்ளி அவன் அருகே வந்தாள். அவன் மீது பட்டாள். மின்சாரம் துண்டாயிற்று. மலையை இருள் கவ்வியது. மழை மிக பலமாய் பெய்யத் துவங்கியது. திறந்த ஜன்னல் வழியே காற்று சாரலை அள்ளிக்கொண்டு வந்து அறை முழுவதும் வீசியது, சாளரத்தை அடைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

மின்னல் சவுக்கின் ஓசை மறுபடியும் இடியாய் மலை முழுவதும் எதிரொலித்தது. அவன் மீது பட்டுக்கொண்டிருந்த சொர்ணலக்ஷ்மி ஒட்டிக்கொண்டாள். இன்னொரு மின்னல் மின்ன, இடிக்குக் காத்திருந்தார்கள். மலைச் சரிவில் உருண்டு விழும் வாகனம் போல் இந்த முறை இடி தொடர்ந்து முழங்கிற்று. அவள் அவன் புஜத்தினுள் கையை விட்டு இறுகக் கட்டிக் கொண்டாள். உறங்கிக் கிடந்த புலி கண் விழித்தது.

'சொர்ணலக்ஷ்மி கொஞ்சம் இரு.' நெற்றி மயிர் தெரியாத இருட்டில் அவன் கைநீட்டி சுவர் தேடினான். அறையினுள் இருக்கும் கறுப்பை விட வெளியே இருக்கும் கறுப்பு வெளிர் கறுப்பு. அவன் அவளை அணைத்தபடியே சாளரம் நோக்கிப் போனான். இடது கையால் அவள் இடுப்பை சுற்றிப்பிடித்திருந்தான். பஞ்சு பொதிந்த பட்டு போல அவள் இடுப்பு இருந்தது. விரல்களை வெறுமனே வைத்திருந்தாலும் அது குழைவது தெரிந்தது.

கைநீட்டி ஜன்னல் கதவை இழுத்தான். காற்று வெளியே இழுத்தது. சட்டென்று சாரலால் முகம் தாக்

குண்டது. இரண்டு பேரும் குளிர் தாங்காமல் இறுக்கிக் கொண்டார்கள். இந்த முறை ஜன்னல் கொக்கியை கதிரேசன் உறுதியாய்ப் பிடித்தான். காற்று மீறி ஜன்னலை இழுத்தான்.

"வெளியே இருட்டா இருந்தாலும் அழகா இருக்கு இல்லை?" அவன் மூடுகிற நேரம் பார்த்து அவள் சொன்னாள்.

'அடடே, இவள் இருட்டின் அழகை ரசிக்கிறாளா' ஜன்னலின் பிடியைத் தளர விட்டான். காற்று ஈரம் அனுப்பியது.

'அய்யோ கதவைச் சாத்துங்களேன் குளிர் கொல்லுது" முதல் வாக்கியத்துக்கு எதிர் வாக்கியமாய்ப் பேசினாள். குளிரால் பெரிதும் தாக்கப்பட்டவள் போல் இன்னும் ஒண்டிக் கொண்டாள்.

ஆண் முட்டாளாக இருக்கிறானா என்று பெண் யோசித்துப் பார்க்கும் நேரமிது. ஆம் என்பதாய் சொர்ணலக்ஷ்மி புரிந்து கொண்டாள். அவள் ஒண்டிக் கொண்ட போது புலி தலை தூக்கி உறுமியது. மான் வாசனையில் திணறியது.

"என்னா சொர்ணலக்ஷ்மி?" அவன் எதுவோ கேட்க நினைத்து வெற்றுக் கேள்வியாய் நின்றான்.

"நீங்க இல்லாம என்னால உயிர் வாழமுடியாதுங்க" அவள் வேறு எதுவோ பேச நினைத்து, பெரிய பொய்யை வெளியே கக்கினாள்.

"என்னைப் புடிச்சிருக்கா சொர்ணலக்ஷ்மி?" இறுக பிடித்துக் கொண்டிருப்பவளை இவனும் பார்த்துக் கொண்டு கேட்டான்.

விலகி நின்று பார்ப்பவருக்கு காமமும் பொய். காத

லும் பொய். விலகாது இறுகிக் கொண்டவர்களுக்கு வேறு எதுவும் முக்கியம் இல்லை.

தொட்ட கை தடவியது. தடவிய கை இறுகியது. அவர்கள் படுக்கையில் உட்கார்ந்தார்கள். சாய்ந்தார்கள். தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை மறந்தார்கள்.

விடிந்து எழுந்ததும்தான் திகீரென்று இருந்தது கதிரேசனுக்கு. வெளிச்சம் பரவிய போது தலை தூக்கிப் பார்க்க அவன் அருகே குழந்தை போல் சொர்ணலக்ஷ்மி தூங்கிக் கொண்டிருந்தாள். பெரிய குழந்தை, பூரணமாய் வளர்ந்த குழந்தை.

மழையின் ஈரம் பட்ட மண்ணும் மரங்களும் வெளிச்சம் பட்டு தகதகத்துக் கொண்டிருந்தன. பறவைகளின் கூவல் காதை நிறைத்தது. கிருஷ்ணமூர்த்தி அய்யர் காம்பவுண்டுக்கு வெளியே ஒரு கும்பலோடு பேசிக் கொண்டிருந்தார். அந்தக் கும்பலின் பேச்சில் ஒரு பதற்றம் தெரிந்தது.

கிருஷ்ணமூர்த்தி அய்யர் அழைக்கப்பட்டுத் திரும்பியவர் போல அழைக்காமல் திரும்பினார்.

"எழுந்திட்டீங்களா?" சந்தோஷமாக அவர்களை நோக்கி நடந்து வந்தார்.

"ஹால் மேஜையில் பல்பொடி வைத்திருந்தேனே பாக்கலையா. பல் தேய்ச்சுட்டு வாங்க. டக்கரா காப்பி போட்டுத் தரேன். குழந்தை எழுந்திருக்கலையா?"

"அங்கே என்னங்க கூட்டம்..."

"நல்ல வேளை நீங்க அடிவாரம் போகலை.',

"என்ன?"

"முந்நூறு, முந்நூத்தம்பதடிக்கு மண்ணு சரிஞ்சு போச்சு. மலைப்பாதை அப்படியே பத்து அடி ஆழத்துக்கு அமுங்கிப் போச்சு. எதோ கொஞ்ச தூரம் பாதை ரிப்பேர்னா, கரெக்டா கல்லு போட்டு ரிப்போர் பண்ணுவான் முந்நூறு அடிக்கு அமுங்கிப் போச்சுன்னா மெல்லத்தான் ரிப்பேர் ஆவும். கேரளா உள்ள போய் மேற்குப் பக்கமா மலை ஏறணும். எழுபது எண்பது கிலோ மீட்டர் தூரமாயிடும். சுத்திண்டு வந்துடலாம். நாம போற வேளைக்கு மண்ணு இறங்கியிருந்தா...ஒரு ஜீப் இறங்கிடுத்தாம். உள்ள இருக்கிறவா கத்தவே கயிறு போட்டுத் தூக்கிட்டாங்களாம். ஜீப்புலேர்ந்து இறங்கி கைக் குழந்தையோட ஒரு குடிசைல ஒதுங்க இரண்டு கிலோ மீட்டர் தூரம் நடந்திருக்கா. குழந்தைக்கு ஒன்னும் இல்ல. அம்மாவுக்கு ஜுரம் வந்துடுத்து.';

பல் தேய்த்து முகம் கழுவி காப்பி குடிக்கும் போதும், சொர்ணலக்ஷ்மி எழுந்திருக்கவில்லை.

"ராத்திரி நல்ல மழை. புருஷனும் பொண்டாட்டியும் அசந்து தூங்கிட்டேன் போலருக்கு" சிரித்தபடி விசாரித்தார்.

ஆம், தூங்கினேன் என்றால் ஏன் தூங்கினாய்... இல்லை, தூங்கவேயில்லை என்றால் என்ன செய்தாய் என்ற பேச்சுகள் வரும். கதிரேசன் மௌனமாய் இருந்தான்.

ஷூக்கள் மாட்டி மறுபடியும் காப்பி எஸ்டேட்டிற்குள் புகுந்தான், மேட்டில் ஏறுகின்றபோது நினைவுகள் வந்தன.

"என்ன துணிச்சல் எனக்கு. எந்த நம்பிக்கையில் இந்த பெண்ணைத் தொட்டேன். இவளை மனைவி என்று கொள்வதா அல்ல வேறு ஏதேனுமா. என்

நம்பிக்கை இருக்கட்டும். இவளுக்கு என்ன நம்பிக்கை. ஆனால் சம்மதித்தாள்.

ஆனால் பெண் எத்தனை சுகம். கூடல் என்றால் பெரிய யுத்தம். அதில் ஈடுபட்டதும் ஜெயித்ததும் எப்பேர்ப்பட்ட சுகம். இன்னும் தூங்குகிறாள் என்றால் அயர்ந்து துணியாய் இருக்கிறாள் என்றுதானே அர்த்தம். அயர வைத்தேன் என்பதுதானே சந்தோஷம். கதிரேச னுக்கு உடம்பெல்லாம் இனித்தது.

இந்த காப்பித் தோட்டம் வாங்கிவிட வேண்டும். இந்த காப்பித் தோட்டத்தில் நடப்பது சந்தோஷமாக இருக்கிறது. இது ஒரு நல்ல இடம் என்பதாய் மனசுக்குத் தோன்றுகிறது. ஆனால் காப்பிக்கு மதிப்பே இல்லை, ஆப்பையில் போட்ட காசு என்றும் பலரும் சொல்கிறார்கள். ஏலக்காய் எஸ்டேட் வாங்கலாம் என்றால் விற்பதற்கே பலர் தயங்குகிறார்கள். வெறும் குப்பை மேட்டை எஸ்டேட் என்கிறார்கள்

காப்பியா, ஏலமா எதுவாயினும் சரி இந்த மலையை விட்டுப் பிரிய வேண்டாம் என்று தோன்றுகிறது. மலை மீது ஒரு பிடிப்பு வந்துவிட்டது. இந்த அய்யர் அனுசரித்தால் இன்னும்கூட சீப்பாக வாங்கலாம்: அய்யருக்கு வேண்டுமட்டும் உதவி செய்யலாம். அய்யருக்கு மலை பிடிக்கவில்லை, அவருக்குத் தரைமீதுதான் காதல் இருக்கிறது.

காப்பி கிடைத்தாலும் சரி, ஏலம் கிடைத்தாலும் சரி இனி மலைதான். செட்டிப் பெண் கிடைத்தாலும் சரி இந்தப் பெண் மனைவியானாலும் சரி இனி மலைதான்.

ஆனால் காப்பியா, ஏலமா... யோசித்தபடியே எஸ்டேட்டை சுற்றி பிள்ளையார் கோவில் வாசலில் நின்றான்.

"புள்ளையாரே நான் உன்கூட இருக்கட்டுமா, இல்லை வெளியே இருக்கட்டுமா?" அவரை நோக்கிக் கேள்வி கேட்டான். குளிர்காற்றில் பிள்ளையார் தலையிலிருந்த செம்பருத்தி தரையில் விழுந்தது.

சரி காப்பிதான். இந்த எஸ்டேட்தான். அய்யரை கொஞ்சம் வலை போட்டு இறக்கணும். கதிரேசன் வேகமாய் யோசிக்க ஆரம்பித்தான்.

அவளும் யோசித்தாள்.

பாத்ரூமுக்குள் போனதுமே வித்தியாசம் தெரிந்துவிட்டது நெடுநாள் கரையில் இருந்துவிட்டு திடீரென்று கடலுக்குள் பயணப்படுவதுபோல வித்தியாசம் அது. ஏதோ ஒரு இனம் தெரியாத சோகம் நெஞ்சைக் கவ்விக் கொண்டது. இனி பழைய சொர்ணலக்ஷ்மி இல்லை என்பது சிரமமாக இருந்தது.

யாரைப் பார்த்தாலும் ஒரு நாணம் ஏற்படும் என்று தோன்றியது. ஆனால் நாணப்படக் கூடாது. கதிரேசனைக் கண்டால் மட்டும் நாணுவதுபோல் நடிக்க வேண்டும். லேசாய் அழ வேண்டும். பகவதி அக்காளிடம் நாணினால் செருப்பால் அடிப்பாள், அப்ப இருந்திருக்கணும்டி வெட்கம் என்று இன்னொரு முறை அடிப்பாள்.

வேறெதாவது விபரீதம் ஆகிவிடுமா? ஆகாது. நாள் கணக்குப் பார்த்தால் ஆவதற்கு வாய்ப்பே இல்லை. மறுபடியும் இந்த அறைக்குள் கதிரேசன் வரும்வரை காத்திருக்க வேண்டும். வந்த பிறகு நாணும் நாடகத்தை ஆரம்பிக்க வேண்டும். அவள் காத்திருந்தாள்.

'உலகம் நாடக மேடை' என்று சொன்னதற்கு அர்த்தம். இது ஒன்றும் முக்கியமில்லை என்று சொல்வதற்கு அல்ல. இது எவ்வளவு பெரிய பிரமாண்டம்

என்பதைப் புரிந்துகொள் என்பதற்காக நான். மனைவி, இரண்டு குழந்தைகள், நாலு நண்பர்கள், பத்து உறவுகள், நூறு பேர் தெரிந்தவர்கள் என்பதோடு உலகம் முடிந்துவிடவில்லை. கோடானு கோடி மக்களை உலகம் கொண்டிருக்கிறது. யார் யாரை எங்கே பார்க்கிறார்கள் என்பதைச் சொல்லவே முடியாது.

லாரியில் வந்து இறங்கிய நாலு வயசான தொழிலாளியில் ஒருவன் பகவதியை நோக்கி வந்தான் அவனுக்குக் கடுமையான தலைவலி. பத்துரூபாய் முன் பணமாய் காசு கேட்கவேண்டும் என்கிற எண்ணத்தில் அவள் வீட்டு வாசலில் நின்றான்.

பகவதி கதிரேசன் பற்றிய கவலையில் இருந்தாள், தொர்ணலக்ஷ்மியையும், இவனையும் சேர்த்து அனுப்பி விட்டோமே என்கிற திகிலில் இருந்தாள்.

இந்தப் பொண்ணு அசடு, கதிரேசன் கொஞ்சம் பயந்த பையன் இல்லியா என்று சமாதானப்படுத்திக் கொண்டாள். எங்கியாவது பாதை சரிஞ்சு வண்டி கவிழ்ந்து தப்பாயிட்டுருக்குமோ? பயந்து நடுங்கினாள்.

மனம் எங்கேயோ லயித்திருக்க வந்திருப்பவனை "என்னப்பா?" என்று கேட்டாள்

"காப்பி தோட்டம் வாங்கப் போறீங்களாக்கும்?" வந்தவன் எடுத்தவுடன் காசு கேட்காமல் ஏதாவது பேசி விட்டு காசு கேட்கலாம் என்று நினைத்தான்.

"என்னங்கிற அதுக்கு இப்போ?" பகவதி நினைப்பு எங்கேயோ இருக்க சிடுசிடுத்தாள்.

வந்தவனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

'நம்ம காரை ஒரு காப்பி தோட்டத்தில பார்த்தேன். நீங்கன்னா ஒரு பத்து ரூபாய் கைமாத்து வாங்கலாம்னு நினைச்சேன்".

"காரு பார்த்தியா, நம்ம புள்ளே எங்கே?"

"தெரியலீங்களே."

"சொர்ணலக்ஷ்மி."

"பாக்கலீங்களே.'

எப்போது, எந்த எஸ்டேட்டில்? விவரம் தெரிந்து கொண்டாள், 'அந்த எஸ்டேட்டுக்குள் கார் ஏன் போயிற்று?' கவலையோடு யோசித்தாள்.

அந்தப் பக்கத்திலிருந்து வருகின்ற தொழிலாளர்கள் யார் யார்? மடமடவென வலை விரிக்கத் துவங்கினாள்.

"எது பத்தியும் கவலை வேண்டாம் சொர்ணலக்ஷ்மி. நான் இந்த எஸ்டேட் வாங்கறேன். இதைவிட ஒரு நல்ல விலை இன்னிதேதிக்கு இந்த எஸ்டேட் ஆளுக்குக் கிடைக்காது. என்னை விட ஒரு நல்ல புருஷன் உனக்குக் கிடைக்க மாட்டான். இப்படி ஒரு அழகு எனக்கும் கிடைக்காது" கதிரேசன் சொர்ணலக்ஷ்மியை இறுக்கிக் கொண்டான்.

"என்னை கைவிட்டீங்கன்னா எனக்கு சாவறதைத் தவிர வேறு வழியில்லை."

"சாவறதைப் பத்தி ஏன் பேசற? வாழறதைப் பத்திப் பேசு. இங்க உட்கார்ந்து பேசு." அவன் தொடைகளை தட்டிப்பேச அவள் மிகவும் தயங்கியது போல் வந்து உட்கார்ந்தாள். மறுபடியும் அந்த அறையில் சூடு பரவியது.

விசாரிக்காமல் இருந்தால் எல்லோருக்கும் தெரிந்திருக்காது. விசாரணை அதிகமாக, விஷயம் வெளியே வந்து விட்டது. விநாயகம் எந்த எஸ்டேட் என்று கேட்டுத் தெரிந்து கொண்டான்.

காப்பித் தோட்டம் வாங்கப் போகிறார்களா, [illegible]ணனுக்குள் வேதனை பரவியது. இந்த எஸ்டேட் கண்ணும் கருத்துமாகக் காப்பாற்றி வந்ததற்கு [illegible]தான் கைமாறா? ஏலக்காய் எஸ்டேட் வாங்கினால் ஏலக்காய் தெரிந்தவனுக்கு மதிப்பு அதிகமாகிவிடும். [illegible]னை மட்டம் தட்டி வைக்க வேண்டும் என்றுதான் காப்பிக்கு மாறுகிறார்களாம். மூன்று மணி நேரத்தில் [illegible]யில் அந்தப் பகுதியில் பல பேருக்கு விஷயம் தெரிந்து [illegible]து.

அந்த எஸ்டேட்காரங்க காப்பி வாங்கறாங்களாமே. [illegible]ணமில்லாம வாங்குவாங்களா, என்ன காரணம்? [illegible] மார்க்கெட் சரியப் போகுதாம். மிடில் ஈஸ்ட்ல [illegible]ங்களுக்கு நடுவில ஒரு புரளி வந்திடுச்சு. ஏலக்காய் [illegible]ஸ்தி சாப்பிடாதீங்க. ஆண்மை போயிடும்னு. அது [illegible]ரிசாகி விலை கேட்க ஆளில்லாம போயிருக்குமோ?

''ஏலக்காய் அதிகம் சாப்பிட்டா ஆண்மை போயிடும் [illegible]பது உண்மையா?''

''இது என்ன மல்லாட்ட பயிரா போக வரத்தின்ன? [illegible]தெல்லாம் ஒண்ணும் ஆகாது. ரொம்ப தின்னம்னா [illegible]. ரொம்ப தின்னவும் முடியாது. இந்தியாவுல ஒரு [illegible]க்கு ஒரு வருஷத்துக்குப் பன்னிரெண்டு கிராம் ஏலக்காய் போதும். இந்த பன்னிரெண்டுகிராம் கூட சாப்பிடற [illegible]லன்றதாலதான் ஏத்துமதியாவுது. இந்த வருஷம் [illegible]மகூட சேப்பாங்களே தவிர குறைக்க மாட்டாங்க.''

''காப்பி என்னங்க ஆவும்?''

''கென்யாவுக்கும் பிரேசிலுக்கும்தான் போட்டி. [illegible]ம்ம பிளான்டேஷன் ஏ காப்பியை பிரேசில்காரன்

வாங்கறான். அவன் பொடியோட நம்ம பொடியைக் கலந்து ஐரோப்பாவுக்கு அனுப்பறான். ஆனா பெரிய விலை ஒண்ணும் இல்லை. காப்பி எல்லா வருஷமும் நஷ்டம்தான். ஏலததை விட காப்பி பாடு. இந்த உள் தோல் போற வரைக்கும் தேய்ச்சுக் கழுவி கை தேய்ஞ்சு போகுது. கழுவலைன்னா காப்பி கொட்டை அழுகிப் போயிடுது.''

''அப்ப எதுனால காப்பி வாங்குறாங்க?''

''தெரியலையே,''

வினாயகம் எல்லாம் கேட்டுக் கொண்டான். மதுரைக்குப் போன் செய்தான்.

''எதுக்கும் ஒரு நடை நீங்க வந்துட்டுப் போயிடுங்க. பகவதியோட சொந்தக்கார பொண்ணு கதிரேசனோட ஒரே கார்ல ஊர் சுத்துது. ரெண்டு பேரும் ஒரே கார்ல போய் ராத்தங்கிட்டு வராங்க. கதிரேசன் காப்பி எஸ்டேட் வாங்கறதுலயே குறியா இருக்கிறார். உங்களுக்குத் தைரியம் பத்தலை. பகவதியும் வயசுப் பொம்பிளைதானே, புருஷன் இல்லாதவதானே, சட்டுனு தோள்ள கை வைச்சாத் தானா மடிஞ்சுடுங்க. கதிரேசுப் பையன் போற போக்குல கவுத்துட்டான்.

எழுபது கிலோ மீட்டர் சுத்தி லூர்து ஆபத்சகாயத்தைப் பார்த்து கிருஷ்ணமூர்த்தியின் உதவியோடு விலை பேச ஏக்கர் முப்பத்தி ஓராயிரம் ரூபாய்க்குப் படிந்தது. ரெண்டுபகுதியாய் காசு தருவதாய் உறுதியாயிற்று. முதல் பகுதி மறுநாள் காலையே வேண்டும் என்று லூர்து அடம் பிடித்தார்.

அன்றிரவு லூர்து வீட்டிலேயே தங்கி காப்பி பற்றி கதிரேசன் தெரிந்து கொண்டான். சொர்ணலக்ஷ்மிக்கு நைட்டியும், தனக்கு லுங்கியும் வாங்கிக் கொண்டான். அங்கேயும்—அந்த இரவும்—அவர்கள் கணவன் மனைவியாக இருந்தார்கள்.

24

வெளிப் பார்வைக்கு ஆணாதிக்க அலட்டல் போல் தோன்றினாலும், ஆழ்ந்து யோசிக்க, இந்த அன்பு சீராட்டல் போலிருந்தது. மனசு பெண் பின்னால் அலையாது அவளை விதவிதமான போகப் பொருளாய் கற்பனை செய்யாது, போகத்தை அனுபவித்து. வேறு உயர்வுக்கு தாவி விட்டது. இந்த போகம் நிலைத்து நிற்க வேண்டுமெனில் அந்த உயர்வுகளும் நிலைத்து நிற்க வேண்டும்.

'காப்பி எஸ்டேட் தப்பு, அது வெறும் குப்பை' என்றார்கள். இல்லை என்று மனம் சொல்கிறது வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இருக்கிறது. சொர்ணலட்சுமியை மலையிலேயே விட்டுவிட்டு மதுரைக்குப் போக வேண்டும். மீதிக் காசை நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ புரட்டி எடுத்து வர வேண்டும். காப்பி என்று சொல்லாமல் வேறு ஏதேனும் சொல்ல வேண்டும். 'கை நாய்க் கொடு' என்று சொல்ல வேண்டும். வட்டிக்குக் காசு தரும் உறவுகள் அதிகம் உண்டு. எதையும் அடகு வைக்காமல், 'வெறும் நம்பிக்கையின் பெயரில் காசு கொடுங்கள்' என்று கேட்க வேண்டும்.

சொர்ணலட்சுமியைத் தொட்டு விட்டது தெரிந்தால் உறவுகள் முறைக்குமா...'காசு கிடையாது போ' என்று சொல்லுமா...'அவளை விட்டுரு. உனக்கு எவ்வளவு வேணா தரேன்' என்று பேரம் பேசுமா...அம்மா என்ன ஆப்போகிறாள் என்று தெரியவில்லை. அம்மா, பகவதி சின்னம்மா மீது பாயலாம். பகவதி சின்னம்மா சொர்ணலட்சுமியைத் துரத்தி விடலாம்.

ஆனால், எத்தனை விதமாக யோசித்தாலும், காப்பி எஸ்டேட் வாங்கியது சரி என்றே படுகிறது. உள் மனம் அதை இடைவிடாது ஆமோதிக்கிறது.

ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டதும் மனசு மிரண்டு போனதை, முகம் காட்டிக் கொடுத்து விட்டது.

கிருஷ்ணமூர்த்தி அய்யர் ஹிண்டு பேப்பரின் வணிகப் பகுதியில் சிறிய கட்டத்துக் குள்ளிருந்த செய்தியைத் தொட்டுக் காண்பித்தார்.

பிரேசில் காப்பியில் பூச்சி தாக்குதல். மிகக்கடுமையாய் பிரேசிலின் பொருளாதாரம் பாதிக்கப்படும் என்று எழுதப்பட்டிருந்தது. என்னவென்று ஹார்து ஆபத்சகாயம் கேட்டபோது ஒன்றும் இல்லை என்று சொல்லி விட்டார்.

"எதுக்கு பயப்படறே? இது சுபசகுனம், நீ காப்பி எஸ்டேட் வாங்குறபோது பிரேசில் டவுனாகிறது, பிரேசில் காப்பி கிடைக்கலேன்னா, உலகம் பூரா காப்பி கொட்டை விலை, காப்பி எஸ்டேட் விலை ஏறும்."

"எவ்வளவு ஏறும்?"

"குறைந்தபட்சம் இரண்டு மடங்கு ஏறும்."

"அய்யர், ஏறிச்சுன்னா குடும்பத்தோட எங்கிட்ட வாங்க. ரெண்டு நாள் எஸ்டேட்ல தங்குங்க. ஏறின விலையில ஒரு பர்செண்ட் தரேன்?"

"கடவுளே. அது உன்னோட லாபம் அப்பா."

"உண்மைதான். ஆனா அதை ஹார்துகிட்ட சொல்லலியே? அந்த நன்றிக்காக இந்த காசு தரேன்."

எப்போது விலை ஏறும் என்பதுதான் தெரிய வில்லை.

சொர்ணலட்சுமியோடு காரில் ஏறி, எஸ்டேட்டுக்குத் திரும்பினான். பகவதி, கார் சத்தம் கேட்டுவிட்டு விரைந்து வந்து பார்த்தாள். சொர்ணலட்சுமியும் கதிரேசனும் கீழே இறங்கியதும் சரக்கென்று வீட்டுக்குள்ளே போனாள். அந்த வேகத்தில் கோபம் தெரிந்தது.

''எங்கடி போயிருந்தே?''

''காப்பி எஸ்டேட் வாங்கறதுக்கு.''

''நேரம் காலத்துக்கு வீடு திரும்பியிருக்கக்கூடாது.''

''நான் சொன்னேன்.''

''நீ இங்க இருந்தாத்தானே பிரச்னையெல்லாம்? நீ கிளம்பி நாகர்கோவிலுக்குப் போ'' பகவதியின் கோபத்துக்கு சொர்ணலட்சுமி பதில் பேசாதிருந்தாள்.

''என்னாடி பேசாத நிக்கறே? எடு பொட்டிய. போ.''

விரட்டினாள்.

கதிரேசன் அறையை விட்டு மெல்ல வெளியே வந்தான்.

''சொர்ணலட்சுமி இங்கயே இருக்கட்டும்.''

''அவ என்னாத்துக்கு? உனக்குத்தான் சொந்த தங்கச்சி மதுரைல இருக்கே?'' பகவதி கொக்கி போட்டாள்.

''சொர்ணலட்சுமி தங்கச்சி இல்லை. பொண்டாட்டி. கதிரேசன் நிதானமாகச் சொல்ல, பகவதி நெருப்பு கொட்டியது போல் பின்னடைந்தாள். 'ஐய்யோ, ஐய்யோ...' என்று உரத்த குரலில் வீடு முழுவதும் அலைந்தாள்.

எஸ்டேட்டில் வேலை செய்கிற நாராயணனும் அவன் மனைவி புனிதவதியும் தபதபவென்று வீட்டுக்குள்

ஓடி வந்தனர். நாலைந்து கூலிப் பெண்கள் வாசலில் கூடி நின்றனர். புனிதவதி ஓடிப்போய் பகவதியைப் பிடித்துக் கொண்டாள். என்ன நடந்தது என்று விசாரித்தாள்.

"நான் என்னாடி பதில் சொல்லுவேன். செட்டியார் பொண்டாட்டிக்கு நான் என்னாடி பதில் சொல்லுவேன்? என்னை மரியாதையா நடத்தினா பொம்பளை தலையில நான் மண்ணைப் போட்டுட்டேனேடி. நான் திட்டம் போட்டு அவங்க குடியைக் கெடுத்ததா அவங்க சொல்லுவாங்கயேடி. தடுக்குனு சொர்ணலட்சுமி எம் பொண்டாட்டின்னு சொல்றானே. அடே, அடே தப்புடா. வெந்த புண்ணில் வேலை பாய்ச்சாதடா. செட்டியார் செத்துப் போன துக்கமே ஆறியிருக்காது. இடி மாதிரி இன்னொரு விஷயம் சொல்லாதடா. என்னை அப்படிப் பார்க்காதே. 'நீ என்னாடி யோக்கியதை'ன்னு என்னை கேட்டுறாத. என் யோக்கியதை ரொம்பப் பெரிசு. நான் யார் வயித்தெரிச்சலையும் கொட்டிக் கலை. இந்த எஸ்டேட்டிலிருந்து ஒரு இலைகூட நான் எடுத்துட்டு போகலை அதனாலதான் ஆச்சி என்னை அத்தனை மரியாதையா நடத்தினாங்க. அதுனாலதான் ஏலக்காய் சொல்லிக் குடுன்னு உன்னை இங்கு அனுப்பினாங்க. ஆச்சிக்கு நெஞ்சு நோவன்னா ஹார்ட் அட்டாகோன்னு சந்தேகப்பட்டேன். ஆச்சிக்கு உடம்பு சரியாகணும்னு தான் விரதம் இருக்கேன்டா. என்னடி நடந்தது...ஏன் கதிரேசன் உன்னை பொண்டாட்டின்றான்."

பகவதி ஆத்திரத்துடன் சொர்ணலட்சுமியை நெருங்கி. அவள் தலைமுடியைப் பிடித்து இழுத்து அடித்தாள்.

கதிரேசன் அவளிடமிருந்து விலக்கி சொர்ணலட்சுமியைத் தன் அறைக்குள் தள்ளினான்.

''நான் சொல்றேன், நான்தான்னு எங்கம்மாகிட்ட நான் சொல்லுறேன். உங்களுக்கு ஒன்னுமே தெரியாது. நான் சொல்றேன். ரொம்ப பண்ணாதீங்க.''

''என்ன எஸ்டேட் வாங்கின...எங்க இருக்கு அது...''

பார்வதி அவனை நோக்கித் திரும்பினாள். அவள் கேள்விக்கு கதிரேசன் பதில் சொன்னான்.

''அது வெறும் குப்பையான இடம். பாறை. யூக்கலிப்ட்ஸ் கூட வராது. மொத்த காசையும் கொண்டு போய் காப்பியில போடறியே. அப்பா வாங்கணும்னு எஸ்டேட்தானே உன்னை வாங்கச் சொன்னேன். நமக்கு நல்லகாய் தெரியும். காப்பி பத்தி என்ன தெரியும்.''

''தெரிஞ்சுக்க வேண்டியது தான்.''

''இன்னும் எவ்வளவு தரணும்''

கதிரேசன் பாக்கி தரவேண்டிய தொகையைச் சொன்னான், மதுரைக்குப் போய் புரட்டிக்கொண்டு வரப்போவதாகத் தெரிவித்தான்.

''பத்து பைசா போறாது. ரெண்டாவதா என்னைத் தொட்டதுக்கு உங்க ஜாதி, செட்டியாரைப் பல விஷயங்களில தவிக்க விட்டது, இருபத்தி நாலு வயசுல இவ நான் பொண்டாட்டின்னு சொல்றியே. உன்னைகிட்டச் சேர்க்குமா. மதுரையிலிருந்து உன்னால பத்து பைசா கொண்டார முடியாது.''

''அப்ப மலையிலயே காசு பாப்பேன். இந்த எஸ்டேட் பேங்க்ல அடமானம் வைப்பேன், காப்பி எஸ்டேட் மீதியைக் கட்டுவேன். காப்பி எஸ்டேட் விலை ஏறும். அதனை வைச்சு கடனை அடைப்பேன்.''

அதுவரை மவுனமாக இருந்த நாராயணன் திரும்பி, தன் மனைவியைப் பார்த்தான்.

"நம்ம எஸ்டேட்டை எதுக்கு பேங்க்ல அடமானம் வைக்கணும்? எனக்கு பத்து ஏக்கர் என் நிலம் பக்கமா பிரிச்சு கொடுத்துடுங்க. இன்னிக்கு என்ன விலையோ அதை நான் தரேன்."

"இந்த எஸ்டேட்டை நான் விக்கிற மாதிரியில்லை."

"இத்தினி நாள் இந்த எஸ்டேட்ல கஷ்டப்பட்டேன். நீங்க புது முதலாளி. எங்களைப்பத்தி அக்கறையோட நடந்துக்கணும். உங்கய்யா எனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சாரு. அந்த நன்றிக்கு அவருக்கு அடிமையா உழைச்சேன். உங்களுக்கு உழைக்கணும்னு என்ன அவசியம். நாங்க ஒரு நாள் அலட்சியமா இருந்தாக் கூட ஏலக்காய் போயிடும். நான் என்ன சும்மாவா கேட்டேன்...உங்களுக்குக் காசு வேணும், நான் தரேன் எனக்கு நிலம் வேணும்."

"தர்றா மாதிரியில்லை."

"பட்டுனு அப்படிப் பேசாதீங்க தம்பி."

"நீங்க பேசறது சரியா...எப்படா இவன் சங்கடத்துல மாட்டுவான்னு காத்துக்கிட்டு இருந்ததில்லை கேட்கறீங்க...கூட சம்பளம் தரேன்னா வேற ஆள் வருவான். நீங்க தேவையில்லை."

"பகவதி அம்மே! நான் போய் வருகிறேன்" என்று மலையாளத்தில் சொல்லிவிட்டு நாராயணன் வெளியேறினான். புனிதவதி பின் தொடர்ந்தாள்.

"நீ ஆழம் தெரியாம காலை விடுறே. அதிகம் ஆடறே. ஏலக்காய் பத்தி எதுவும் தெரியாதவன் நாப்பத்திரண்டு ஏக்கர் காப்பி வாங்கினு வந்து நிக்கிறே. இங்க நடக்கிற விஷயம் எல்லாத்தையும் நான் ஆச்சிகிட்ட போய் சொல்லப் போறேன். என் மனசும் கையும்

சத்தம்னு நேரா நின்னு பேசப்போறேன். நான் இல்லாத போது நீ இங்க இருக்கக்கூடாது. கிளம்புடி.''

''அவ இங்கதான் இருப்பா, நீங்க போகலாம்.''

பகவதி அவன் குரலில் திடம் பார்த்து திகைத்தாள். நாரையில் உட்கார்ந்தாள்.

விநாயகத்தின் எதிரே லட்சுமணச் செட்டியார் மிகுந்த யோசனையோடு உட்கார்ந்திருந்தார்.

''பிரேசில்காரன் மாட்டிக்கினான். முன்ன ஒரு தடவை பூச்சி அடிச்ச மாதிரி, இந்தத் தடவையும் பூவுல பூச்சி விழுந்திடுச்சி. பூ கருகிப் போச்சுன்னா காய் எங்க... பழம் எங்க...வந்த பழமும் கையில புடிச்சா நொறுங்கிப் போயிடுதாம்,''

''உனக்கு எப்படித் தெரியும்?''

''ஹிண்டுல வணிகப் பகுதியில சின்னதா போட்டிருக்கான்.'

''அப்ப நிறைய பேர் காப்பி வாங்குவாங்க.'

''ஆமா. ஏலக்காய் மழையைப் பார்த்த பயிரு குழந்தையப் பார்க்கிற மாதிரி பார்க்கணும். காப்பிக்கு இத்தினி கஷ்டபட வேணாம்.''

''அது கிடக்கு காப்பி விலை ஏறுமா?''

''ஏறும். ஏறலாம்.''

''அப்ப ஏலக்காய் தோட்டம் என்னாவும்.''

''காப்பிய வாங்குகிறதுக்கு ஏலக்காயை விப்பான் அதுவும் ஏலக்காய்ல ஆள் கிடைக்காம அல்லது ஆளுங்க தப்பா நடந்து லாபம் சரியா கிடைக்காத தோட்டக் காரங்க வித்துடுவாங்க.''

"தோட்டம் கைமாறினா லேபர்க்கு நல்லதா கெட்டதா."

"ஒரு வகையில நல்லது, ஒரு வகையில கெட்டது. ஆயிரத்தைந்நூறு ரூபாய் சம்பளக்காரன் ரெண்டாயிரத்துக்கும் போவான். ரெண்டாயிரம் ரூபாய் சம்பளக்காரன் மூவாயிரத்துக்கும் போவான். ஆனா புது முதலாளி. இது என்னா அது என்னான்னு கேப்பான். வேளையாளை சந்தேகமா பார்ப்பான். நம்ம இஷ்டத்துக்கு ஆட முடியாது. பையில் ஏலக்காய் போட்டுகிட்டு போக முடியாது. புதுக்கூலி ஆளுங்ககிட்ட வேலை வாங்கறது வேற கஷ்டம். நாளையிலேர்ந்து யூனியன் சுறுசுறுப்பாயிடும், பாரேன். பன்னிரெண்டு ரூபா கூலியை பதினெட்டா மாத்துன்னு சொல்லப்போறான். பாரேன் ஒவ்வொரு எஸ்டேட்டிலேயும் கேட்க மீட்டிங் போடுவான். நம்மை மாதிரி முதலாளிக்கு வேண்டப்பட்டவன் போகும்போது 'கங்காணி ஒழிக' அப்படின்னு திட்டுவான்.

"அப்புறம் வேற இன்னாவும்..."

"மதுரையில இருக்கிற பெரிய ஆளுங்க சேட்டு முதலாளிங்க. கேரளாவுல துபாய் காசு எடுத்தாந்தவங்க எல்லாம் வருவானுங்க. மலை அல்லோலகல்லோலப் படும்.

"எவனோ புரளி கிளப்பி வுட்ருக்கானுங்க. காப்பிக்குப் போகட்டும்டா. போய் காயடி பட்டுத் திரும்பட்டும். அந்தப் பொண்ணு சொல்லித்தான் கதிரேசன் காப்பித் தோட்டம் வாங்கியிருப்பான். நாப்பத்தி ரெண்டு ஏக்கர் காசுக்கு என்ன பண்ணியிருப்பாங்க? ஒரு வேளை ஏலக்காய் தோட்டம் விப்பானோ. ஒரு பத்து லட்சம் எடுத்துக்கிட்டு மலைக்குப் போவோம். அவன் விக்கிறேன்னா அவன் தோட்டத்தை வாங்குவோம்.

இந்திய காப்பி போர்டுக்கு ஐரோப்பிய கம்பெனி நன்று விலை கேட்டு, தரம் கேட்டு கொள்ளளவு கேட்டு, நற்ற அவசரக் கடிதம் அனுப்பியது. மாலையே பதில் அனுப்பப்பட்டது. இரண்டு நாள் கழித்து பல்லாயிரக் கணக்கான டன்னுக்கு ஆர்டர், போர்டுக்கு அனுப்பப் பட்டது, காப்பி போர்டு கொள் முதலை தீவிரப் படுத்தி யது. மறுநாள் ஒரு கிலோவுக்கு பத்து ரூபாய் விலை ஏறியது. இன்னும் ஏறும் என்று அறிவிக்கப்பட்டது. நகர வியாபாரிகள் காப்பிக் கொட்டையைப் பதுக்கினார் கள். யார் கேட்டாலும் இல்லை என்று கை விரித்தார் கள்.

இரண்டரை ரூபாய் என்று உடுப்பி ஓட்டலில் விற்ற ஒரு கப் மூன்றரையாயிற்று.

காப்பி தென்னிந்திய பானம். வட இந்திய அரசு அதைப்பற்றிக் கவலைப்படவேயில்லை.

லட்சுமண செட்டியார் பகவதியைத் தேடி மலைக்குப் போனார்.

25

அந்தமலை அமைதியாய் மிகப்பெரிய மாறுதலுக்கு தயாராகிக் கொண்டிருந்தது. மலை ஒரு சோம்பலான இடம். நகரத்து பரபரப்போ. ஆர்ப்பாட்டமோ இல்லாத இடம். கிராமங்களில் அவ்வப்போது ஏற்படும் ரகளை கூட மலையில் ஏற்படுவது இல்லை, பண்டிகையின் உற்சாகம் எதுவும் மலையில் தென்படாது, அரசியல்

தலைவர் மரணமோ, ஆட்சி மாற்றமோ இங்கு பெரிய தாக்கத்தை உண்டு பண்ணி விடாது. அந்த மலைப்பகுதி சுற்றுலா இடம் அல்ல. அதனால் அங்கு எந்த விஷயமும் பெரிய பதற்றத்தை உண்டாக்காது.

ஆனால் அந்த மலை இன்று பதறித் துடித்தது.குப்பை என்று வர்ணிக்கப்பட்ட காப்பிக்கு மிகப் பெரிய அந்தஸ்து வரப்போகிறதாய் பத்திரிகைகள் சொல்லின. பிரேசில் தேசத்தில் மாதிரிக்குக் கூட காப்பிப் பழம் இல்லை. காற்றில் பரவும் வைரசால் செடி தாக்கப் பட்டது. எத்தனை தடுப்பு மருந்து போட்டும் பயனில்லை என்று விவரித்தன.பிரேசிலினுடைய கொட்டத்தை அடக்குவதற்காகவே நடந்த அமெரிக்கசதி என்று கூட யாரோ அறிக்கை கொடுத்திருந்தார்கள். பிரேசிலில் சுத்தமான காப்பி இல்லை என்றதும் கென்யா மிக வேகமாகத் தன் விலையை ஏற்றியது. கென்யா அரசாங்கமே மிக கவனமாய் வியாபாரம் நடத்தியது.

இந்தியாவில் அரசாங்கம் என்பது மறைமுகமான தன்மையில் வியாபாரிகள்தான். அரசியல்வாதிகள் எல்லோரும் வியாபாரியின் பிரதிநிதியாக இருந்தார்கள். அரசாங்கம் அரசியல்வாதிகளின் உத்தரவால் இயங்கிக் கொண்டிருந்தது. எனவே அரசு இயந்திரம் விழிப்பதற்கு முன்னரே வியாபாரிகள் விழித்துக் கொண்டனர். கூர்க் நோக்கிப் படையெடுத்தார்கள்.

ஆனால் அந்தப்பகுதி காப்பிக்கு கொஞ்சம் மரியாதை இருந்தது.ஓரளவு கவனத்தோடு அங்கு பயிர் பராமரிக்கப் பட்டிருந்தது. எனவே கேரளா, தமிழ்நாடு பார்டர் பக்கம் வியாபாரிகள் இறங்கினார்கள்.போடிநாயக்கனூர் தான் இதற்கு மிக வசதியாக இருந்தது. ஏற்கெனவே அங்கிருந்து வியாபாரம் செய்யும் பணியாட்கள் மிரண்டு போகும் அளவுக்கு வடக்கே இருந்து ஆட்கள் வந்தார்கள்.

காப்பிக் கொட்டை கொள்முதல், காப்பித் தோட்டம் வாங்குதல் என்று பறந்தார்கள்.

கதிரேசன் எஸ்டேட் வாங்கிய பத்தாவது நாள் ஒரு ஏக்கர் காப்பி எஸ்டேட் அம்பதாயிரம் ரூபாய்க்குப் போயிற்று. அதற்கு அடுத்த நாள் அறுபதாயிரம் ரூபாய் என்று பேசப்பட்டது. வேறொரு மிகப்பெரிய எஸ்டேட் எழுபத்தி அஞ்சாயிரம் என்று கை மாறியது. மலையில் உள்ளவர்கள் மூச்சடைத்துப் போனார்கள்.

ஏலத்தை விட காப்பி அதிகவிலையா என்று அதிசயத்தார்கள். அம்மாவைவிட வேலைக்காரிக்கு மதிப்பா என்கிற மாதிரியான கேள்வி அது. ஆமாம் என்று காலம் பதில் சொல்லியது.

ஆறுமுகமும் ஜெயந்தியும் ஹிண்டு பேப்பரை தரையில் பரப்பி குப்புற கவிழ்ந்து கொண்டு படித்தார்கள்.

''பதினாறு வருஷம், போன மாசத்தோட வனவாசம் மாதிரி ஆகிப் போச்சு மலைக்கு வந்து கையகல நிலம் வாங்க முடியலை. குளிர் காத்தும், பூச்சிக் கடியும், கொட்டுற மழையும்தான் கண்ட பலன். எவன் எவனோ எங்கிருந்தோ வந்து இங்க நிலம் வாங்குறான். நம்ம ஊரு. ம்னு இருந்துக்கிட்டு நம்மால நிலம் வாங்கமுடியலை. பெரிய எஸ்டேட் வாங்க வேணாம். ஒரு அஞ்சு ஏக்கர் நிலம் வாங்கலாம். இல்லை காப்பியோ, ஏலமோ, யானைப் புல்லோ, நமக்குன்னு ஒரு நிலம் வாங்கிப்போட லாமில்லை.''

''வாத்தியார்க்கிட்ட அவ்வளவு பணம் ஏது... தரையில இருந்தா வாங்குற சம்பளம் பத்து தேதிக்கே பறந்து போயிடும். மலையில இருக்கிறதனால மரியாதையா ஓடுது. உன்னைய கல்யாணம் பண்றதுக்காக மலைக்கு வந்தேன், மறுபடியும் தரைக்குப்போக முடியுமா?

வேறெந்த பைத்தியக்காரன் இந்த மலைக்கு வருவான். தரையில இருந்தா பத்து டியூஷன் சேரும். சாலிடா துட்டு பார்க்கலாம். மலையில பசங்க பள்ளிக்கூடத்துக்கே வர மாட்டேன்றாங்க ''

''மலைக்கு வந்ததுக்கு நொந்துக்கிறீங்களா.என்னைக் கல்யாணம் பண்ணனதுக்கு நொந்துக்கிறீங்களா...'' ஜெயந்தி கடுகடுப்புடன் கேட்டாள்.

''நான் நொந்துக்கலை எனக்கு திருப்தியா இருக்கு வாழ்க்கை.மரியாதையான வேலை, நல்ல பொண்டாட்டி தோட்டத்தோட ஒரு ஓட்டு வீடு, ஆணும் பொண்ணுமா ரெண்டு பசங்க.எனக்கு எஸ்டேட் ஓனரா ஆவணும்ன்ற ஆசையே இல்லை.''

''எனக்கிருக்கு.என் பசங்க நான் பட்ட கஷ்டத்தைப் படக்கூடாது,என்னை மாதிரி கட்டின துணியோட ஓடி வரக் கூடாது. அதுவும் தவிர இந்த ஆளைக் கட்டிக்கினு இன்னாடி அனுபவிச்ச...அப்படின்னு தரையில் கேப் பாங்க அப்பபசங்களைக் காட்டினா போதுமா,எஸ்டேட் காட்டணும்.எஸ்டேட் ஓனர்ன்னு காட்டணும்.''

''இந்த வீடு வாங்கவே ஏழு வருஷம் ஆச்சு ஜெயந்தி நமக்கு.''

அது கருங்கல் கட்டிடம், ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி கட்டியது, மேலே மங்களூர் டைல்ஸ். உள்ளே நாட்டு ஓடு லட்சத்தி பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கி, கடனை மெல்ல அடைத்தார்கள் ஓய்வு நேரங்களில் ஏலக் காய் எஸ்டேட்டில் கணக்கெழுதியும் கமிஷன் ஏஜெண் டாக வேலை செய்தும், மதுரையிலிருந்து புடைவை, ரவிக்கைத் துணிகள் கொண்டு வந்து மலையில் விற்றும், கவரிங் நகைகள் கடன் கொடுத்தும் காசு சம்பாதித்தார் கள். அதில்தான் கடன் அடைத்தார்கள்.அந்த மலையில் அந்த பள்ளிக் கூடத்தில், எட்டாவது தாண்டி யாரும்

படிக்கவில்லை. அங்கு எட்டாவது படித்தவனுக்கும் பிரமாதம் தட்டுத் தடுமாறி தமிழ்தான் படிக்க வருமே தவிர ஆங்கிலம் வராது.

ஜெயந்தியும் ஆறுமுகமும் தங்களிடமிருந்த ஆங்கிலத் தன்மையும் இழந்து, ஆசிரியத் தன்மையும் இழந்து, மலையாள தொழிலாளி போல மாறினார்கள் காசு சம்பாதிப்பதே வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகக் கொண்டார்கள். எப்பாடுபட்டாவது ஒரு சுமாரான காப்பி தோட்டம் வாங்கியிருந்தால் இன்று அதை விற்று ஏலம் வாங்கியிருக்கலாம் ஆனால் என்ன செய்வது, எப்படி வாங்குவது என்றுதான் தெரியவில்லை.

''செட்டியார் புள்ளை கதிரேசன் எவளோ குண்டு கட்டையா ஒரு பொண்ணெக் கல்யாணம் பண்ணிக் கிட்டானாமே...பகவதி ஆடிப்போய்க் கிடக்கிறாளாமே. என்னடான்னு பகவதி கேட்டதுக்கு நீ என்னா ஓழுங் காண்னு கேட்டுட்டானாமே. அத்தோட நிக்கலை எல்லா ரையும் தெரிஞ்சவன்மாதிரி பெரிய தொகை இறக்கி காப்பத்தி ரெண்டு ஏக்கர் காப்பி வாங்கிட்டான், மிச்சம் ஒரு பெரிய தொகை கொடுக்கணுமாம் அதனால கையில இருக்கிற எஸ்டேட்டை விக்கப் போறான் அவனைப் பார்த்துட்டு நிறையபேர் ஏலத்தை விட்டுட்டு காப்பிக்குப் போறாங்க. அவசரத்துக்கு விக்கறதனால ஏலம் படி யானமா விலை போகும். பின்னாடி கப்புன்னு விலை ஏறும். நீ தாலிக் கொடி வரைக்கும் வித்து ஏலம் வாங்கு அது நல்லது. வெளியே யாரோ சொன்னார்கள்.

அவர்கள் சொன்னது கேட்டு ஆறுமுகமும், ஜெயந்தி யும், நகை மதிப்புப் போட ஆரம்பித்தார்கள். மூன்று ஏக்கர் கூட வாங்க முடியாது என்று சோர்ந்து போனார் கள்.

''இந்த வாத்தியார் உத்தியோகத்துல லோல் படறத

விட போடி சந்தையில் மூட்டைத் தூக்கிப் பிழைக்க லாம்'' பள்ளிக்கூட கொத்துச்சாவி எடுத்துக்கொண்டு ஆறுமுகம் அன்றைய பொழுதை கழிக்கப் போனான்

கதிரேசனைத் தேடி பல பேர் வந்தார்கள். ''காப்பி எஸ்டேட் வாங்கினியாமே,கூடத்தரேன்கொடுத்திர்றியா'' என்று கேட்டார்கள்.

''பேலன்ஸ் வைச்சுருக்கியாமே அதை நாங்க அடைச் சுடறோம். உனக்கு ஒரு அமௌண்ட தரோம். எஸ்டேட் பாதி பாதியா பிரிச்சுக்கலாம்'' பெரிய சூட்கேஸ் நிறைய பணம் கொண்டு வந்து பிரித்துக் காட்டினார்கள்

வெளி ஆட்கள் யாரோ பேசவந்தபோது, 'சொர்ண லட்சுமி சமையல் கட்டில் சாப்பிட உட்கார்ந்தாள். பகவதிக்கு அவள் உரிமை வெறுப்பைக் கொடுத்தது. ஆச்சி தன்னைக் கேவலமாகச் சொல்லி விடுவாளோ என்ற பயம் பதைபதைக்க வைத்தது.

சொர்ணலட்சுமியின் தட்டைப் பிடுங்கி கொல்லைப் புறம் வீசினாள் அவள் முதுகில் அறைந்து கொல்லைப் புறம் தள்ளினாள்.

''என்னை எதுக்கு அடிக்கறீங்க?'' எரிச்சல் தாளாது சொர்ணலட்சுமி கத்தினாள்.

''அடிக்கிறதா. வெட்டிக் கூறு போட்டுருவேன். நான் ரெண்டாந்தாரமா இருந்தாலும் ரொம்ப மரியா தையான குடித்தனக்காரிடி. எனக்குக் குழந்தைங்க கிடையாது. இந்த நாப்பது ஏக்கர் சொத்தை நான் மூத்தாள் குழந்தைகளுக்காகத்தான் கட்டிக் காப்பாத்த வந்தேன். இதை நீ கொத்திட்டு போறதுக்கு வுட மாட் டேன்டி'' கன்னத்தில் அறைந்தாள்.

கதிரேசன் சொர்ணலட்சுமியை விலக்கி, கூட்டிக் கொண்டு போனான், அவளைப் பெட்டி படுக்கையோடு

காரில் ஏற்றி பள்ளிக்கூடத்துக்கு அருகேயிருந்த ஆறுமுகம்-ஜெயந்தி வீட்டிற்குக் கூட்டிப் போனான்.

"தம்பி, வாங்க, வாங்க. ஜெயந்தி, யார் வந்துருக்கு பார்" ஆறுமுகம் தடாலடியாய் வரவேற்க, ஜெயந்தி வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

'நான் இந்தப் பொண்ணை விரும்புறேங்க. இவ பேர் சொர்ணலட்சுமி. இது எங்க சின்னம்மாவுக்குப் புடிக்கலை. அவங்க லவ் பண்ணி கல்யாணம் பண்ண வந்ததான். ஜாதி விட்டு ஜாதி சம்பந்தம் பண்ணவங்க தான். எங்க அப்பா, எங்க அம்மா எல்லாரும் அவங்களை ரொம்ப மரியாதையா நடத்தினாங்க, ஆனா அவங்களுக்கு மரியாதையா எங்களை நடத்தத்தெரியலை, என்னை ரொம்ப சின்னப்பையனாகவே நடத்துறாங்க."

"அடேடே ஏன் அப்படி?" ஆறுமுகமும் ஜெயந்தியும் கிரேசனுக்கு அனுசரணையாய் வியந்தார்கள்.

"இந்தப் பொண்ணைப் போட்டு அடிச்சு ரொம்ப டார்ச்சர் பண்றாங்க."

"அப்படியா. பகவதி ரொம்ப நல்ல லேடியாச்சே..." யார் பக்கமும் உரசாமல் ஆறுமுகம் பேசினான்.

"எனக்கு உதவி செய்யணும். காப்பி எஸ்டேட் மேல இவங்களை குடி வைக்கிறதுக்கு முன்னாடி உங்க வீட்டுல காபந்தா ஒரு பத்துப் பதினைஞ்சு நாள் வைச் சுக்கணும் நீங்க லவ் பண்ணி மலைக்கு வந்தவங்க. காலிகட்டி ஜெயிச்சு காட்டினவங்க, ஒரு தாய், தந்தை மாதிரி என் வருங்கால மனைவியை நீங்க பாதுகாக்க றதுல் இதுக்கு நான் நன்றியோட இருப்பேன்.

"வுடுங்க. கவலையை வுடுங்க. இனி எங்க மகள். நாங்க பெத்த பொண்ணு. எங்களைத் தாண்டி இவளை

யாரும் ஒன்னும் பண்ணிட முடியாது. இந்த இருபதாம் நூற்றாண்டில் ஜாதி என்ன, மதம் என்ன? இதே இந்த சொர்ணலட்சுமிகிட்ட நானூறு சவ்ரன் நகையும், நாப்பது ஏக்கர் எஸ்டேட்டும் இருக்கட்டும். புடைவையை மேலே போர்த்திக்கிட்டு உள்ள கூப்பிடுவாங்க. நிஜமாலே நீ சொர்ணலட்சுமிதான்னு வழிச்சு நெட்டி முறிப்பாங்க. நாங்க பாத்துக்கறோம்.''

ஜெயந்தியின் மனப்போக்கை ஆறுமுகம் புரிந்து கொண்டான்.

''அம்மா சொர்ணலட்சுமி நாங்க ஏழைங்கதான். வெட்டிப் போட்டுருவாங்கன்னு பயந்து பதினாலு வருஷத்துக்கு முன்னாடி குடி வந்தோம். கையகலம் ஊடு... ரெண்டு வேளைச்சோறு, உடுத்திக்கட்ட ரெண்டு ஜதைத் துணி இவ்வளவுதான் சம்பாதிச்சோம். காலையில காதல்னு கல்யாணம் பண்ணிக்கிட்டு, சாயந்திரம் மாமியார் வீட்டுக்குப் போய் இருவது சவரன் நகை போடுன்னு எனக்கு கேக்கத் தெரியாது. ஜெயந்தி என்னை நம்பி வந்த பொண்ணு...அது யாராலயும் கண்ணு கலங்க கூடாதுன்றதுதான் என் கொள்கை. பதினாலு வருஷமா ஜெயந்திய ஒரு சொல் சொன்னதில்லை.''

''எனக்கு அது போறுங்கறேன்'' புருஷனுக்கு ஆதரவாய் ஜெயந்தி பேச ஆரம்பித்தாள்.

''ஊர் மரியாதைக்கு ஆசைப்பட்டு மாமியார், நாத்தனார்னு இடிபடறதை விட இப்படி ஒதுக்குப்புறமா இருந்து நம்ம காட்டுக்கு நாமளே ராணியா இருக்கலாம். எப்பனா தோணும். தோணாத இருக்காது. நிலமும், நீச்சுமா, சொத்தும், பத்துமா இருக்க ஆசை வரும். இங்கே எல்லாம் புருஷன்தான்னு அடக்கிக்குவேன்.

[illegible] போய் உங்க வேலையைக் கவனிங்க. சொர்ண[illegible] [illegible] என் வயித்துலபொறக்காத பொண்ணு.''

[illegible]திரேசன் மிகுந்த நிம்மதியோடு அவர்கள் வீட்டை[illegible] (ந்) வெளியே வந்தான் இந்த அன்புக்கு ஏதாவது [illegible] வேண்டும் என்று மனத்தில் நினைத்துக் கொண்[illegible]ன்.

[illegible]ண்டிக்குள் உட்கார்ந்தபோது, மறுபக்கம் யாரோ [illegible]லிந்து பார்த்தார்கள்.

''ஒரு நிமிஷம் தம்பி. எனிக்கி இப்படி மோசம் [illegible]ணுவியா. தம்பி...மேலே எத்தனை பிரியமாயிட்டு [illegible]ான் இருந்தது,'' குனிந்து பேசிய நாராயணன் கையை [illegible]திரேசன் எட்டித் தொட்டான்.

''உள்ள வந்து உட்கார். உன்கூட பேசணும்னு [illegible]ரண்டு மூணு தடவை ட்ரை பண்ணேன். நீ அவுங்க [illegible]க்கம் சேர்ந்துட்டியோன்னு ஒரு அச்சம்.''

''நான் கூலிக்கு வேலை செய்யறவன். நான் யார் [illegible]க்கம் சேருவேன். யார்கூடக் கூலி தராங்களோ அவங்க [illegible]ளோட நான் ஒட்டுவேன். உங்கப்பா கூலி மட்டும் [illegible]கொடுக்கலை. நாச்சியப்ப செட்டியார் கூலியோட [illegible]மரியாதையும் கொடுத்தார். எஸ்டேட்ல வேலை செய்யற [illegible]முப்பது நாப்பது பேர் என்னை மதிக்கணும்ங்கறதுக் [illegible]காக எங்கூட மட்டும்தான் பேசுவாங்க. நான் என்ன [illegible]சொல்றேனோ அதான் செய்வாங்க. முதலாளி மேஸ்திரி [illegible]பேச்சைக் கேட்டாத்தான் மேஸ்திரி பேச்சை மத்த கூலி [illegible]ஆள் கேப்பான். நீ காப்பி எஸ்டேட் வாங்கினது [illegible]எனக்கு வருத்தம். எனக்கு காப்பி வேலை தெரியாது. [illegible]ரெண்டுத்துக்கும் நீ ஒரே முதலாளியா இருந்தாலும் [illegible]தனித்தனியா மேஸ்திரி போட்டுத்தான் ஆகணும். காப்பி [illegible]மஸ்திரி, ஏலம் மேஸ்திரின்னு பிரிஞ்சுதான் ஆகணும்.

இது எனக்கு மரியாதைக் குறைவு. இதே நீ இன்னொரு இருவது ஏக்கர் ஏலக்காய் வாங்கியிருந்தா இன்னும் பத்து பத்து ஆளை நான் வேலைக்குச்சேர்த்திருப்பேன். நாப்பது ஆளுக்கு மேஸ்திரியா இருந்திருப்பேன். அறுபது ஏக்கர் நிலத்துக்கே மேஸ்திரின்னா, மலையில் யூனியன் ஆளுங்கெல்லாம் கூட மரியாதையா பாப்பாங்க. இத்தினி நாள் விசுவாசத்துக்கு எனக்கு ஒன்னுமில்லாம பண்ணிட்டீங்க.'

''விசுவாசம் என்பது ஏலக்காய் பறிக்கறது மட்டும் தானா?''

''வேறென்னா செய்யணும்.''

''முதலாளி எந்த ஆபத்திலிருந்தாலும் காப்பத்தணும்.''

''நான் காப்பாத்த மாட்டேன்னு சொல்லலியே. இப்ப நடக்கிறது குடும்பச் சண்டை. உன்மேலே பிரியப்பட்டுத் தான்...உன் சின்னம்மா கோவிக்குது.''

''எனக்கு இஷ்டப்பட்ட பொண்ணைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கிடுவேன். இன்னொருத்தர் அபிப்ராயம் இங்கு முக்கியமில்லை. சரிதானா.''

''சரிதான்.''

''காதலுக்கு ஜாதி முக்கியமா...'

''அது எதுக்கு ''

''காசு பணம் முக்கியமா.''

''மனசுக்குப் புடிச்சிருந்தா மத்த எல்லாம் மட்டந் தான்.''

''நான் காப்பி வாங்கினது ஒரு எதிர்ப்பு தெவிரிக் கறதுக்கு. என்னால தனியா நிற்க முடியும். சுயமா தொழில் பண்ண முடியும்னு எல்லார் கிட்டேயும்

காட்டறதுக்கு. குறிப்பா எங்க பங்காளிகளுக்குக் காமிக்கறதுக்கு. லட்சுமண செட்டியார்னு ஒருத்தர் வந்தாரே அவர் அப்பாவ ரொம்பப் படுத்தினார். அம்மாவ மிரட்டினார். எஸ்டேட் எங்களுக்குச் சொந்தம்னு எங்கப்பா செத்த அன்னிக்கு சத்தம் போட்டார். பகவதியம்மா பாவம் டாள். என்னைக் குழந்தைன்னே நினைக்கிறாங்க. அவங்க மேல ரொம்ப மரியாதை. ஆனால் எங்கப்பா தொழிலையே நான் செய்யணும்னு என்ன அவசியம் நாச்சியப்ப செட்டியாராலதான் நான் நல்லாயிருக்கேன்னு எதுக்காக நான் பேர் வாங்கணும். காப்பி விலையேறும்னு நான் மலைக்கு வந்த அன்னிக்கே எனக்கு தெரியும் ஆனா இத்தினி விலை ஏறும்னு எனக்குத் தெரியாது. இந்த மண்ணைத் தொட்ட நேரமோ, இல்லை அந்தப் பொண்ணைத் தொட்ட நேரமோ நான் கைவைச்ச விஷயம் லாபமாயிடுச்சு. எங்கியோ கோடிக்கணக்கில் போயிடுச்சு. ரெண்டரை கோடி காசா, கரன்ஸியா சூட்கேஸ்ல கொண்டு வந்து வீட்டில வைக்கிறான். இங்க இருக்கட்டும். விக்கிறதைப் பத்தி யோசனை பண்ணிச் சொல்லுன்றான்.'' கதிரேசன் பின் சீட்டில் சரிந்து உட்கார்ந்து கொண்டு தொடர்ந்து பேசினான்.

''காப்பி ஏறின வேகத்தில் இறங்கும். இன்னும் ஒரு படி விலை ஏறட்டும் என்று காத்துக் கொண்டிருக்கிறேன். இந்த இடத்தில் வாழ விரும்பாத வட இந்தியனுக்கு விற்றுவிட விரும்புகிறேன். அந்த லாபத்தை ஏலத்தில் போட விரும்புகிறேன். நாராயணா, நானாகப் போய் இனி எதுவும் பேச முடியாது. என்னை அதீத பணக்காரன் என்பதாய் எல்லோரும் பார்க்கிறார்கள். நான் போய் ஏலக்காய் எஸ்டேட் விலை கேட்டால் திரட்டை விலை சொல்லுவார்கள். நீ விலை கேள். எனக்காகக் கேள். என்னுடைய பினாமியாக இரு.''

"கடைசிவரை பினாமிதானா, நானாய் நிக்க முடியாதா. எனக்குஎன்று எதுவும் கிடையாதா."

"எனக்குப் புரிகிறது. இப்படிச் செய்யலாம். உன் பெயரில் பத்து ஏக்கர் வாங்குகிறேன். இன்னொரு பெயரில் இருபது ஏக்கர் வாங்குகிறேன். இன்னொரு பெயரில் முப்பது ஏக்கர் வாங்குகிறேன் தற்போது இருக்கிற தோட்டத்தைச் சேர்த்து, வாங்குகிற தோட்டத்துக்கும் நீயே மேஸ்திரி. இப்போது வாங்குகிற ரெண்டாயிரம்தான் எப்போதும் சம்பளம். ஆனால் பத்து வருடம் பொறுத்து அந்த பத்து ஏக்கரும் உனக்கே சொந்தமாகும். அதாவது உன் பெயரில் வாங்கப்பட்ட பத்திரம் உனக்குக் கொடுக்கப்படும். அதுவரை என்னிடம் இருக்கும். கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் நாப்பதாயிரம் விலையுள்ள ஏலக்காய்த் தோட்டம். அதாவது நான் உனக்கு மூவாயிரத்து முந்நூறு அளவு தனியே சம்பளம் தருகிறேன் என்று இதற்கு அர்த்தம்." கதிரேசன் கணக்குப் போட்டுக் காண்பித்தான் நாராயணனுக்கு மனம் நிறைந்தது.

'ஜாதியின்னா ஜாதி...காதலுக்கு மொழி மதம் எதாவது தடையா. ஒரு தமிழ்ப் பையன் மலையாளத்துப் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கிட்டான், இப்போ நாங்க பேசுற மலையாளத்தை விட நல்ல மலையாளம் பேசறான். எழுதப் படிக்க கத்துக்கிட்டு தகழின்றான், வள்ளத்தோல்ன்றான். யூனியன் ஆளுங்களுக்கு மலையாளத்துல கவிதை எழுதித் தரான். எங்க மனசு வைக்கிறமோ அங்க கலந்துடனும். அது மலையா இருந்தாலும் சரி, பொண்ணா இருந்தாலும் சரி, உங்களுக்கு மலை புடிச்சிப் போச்சு. பொண்ணு புடிச்சு போச்சு. ஊனி நில்லுங்க. நான் கூட இருக்கேன்."

''ரெண்டுபேர் அதுக்குத் தொந்தரவு பண்ணுவாங்க.''

''யாரு.''

''லட்சுமண செட்டியார். வினாயகம்.''

''எங்கிட்டவுடுங்க. நான் பாத்துக்கிறேன்.'

''வினாயகத்தை வேலையிலிருந்து எடுத்துடட்டுமா''

''யூனியன் பிரச்னை வரும். நேதாக்கமார் தொந்தரவு பண்ணுவாங்க.''

''சரிக்கட்ட முடியாதா.''

''சரிக்கட்ட முடியாதது எதுவும் உலகத்தில் இல்லை. எல்லாம் காசுதான்.''

''வினாயகம் வந்தா வெளியே துரத்திடு. என்னை க்யுரிங் ரூம்ல வைச்சு கதவு சாத்தினான். அவனை எதுனா பண்ணியாவணும்.''

''செய்துடலாம்.''

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து, சிரித்துக் கொண்டார்கள்.

26

'எனக்கு தெரிஞ்சவரைக்கும் உங்க மேல யாருக்கும் எந்த் மரியாதையும் கிடையாது, நாச்சியப்ப செட்டியாரை தகனம் பண்ணும்போதே உங்களைப் பத்தித்தான் மட்டமா பேசினாங்க. அல்பத்தனமான ஆளுன்னாங்க. நீங்களா போய் யாரது சொர்ணலட்சுமின்னு கேட்டா

பதிலே பேச மாட்டாங்க ஆச்சி அனுப்பிச்சாங்கன்னு அங்க போய் நில்லுங்க. ஆச்சி விசாரிச்சுனு வரச்சொன்னாங்கன்னு கேள்வி கேளுங்க, அப்பத்தான் மரியாதையே கிடைக்கும். பேச ஆரம்பிச்சுட்ட பிறகு மொள்ள மொள்ள சாய்ச்சுடுங்க. பொம்பளைய சாய்க்கறதுக்கு உங்களுக்குச் சொல்லியா தரணும்'' விநாயகம் காரின் பின் சீட்டில் உட்கார்ந்து கொண்டு லட்சுமண செட்டியாருக்கு உபதேசம் செய்து கொண்டு வந்தான்.

லட்சுமண செட்டியாருக்கு அவன் உட்கார்ந்து பேசிய விதம் கோபத்தைக் கொடுத்தது.

'வேலைக்கார நாயே' என்று மனசுக்குள் வார்த்தைகள் கொப்பளித்தது. இவன் அண்டிக் கிடப்பவன் என்று ஞாபகம் வந்ததால் அடக்கிக் கொண்டார். காரியம் முடிந்ததும் இவனைத் தண்டிக்கலாம் என்று தள்ளிப் போட்டார்.

ஐம்பத்தி நாலு வயதாகியும். மனசுக்குள்ளிருந்து காமம் அகலவில்லை. காமம் பழக்கப்பட்ட ஒரு முரட்டு குதிரை போலிருந்தது. அறுத்துக் கொண்டு ஓடி விடுகிறேன் பார் என்று மனசுக்குள்ளேயே கால் தூக்கி மிரட்டிக் கொண்டிருந்தது, பகவதியை நினைக்கும்போதெல்லாம் அந்த குதிரை மிக ஆபாசமாய் நடந்து கொண்டது.

நாப்பது ஏக்கர் நிலத்தை ஒரு பொட்டாச்சி தனியா நிர்வாகம் பண்ணியிருக்கான்னா அவ இன்னா அற்புதமான பொம்பளையா இருக்கணும், நாச்சியப்பனுக்கு மட்டும் அப்படி இன்னா அதிர்ஷ்டம்...முப்பத்தி ஏழு வயசுல, இருபத்தியொரு வயசுப் பொண்ணு இன்னா ஆனந்தம்.

பெண் என்பவளை சந்தோஷப்படுத்த மோகம் காரணமாவதில்லை. எது வரினும் எல்லா நேரங்களிலும்

நான் உனக்கு துணையிருப்பேன். மூன்றாம் மனிதருக்கு முன்னால் உன்னை தூஷிக்க மாட்டேன். உனக்கு மரியாதை குறைவான காரியங்களில் ஈடுபட மாட்டேன் என்கிற வாக்கும். வாக்கைத் தொடர்ந்த செயலும்தான் பெண்ணை சந்தோஷப்படுத்தும். சந்தோஷப்பட்ட பெண்தானே போகத்துக்குத் தயாராவாள்...ஏமாற்றுகிற ஆணை, பெண் அறவே வெறுக்கிறாள். முரடனைவிட ஏமாற்றுபவன் கேவலமானவன் என்கிறாள்.

நாச்சியப்ப செட்டியார் பகவதிக்கு கொடுத்த நட்பும் நம்பிக்கையும் வேறு எவராலும் கொடுக்க முடியாது.

''சொத்து எழுதி வைச்சுடலாம், பகவதி எந்த சொத்தும் தனியா இருக்கிற உன்னைக் காப்பாத்திடாது. தொந்தரவுதான் கொடுக்கும் என்னுடைய மனுஷாள் நான் இல்லாத போனாலும் என்னை மரியாதையா நடத்துவாங்க. என் பொண்டாட்டியும், என் குழந்தைகளும் உன்னை தங்களில் ஒருத்தராக நடத்துறாங்க. அப்படித்தான் நடதத்ணும்னு சொல்லி வைச்சுருக்கேன் இதை சொல்றதுக்கும், இதை சரின்னு அவங்க ஏத்துக்கறதுக்கும் நான் ரொம்ப, ரொம்ப கஷ்டப்பட்டிருக்கேன்' நீ நினைக்கறதை விட அதிகமான பொறுமையோட இருந்திருக்கேன். அதட்டி அன்பு செய்யச் சொல்ல முடியாது. ஆச்சி நல்ல மனுஷி. ஒன் பேருக்கு ஒன்னும் எழுதி வைக்கலையேன்னு கவலைப்படாதே. எழுதி வைச்சாத்தான் இல்லாத பொல்லாத பேச்செல்லாம் வந்து சேரும்,'

சொத்து இல்லையென்பது கூட வலிக்க வில்லை. சொல் பேச்சு கேட்டு சுற்றி வந்து கொண்டிருந்த பிள்ளை இப்படி நடக்கின்றானே என்கிற ஆதங்கம்தான் நெஞ்சை த் துளைத்தது. இங்கு நடப்பதை ஆச்சிக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது. எஸ்டேட்டில் வேலை செய்யும் விவரமுள்ள ஒரு கூலிக்காரப்

பெண்ணிடம் அந்தக் கடிதத்தை ரகசியமாகக் கொடுத்து ஆச்சியிடம் சேர்க்கச் சொன்னாள் பதிலுக்குக் காத்திருந்தாள்.

காரிலிருந்து லட்சுமண செட்டியார் இறங்கியதைப் பார்த்ததும் பகீரென்றது. 'இந்த ஆள் ஏன் மறுபடியும்' என்று கேள்வி வந்தது.

"வணக்கம்மா" அவன் கைகூப்பியது வியப்பாயிருந்தது.

இந்தக் கிழவன் மோசமானவன் என்று முதல் பார்வையிலேயே தெரிந்து விட்டது. எடுத்தவுடன் மார்பைப் பார்க்கிறவனை மனிதனாக எந்தப் பெண்ணும் மதிக்க மாட்டாள். அணுகுமுறையே தவறு. பார்வையிலேயே கோளாறு என்றுதான் இதற்கு அர்த்தம். ஆரம்பமே தவறாயிருக்கும் ஆண்களோடு பேசுவதோ, பழகுவதோ தேவையில்லாதது, ஆனால் சில சமயம் பேசித்தான் ஆக வேண்டும். சூழ்நிலை அப்படி அமையும்.

பகவதிக்கு 'வாங்க' என்று வரவேற்க இஷ்டமில்லை "என்ன இந்தப் பக்கம் திடீர்னு?" என்று பொதுவாக வரவேற்றாள்.

"கையில ஒரு பதினைஞ்சு ரூபாய் இருந்திச்சு. காப்பித் தோட்டம் வாங்கலாம்னு வந்தேன். பொட்டியில காசு இருக்கு அதை ஜாக்கிரதையா உள்ள வைக்கணும்."

"பொட்டி கார்லயே இருக்கட்டும். காரைப் பூட்டி மாட்டுக் கொட்டகையில விட்டுருங்க."

"என்ன இப்படி நடந்து போச்சு" லட்சுமண செட்டியார் மிகவும் வேதனைப்பட்டவராய் முகத்தை வைத்துக் கொண்டார்.

"எது?"

"நம்ம கதிரேசன் கல்யாணம் முடிச்சுட்டானாம்ல அதுவும் உங்க ஊரு பொண்ணா மில்லே...உங்க உறவுக்காரங்களாமில்லே. ஆச்சி விசாரிச்சுட்டு வரச்சொல்லிச்சு. அங்க மதுரையில ஆளுக்கு ஆள் வாய்க்கு வந்தபடி பேசுறாங்க, நான்தான் ஒரு அதட்டு போட்டு எல்லாரையும் அடக்கிட்டு வந்தேன் பகவதிக்கும் இதுக்கும் சம்பந்தமில்லைன்னு சொல்லிட்டு வந்தேன்."

"அது எப்படி சம்பந்தமில்லாம போய்டும். அவன் நல்லவனாயிருந்தாலும், கெட்டவனாயிருந்தாலும் என் புள்ளைதானே. புள்ளை துடிப்பானவன். மிடுக்கான பொண்ணு பார்த்ததும் தொட்டுட்டான். தொட்டது தப்பில்லை, தொட்ட பொண்ணை என்ன பண்ணப் போறான்றதுதான் கேள்வி. அதைப் பொறுத்துதான் அவனுக்கு மரியாதை. அதனால ஏற்படப் போற விளைவுகளை அவன் எப்படிச் சமாளிக்கப் போறான்றதை பொறுத்துதான் அவன் எதிர்காலம்."

"ஆம்பளை அலைவான். பொம்பளைக்கு புத்தியிருக்கணுமில்லை." லட்சுமண செட்டியார் பகவதியைக் குற்றம் சொல்லும் நோக்கில் பேசினார்.

"சின்ன மரியாதை கொடுத்தாக்கூட பொம்பளை மயங்கிடும். எல்லாத்துக்கும் சரின்னும். ஆம்பளைதான் யோசிக்கணும். இவ நமக்கு சரியா...இவளை வைச்சு ஆள முடியுமான்னு உள்ள எடைப் போட்டு பார்க்கணும். சில பொம்பளைங்களை தொடறது நாகப்பாம்பைத் தொடறா மாதிரி. தொட்ட நேரமே சுருண்டு போகும் படியா ஆயிடும். அதனாலதான் நாள் பார்த்து நட்சத்திரம் பார்த்து, கல்யாணம் பண்றது. ஆண் குதிரைக்கு பெண் புலியைக் கல்யாணம் பண்ணி வைச்சா என்னாகும் கதி..."

"யார் குதிரை, யார் புலி." லட்சுமண செட்டியார் திகைத்தார்.

"ஒரு பேச்சுக்கு சொல்றேங்க. ஆச்சி வேற என்ன சொன்னாங்க. எப்ப வராங்களாம்." 'வந்த விஷயத்தை சொல்' என்பதைப் போல் துரிதப்படுத்தினாள்.

"ஆச்சி ரொம்ப அழுதிச்சு" லட்சுமண செட்டியார் பொய் சொல்லத் துவங்கினார். "வாய் விட்டு புலம்பல் தான். வினாயகம், நான் கொஞ்சம் தனியா பேசணும். நீ கொஞ்சம் தள்ளிப் போ" கூட வந்தவனை விரட்டினார் அவன் இளித்துக் கொண்டு நகர்ந்தான். அவன் சிரிப்பு பகவதிக்கு அச்சத்தைக் கொடுத்தது. வீச்சரிவாள் எங்கிருக்கிறது என்று ஒருமுறை ஞாபகப்படுத்திக் கொண்டாள்.

"செட்டியார் உயிரோட இருந்தா இப்படி நடந்திருக்குமா...அனாதையா போயிட்டமே அப்படின்னு அழுதாக. ரொம்ப பெருங்குரலெடுத்து அழுதாக." அவர் சொல்லச் சொல்ல பகவதிக்கும் அழுகை வந்தது'

"சுத்துப்பட்டுல இருக்கிற உறவு உன்னைத்தான் குறை சொல்லிச்சி. நான் சத்தம் போட்டு அடக்கிட்டேன் நீதான் பொண்ணு காட்டி மயக்கிட்டதா ஒரு சந்தேகம். சொத்து உன்பேர்ல இல்லைன்றதால தந்திரமா செய்துட்டன்னு சொல்றாங்க. நான் நம்பலை."

"ஏன் நம்புங்களேன். நான்தான் அப்படி செய்தேன்னு நீங்களும் சொல்லுங்களேன். நான் நாகர் கோயில் பொண்ணு. மலையாளத்துக்காரி. பொண்ணு விவகாரம்னு வந்துட்டா எந்த நிலைக்கும் போறதுக்கு பயப்பட மாட்டேன், ஆச்சி என்ன சொன்னாங்க, எப்ப வராங்களாம்."

''ஆச்சி வரா மாதிரியில்லை. அவங்க இடிஞ்சி போயி ருக்காங்க. நல்ல வார்த்தை சொல்லி பையனை மட்டும் கூட்டியாந்துரு அப்படின்னாங்க.''

''எனக்கென்ன சேதி சொன்னாங்க?'' பகவதி அவ ரைக் கூர்ந்து பார்த்தாள்.

''ஒரு சேதியும் சொல்லலை. ஆச்சிக்கு உம்மேல கொஞ்சம் சந்தேகம்.''

அவளுக்கு அவர் மீது சந்தேகமாக இருந்தது.அவரை நம்பக்கூடாது என்று முடிவு செய்தாள்.

''தப்பு நாச்சியப்பன் பேர்ல...உனக்குன்னு அவன் ஏதாவது செய்திருக்கணும். உன்னை வெறுமே அனு பவிச்சுட்டு செத்துப் போயிட்டான், சொத்து பத்து இல்லாதவங்களுக்கு ஏதாவது மதிப்புண்டா. மரியாதை உண்டா? உனக்கு சமார்த்தியம் போறலை. நாலைஞ்சு வெத்து பேப்பர்ல நீ கையெழுத்து வாங்கி வைச்சுருந்தா இன்னிக்கு நீ கண்ணுல விரலைக் கொடுத்து ஆட்லா மில்ல?''

''யார் கண்ணுல?''

''எதிராளி கண்ணுல.''

''உங்களுக்கு கண்ணு இருக்கு. என் கையில விரல் இருக்கு. இதுல பேப்பர் எதுக்கு, கையெழுத்து எதுக்கு.''

அவர் திகைத்து, சிரிப்பாக்கி கொண்டார்.

''உனக்கு எப்பவுமே தமாஷ்தான்'' என்று அவள் புறங்கையை தொடப்போனார். அவள் விலகிக்கொண்டு அவரை வெறித்துப் பார்த்தாள்.

'நாச்சியப்பன் தப்பு பண்ணிட்டான். நான் அதை சரி பண்றேன். இனி என் பேர்ல நான் சொத்து வாங்க முடியாது. ஏற்கெனவே நான் சூப்பர் டாக்ஸ். இன்னும்

சொத்து வாங்கினா பிரச்னை வரும், அதனால பத்து பதினைஞ்சு நாள் தங்கி, உன் பேர்ல காப்பி எஸ்டேட்டோ, ஏலக்காய் எஸ்டேட்டோ வாங்கப்போறேன் என் எஸ்டேட்டை நீ பாத்துக்க. அதுக்கு மாசா மாசம் காசு தரேன்.எனக்கும் வயசாயிடுச்சு.தேவகோட்டையில, மதுரையில இருக்கிற சொத்தை பசங்களுக்குக் கொடுத்துட்டு, நல்ல ரொக்கத்தோட இங்க வந்து தங்கிடுவேன், நாம ரெண்டு பேரும் சேர்ந்தே எஸ்டேட்டை கவனிச்சுக்கலாம், ஆளுக்குப் பாதி லாபம் பிரிச்சுக்கலாம்'' ரொம்ப நிதானமாய், பிரியமாய் லட்சுமண செட்டியார் பேசினார்.

இதில் ஒரு சொல் கூடத் தவறு இல்லை. ஆனால் மொத்த எண்ணமும் தவறு. அளவுக்கு மிஞ்சின தந்திரமுள்ள ஆண்தான் இப்படிப் பேச முடியும். இந்தப் பேச்சுக்குக் கோபப்பட முடியாது. அதே சமயம் இவன் எண்ணத்தை வளரவிடவும் கூடாது.

''எனக்கெதுக்கு இனி எஸ்டேட்டும் ஏலக்காயும், ஆச்சி வந்தாங்கன்னா அவங்களைப் பார்த்துட்டு நான் நாகர்கோவில் போய்டுவேன்.''

அவர் எழுந்து அருகே வந்தார்.

''நீ நொந்து போய்ப் பேசுற. நான் இருக்கிற வரைக்கும் நீ எந்தக் கவலையும் பட வேணாம். நீ சரின்னு சொல்லு. நான் உன்னை உச்சாணிக் கொம்புல போய் வைக்கிறேன்.''

''எதுக்கு சரின்னு சொல்லணும், நீங்க எம்பேர்ல எஸ்டேட் வாங்கறதையா.''

''எல்லாத்துக்குந்தான்.''

''எல்லாத்துக்கும்னா.''

''பராமரிப்பு, போக்குவரத்து, பாதுகாப்பு...ஏன், நான் அப்பப்போ வந்து சாப்பிட்டு போறேனே அந்த செலவுகூட நீ கணக்கு பண்ணிக்கலாம்.''

இன்னமும்கூட வார்த்தை பிறழவில்லை. 'இப்படிப் பேசினாயா' என்று கேட்டால் ஆம் பேசினேன். அதற்கு வேறு எந்த அர்த்தமும் இல்லை'என்று சொல்ல முடியும். இப்படிப்பட்டவர்களோடு சுற்றி வளைக்காமல் நேரடியாய் மோதுவதுதான் உத்தமம்.

''என்னை வைச்சுக்கறேன்னு சொல்றீங்களா.' தேங்காய் சிதறியது போல் பகவதி கேட்டாள்.

''சேச்சே அப்படி சொல்லலை.''

சிதறிய தேங்காய் ஒட்ட மறுத்தது.

''எனக்கு எஸ்டேட் எழுதி வைச்சுட்டு, நீங்க வரப் போக இருந்தா என்ன அர்த்தம்; ஊர் நம்மள அண்ணன் தங்கச்சின்னா சொல்லும்.''

''நாச்சியப்பன் வரலையா, போகலையா.''லட்சுமண செட்டியார் கண்களில் ஆசை வழிந்தது.

''அவர் எனக்கு புருஷன்.''

''நானும் உன்னை சந்தோஷமா வைச்சுக்கமுடியும்.

''எழுந்து போடா பொறுக்கி நாயே.''

''ஏய், நீ கூத்திதானடி. ஒரு செட்டியாருக்கு சந்தோஷத்துக்கு வந்தவதானே. சீர்சினத்தி, மானம், மரியாதை ஏதாவது உண்டா உனக்கு, புருஷன்றியே. உன் புருஷன் செத்தபோது உன் உறவு வந்ததா. முக்காடு போட்டுட்டு தானே வந்தே. மூணு நிமிஷம்தானே நின்னே. உன் புருஷன் செத்ததுக்கு உன்னை யாராவது துக்கம் கேட்டாங்களாடி. அய்யோ, பாவம்னு யாராவது ஒருத்தன்

சொன்னாங்களா சொல்ற இடத்துல நீ இல்ல. சொல்ற ஜாதியில நீ பொறக்கல. நீ என்ன கண்ணகியா, தொட்டா சபிச்சுடுவீங்களா.''

அவர் எட்டி அவள் நெஞ்சைத் தொட்டார், அவள் அதிர்ந்து போனாள். வீறிட்டுக் கத்தினாள். அவரை நெட்டி நிலைகுலையும்படி தள்ளிவிட்டு உள்ளே போய் வீச்சரிவாளை எடுத்து வந்தாள். விலகியிருந்த வினாயகம் ஓடி வந்தான்

''தயவு செய்து கத்தி காரியத்தைக் கெடுத்துராதீங்கம்மா. அவர் சொன்ன பதினைஞ்சு லட்சம் முன்பணம். ஏலக்காய்ல அறுபது. எழுபது லட்சப் போடத் தயாராயிருக்கார். உங்களுக்கு துணையா நான் இருக்கிறேன் ஆளுங்கள மேய்க்கற பொறுப்பை என்கிட்ட கொடுங்க நீங்க வெறும் மேற்பார்வை பாருங்க. வலிய வந்த சீதேவியை எட்டி உதைக்காதீங்க. அரிவாளக் கொண்டாங்க'' வினாயகம் பிடுங்க முயற்சித்தபோது அவள் மறுபடி ஓங்கினாள்.

ஒரு உஷ்ணத்தால், ஒரு கவலையால் ஒரு அதிர்ச்சியால் உச்சக்கட்ட படபடப்பால் உள்ளிருந்து பொங்கிய மன வேதனையால் பகவதியின் உடம்பில் சில மாறுதல்கள் ஏற்பட்டன.

'கடவுளே. கடவுளே, கடவுளே என்னை ஏன் கைவிட்டாய்...எதனால் என்னை இந்த இழிநிலைக்குக் கொண்டு வந்தீர்...' என்று சொல்லில்லாத மவுனம் ஒன்று கதறியது. இந்த நிலைக்கு பதிலாய் நான் செத்து ஒழிவது உத்தமம் என்கிற திடமான எண்ணம் வந்தது. உள்ளுக்குள்ளிருந்த உயிரை எச்சில் துப்புவது போல வெளியே வீசி விடுகிற ஆவேசம் வந்தது. உயிர், உடம்பு, விடுதலை, இவை எல்லாவற்றையும் நினைக்கின்ற நிலை, இவைகளைத் தெரிந்த நிலை இவைகளை

தனித்தனியாகவும் ஒன்றாகவும் பார்க்கிற அமைதி அவளுக்குள் ஏற்பட, வெளியே உள்ள சக்தி ஒன்று அவளுக்குள் மெல்லமாய் உள்ளே புகுந்தது. அந்த சக்தியின் புகுதலைத் தாங்காமல் அவள் தள்ளாடினாள். விழிகளை விரித்து விநோதமாகச் சிரித்தாள்.

"ஆமாண்டா. நான் கண்ணகி, எல்லைக்காளி, மலையாள பகவதி, சோட்டானிக்கரை அம்மா... சமயபுரம் மாரியம்மா, மதுரை மீனாட்சி. எம்மூஞ்சியில இவங்கல்லாரையும் பார்ப்படா. இனி எந்தக் கோயிலுக்குப் போனாலும் எம்மூஞ்சியைப் பார்ப்படா. என் நெஞ்சு தொட்டா உன் விரல் சுருங்கும். எல்லா ஜென்மத்திலும் உனக்கு குஷ்டம் வரும் போ. இந்த மலையை வுட்டுட்டுப் போ." அவள் உரக்கக் கத்தினாள்.

தடேரென்று சப்தமெழ உட்கார்ந்தாள். அரிவாள் பிடியை தரையில் அடித்து நிறுத்தினாள். ஒன்றரை அங்குலம் விட்டமுடைய அந்த அரிவாள் எந்தப் பிடிப்பு மில்லாமல் நெட்டுக்குத்தலாய் நின்றது. பகவதி கண்களை மூடிக் கொண்டாள். மிகப் பெரிய ரீங்காரம் அவளைச் சூழ்ந்து கொண்டது. மிகப்பெரிய ஆழத்துக்குள், சொல்ல முடியாத விரைவில் அவள் பயணப்படத் தொடங்கினாள்.

சில சமயம், சிலருக்கு சில நொடிகளில் இந்தவித தரிசனம் கிடைத்து விடுகிறது.

இது என்ன, எதனால், இது என்ன ஆகும் என்பதை அனுபவம் கொள்கிறவரால் பரிமாற முடியாது.

லட்சுமண செட்டியார் பயந்து பின்வாங்குகிற வேளையில் விநாயகம் மிருகம் போல ஒரு காரியம் செய்தான்.

"செட்டியாரே இந்தப்பொம்பளை பயந்து உட்கார்ந்துடுச்சு. நீங்க மல்லாத்திப் போடுங்க. வாங்க."

பகவதியின் மேல் சேலையைக் கிழித்து தரையில் போட்டான். லட்சுமண செட்டியார் முகம் திருப்பிக் கொண்டார். வெளியே வந்தார். ஸ்டியரிங் ஒடித்து திருப்பினார். அவரது வலது கை விரல்கள் வலிக்கத் துவங்கின.

வினாயகம் என்ன செய்வது என்று தெரியாமல் ஹால் தாண்டி அறைக்குள் எட்டிப் பார்த்தான். இரும்பு பீரோ தெரிந்தது. கொத்து சாவி அதில் சொருகப்பட்டிருந்தது. போய் பீரோவைத் திறந்து, அதிலிருந்து பணக்கற்றைகளையும், நகைகளையும், ஏலக்காய் பறிக்கும் பக்கெட்டில் போட்டுக் கொண்டான். கொல்லை வழியே காட்டுக்குள் நடந்தான்.

பகவதிக்கு அவன் செய்கைகள் யாவும்மனசில் தெரிந்தன. 'என்னுள் புகுந்த சக்தி வலிமையுள்ளது அது எங்கும் நிறைந்தது. எல்லா நேரமும் விழிப்போடிருப்பது. அது அந்த வினாயகத்தை கவனித்துக்கொள்ளும்' என்று மவுனமாய் இருந்தாள்.

நேதபக்கமார் என்கிற தொழிற்சங்கத் தலைவர்கள் கதிரேசனை டீக்கடையில் சந்தித்தார்கள். அலுவலகத்திற்கு வரும்படி அழைத்தார்கள். சங்கத்தின் ஆண்டு விழாச் செலவுக்காக கதிரேசன் ஐந்தாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தான். அவர்கள் அவனுக்கு கட்டான் காபி வரவழைத்துக் கொடுத்தார்கள். நாராயணனுக்கு உட்கார ஸ்டூல் கொடுத்தார்கள்.

"காபி வித்துடப் போறேங்க, ஏலம் வாங்கப் போறேன். எம்பேர்ல ஏற்கெனவே நிலம் இருக்கிறதனால பினாமி பேர்ல நிலம் வாங்கப் போறேன். சம்பளம்

அதிகமாக்கினால் அது சாராய கடைக்குத்தான் போகுது. ஒரு நாளைக்கு மூணுரூபா கூலி கூடுதலா தரேன். அந்தக் கூலியோடு நூறு ரூபாய் கூட போட்டுத் தரேன். அந்தக் காசை ஒரு கூப்பனா தரேன். நம்ம வாத்தியார் ஆறுமுகம், டீச்சர் ஜெயந்தி இவங்ககிட்ட அந்தக் கூப்பனைக் கொடுத்தா துணிமணிங்க தருவாங்க. சட்டையோ, புடைவையோ, வேட்டியோ, கம்பளியோ, அங்க வாங்கிக்கலாம். அவங்க குறைஞ்ச விலைக்கு நல்ல சரக்கா கொடுப்பாங்க. நீங்க பேசி முடிவு சொல்லுங்க.''

அவர்கள் கலந்து பேசி 'சரி' என்றார்கள்.

ஆறுமுகமும் ஜெயந்தியும் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார்கள். நாச்சியப்ப செட்டியாரின் நகையை விநாயகம் விற்கிறான் என்கிற தகவல் யூனியன் ஆள் கொண்டுவர, நாராயணனும் கதிரேசனும் எஸ்டேட் பிரேக்கி நடந்தார்கள்.

27

ஏலக்காய் பறித்துப்போடுகிற இரும்புபக்கெட்டை கடைவீதிக்கு யாராவது எடுத்து வருவார்களா. எல்லா தொழிலாளர்களும் டொம், டொம்மென்று எஸ்டேட்டிலேயே உருட்டிவிட்டு வருவார்கள். எஸ்டேட்டிலிருந்து ஏலக்காய் திருடி வருபவர்கள் அதைப் பொட்டலமாகவோ, டிபன் பாக்ஸிலோ பதுக்கி எடுத்து வருவார்கள். மிக அதிகமாகப் போனால் அரைக்கிலோ எடுத்து வருவார்கள. இப்படி ஒரு பக்கெட் ஏலக்காய் திருட விநாயகத்தால்தான் முடியும். ஒரு பொட்டலம் ஏலக்காய்க்கே அரை பாட்டில் பிராந்தி கிடைக்கும். ஒரு

பக்கெட் ஏலக்காய்க்கு நாலைந்து ஃபுல் பாட்டில்கள் கிடைக்கலாம். ஒரு ஆளுக்கு நாலைந்து முழு பாட்டில்களா. அதில் ஒன்று புடுங்கு. அந்த மார்க்கெட்டில் லேசாய்க் குடித்துவிட்டுக் கூடியிருந்த தொழிலாளர் கூட்டம் அந்த இரும்பு பக்கெட்டைக் கண்ணால் குறி வைத்தது.

விடுதலை மிகுந்த அந்த மார்க்கெட் பகுதியில் அந்த இரும்பு பக்கெட்டைப் பார்ப்பது அவர்களுக்கு எரிச்சலைக் கொடுத்தது. அடுத்தபடியாக ஆறு கிலோ ஏலக்காயை ஒருவன் திருடி வருகிறான் என்பது பொறாமையைக் கொடுத்தது. மேஸ்திரியாகவுமில்லாமல், தொழிலாளியாகவுமில்லாமல், தொழிலாளியாக இருந்து கொண்டே, மேஸ்திரிபோல் அதட்டுகின்ற வினாயகத்தை அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய பொட்டை அதிகாரம் கோபத்தைக் கொடுத்தது. அவன் நடையில் உள்ள பரபரப்பு, முகத்தில் உள்ள கலவரமும் அவன் ஏலக்காய் திருடிக் கொண்டு போகிறான் என்று எண்ண வைத்தது.

''அமுக்கிடலாமா'' என்று ஒருவன் கேட்க, எல்லோரும் ஒரே குரலில் 'அமுக்கே' என்று கத்தினார்கள். அவன் மீது எல்லோரும் பாய்ந்தார்கள். அந்த பக்கெட்டைப் பிடுங்கினார்கள். உள்ளே இருப்பதைப் பார்த்து விட்டு, பிடுங்கிய வேகத்தில் திரும்பக் கொடுத்தார்கள். ஒருவன் கூச்சமின்றி அவன் சந்தேகத்தை வாய் திறந்து சொன்னான்.

''நீ ஏலக்காய் திருடுவேன்னு தெரியும். இன்னான்னமோ எடுத்தாறியே பக்கெட்டுல'' அவனை விட்டு விலகிப் போனான்.

குடிகாரத் தொழிலாளர்கள் அதிகமிருக்கும் பகுதியில் திருட்டுப் பொருள்கள் வாங்குவதற்கென்று சில வியா

பாரிகள் இருப்பார்கள். ஏலக்காய், களைக்கொத்தி, உர மூட்டை, பூச்சி மருந்து, ரப்பர் ட்யூப், பிளாஸ்டிக் பைப், பித்தளை நாசில் என்று பல பொருள்களை வாங்குவார்கள்.

ஒரு சவரன் ஆயிரம் ரூபாய் என்று கொடுத்தாலும் போதும், வாங்கிக்கொண்டு போய் விடலாம். வாங்குகிறவனுக்கும் தெரியும் இது திருட்டு நகை என்று, அதனால் காசு கொடுத்ததும் நகையை மறைத்து விடுவான். காணாமல் போக்கி விடுவான். பதினெட்டு அல்லது இருபது சவரன் நகை இருக்கும். இருபதாயிரம் காசு கிடைத்தால் போதும். கொடைக்கானல் பக்கம் ஓடி விடலாம். அங்கேயும் ஏலக்காய் உண்டு. ஏதேனும் எஸ்டேட்டில் கூலியாகவோ, மேஸ்திரியாகவோ சேர்ந்து விடலாம். கொலை என்றால்தான் வலை வீசித் தேடுவார்கள். இருபது சவரன் திருடு போனதற்கு எந்த போலீஸும் மலை. மலையாய் ஏறாது.

இன்னும் அரைமணி நேரத்தில் இருபதாயிரம் கிடைத்தால் போதும். இவர்கள் யாரும் கண்டு பிடிக்க முடியாத இடத்துக்குப் போய் விடலாம். பஸ்ஸில் ஏறினால் செக் போஸ்டில் மடக்குவார்கள். நல்லதாய் ஒரு ஜோடி ரப்பர் செருப்பும், மாடர்ன் ரொட்டியும், ஜாமும் வாங்கிக் கொள்ளவேண்டும். ஒரு பாட்டில் தண்ணீர் பிடித்துக் கொள்ள வேண்டும். கிளை வெட்டுகிற பட்டாக்கத்தி வாங்கிக் கொள்ளவேண்டும். ஆறு மலை ஏறி இறங்கினால் கொடைக்கானல் மலைக்குப் போய் விடலாம். காடான பகுதி கொஞ்சம்தான். லாரி போகிற பாதைக்குப் போய்விட்டால் இன்னும் விரைவாக நடக்கலாம். அரை மணி நேரத்தில் இருபதாயிரம் கிடைக்க வேண்டும். அதுதான் முக்கியம் கிடைத்தது.

நகை வாங்கியவன் சாராயக்கடை வைத்திருப்பவன்.

"எங்கேயிருந்து திருடின இந்த நகையை" உரசிப் பார்த்து விட்டுக் கேட்டான்.

"எங்க திருடினா உனக்கென்ன, காசைக் கொடு."

"டேய்...இதை வீசி புதர்ல போட்டுட்டு எனக்குத் தெரியாதுன்னுடுவேன். இந்த நகை யாருக்கும் இல்லாத பூடும். எவன் தேடிட்டு வருவான்னு நான் கவனமா யிருக்க வேணாமா. சொல்லு யார் நகை"

"நாச்சியப்ப செட்டியார் ரெண்டாவது சம் சாரத்தது."

"அங்கேயே கை வெச்சுட்டுயா, பதினேழு சவரன் இருக்கும்," உள்ளங்கையால் எடை போட்டான்.

வீட்டுக்குள் போய் புதுசும் பழசுமாக நோட்டுகள் எண்ணி பதினாறாயிரத்து அறுநூறு ரூபாயை வேகமாக எண்ணி பதினேழாயிரம் என்று கொடுத்தான். பொய் யனிடம் எல்லோரும் பொய்தான் சொல்வார்கள், ஒரு திருடனை எல்லாவிதமாகவும் ஏமாற்றுவார்கள். காசு வாங்கி மலையை விட்டுக் கீழிறங்கிய அரை மணியில் நாராயணனும், கதிரேசனும் அவனைத் தேடி வந்தார்கள்.

"பக்கெட் நிறைய நகை இருந்ததுன்னா, துட்டு இருந்தது. ஒன்னும் புரியலை. நகர்ந்துட்டோம். நான் தான் செட்டியார் புள்ளைகிட்டே சொல்லுடான்னு ஆளு அனுப்பிச்சேன். நகையை சாராயக்காரன்கிட்டே கொடுத் துட்டுப் போறான் போலிருக்குது. வினாயகம் இல்லாம சாராயக்காரன்கிட்டே போகாதே. வினாயகத்தை மடக்கினு வா, தோ இப்பத்தான் போறான். இப்படித் தான் போறான்."

"பஸ்ல போனா போன் பண்ணி அடிவாரத்துல மடக்கிடுவாங்கன்னு காட்டு வழியா நடந்து போறான்.

அவன் காடு பழக்கமானவன். நீ சின்னப் புள்ளை பாத்துப் போ.''

டார்ச்சும் கம்பளியும் கதிரேசன் எடுத்துக் கொள்ள, லீச்சரிவாளை வீட்டிலிருந்து நாராயணன் எடுத்துக் கொண்டான். அவர்கள் தேடிக் கொண்டு ஓடினார்கள். அரை மணி ஓட்டத்திற்குப் பிறகு காடு இறுகிக் கொண்டு வந்தது. கிளைகளை வெட்டிக் கொண்டு ஆள் போயிருப்பது தெரிந்தது.

''இனி ரொம்ப இறக்கம். ஏனெனில் முதுகு காட்டி, இறங்குற மாதிரி இறக்கம். ஏணி முப்பதடி நாப்பதடி இருக்கும். இது மலை. நானூறு, ஐந்நூறு அடி இருக்கும். கால் தவறுனா சிதறு காய்தான். அவனை வேற விதமா பிடிக்கலாம் வுடு.'' நாராயணன் சமாதானப் படுத்தினான்.

''இந்த நானூறு அடிக்குப் பிறகு மறுபடியும் பள்ளத்தாக்கு வருகிறது, ஒரு சமதளம் போல் பாதை போகிறது. இறங்கி நடையை வேகமாக்கினால் வினாயகத்தைப் பிடித்துவிடலாம். இதற்கு மேல் தொடர மாட்டார்கள்என்கிற நம்பிக்கையில் அவன் நிதானமாய்க் கூட நடந்து போகலாம். எங்கேனும் இளைப்பாறலாம். இதில் ஒரே ஒரு கவலைதான். இது வழியே போனவன் வினாயகமாக இருக்க வேண்டும். போனவன் வேறு யாராவதாக இருந்தால் சகலமும் விரயம்.

இயற்கையால் செதுக்கப்பட்ட மலை விளிம்புகளில் கதிரேசன் கால் வைத்து இறங்கினான். நாராயணன் பின் தொடர்ந்தான், பார்த்துப் பார்த்து கால் வைத்துப் இறங்க பதினைந்து நிமிடங்களாயின. சமதளம் தொட்டு கதிரேசன் ஓடினான். அவன் வெறி நாராயணனுக்கு வியப்பாக இருந்தது. கதிரேசன் சட்டென்று நின்று புதர் மறைவில் உட்கார்ந்து கொண்டான். நாராயணன் அதைப் பார்த்து விட்டுத் தயங்கினான். மெல்ல கதிரேசனைத் தாண்டி முன்னேறினான்.

"என்னா நாராயணா என்ன வேணும்?" இருபது கெஜ தூரத்தில் வினாயகம் ஓடுவதற்குத் தயாராக இருப்பது தெரிந்தது.

"நீ பாட்டுக்கு பாதி லவுட்டிகினு வந்துட்ட... எனக்கும் கொஞ்சம் குடுத்துட்டுப் போடா"

"என்னாது பாதி?"

"கொள்ளை அடிச்சியே அந்த துட்டு. எனக்கும் கொஞ்சம் கொடுத்துட்டுப் போ. கொடுக்காம ஓடின உன்னைத் துரத்தித் துரத்தி வெட்டுவேன்"

"உனக்கெதுக்குக் கொடுக்கணும்"

"அந்த கதிரேசு என்னை வேலையிலிருந்து எடுத்துட்டான் இனி நான் எவ்விட போய் பொழைக்கறது. நான் எடுக்கணும்னு நினைச்சதை நீ எடுத்திட்டா நான் சும்மா வுடும்மா."

"என்கிட்ட ஒண்ணுமில்லை, எல்லாம் சாராயக் காரன்கிட்ட கொடுத்துட்டேன்."

"அவன்தான் சொன்னான் உனக்குக் கத்தை கத்தையா காசு கொடுத்ததை, எனக்குக் கொஞ்சம் கொடு" முதுகுப் பக்கத்திலிருந்து வீச்சரிவாளை எடுத்தான். நிதானமாய் நெருங்கினான். புதர் நடுவே கதிரேசன் அசையாது உட்கார்ந்து சகலமும் கேட்டுக் கொண்டிருந்தான்.

"எனக்கு எண்ணாயிரம் கிடைச்சது" இன்னும் இன்னும் நகர்ந்து கொண்டே வினாயகம் சொன்னான்.

"அப்ப பேர் பாதி கொடு."

"நீ கொஞ்சம் தானடா கேட்டே"

"அடபுடான்னா வெட்டிப் புடுவேன். எனக்கும் பேர் பாதி கொடு."

"என்கிட்ட எண்ணாயிரம்தான் இருக்கு"

"கள்ள நாயே...நான் அதை சோதிச்சுப் பார்க்கணும்டா...."

"டேய் கிட்ட வந்த கொன்னுடுவேன்", வினாயகம் கீழே கிடந்த கல்லை எடுத்துக் கொண்டான்.

"முட்டாள் நீ என்னா துப்பாக்கிய காட்டுறே.அந்த மாதிரி கல்லு என் காலு கீழேயும் இருக்குடா."

"நான் பேர் பாதி தரேன் என்னை வுட்டுறு"

"எடுத்துக் கீழே வை."

கொத்தாய் ஒரு பிடி கரன்ஸியை வினாயகம் தூக்கிக் காட்டினான், நாராயணனை விளிம்புகளில் கால் வைத்து முப்பதடி உயரத்துக்கு ஏறச் சொன்னான். விளிம்பில் கால் வைத்து ஏறுவது எளிது. இறங்குவது கடினம். இறங்குகிற தாமதத்தில் வெகு தூரம் ஓடி விட முடியும்? நாராயணன் பின்னடைந்து புதரில் மறைந்திருந்த கதிரேசனைத் தாண்டி மலையின் செதுக்கல்களில் கால் வைத்து ஏற வினாயகம் கதிரேசன் இருப்பது தெரியாமல் தாண்டி வந்தான். நோட்டு கற்றையைக் கீழே வைப்பது போல் குனிந்தான். காசை பக்கென்று பையில் போட்டுக் கொண்டு நாலைந்து பெரும் கற்கள் எடுத்து நாராயணனை நோக்கி முழு பலத்துடன் வீசினான்.

ஒரு ஏணியின் மீது நிற்பவனைப் போன்று மலைச் சரிவில் நின்று கொண்டிருந்த நாராயணன் முதுகில் இரண்டு பாறை, கற்கள். முழு பலத்துடன் தாக்கின வலி தாங்காது நாராயணன் அலறினான். அரிவாள் நழுவியது. பட்டுப் பட்டு மண்ணில் சொத்தென்று விழுந்தது. வினாயகம் அரிவாளை நோக்கி ஓடுகையில் கதிரேசன் குபீரென்று புதர் மறைவிலிருந்து எழுந்தான்.

சிறுத்தை போல வினாயகத்தை நோக்கி ஓடினான். வினாயகத்தின் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினான் முழு பலத்துடன் அவனை முகத்தில் குத்தினான். வினாயகம் உதறி விலகிக் கொலை வெறியோடு பட்டாக்கத்தியை வீசியபடி முன்னேறினான். மலைக் கற்களை எடுத்துக் கதிரேசன் அவன் மீது எறிய வினாயகம் புதர்களின் நடுவே ஓடி தன்னை மறைத்துக் கொண்டான். அவனும் கற்கள் பொறுக்கி வீசினான். பூசணிக்காய் அளவு பாறைகளை தூக்கிப் போட்டான். நாராயணன் மெல்ல கீழிறங்குவதைப் பார்த்து அவன்மீதும் நாலைந்து கற்கள் எறிந்தான். இடது பக்கமாய் இறங்குகிற நாராயணனையும், வலது பக்கமாய் நெருங்குகின்ற கதிரேசனையும் கற்களால் தாக்கினான்.

பெரிய மிருகம் கண்டு மிரளுகின்ற குரங்குபோல் கத்திக் கத்தி அலைந்து அலைந்து சண்டை செய்தான்.

நாராயணனின் இடது பக்க முதுகில் தாங்கமுடியாத வலி ஏற்பட்டது. எலும்பு விரிசல் விட்டதுபோல இடது கை கொஞ்சம் அசைந்தாலும் வலி துடிக்க வைத்தது. அந்த துடிக்க வைக்கும் வலி கோபம் கொடுத்தது.

அதிகம் அசைக்காமல் இடது கையை உடம்போடு ஒட்டி வைத்துக் கொண்டான். வலது கையால் வீச்சரிவாளை எடுத்தான். வினாயகத்தை நோக்கித் திரும்பினான்.

இந்த முறை விநாயகத்தின் கல் நாராயணன் நெஞ்சைத் தாக்கியது. நாராயணன் வெறி அதிகரித்தது. கதிரேசன் நிறைய கற்கள் பொறுக்கி சட்டையில் ஏந்திக் கொண்டு வினாயகத்தை இடைவிடாது தாக்க, வினாயகம் முகத்துக்கு எதிரே பையைப் பிடித்தபடி குனிந்து கொள்ள, தன்னைக் கவனிக்காத அந்த இடை

வெளியில் நாராயணன் வெறிபிடித்தவன்போல் பாய்ந்தான். கோபம் மட்டுமே முழுமுதல் குணமாயிருக்க வீச்சரிவாளை ஒரு சுழற்றுச் சுழற்றி வினாயகத்தைத் தாக்க, வினாயகம் குனிந்துகொள்ள வீச்சரிவாள் வினாயகம் தலையைக் கொய்து தரை நோக்கி யிறங்கியது

மனித ரத்தம் குபீரென்று பொங்கிய வேளையில் தலை தட்டென்று தரை தொட்டு உருண்டு பக்கவாட்டில் நின்றது.

ஒருகணம் வினாயகத்தின் தலை பூமியில இடக்காது வைத்து ஏதோ ஒரு சத்தத்தை கேட்டு வியப்பதுபோல் தோன்றியது. வலது கை பட்டா கத்தியை நழுவ விட, இடது கை பணப்பையை இறுக்கிப்பிடிக்க மூன்று தப்படிகள் தள்ளாடியபடி உடம்பு நடந்துவிட்டு பொத்தென்று குப்புற விழுந்தது. இன்னும் ரத்தம் பொங்கியது. இலைகளை, புற்களை, எறும்புகளை நனைத்துத் தவிக்க வைத்தது.

நாராயணன் அரிவாளை பூமியில் ஊன்றி ஒரு பாறையில் உட்கார்ந்து கொண்டான். கண்களை மூடிக் கொண்டான். கதிரேசன் முன்னேறி காலால் வினாயகத்தின் உடம்பு புரட்டினான். அவன் பையைப் பிடுங்கினான். மெல்ல நடந்து கண்மூடிக் கிடந்த நாராயணன் தோளில் கை வைத்தான்.

''கவலைப்படாதே, நானிருக்கேன்.''அவன் தலையை தடவிக் கொடுத்தான்.

நாராயணன் வீச்சரிவாளை வாங்கி, சிறிது தூரம் நடந்துபோய் ஒரு பள்ளத்தாக்கில் வீசினான். அடர்த்தியான செடிகளுக்கு நடுவே போய் அந்த அரிவாள் விழுந்தது.

"ஒரு கையால புடிச்சி ஏறிடு நாராயணா. உன்னை ஒட்டினாப் போல நான் வரேன். களைப்பா இருந்தா என் தோள்'ல என் தலையில கால் வைச்சுக்க. இருட்டறதுக்குள்ள மேல ஏறிடலாம்."

கிட்டத்தட்ட நானூறு அடி உயரமுள்ள செங்குத்து மலைப் பகுதியை கதிரேசன் முட்டுக்கொடுத்த தெம்பில் வெகு நிதானமாய் நாராயணன் கடந்தான். கதிரேசன் முகத்தில், முதுகில், தோளில், தலை உச்சியில் பலமுறை கால் பதித்து நின்றான். கதிரேசன் ஒரு சின்ன சிலம்பல் செய்திருந்தால்கூட நாராயணன் பிடி நழுவ பலத்த அடி பட்டிருக்கும். மரணம் ஏற்பட்டிருக்கும். உச்சிக்குவந்து இரண்டு பேரும் மல்லாந்து கிடந்தார்கள். இருட்டும் வரை காத்திருந்தார்கள்.

நாராயணனுக்கு வலியில் ஜுரம் வந்து விட்டது. பயமோ, கலவரமோ, தப்பான செடியை மிதித்த காரணமோ நாராயணன் உடம்புக்குள் குளிரெடுத்தது, உடம்பு தூக்கிப் போட துவங்கியது. தூக்கிப் போடும் போது கை அசைய நாராயணன் வலியில் கத்தினான்.

கதிரேசன் தன் இடுப்பு பெல்ட்டை அவிழ்த்து நாராயணன் இடதுகையை அவன் உடம்போடு சேர்த்துக் கட்டினான். அவன் வலது கையை தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டான். இருண்ட நேரத்தில், மார்க்கெட் முற்றிலும் தூங்கிப்போன நேரத்தில் அவர்கள் காரில் ஏறிக் கொண்டார்கள். வண்டியை திருப்பி கதிரேசன் அடிவாரம் நோக்கி ஓட்டினான். போடிநாயக்கனூர் டெர்மினிஸ் நோக்கி வந்தான். ஒரு தனியார் மருத்துவமனையில் நாராயணனைப் படுக்க வைத்தான். மரம் முறிந்து முதுகில் விழுந்து விட்டது என்றான்.

காட்டுக்குள் ரத்தவாடை காற்றில் மிதந்து வருவதை செந்நாய்கள் உணர்ந்தன. வாடை வரும் திசையைநின்று

[illegible] முகர்ந்து மெல்ல ஓடின. துண்டு பட்டுக் கிடக்கிற [illegible] வட்டமாய் சுற்றிக் கொண்டன. அசைகிறதா, [illegible]ப்புண்டா என்று அமைதியாய் காத்துக் கிடந்தன. [illegible] பெரிய செந்நாய் தாவி ஓடி கழுத்துப்பகுதியைக் கவ்வி [illegible]யைக் கடித்து இழுத்தது. வாயில் வைத்த தசை [illegible] வானம் பார்த்து ஊளையிட்டது. பல செந்நாய் [illegible] பாய்ந்தன. தங்கள் கூர்மையான பற்களை அந்த [illegible] ம்பின் எல்லா பகுதியிலும் பதிய வைத்தன.

பகவதி சிரித்தாள். மரணம் ஒரு நொடிப் பொழுதுக் [illegible] குறைவான நேரத்தில் நிகழ்ந்து விடுகிறது. உயிர் [illegible] டம்பிலிருந்து ஒருதள்ளு கதவிலிருந்து வெளிவருவதைப் [illegible]போல் வந்து விடுகிறது. அப்படிப் போகுமுன் திரும்பிப் பார்த்துத் திகைக்கிறது. இதையா பெரிய விஷயம் என்று [illegible]ண்ணியிருந்தோம் என்று தன் உடம்பைப் பார்த்துவியக் கிறது. பிறகு விலகி வேறு ஒரு உலகில் நுழைகிறது. அங்கும் திகைப்பு. அந்த இடமும் முடிவான முடிவல்ல,

உடலைத்தான் என்று கொண்டதுபோல. உயிரை யும்தான் என்று கொள்ளும் புத்தி குடியிருக்கும் மனம் உயிரைச் சுற்றிக் கொண்டிருக்கும். மறுபடி ரூபம் கேட் கும், எல்லாம் மறந்து போக வேண்டும், மனதை இங் கேயே உடம்புக்குள்ளேயே விட்டுப் போக வேண்டும். மனதை உடம்பிலேயே விட்டுப் போவதற்கு, உடம்புக் குள் உயிர் இருக்கும்போதே முயற்சி செய்ய வேண்டும் மெல்ல மெல்ல உலகத்தோடு அறுத்து கொள்ள வேண்டும் இங்கிருந்தபடியே இங்குள்ளவற்றோடு தொடர்பு அற வேண்டும். தொடர்பு அறுந்தால் தான் அலையும் எண்ணம் நிலைப்படும் எண்ணமற்ற தன்மைதான் மனம் அற்ற நிலை. உடம்பு சாவதற்கு முன், மனம் செத்துப் போனால் நல்லது, அப்போது மனம் தொடராது. மறு ஜென்மம் கேட்காது.

எண்ணமற்ற நிலையின் ஆரம்பம் விருப்போ வெறுப்போ இல்லாத தன்மை, வேண்டும் வேண்டாம் என்கிற பிரிவினை இல்லாத நிலை, பகவதி திறந்து கிடந்த பீரோவைப் பார்த்தாள், மூடி வைத்தாள். மாடுகளுக்கு நடுவே போய் வைக்கோலில் படுத்துக் கொண்டாள்.

''ஹேர்லைன்கிராக். இடது முதுகு மேல் பட்டை எலும்புல ஒரு ரெண்டரை அங்குலத்துல. ஆனாலும் வலியிருக்கும். இடுப்போடு கையைக் கட்டியது சரியான முதலுதவி. இப்ப மாவு கட்டு கூட அப்படித்தான் போடப் போறோம், இருபது நாள் கை அசையாத இருக்கணும் அப்புறம் இன்னொரு எக்ஸ்ரே எடுத்துட்டு சாதாரண கட்டுபோடணும் ஆன்ட்டி பயாடிக் பெயின் கில்லர், ஜுரத்துக்கு மாத்திரை எல்லாம் சாப்பிடணும். நாளை காலையில் டிஸ்சார்ஜ் ஆயிடலாம். இது டீலக்ஸ் ரூம். ஒரு நாளைக்கு நானூறு ரூபாய்.'

ஏஸி ரூமில் நாராயணன் கட்டிலில் தூங்க கதிரேசன் சோபாவில் சாய்ந்தான். தூக்கம் வராமல் ரிஸப்ஷனுக்கு வந்தான் அடுத்த டீலக்ஸ் ரூமிலிருந்து யாரோ எட்டிப் பார்த்தார்கள்.

''உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா'' என்று கேட்டார்கள்.

''தெரியும்.''

''எண்ணெயே இல்லாத சுக்காரொட்டி எங்கே கிடைக்கும்.''

''இந்தப் பகுதியில் கிடைப்பது கடினம்'' ஏன்?

''தென்னிந்தியர்கள் அதை விரும்புவது இல்லை.''

''தெரியாமல் என் மனைவியை இந்தப் பகுதிக்குக் கூட்டி வந்து விட்டேன். இவர்கள் செய்கிற சப்பாத்தியை அவளால் ஒரு துண்டு கூட சாப்பிட முடியவில்லை நேற்றிலிருந்து சரியாக சாப்பிடவில்லை. அரிசி அவளுக்குப் பிடிக்காது.''

"அடடே..." கதிரேசன் யோசித்தான்.

"இந்த ஆஸ்பிடல் சமையலறைக்கே நான் கூட்டிப் போகிறேன். அவர்களாகத் தயார் செய்து கொள்வார்களா."

"நல்ல யோசனை. ஆனால் இப்போது இரவு பதினோரு மணி. முடியுமா.'

"முயற்சிப்போம், உங்களுக்கென்ன உடம்பு."

"எனக்கோ, என் மனைவிக்கோ எந்த உடம்பு மில்லை. ஹோட்டலில் இடம் கிடைக்கவில்லை. அதனால் ஆஸ்பிடலில் ஏஸி ரூம் எடுத்தோம். இது ஹோட்டலை விட பாதுகாப்பாக உள்ளது. நான் காப்பி வாங்க வந்திருக்கிறேன் உங்களுக்கு காப்பியைப் பற்றி ஏதாவது தெரியுமா?" அந்த வட இந்தியன் ஆங்கிலத்தில் கேட்டான்.

அந்த ஆஸ்பத்திரி சமையலறையில் சில சப்பாத்திகள் சுட்டுக் கொள்ள கதிரேசன் அனுமதி வாங்கிக் கொடுத்தான்.

28

அந்த வட இந்தியனின் மனைவி அரை மணி நேரத்தில் நாற்பது சப்பாத்தி செய்தாள். தணலில் வாட்டி எடுத்துக் கொண்டாள். வெங்காயமும் காய்கறியும் கணவன் அரிந்து தர, சப்பாத்தி செய்யும் போதே சப்ஜியும் செய்து கொண்டாள்.

"சகோதரா வா. நீயும் கொஞ்சம் எடுத்துக் கொள்" என்று பரிமாறினாள். அவர்கள் இருவரும்

சாப்பிட்டுக் கொண்டே காபித் தோட்டம் பற்றிப் பேசினார்கள் மறு நாளே காபித் தோட்டம் கூட்டிப் போவதாகக் கதிரேசன் சொன்னான். தனக்கு காபித் தோட்டம் இருப்பதாகச் சொல்லாமல் வட இந்தியனைப் பற்றிய எல்லா விஷயமும் தெரிந்து கொண்டான்.

இந்தியாவின் விரல் விட்டு எண்ணக் கூடிய பணக்காரக் குடும்பங்களில் அந்த வட இந்தியனின் குடும்பமும் ஒன்று. அவனுக்கு இருபது வயதில் திருமணம் செய்து வைத்து, 'தனியே வியாபாரம் செய்' என்று இருபத்தி மூன்று வயதில் துரத்தியுள்ளார்கள். அவன் ஜாதி சனத்தின் போட்டி வட இந்தியாவில் அதிகம் என்பதால் அவன் தென்னிந்தியாவை நோக்கிப் படையெடுத்து இருக்கிறான். இந்தியப் பொருளாதாரம் படித்து, கரைத்துக் குடித்தவன் போல் பேசினான்.

''இந்தியாவில் ஒரு பொருள் விலை ஏறினால் மறுபடி விலை குறைவது என்பதே இல்லை. சதாம் உசேன் போட்ட சண்டையால் பெட்ரோல் விலை உலகம் எங்கும் ஏறியது. சண்டை நின்ற பிறகு எல்லா நாடுகளும் விலை குறைத்தன. இந்தியாவில் இன்னும் விலை அதிகமாகியது. அதே போல் காபிக் கொட்டை விலை குறையாது. நிலத்தின் விலை இதைவிட அதிகமாக ஏறுவதற்கு முன் எனக்கு சீதனமாகக் கிடைத்த பணத்தில் காபித் தோட்டம் வாங்கப் போகிறேன். வேலை தெரிந்தவருக்குக் கூலி கொடுத்து, விவசாயம் செய்யப் போகிறேன். பம்பாயிலிருந்து சென்னை, சென்னையிலிருந்து மதுரை, மதுரையிலிருந்து கார் மூலம் போடிநாயக்கனூர் அரை நாளில் வந்து விடலாம்.''

மறுநாள் நாராயணனை, கதிரேசன் மெள்ள உலுக்கி எழுப்பினான். மலைக்குப் போய் அவன் மனைவியை அனுப்புவதாகச் சொன்னான். தலையணைக்கு கீழ், செலவுக்கு ஆயிரப் ரூபாய் வைத்தான்.

''தம்பி, ராத்திரி முழுக்க தூக்கமேயில்லீங்க.கெட்ட, கெட்ட கனவா வந்தது. நான் வினாயகத்தைக் கொன்னது இந்நேரம் போலீஸுக்குத் தெரிஞ்சுருக்குமா''

''தெரிஞ்சுருக்காது. எந்தப் போலீஸ் அந்தப் பள்ளத்துக்குள்ள இறங்கும்...இறங்கினாலும் இந்த நேரத்துக்கு என்ன தெரியும். அப்படியே கண்டு புடிச்சாலும், நான் இருக்கிற வரைக்கும் உன்னை யாரும் ஒன்னும் பண்ண முடியாது நாராயணா...அப்படியே போலீஸ் இங்கவந்து உன்னைக் கேட்டாலும் நான்தான் வெட்டினேன்னு சொல்லு. மிச்சத்தை கோர்ட்ல பார்த்துக்கலாம்.''

''முதலாளி'' நாக்கு தழுதழுக்க நாராயணன் கதிரேசன் கையைப் பிடித்துக் கொண்டான்.

''என் ஏலக்காய் தோட்டத்தை உன் தோட்டம் மாதிரி நீ கவனிச்சுட்டு வந்த. எங்கப்பா உனக்கு என்ன பண்ணார்னு தெரியாது. அவரு உனக்குக் கல்யாணம் பண்ணி வைச்சது உனக்குப் பெரிய விஷயமாயிருக்கலாம் வேற ஜாதிப் பொண்ணைக் கல்யாணம் பண்ணி குறைஞ்சாப் போயிட்ட...அதே மாதிரி, நான் கல்யாணம் பண்ணா தப்பாயிடுமா...காபித் தோட்டத்தை விக்கப் போறேன். வித்து, ஏலத்தோட்டம் வாங்கப் போறேன். எங்கப்பா வாங்கணும்னு ஆசைப்பட்ட எஸ்டேட் வாங்கற போது நீ கூட இருக்கணும். நீதான் வேலி பிரிக்கணும். நீதான் எல்லா எஸ்டேட்டையும் ஒண்ணாக்கி கவனிக்கணும்

''நான் வேற இடத்துல அகலமா, ஆபீஸோட, வீடு கட்டப்போறேன். எனக்குக் கட்றபோது உன் வீட்டையும் பெரிசு பண்ணித்தரேன். வீடு சுத்தியிருக்கிற தோட்டத்தையும் இறக்கத்துல இருக்கிற ஏலக்காய் எஸ்டேட்

டையும் உனக்கு எழுதித்தறேன். என் எஸ்டேட், உன் எஸ்டேட். உடம்பு பாத்துகிட்டு வா, டாக்டருக்குக் காசு கொடுக்காத. இது என் செலவு. உங்க வீட்டுக் காரம்மாவை வாடகைக் காரில் அனுப்பி வைக்கிறேன். ரெண்டு நாள் இருக்கட்டும். நீ மேஸ்திரி மாதிரியிருக்காத. முதலாளி மாதிரி இரு. என்னைக் கதிரேசான்னு கூப்பிடு.''

யார் தொந்தரவாக நினைத்தானோ, கதிரேசன், அந்த மனுஷனை அன்பினால் திணற அடித்தான். 'வினாயகத்தின் கொலையைப் பற்றிப் பேசினால் போதும். நாராயணன் எதிர்ப்பே காட்டமாட்டான்' என்று கதிரேசனுக்குத் தெரிந்து போயிற்று.

''இதுதான் காபிச் செடியா, இதுதான் காபிப்பழமா இதுதான் காபிக் கொட்டையா'' வட இந்தியன் வியந்து கொண்டே வரும்போது 'இந்த எஸ்டேட் ஓனர் யார்' என்று அவன் மனைவி கேட்க, நான்தான் என்று கதிரேசன் கைகட்டிச் சொல்ல, புருஷனும் மனைவியும் புலியைப் பார்த்தது போல் பயந்து நின்றார்கள்

''உண்மையாகவா.''

''ஆம். சமீபத்தில் தான் வாங்கினேன்.''

''ஏன் விற்கிறீர்கள்.''

''வாங்கியதே விற்பதற்குத்தான்.''

''ஏன், காபி விவசாயம் செய்தால் என்ன...''

''ஏலம் அனேகமாய் எங்கள் குலத்தொழில். அதை விஸ்தரிப்பதே என் நோக்கம்.''

''என்ன விலை சொல்லுகிறாய்.''

''இன்று மார்க்கெட் ரேட் என்னவோ அது.''

''எப்படித் தொகை எதிர்பார்க்கிறாய்...''

"பாதி வெள்ளை, பாதி கறுப்பு."

"எப்போது ரிஜிஸ்ட்ரேஷன் வைத்துக் கொள்ளலாம்."

"நீ எப்போது தயார் என்று சொல்லுகிறாயோ, அப்போது."

"என் மாமனாரை பம்பாயிலிருந்து வர வழைக்க வேண்டும்."

"என் எஸ்டேட்டுக்கு வா."

சொர்ணலட்மியைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போகும் பெண் என்று அறிமுகப்படுத்திய சுந்தரேசன், பகவதியைப் பற்றி ஒன்றும் சொல்லாமல் விட்டு விட்டான். பகவதி மனம் நொந்தாள். செண்பக மரத்து நிழலில் போய் பாய் விரித்துப் படுத்துக் கொண்டாள். அவள் நகர்ந்த ஐந்தாவது நிமிடம் சொர்ணலட்சுமி சமையலறையை ஆக்கிரமித்துக் கொண்டாள்.

தட்டுத் தடுமாறி ஆங்கிலத்தில் என்ன வித சமையல் பிடிக்கும் என்று கேட்டாள். வியாபாரத்துக்குப் புதியவனான அந்தப் பனியா, உபசாரத்தில் மனம் நெகிழ்ந்தான்.

மறுநாள் பம்பாயிலிருந்து மாமனார், மைத்துனர், மேனேஜர் என்று ஆட்கள்வர, பள்ளிக்கூட வாத்தியார் ஆறுமுகத்தின் மனைவி ஜெயந்தியும் துணைக்கு வந்தாள்.

காசு கை மாறியது பத்திரம் பதிவாகியது.

பிள்ளையார் கோவிலை இடிக்க வேண்டாம் என்று பத்திரத்திலேயே ஒரு வேண்டுகோள் வைக்கப்பட்டது.

"நான் பம்பாய்க்காரன். பிள்ளையார் கோவிலை இடிப்பேனா, சலவைக் கல்லில் கோவில் கட்டுவேன்.

அது உன் கோவில், என் கோவில் அல்ல. இந்த ஊர் மக்களின் கோவில்.''

அவன் வாங்கிய மூன்றாம் நாள் காபி விலை மறுபடியும் ஏறியது. எந்தக் காப்பித் தோட்டமும் விற்பனைக்கு இல்லை என்பதாய்ப் பேசப்பட்டது.

ஏலத்தோட்டத்தில் தனியே உலவிக் கொண்டிருந்த பகவதியைத் தடுத்து அழைத்துக் கொண்டு வந்து கதிரேசன் காசோலையும் கரன்ஸி கத்தையும் காட்டினான்.

''சொர்ணலட்சுமியைக் கூட்டிகினு மதுரைக்குப் போறேன். அம்மாகிட்ட பேசப் போறேன். நீங்களும் வர்றதாயிருந்தா வாங்க. நான் உங்களை அவமானப் படுத்தலை. அன்னியப்படுத்தலை. இந்த வீடு, இந்த எஸ்டேட் எல்லாம் உங்களது. ஆனால் ஒரு எஸ்டேட்டுக்கு மூணு முதலாளி இருக்க முடியாது. ஒத்தை ஆளா வண்டி ஓட்டினாத்தான் குடை சாயாமயிருக்கும். எப்போ மலைதான் வாழ்க்கைன்னு ஆகிப் போச்சோ, அப்ப உடனே கல்யாணம் கட்டறதுதான் உத்தமம். அம்மா பாத்து நூறு பவுனோட ஒரு பொண்ணு கட்டி மதுரையில வாழணும்னு தான் சொல்லும் மலைன்னு சொன்னாலே மயக்கம் வருதுன்னு நடிக்கும், அதனாலதான் மலை புடிச்ச பொண்ணா, என் மனசுக்கும் புடிச்ச பொண்ணா இவளைத் தேர்ந்தெடுத்தேன். இத்தினி காசு காட்டியும் கல்யாண விஷயத்திலே நான் தப்பு பண்ணிட்டதா எல்லாரும் மூஞ்சியைத் தூக்கு வாங்க. எனக்குத் தெரியும். இந்தக் காசு காட்டலைன்னா என்னைக் கடிச்சுக் குதறிடுவாங்க. அதுவும் எனக்குத் தெரியும். நீங்க வந்த வேளை. அப்பா ஏலக்காய் எஸ்டேட் பெரிசு பண்ணார். சொர்ணலட்சுமி வந்த வேளை இந்த ஏலக்காய் எஸ்டேட் பிரம்மாண்டமா ஆகப்போறது.''

''நான் மதுரையில் வீடு வாங்கப் போறேன். நீங்க அங்கப் போய் இருக்கலாம். அல்லது இங்கேயே இருக்கலாம். எனக்கும், சொர்ணலட்சுமிக்கும் தனியா வீடு கட்டப் போறேன். உங்களை ஏத்துக்கிட அம்மா சொர்ணலட்சுமியை ஏத்துக்கமாட்டாங்க அதனால சொர்ணலட்சுமி தனக்குன்னு ஒரு இடம் வைச்சுக்கிறது நல்லது, நான் அப்பா மாதிரி அப்பப்போ மதுரை போயிட்டு வருவேன். ஒரு வித்தியாயம் சொர்ணைட்சுமி என்னுடைய மனைவி. என்னுடைய ஒரே மனைவி. இன்னும் உங்களுக்குக் கோபம் போகலைன்னா என்னைத் திட்டுங்க சொர்ணலட்சுமியை விட்டுருங்க, புருஷனோட சொந்தக்காரங்களுக்குப் பொண்டாட்டி பயப்படும்படியிருந்தா அந்தப் பொண்டாட்டிக்கு புருஷன் மேல மதிப்பு வராது. மதிப்பு வரலைன்னா, அன்பு வராது. அன்பு வரலைன்னா அது குடித்தனம் ஆகாது.

''என் பொண்டாட்டி எனக்கு பயந்தா போதும். வேற யாருக்கும் அவ பயப்பட வேணாம், ஏன் எனக்குக் கூட அவ பயப்படவேண்டிய அவசியம் இல்லை. பயப்படாத பொண்டாட்டிதான் உதவியாயிருக்க முடியும் புருஷன், பொண்டாட்டிக்குள்ள ஒத்துமையில்லைன்னா, தெருவில போறவன் தொடையில கை வைப்பான். எங்கப்பா இருந்த போது இந்த இடத்துக்கே வரப் பயந்தவனுங்க இப்ப எப்படி நடந்துகிட்டான் பாத்தீங்களா? பொம்பளை தனியாயிருந்தா மேல கை வைக்கலாம்னு நினைச்ச ஆம்பளையைக் கூட மன்னிச்சுடலாம். நம்ம சோத்தைத் தின்னுட்டு, நம்ம மேல எகிறுர நாயை நாம உயிரோடவிட்டு வைக்கக் கூடாது. இது உங்ககிட்டயிருந்து விநாயகம் எடுத்துனு போன நகை. வினாயகம் மறுபடி வரமாட்டான். நீங்களும் நானும் அவனைச் சொர்க்கத்துலயோ நகரத்துலயோ, இந்த ரெண்டுத்துக்கும் போற வழியிலதான் பார்ப்போம்.

"என்ன சின்னம்மா பாக்கறீங்க? ஒரே வெட்டு. தலை வேற முண்டம் வேற போச்சு. வெட்டின கத்தியோ, வெட்டுப்பட்ட ஆளையோ கண்டுபிடிக்க முடியாது எத்தினி தேடினாலும் கிடைக்காது.

"சின்னம்மா, நான் இப்ப ஜெயிச்சது வெறும் லக். சின்ன கணக்கு' நிறைய அதிர்ஷ்டம். நான் ஜெயிச்சுட்டேன். ஆனா எனக்குத் தெரியும். இனிமேதான் எனக்கு சோதனையிருக்கு. ஒரு தடவை ஜெயிச்சதோட வாழ்க்கை முடிஞ்சு போகலை, தொடர்ந்து ஜெயிக்கணும். என் தலையில கை வைச்சு, 'நல்லாயிரு கதிரேசா'ன்னு சொல்லுங்க சின்னம்மா."

தன் வலது கையை பகவதி கதிரேசன் தலையில் வைத்தாள். 'நீ பிறந்த ஐந்தாவது வருடம் நான் உன் சிறிய தாய். உன் தந்தையின் வைப்பாட்டி என்றுகூட தெரியாமல் என் கழுத்தைக் கட்டிப் பிடித்து தூக்கி கன்னத்தில் முத்தமிட்டு மடியில் உட்கார்ந்து, மார்பில் சாய்ந்து என் தாலிக் கொடியைப் பிடித்தபடி தூங்கிய வன் நீ எனக்கு வயிறு வளராது போனாலும் உன் வரவால் என் நெஞ்சு மலர்ந்தது. நானும் ஒரு அம்மா என்ற கர்வம் வந்தது. அந்த கர்வம் கொடுத்த சந்தோஷத்தால் உன்னை ஆசீர்வதிக்கிறேன், வெற்றிகள் ஆயிரம் பெற்று நீடூழி வாழ்வாயாக உள்ளிருந்து உணர்வு கிளம்பி அவன் தலைக்குள் இறங்கினாள்.

அவன் அந்தக் கருணை தாங்காமல் விசும்பி, விசும்பி அழத்துவங்கினான். அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து மதுரைக்கு அனுப்பி வைத்தாள். அவனோடு போகும் சொர்ணலட்சுமிக்கு ரெண்டு தங்கவளையல் போட்டாள் கதிரேசன் இறங்கிப் போனதும் பயம் வந்தது. "தனியாக இருக்கிறோம்' என்கிற எண்ணம் அவளுக்கு முதல் முதலாக ஏற்பட்டது.

தன் வெள்ளைத் துணிகளை ஆரஞ்சுநிற சாயத்தில் முக்கினாள். பிழிந்து வேலிகளில் உலரப் போட்டாள். வாசலில் உக்கிர பைரவி ஆஸ்ரமம் என்று எழுதினாள். வெகுநாளாய் வீட்டிலிருந்த ஒரு மாட்டு எலும்பு முகத்தை வாசலில் கொம்பு நட்டு மாட்டினாள்.

இது காப்பாத்துமா? இது வீட்டைக் காப்பாற்றும். தன்னைக் காப்பாற்ற கண்மூடி தியானத்தில் உட்கார வேண்டும் உள்ளுக்குள் இருக்கிற உயிர் சக்தியை உலுக்கி எழுப்பி, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். 'வாடி' என்று எவனுமே தன்னை இழுக்கக் கூடாது. தன்னைப் பார்த்தால் அப்படி இழுக்கிற எண்ணமே வரக் கூடாது. பகவதி கிழக்கு திசை பார்த்து கண்மூடி அமர்ந்து கொண்டாள்.

''பகவதி நின்னு நடத்தி வைச்சாளா கல்யாணத்தை?'' ஆச்சி சீறினாள்.

''இல்லை இவ தலைமுடியைப் பிடித்து இழுத்து அடிச்சு வெளியே போடின்னு சொன்னாங்க.''

''அப்படி என்னாத்தை கண்டுட்ட இந்த பொண்ணு கிட்ட என்னண்ட ஒரு வார்த்தை சொன்னா நான் முடிச்சிருக்க மாட்டேனா.''

'ஒரு கல்யாணத்துல ஆயிரம் உறவு. இருபது பங்காளி சுத்தி நின்னு இங்க வா, அங்கவான்னு கழுத்தை நெரிச்சுருப்பாங்க. இப்போ என் பொண்டாட்டியைத் தவிர வேற யாரும் உறவில்லை. இது ஒரு நிம்மதி. அவளைத் தொட்ட வேளை எனக்கு நல்ல காசு வந்தது...''

''உன் தங்கச்சிக்கு கல்யாணம் ஆவணும்பா.''

''ஒரு மாசம் பொறுத்துக்க. ஏலக்காய் தோட்டம் மொத்தம் எத்தினி ஏக்கர் அப்படின்னு கணக்கு சொல்

றேன், மதுரை திருச்சி ரோடுல வீடு வாங்கிட்டு சொல்றேன். இன்னும் ரெண்டு வருஷம் பொறுத்துக்க. இப்ப இருக்கற சொத்து மாதிரி இன்னும் ரெண்டு மடங்கு மாட்டுறேன், சொத்து சேர்ந்தா தங்கச்சி கல்யாணம் தானா நடக்கும்.''

''இனிமே மதுரைக்கு வரவே மாட்டியா...'' ஆச்சி குரல் தழதழத்தது.

''இது என்னம்மா கேள்வி? உன்னை விட்டு நான் எங்கப் போவேன் அப்பா மாதிரி மலைக்கும் மதுரைக்கும் ஓடிக்கிட்டுத்தான் இருப்பேன். என்னா, மலையில கொஞ்ச நாள் அதிகமா தங்குவேன். தங்கச்சி கல்யாணம் முடிஞ்சதும் நீயும் மலைக்கு வந்துடு. பாதயாத்திரை வுட்டுரு. கோவில் கோவிலா சுத்தாதே. மலைக்கு வா. எங்க கூட இரு. இல்ல, பகவதியோட இரு. அப்பா ஒரு நாளும் பாதயாத்திரை போனதில்லை. ஆனா அடிக்கடி அமைதியா உட்கார்ந்துடுவாங்க. அந்த வித்தை சின்னம்மாவுக்குப் புரிஞ்ச போச்சுன்னு நினைக்கிறேன் மலைக்கு வர்றியா.''

''அது அப்புறம் உண்டான லதை. எங்கியாவது லாட்ஜ்ல வைச்சு தாலி கட்டாத. புள்ளையார்பட்டிக்குப் போயிடு. அப்படியே திருச்செந்தூர் போ. கன்னியாகுமரி காணி மடத்துக்குப் போய் கும்பிட்டுக்க. அப்புறம் உன் வேலையைக் கவனி.''

''உனக்கு சம்மதமில்லையா.''

''நான் ஆளுக்குத் தகுந்தாப்போல சொல்லிக்குவேன், உன்கிட்ட சம்மதம் என்னுவேன் அதெப்படின்னு வேற யாரும் கேட்டா, 'ஆமா எனக்கு புடிக்கலை'ன்னுவேன். எந்த தாயும் புள்ளை நல்லாயிருக்கணும்னுதான் நினைப்பா. நல்லாயிரு கதிரேசா. இந்தப் பொண்ணு

[illegible] போ. அவங்க ரொம்ப அச்சப்பட்டா. என் [illegible] வந்து பேசச் சொல்லு.'

பெரிய ஹாரமும் முத்துமாலையும் சொர்ணலட்சுமி கையில் போட்டான்.

அவர்கள் ஊரெல்லாம் சுற்றிவிட்டு மலைக்குப் போனார்கள்.

நாராயணன் அடுத்த எஸ்டேட் ஆளைக் கூட்டி வந்திருந்தான். அவர்கள் விலை பேசத் துவங்கினார்கள். விலை படிந்தது. ஒரே தொகையாய்த் தரவேண்டும் என்று விற்பனை சொன்னதில் பேச்சு இழுத்தது.

''மலை மொத்தமும் வாங்கிப் போடணும்னு முடிவு பண்ணிட்டீங்க. ஆனா ஆளுக்குக் கூட கூலி கேட்டா கொடுக்க மாட்டேன்றீங்க.''

''அதெப்படி மாட்டேன்னு சொல்ல முடியும். கொடுத்துத்தானே ஆகணும். கூலி அதிகமாச்சுன்னா ஏலக்காய் விலை அதிகமாகும். ஏலக்காய் விலை அதிகமாச்சுன்னா அடிவாரத்துல ஹோல்ஸேல்ல வாங்கிறவன் குறைவான். ஹோல்சேல்ல வர்றவங்க குறைஞ்சா பாம்பேல, மெட்ராஸ்ல, இன்னும் விலை அதிகமாகும். இப்ப ஒரு ரூபாய்க்கு நாலு காய் கொடுக்கறீங்க, அப்ப ஒரு ரூபாய்க்கு ஒண்ணு கொடுப்பீங்க. பத்து ரூபா பாயசத்துல நாலு ரூபாய் வாசனை போடணுமான்னு ஜனம் யோசிக்கும். ஏலக்காய் இல்லேன்னு யாரும் செத்துட மாட்டாங்க. ஏலக்காயிலிருந்து ஊசி மருந்தோ, உரமோ செய்யறதில்லை. ஏலக்காய் வாண்டாம்னு சொல்ல, காசு இல்லைன்னு சொல்ல மனசு வராது. ஏலக்காய் அதிகம் சாப்பிட்டா ஜாண்டீஸ் வரும்னு சொல்லுவாங்க. பித்தப்பை கெட்டுரும்னு செய்தி

பரவும். அவ்வளவுதான். நான் கூலியா காசு கொடுக்கற துக்குப் பதிலா ஏலக்காய் அளந்து போட்டுடறேன். எல்லாம் யூனியன்ல போய் வித்து நீங்களே சாப்பிடுங்க.''

கேரளத்தை சேர்ந்த யூனியன்காரர்கள் அரை மணி நேரம் கத்தினார்கள். ஆளுக்கு ஆள் வசனம் பேசினார் கள். ஒரு அளவுக்கு மேல் ஏலக்காய்க்கு விலை வைக்க முடி யாது என்பதைத் தெரிந்து கொண்டார்கள்.

அடுத்த வருடத்திலிருந்து கூலி உயர்வு தருவதாகக் கதிரேசன் சொன்னதும் ஏற்றுக் கொண்டு போனார்கள். நாராயணன் வேலி பிரித்தான். பகவதி அடுத்த எஸ்டேட் டில் காலை எடுத்து வைத்தாள். 'கதிரேசா' என்று விம்மி னாள். அம்மா என்று அவன் ஓடி வந்து புஜம் பிடித்துக் கொண்டான்.

''ஒவ்வொரு செடியும் உயிரா பாவிக்கணும்னு செட்டியார் சொல்லுவாங்க. ஒரு விஷயத்தை உயிரா நினைக்கறதுன்னா என்னா. அது வளரணும்'னு அக்கறைப்படணும். 'நல்லா வாழணும்'னு அக்கறைப் படணும். எல்லாத்து மேலயும், எல்லா நேரமும் பிரியமா நடந்துக்க கதிரேசா.''

கதிரேசன் செடி, சொர்ணலட்சுமி, சின்னம்மா மூவரையும் மாறி, மாறிப் பார்த்தான். உயிர் மாதிரி பிரியம் உள்ளவர்களிடம் கொஞ்சிக் கொண்டிருப்பார் களா. கதிரேசன் புதிதாய் வாங்கிய எஸ்டேட்டுக்குள் நுழைந்தான். செடிகள் வாடியிருந்தன. பிளாஸ்டிக் டியூபைச் சொருகி ஸ்பிரிங்ளரை சுழல விட்டான். குளுமையான மழை நீர் ஏலச் செடியை, சின்னம்மாவை, சொர்ணலட்சுமியை நனைக்கத் துவங்கியது. அது செலுத்திய குளிர் ஒரு பிரியம் போல உயிரை சிலிர்க்கப் பண்ணியது. அந்த உயிர்க் குளுமையை ஏலச் செடி

[illegible] அவர்களும் உணர்ந்தார்கள். தன்னை, தன் [illegible] நேசிப்பது போல் பிறரை நேசிக்க அந்த நேரம் [illegible].

[illegible]ப்பட்ட நேசிப்பை ஒரு முறை தெரிந்து [illegible]டால் போதும். அது வாழ்க்கை முழுக்கத் [illegible] வரும்.

முறறும்

என்னுயிரும் நீயல்லவோ

பாலகுமாரன்

GOODWILL'S